முதுகுளத்தூர்
mudukulathur.com



# முதுகுளத்தூர்.காம்

# ஈகைத் திருநாள் சிறப்பு மலர் 2026



நூலாசிரியர்
**முதுவை ஹிதாயத்**

முதுகுளத்தூர்
mudukulathur.com

**இந்த மலர் ஒரு முதல் முயற்சி.**
**இது தொடர்பான**

**தங்களது கருத்துக்களை**
**+971 50 5196433**
**என்ற வாட்ஸ் அப் எண் மூலமோ**
**அல்லது**
**Mudukulathur.com@gmail.com**
**என்ற ஈ-மெயில் மூலமோ**
**அனுப்பினால்**
**மேலும்**
**பல சிறப்பு மலர்களை வெளியிட**

**பயனுள்ளதாக இருக்கும்**

---

நூல் வடிவமைப்பு

**கலர் டிராப்ஸ்**
ஆர்விஎஸ் நகர், காந்தி நகர் அருகில்,
காஜமலை மெயின் ரோடு, திருச்சி - 620023

**97501 15701 | colourtrichy@gmail.com | www.colourdrops.co.in**

# இந்திய யூனியன் முஸ்லிம் லீக்
# INDIAN UNION MUSLIM LEAGUE

காயிதே மில்லத் மன்ஸில், 36, மரைக்காயர் லெப்பை தெரு, சென்னை - 1 ✆ 2521 8786

Website : www.muslimleaguetn.com E-mail : info@muslimleaguetn.com

பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் Ex.M.P.
தேசிய தலைவர்


பெறுநர்:
ஜனாப் முதுவை ஹிதாயத் அவர்கள்,
ஆசிரியர்,
முதுகுளத்தூர்.காம்

## வாழ்த்துச் செய்தி

ஜனாப் முதுவை ஹிதாயத் அவர்களை ஆசிரியராக கொண்டு, முதுகுளத்தூர்.காம் என்ற இணையதளம் கடந்த 2005ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருவதை அறிந்து மிகுந்து மகிழ்ச்சி அடைந்தோம்.

உலகெங்கிலும் வாழும் முதுகுளத்தூர்வாசிகள் உள்ளூர் செய்திகள் அனைத்தையும் நன்கு அறிந்துகொள்ளும் வகையில், சுவையான செய்திகள், அற்புதமான தகவல்கள் ஆகியவற்றை முதுகுளத்தூர்.காம் இணையதளம் வெளியிட்டு வருவது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இதன்மூலம் உள்ளூர் எழுத்தாளர்களின் ஆக்கங்கள் உலக அளவில் சென்று சேர வாய்ப்புகள் உருவாகியுள்ளன. அதன் காரணமாக உள்ளூரில் வாழும் திறமையான எழுத்தாளர்களின் ஆக்கங்கள், படைப்புகள், கட்டுரைகள் வெளியுலகுக்கு அறிமுகம் செய்யப்பட வாய்ப்பு உருவாகியுள்ளது. இத்தகைய வாய்ப்பு உருவாக்கி தருவதில், முதுகுளத்தூர்.காம் இணையதளம் முக்கிய பங்கு ஆற்றுவது மகிழ்ச்சி அளிக்கும் ஒன்றாகும்.

மிகச்சிறந்த முறையில் நடத்தப்பட்டு வரும் முதுகுளத்தூர்.காம் இணையதளம், முதல் முறையாக ஈகைத் திருநாள் சிறப்பு மலர் இணைய வழியாக (E.BOOK) வெளியிட இருப்பது அதன் ஆர்வத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

முதல் முறையாக ஈகைத் திருநாள் சிறப்பு மலர் இணைய வழியாக வெளியிடும் முயற்சியை மேற்கொண்டுள்ள முதுவை ஹிதாயத்திற்கு எமது பாராட்டுகள் மற்றும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த முயற்சி வெற்றி அடைய இறையருளை ஆசிப்போம். வஸ்ஸலாம்.

அன்புடன்,

சென்னை
05.03.2026

பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன்
தலைவர்,
இந்திய யூனியன் முஸ்லிம் லீக்

**K. NAVASKANI**
MEMBER OF PARLIAMENT
(LOK SABHA)
Ramanathapuram Constituency-Tamil Nadu
CHAIRMAN
TAMILNADU WAQF BOARD

सत्यमेव जयते

MEMBER :
• Standing Committee on External Affairs
• Consultative Committee - Ministry of Health and Family Welfare
• Tamil Nadu Haj Committee
• State Level District Development Coordination and Monitoring Committee (DISHA)

Parliament Party Whip & National Secretary
Indian Union Muslim League

## வாழ்த்து செய்தி

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் சுற்றுவட்டார செய்திகளை உலகெங்கும் வசிக்கும் முதுகுளத்தூர் மக்களிடம் கொண்டு சேர்க்கும் மகத்தான பணியை கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் **முதுகுளத்தூர்.காம் செய்தி இணையதளத்தின்** சார்பாக **இணைய இதழ்** வெளியிடப்படுவது பாராட்டத்தக்கது.

தொடர்ந்து சொந்த மண்ணின் செய்திகளை, சமூக, சமுதாய செய்திகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை உலகெங்கும் கொண்டு சேர்க்கும் மகத்தான பணியை சிறப்பாக செய்து வரும் உங்கள் இணையதளத்தின் பணிகள் மென்மேலும் சிறக்கட்டும்.

மக்கள் மனங்களை வெல்லும் ஊடகத்துறையில் அறத்துடன் செயல்பட்டு, மென்மேலும் உயர நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**அன்புடன்,**

**(கே.நவாஸ்கனி M.P)**

**Delhi :** 602, MP Flat, Saraswati Apartment, Dr. B.D. Marg, New Delhi-110001 | Tel.: 011-2374 6382 | E-mail : navaskani.mp@sansad.nic.in
**Chennai Office :** No.199, Hariyan Street, C. Pallavaram, Chennai - 600 043, Tamil Nadu | E-mail : navaskanimp@gmail.com
**Constituency Office :** No.1/2061-B, 9th Street, Nehru Nagar, Ramanathapuram - 623 503, Tamil Nadu | Tel.: 04567-299 917

THE GANDHIGRAM RURAL INSTITUTE
(DEEMED TO BE UNIVERSITY)
காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
गांधीग्राम ग्रामीण संस्थान (मानित विश्वविद्यालय)
Ministry of Education, Government of India.
Accredited by NAAC with A++ Grade (4th Cycle)
கிராமம் உயர நாடு உயரும்

"Success attends where Truth Reigns"
Gandhiji's Message at the Inauguration of Gandhigram on 7th October, 1947

Dr. N. PANCHANATHAM
VICE-CHANCELLOR

Ref: VC / GRI / Greetings / 2025-26 — 15th மார்ச் 2026

பெறுநர்

**முதுவை ஹிதாயத்**
ஆசிரியர்
முதுகுளத்தூர்.காம்

வாழ்த்துக்கள் !

முதுகுளத்தூர்.காம் சார்பில் ஈகைத் திருநாள் சிறப்பு மலர் வெளிவருவது மிகவும் மகிழ்ச்சியை அளிக்கிறது.

ரம்ஜான் பண்டிகையையொட்டி மணம் வீச காத்திருக்கும் மலருக்கு எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளன்புடன்,

(ந. பஞ்சநதம்)

Gandhigram, Dindigul District, Tamil Nadu, India, Pincode: 624 302.
E-mail: vc@ruraluniv.ac.in, panchanatham@gmail.com, Web.: www.ruraluniv.ac.in
Mobile No.: +91 94433 38107 Phone No.: 0451-2452305, 2453845

# தமிழ்நாடு முஸ்லிம் தொண்டு இயக்கம்
## TAMILNADU MUSLIM SERVICE MOVEMENT (TMSM)

திவு எண் : 129 | 2001

27/53, நரசிம்மபுரம், மயிலாப்பூர், சென்னை-600004

அல்ஹாஜ் **கே.ஏ. மன்சூர்**
தலைவர்

பேரா. டாக்டர் **சேமுமு. முகமதலி**
பொதுச் செயலாளர் : +91 94441 65153

அல்ஹாஜ் **ஜி.கே.பாஷா**
பொருளாளர்

## வாழ்த்துகள்!

இஸ்லாமிய இலக்கியக் கழகம் மற்றும் தமிழ்நாடு முஸ்லிம் தொண்டு இயக்கத்தின் ஐக்கிய அரபு அமீரகத்தின் ஒருங்கிணைப்பாளரும், மூத்த ஊடக ஆசிரியருமான சகோதரர் முதுவை ஹிதாயத் அவர்களை ஆசிரியராகக் கொண்டு முதுகுளத்தூர்.காம் நன்முறையில் சேவையாற்றி வருவது மிகுந்த வரவேற்புக்கும் பாராட்டுதலுக்குமுரியதாகும்.

இரமலான் பெருநாளையொட்டிச் சிறப்பு மலர் வெளிவரவிருப்பது மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குகிறது. கெட்ட போரிடும் உலகினைச் சாய்த்து மனிதநேய மாண்பினை வளர்த்து உலகில் அமைதியும் சமாதானமும் தழைத்தோங்கத் தரணியில் வாழும் அனைவரும் கை ஏந்தும் இந்த அற்புதப் பெருநாளைப் பெருமிதத்தோடு தனது சிறப்பு மலரால் முதுகுளத்தூர்.காம் கண்ணியப்படுத்துகிறது. இதனை வரவேற்று வாழ்த்திப் பாராட்டி மகிழ்கிறோம்.

(பேராசிரியர் டாக்டர்
சேமுமு. முகமதலி)
தலைவர், இஸ்லாமிய இலக்கியக் கழகம்
பொதுச்செயலாளர், த.மு.தொண்டு இயக்கம்
ஆசிரியர், 'இனிய திசைகள்' மாத இதழ்

நீதிபதி **அ. முகமது ஜியாவுதீன்**
(மேனாள் மாவட்ட அமர்வு நீதிபதி)
முழுநேர உறுப்பினர் மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையம்,
தமிழ்நாடு அரசு.



# வாழ்த்துரை

அன்பிற்கும் மிகுந்த மதிப்பிற்கும் உரிய சகோர்ர் முதுவை ஹிதாயத் அவர்கள் தாயகத்திலும், அமீரகத்திலும் தமிழ்ப்பணி ஆற்றிவருகிறவர் என்பதை நாடறியும். அவரது பெரும் முயற்சியால் முதுகுளத்தூர்.காம் சார்பில் ஈகைத் திருநாள் சிறப்பு மலர் வெளிவருவது மிகவும் மகிழ்ச்சியை அளிக்கிறது. ரம்ஜான் பண்டிகையையொட்டி மணம் வீசட்டும், இதனை வாசிக்கும் அனைவரது உள்ளங்களிலும் அன்பு பரவட்டும்.

அனைவர் உள்ளமும் அன்பால் மலர்ந்து
அனைத்து இல்லமும்
இன்பத்தால் மகிழட்டும்!

எண்ணம் அனைத்திலும் ஏற்றம் பிறந்து;
மானுட நேயமும் மாண்பும் பெருகட்டும்!

இருப்பவர்
இல்லாதவர்க்கு
உதவுவதன் மூலம் அவர்களின் வாழ்விலும்
மாற்றம் நிகழட்டும்!

மழைபெய்து
பூமி நனைந்து,
மக்கள் மனதெல்லாம்
மகிழ்ச்சி பொங்கட்டும்!

அனைத்து
குழந்தைக்கும்
நல்ல கல்வியும்
நல்வாழ்வும்
கிடைக்கட்டும்!

நமக்குள் இருக்கும் பிரிவினை மறைந்து,
ஒற்றுமை உணர்வால்
உலகம் உயரட்டும்!

என்று இந்த ரமலான் மலரின் வழியாக வாழ்த்துகிறேன்.

அன்புடன்,
**அ. முகமது ஜியாவுதீன்**

# தொகுப்பாசிரியர் உரை..........



அஸ்ஸலாமு அலைக்கும் ( வரஹ் )

**முதுகுளத்தூர்.காம் இணையத்தளம்** சார்பில் 2026 ஆம் ஆண்டு ஈகைத் திருநாளையொட்டி சிறப்பு மலர் வெளியிடப்பட்டுள்ளது.

இத்தகையதொரு மலர் வெளியிடும் போது அதற்கான ஆக்கங்களை திரட்டுவது நோன்பு நேரத்தில் மிகவும் சிரமமானதாக இருந்தாலும் அந்த பணி வெற்றிகரமாக இறையருளால் நிறைவடைந்துள்ளது.

**அல்ஹம்துலில்லாஹ்...**

இந்த சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்கிய இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் முனீருல் மில்லத் பேராசிரியர் **கே.எம்.காதர் மொகிதீன்,** இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் **கே. நவாஸ் கனி,** காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் **துணைவேந்தர் முனைவர் என். பஞ்சநதம்**, தமிழ்நாடு அரசின் மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையத்தின் முழுநேர உறுப்பினர் நீதிபதி **அ. முகமது ஜியாவுதீன்** ( மேனாள் மாவட்ட அமர்வு நீதிபதி), தமிழ்நாடு முஸ்லிம் தொண்டு இயக்க பொதுச் செயலாளர் பேராசிரியர் முனைவர் **சே.மு.மு. முகமதலி** உள்ளிட்ட பிரமுகர்களுக்கும், ஆக்கங்கள் வழங்கிய அனைவருக்கும், விளம்பரதாரர்கள் உள்ளிட்ட புரவலர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

20 மார்ச் 2026

**மலர்க்குழுவின் சார்பில்**
**முதுவை ஹிதாயத்**

# உள்ளடக்கம்


- முதுகுளத்தூர் சரித்திரம் ! முழு உலகில் சங்கமம்! 01
  -முதுவைக் கவிஞர் மௌலவி ஏ. உமர் ஜஃபர் மன்பயீ
- அருள் சொரியும் அற்புதம் நிறைந்த மாதம் : ரமழான் மாதம் 02
  - எம்.ஏ. தாஜஹான், பொத்துவில், இலங்கை
- புனித ரமலான் நோன்பில் கடைபிடிக்க வேண்டிய மருத்துவ அறிவியல் அறிவுரைகள் 06
  - டாக்டர் ஏ. அமீர் ஜஹான் எம்.பி.பி.எஸ்
- கண்ணாடிகள் கவனம் 08
  -எம். அப்துல் ரஹ்மான் Ex M.P.
- எங்கள் ஊரில் ரம்ஜான் அனுபவங்கள் 10
  -செ. கார்த்திகேயன், தலைமை ஆசிரியர் பொறுப்பு, இளஞ்செம்பூர்
- ஈகைத் திருநாள் 12
  -அழகை ஹைருன்நிஸா
- நோன்புப் பெருநாள் 13
  -காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன், இலங்கை
- ஈகை நோன்பு பெருநாள் 15
  -கவிஞர் தமீம், பரமக்குடி
- மறையில் சொன்னபடி வாழ்வோம் ( ஈகைத் திருநாள் கவிதை ) 16
  - டாக்டர் பாவலர் கோவதன், பினாங்கு, மலேசியா
- எது நிரந்தரம் 17
  - கவின்முகில் மு. முகமது யூசுப், உடன்குடி
- ரமளான் தூது 19
  -முதுவைக் கவிஞர் மௌலவி ஏ. உமர் ஜஃபர் மன்பயீ
- வாசிப்பை நேசிப்போம் 22
- இறையச்சம் கொண்டவர்களின் வாழ்க்கை 25
  -பேராசிரியர் அ. முகமது அப்துல் காதர், சென்னை
- இன்பம் பொங்கும் ஈகைப் பெருநாள் 28
  -கவிஞர் வி.எஸ். முஹம்மது பஸ்லுல்லாஹ், வேலூர்
- நோன்பும், மாண்பும் 30
  - எம். ர். தனசேகரன், மலேசியா
- இன்பம் பயக்கும் 'ஈதுல் ஃபித்ர்' என்ற ரம்ஜான் பண்டிகை 32
  -முனைவர் ஹா. ஹிதாயத்துல்லா, புதுக் கல்லூரி, சென்னை-14
- வாழ்க்கை 36
  - ஹ. ரோஷன் ஹபிகா, டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி, இளையான்குடி
- ரமலான் கால நினைவலைகள் 37
  - சம்சுல் ஹுதா பானு
- தேவி திருவிழா ஊர்வலமும், பாங்கு விளியும் ! 45
  - ஞான ராஜசேகரன் ஐ.ஏ.எஸ்.
- முதுகுளத்தூரின் சிறப்புக்கள் 51
  -மௌலவி பி.கே.என். அப்துல் காதர் ஆலிம்

❖ **வெறுப்பின் கோற்றம் வீழட்டும்** **52**
-முகவை கவிஞர் மானுடப் பிரியன்

❖ **தத்துவ ரமளான்** **54**
-முதுவைக் கவிஞர் மௌலவி ஏ. உமர் ஜஃபர் மன்பயீ

❖ **தப்பித்துக் கொள்ளுங்கள்** **55**
-காயாமொழி எம். அபுல் கலாம் ஆசாத்

❖ **ரமலான்** **60**
-அபிவிருத்திஸ்வரம் தா. நியாஸ் அஹமது, துபாய்

❖ **உலகக் கல்வியும், மார்க்கக் கல்வியும்** **61**
-முனைவர் பேரா. வ. கமால் நாசர், புதுக் கல்லூரி, சென்னை-14

❖ **ரமலான் வந்தால் கொண்டாட்டம்** **65**
- முனைவர் சே. முனியசாமி, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை

❖ **ரமலான் வாழ்த்துக்கள்** **68**
-சிலேடை சித்தர் சேது சுப்ரமணியம், கோவை

❖ **இப்னு பதூதா : வரலாற்றின் மாபெரும் பயணி !** **70**
- நாகூர் ரிஸ்வான், துபாய்

❖ **சீறாவும், இசையருவியும்** **72**
-பேராசிரியை முனைவர் ஏ. நசீமா, பி.எஸ். அப்துல் ரஹ்மான் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், சென்னை

❖ **நன்மைகள் நாடியே நாளும் நடப்பது நல்லது !** **79**
-கவிஞர் முனைவர் கொடிநகரான் இ.எம். ஜிப்ரில், தோஹா – கத்தார்

❖ **புனித ரமலானில் நடைபெறும் பன்முக கலாச்சார லகெம்பா சந்தை** **80**
-எஸ்.ஏ. அப்துல் அஜீஸ், ஊடகவியலாளர்

❖ **இலையுதிர் காலம்** **83**
-கம்பம் மீரான்

❖ **அளவற்ற அருளாளன்** **84**
-கம்பம் மீரான்

❖ **ரய்யான்** **85**
-கம்பம் மீரான்

❖ **மண் : பூமியின் உயிர், மனிதகுலத்தின் எதிர்காலம்** **86**
-பேராசிரியர் சித்திரை பொன் செல்வன், கர்டின் பல்கலைக்கழகம், துபாய்

❖ **இனிமை பொங்கும் ஈகைத் திருநாள்** **90**
-ஹைச். முஹம்மது நஸீறுத்தீன், அஞ்சுவண்ணம், திருவிதாங்கோடு

❖ **Eid Celebrating Faith, Gratitude and Unity** **91**
-Mohammed Rehaan, Sharjah

❖ **அருள் மாதம் - பரம்பை இதயா** **93**

❖ **ஆண்டுக்கு ஆண்டு வருகின்ற பெருநாள்** **94**
-தேரிழந்தூர் தாஜுத்தீன் ஃபைஜீ

❖ **காலம்** **96**
-முனைவர் மு.அ. காதர், சிங்கப்பூர்

❖ **முப்பசி வென்ற முஸ்லிம்கள்** **97**
-முதுவைக் கவிஞர் மௌலவி ஏ. உமர் ஜஃபர் மன்பயீ

❖ **பிறந்தது பெருநாளே.!** **98**
- சேமுமு. முகமதலி

- **நோன்பு ஒரு தத்துவமே** **99**
  -முதுவைக் கவிஞர் மௌலவி ஏ. உமர் ஜஃபர் மன்பயீ
- **துஆ செய்து வாழ்த்துகிறேன்** **101**
  -முதுவைக் கவிஞர் மௌலவி ஏ. உமர் ஜஃபர் மன்பயீ
- **குர்ஆனிய சிந்தனை** **102**
  -மவ்லவி டாக்டர் ஏ. அப்துல்லாஹ் யூசுஃபி, மதுரை
- **ரமளானுக்கு பின்னர் நாம் யார் ?** **109**
  -மௌலவி அல்ஹாஃபிழ் என்.எஸ்.எம். பஷீர் அஹமது உஸ்மானி, சிவகங்கை
- **துஆ என்பது வெறும் சம்பிரதாயமல்ல – வணக்கமாகும் !** **119**
  -கீழை ஜஹாங்கீர் அரூஸி
- **ஆஸ்திரேலியாவில் அழகிய குரலில் கிராஅத் ஓதி தராவீஹ் தொழுகை நடத்தி வரும் தமிழக மாணவர்** **122**
- **ரமலானில் உறுதி மொழி எடுப்போம்** **129**
  -ஏ.எஸ். இப்ராஹிம், பரமக்குடி
- **ரமலானில் கற்றதும், பெற்றதும்** **134**
  -அ. முஹம்மது இஸ்மாயில் ஹஸனி, திருச்சி
- **உழைப்பாளி** **139**
  -கீழை முஸம்மில் , ஷார்ஜா
- **மீண்டும் மீண்டும் உனை நான் அடைய .........** **141**
  -முஹிப்புல் உலமா ஏ. முஹம்மது மஃரூப், துபாய்
- **அமீரகத்தில் ரமலான்** **142**
  -முனைவர் ஆ. முகமது முகைதீன், துபாய்
- **கடவுள் மதங்களில் இல்லை, அன்பான மனங்களில் இருக்கிறான்** **145**
  -நீதிபதி அ. முகமது ஜியாவுதீன், சென்னை
- **போய்வா ரமலானே ! போய் வா !** **149**
  -கவின்முகில் முஹம்மது யூசுப், உடன்குடி
- **மறையில் சொன்னபடி வாழ்வோம்** **151**
  - பாவலர் கோவதன்
- **வளைகுடாவின் அறிவுக் கருவூலம் – துபை முஹம்மது பின் ராஷித் நூலகம்** **152**
  -முதுவை ஹிதாயத்

# முதுகுளத்தூர் சரித்திரம் !
# முழுவுலகில் சங்கமம்

முதுவைக் கவிஞர் ஹாஜி
உமர் ஜஹ்பர் பாஜில் மன்பயீ



முதுகுளத்தூர் சரித்திரமே முழுவுலகில் சங்கமமே !
முழுவுலகும் போற்றிவரும் முதுகுளத்தூர் சரித்திரமே !
புதுமைகளைப் படைத்திடவே, உறவுகளை இணைத்திடவே,
புதிய தளம் "இணைய தளம்" துவக்கியதோர் சரித்திரமே !

அருமகனார் நிஜாமுத்தீன் ஆலிமவர் தலைமையிலே,
ஐக்கியமாய் வாழுகின்ற அமீரகத்துத் தோழர்களே !
வருங்காலம் வாழ்த்துகிற புதுவுலகம் உங்களுக்கே !
வளமான வாழ்வுகளும் வாழ்த்துகளும் உங்களுக்கே !

இன்றைக்கோர் சம்பவமாய் எழுகின்ற நிகழ்வுகளே
எழிலான சரித்திரமாய் நிமிர்ந்து விடும் நாளைக்கே !
அன்றாட நிகழ்வுகளை ஏற்றி வைப்பீர் இணையத்தில் !
அழகான சரித்திரத்தைக் காத்திடுவீர் உலகத்தில் !

மண்ணுக்குள் மறைந்திருக்கும் தங்கம் போல் வைரம்போல்
மறைந்து விட்ட சரித்திரங்கள் ஏராளம் ! ஏராளம் !
விண்ணுக்கும் மண்ணுக்கும் விழிநடையாய்ச் சென்று வரும்
வருங்கால வரலாற்றில் நம்வாழ்வு மறையலாமோ ?

தங்கத்தைத் தட்டிவைத்து அணிகலன்கள் செய்வதுபோல்
வைரத்தைத் தீட்டிவைத்து வகைவகையாய் அணிவதுபோல்
பொங்கி வரும் புதுவுலகில் முதுகுளத்தூர் சரித்திரங்கள்
பொன்னெழுத்தில் மின்னட்டும் ! பொலிவுடனே மிளிரட்டும் !

புதுவுலகம் படைப்பதற்குப் புறப்பட்ட சோதரரே !
போற்றுகிறோம் உங்களையே ! புகழுகிறோம் இறைவனையே !!
முதுகுளத்தூர் சரித்திரத்தில் மின்னுகிற பெருமகரே !
மூவுலகம் போற்றிடவே வாழியவே ! வாழியவே !!

# அருள் சொரியும் அற்புதம் நிறைந்த மாதம்: ரமழான் மாதம்



**எம்.ஏ. தாஜஹான்**
பொத்துவில், இலங்கை.

புனித ரமழான் மாதம் மனித குலத்திற்கு அருட் கொடையாகவும், மாதங்களில் தலை சிறந்த மாதமாகவும் காணப்படுகின்றது.

தனிமனித வாழ்வில் ஆன்மீக மற்றும் லௌகீக (உலகியல்) பயன்களை அள்ளித் தரும் ரமழான் மாதம் உலகில் வாழும் அனைத்து ஜீவராசிகளுக்கும் வசந்தத்தை வீசுவதோடு, ஆன்மாவையும் சமூக வாழ்வையும் சீரமைக்கும் வசந்தமாகவும் காணப்படுகின்றது.

ரமழான் மாதம் என்பது வெறும் பசியோடும் தாகத்தோடும் இருப்பதற்கான ஒரு சடங்கு மட்டுமல்ல; அது ஒரு மனிதனை ஆன்மீக ரீதியாகவும், உடல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் புனரமைக்கும் ஒரு பயிற்சிக் காலமாகும்.

இறைவன் வழங்கிய இந்த அருட்கொடை தரும் பயன்களை இரண்டாகப் பிரிக்கலாம்.

**ஆன்மீகப் பயன்கள் (Spiritual Benefits)**

ரமழானின் அடிப்படை நோக்கமே மனிதனை 'தக்வா' எனும் இறை அச்சம் கொண்டவனாக மாற்றுவதுதான்.

**சுய கட்டுப்பாடு (Self-Control)**

பசி, தாகம் மற்றும் இச்சைகளை இறைவனுக்காகக் கட்டுப்படுத்துவதன் மூலம் ஒரு மனிதன் தன் மனதின் மீது ஆதிக்கம் செலுத்தப் பழகுகிறான். இது தீய பழக்கங்களிலிருந்து விலகி இருக்க பலத்தைத் தருகிறது.

**இறை நெருக்கம்:**

இரவு நேரத் தொழுகைகள் (தராவீஹ்), குர்ஆன் ஓதுதல் மற்றும் திக்ருகள் மூலம் மனிதன் படைத்தவனுடன் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறான்.

பாவமன்னிப்பும் மனத்தூய்மையும்: கடந்த காலத் தவறுகளுக்காக வருந்தி மன்னிப்புத் தேடுவதற்கும், இதயத்தில் படிந்துள்ள கறைகளைக் கழுவி மன அமைதி பெறுவதற்கும் ரமழான் ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

**பொறுமை (Sabr):**

சோதனையான நேரங்களிலும், பசியின் போதும் நிதானத்தைக் கடைப்பிடிப்பது ஒருவரின் ஈமானை (நம்பிக்கையை) உறுதிப்படுத்துகிறது.

**லௌகீகப் பயன்கள் (Worldly & Physical Benefits)**

ஆன்மீகத்தைத் தாண்டி, மனிதனின் அன்றாட வாழ்விற்கும் உடல் நலத்திற்கும் ரமழான் பெரும் நன்மைகளை விளைவிக்கிறது.

**உடல் ஆரோக்கியம் (Detoxification):**

ஒரு மாத கால நோன்பு உடலின் செரிமான மண்டலத்திற்கு ஓய்வளிக்கிறது. உடலில் தேங்கியுள்ள நச்சுகளை வெளியேற்றவும் (Autophagy), தேவையற்ற கொழுப்பைக் குறைக்கவும் இது உதவுகிறது.

**சமூக ஒற்றுமை:**

ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடின்றி அனைவரும் ஒரே நேரத்தில் நோன்பு நோற்பதும், ஒன்றாக அமர்ந்து இஃப்தார் (நோன்பு திறத்தல்) செய்வதும் சமூகத்தில் சகோதரத்துவத்தை வளர்க்கிறது.

**பகிர்ந்தளிக்கும் பண்பு (Charity):**

பசியின் கொடுமையை அனுபவபூர்வமாக உணர்வதால், வறியவர்களின் நிலை புரிந்து அவர்களுக்கு தர்மம் (ஸதகா, ஸக்காத்) செய்யும் எண்ணம் மேலோங்குகிறது.

**நேரத்திற்கு பழக்கப்படுதல்:**

ஸஹர் முதல் இஃப்தார் வரை ஒரு குறிப்பிட்ட கால அட்டவணைக்குள் செயல்படுவதால், நோன்பாளி தனது நேரத்தை முறையாகத் திட்டமிடப் பழகுகிறான்.

**முடிவுரை**

சுருக்கமாகச் சொன்னால், ரமழான் என்பது "உளத்தை வளப்படுத்தும் ஆன்மீகப் பட்டறை". இது மனிதனின் உடலைத் தூய்மைப்படுத்தி, உள்ளத்தைப் பண்படுத்தி, சமூகத்தைச் சீர்படுத்துகிறது. இந்த ஒரு மாதப் பயிற்சியைத் ரமழானுக்குப் பிறகும் நம் வாழ்வில் தொடர்வதே இந்த மாதத்தின் உண்மையான வெற்றியாகும்.

**அனஸ் பின் மாலிக் (ரழி) அவர்கள் அறிவித்தார்கள்:**

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், "(மார்க்க விடயங்களில்) மக்களுக்கு இலகுபடுத்துங்கள். மேலும், அவர்களுக்குக் கடினப்படுத்தாதீர்கள், அவர்களுக்கு நற்செய்தி கூறுங்கள், அவர்களை (இஸ்லாத்தை விட்டும்) விரண்டோடச் செய்யாதீர்கள்."

ஹதீஸ் தரம் : ஸஹீஹ்

# STUDY MBBS, MD, MS, BDS, MDS

## ரஷ்யா MBBS-MD- Fees : 2 லட்சம் / செமஸ்டர்

★ இலவச MCI ஸ்கிரினிங் டெஸ்ட், இந்திய பேராசிரியர்களால் ஸ்டவ்ரபோல் பல்கலைக்கழகத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ★ MCI / WHO அங்கீகாரம் பெற்றது
★ சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை.
★ இந்திய வகை உணவு ★ நன்கொடை இல்லை ★ ஆங்கிலவழிக் கல்வி

## இலவச ஆலோசனை & உடனடி அட்மிஷன்

**33 வருட கால சேவை / இந்தியா மற்றும் ரஷ்யா முழுவதும் அலுவலகங்கள்**

RECOGNISED BY RUSSIAN HEALTH & EDUCATION MINISTRY

Chairman : **DR. A. AMEER JAHAN,** M.D., Ph.D., (USA).,

Director : **DR. A. NAJEERUL AMEEN,** M.D.,(Russia), PGDHM, PGD&M.HSc,Ph.D.,

## A.J. TRUST EDUCATIONAL CONSULTANCY

- உலகப்புகழ் பெற்ற ரஷ்ய மருத்துவப் பல்கலைக்கழகங்களில் படிப்பதற்கு ஓர் அரிய வாய்ப்பு.
- +2 தேர்வில் இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல் பாடங்களில் 50% மதிப்பெண்கள் (SC/ST பிரிவினருக்கு 40% மதிப்பெண்கள்)
- MD படிப்பு ஆரம்பம் முதல் முடியும் வரை வழிகாட்டுதல்கள், உயர்கல்வி மற்றும் உலகளாவிய வேலை வாய்பிற்கு ஆலோசனை வழங்குதல்.
- இந்தியாவில் மருத்துவக் கல்வி பயில ஆகும் செலவைவிட 4ல் 1 பங்கு செலவில் MD பட்டம் பெறலாம்.
- 6 ஆண்டுகள் மருத்துவக் கல்வி பயின்று, பட்டம் பெற மொத்தச் செலவு ரூ.15 லட்சம்
- படிப்பிற்கான செலவுகளை ஆண்டுதோறும் SEMESTER முறையில் கட்டலாம். முதலாண்டு செலவு கட்டணம் ரூ.3 லட்சம்.
- தேசிய வங்கிகளில் கல்விக் கடன்பெற வசதியுள்ளது.
- ரஷ்ய மருத்துவக் கல்வி பயிலுவோருக்கு இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளுக்குச் சென்று தொழில் புரிய அல்லது மேற்படிப்பு படிக்க ஓர் அருமையான வாய்ப்பு.
- மாணவர்களுக்கு சர்வதேசத் தரத்தில் தங்கும் விடுதிகள், இந்திய வகை உணவுகள் மற்றும் பல்பொருள் அங்காடி வசதிகள் உள்ளது.
- சர்வதேசத் தரத்தில் மருத்துவக் கல்வி சர்வதேச நிபுணர்களைக் கொண்டு பயிற்றுவிக்கப்படுகிறது.
- அனைத்து மாணவர்களுக்கும் விமானக் கட்டணச் சலுகைகள் வாங்கித் தரப்படுகிறது.
- பெற்றோர்களுடன் ரஷ்ய சுற்றுலா.
- அனைத்து நாடுகளிலும் உள்ள மருத்துவ வேலைவாய்ப்பு நுழைவுத்தேர்வுகளுக்கு (USA, U.K., CANADA, GERMANY) விசேஷப் பயிற்சியளிக்கப்படுகிறது.
- இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும், அயல் நாடுகளிலும் பல கிளைகளுடன் 33 ஆண்டுகளாக சேவை செய்யும் நிறுவனம்.
- இலவச ஆலோசனை & உடனடி அட்மிஷனுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி



**RUSSIAN GOVT. UG / PG FREE SEATS (SCHOLARSHIP) FOR STUDENT WITH ABOVE 80% MARKS**

**சென்னை அலுவலகம் :**
963, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை - 600 084.
Phone : (044) 26614485, 25322021
Mob : (+91) 9840652729 / 9380005652

**மதுரை அலுவலகம் :**
152A, வடக்கு வெளி வீதி,
மதுரை - 625 001.
Mob: 9840800632, 8903278530

**டெல்லி அலுவலகம் :**
No. R-546, New Rajendar Nagar, Shankar Road,
(Near Fire Station), New Delhi - 110 060.
Ph : (011) 45706691 / 46242299, Mobile : 9810132299, 9599240873

**BRANCH OFFICES IN RUSSIA**
Stavropol : (+7) 9887034221, 9881165870
Volgograd : (+7) 92725 39395
Moscow : (+7) 96715 69161

www.russianmbbs.com, ajtrustchennai@yahoo.com



# STUDY MBBS, MD, MS, BDS, MDS

## RUSSIA MBBS-MD- Fees : 2 Lac per Semester

★ Free MCI Screening Test Coaching Center by Indian Professor in Stavropol

★ Indian Food Available ★ No Donation ★ English Medium

★ MCI / WHO Recognised ★ Scholarship on Merit

## Free Counselling & Spot Admission

**(33) Years Track Record & Offices all Over India, Russia & Other Countries**

RECOGNISED BY RUSSIAN HEALTH & EDUCATION MINISTRY

Chairman : **DR. A. AMEER JAHAN,** M.D., Ph.D., (USA).,

Director : **DR. A. NAJEERUL AMEEN,** M.D.,(Russia), PGDHM, PGD&M.HSc,Ph.D.,

## A.J. TRUST EDUCATIONAL CONSULTANCY

- ONLY 50 % OF MARKS AGGREGATE IN PHYSICS, CHEMISTRY, BIOLOGY AND ENGLISH IN H.S.C OR ITS EQUIVALENT COURSE. (40 % FOR SC I ST)
- GUIDANCE TILL THE GRADUATION WITH GLOBAL PLACEMENT ASSISTANCE.
- WORLDWIDE ACCEPTED CURRICULUM.
- GREATER EXPOSURE TO TECHNOLOGICAL DEVELOPMENTS IN THE FIELD OF MEDICINE.
- LESS EXPENSIVE & CHEAPER. ( 25 % OF THE COST IN INDIA).
- TOTAL EXPENSES FOR THE WHOLE COURSE OF STUDY IS FROM **15** LACS, WHICH INCLUDES TUITION FEES COST OF STUDY MATERIALS, EXAM FEES, HOSTEL FEES, FOOD AND HAND EXPENSES.
- FEES CAN BE REMITTED ON **SEMESTER BASIS** EVERY ACADEMIC YEAR.
- EASY EDUCATIONAL LOANS BY NATIONALISED BANKS.
- AMPLE SCOPE FOR ENTERING INTO AUSTRALIA, U.S.A., U.K., AND GERMANY FOR ESTABLISHMENT OF MEDICAL PRACTICE AND FURTHER STUDIES
- EXCELLENT TEACHER, STUDENTS AND STAFF RATIO.
- EXCELLENT HOSTEL ACCOMMODATION, AVAILABILITY OF INDIAN AND CONTINENTAL FOOD AND SUPER MARKET.
- TARIFF CONCESSION IN FLIGHT TICKETS.
- AN ORGANISATION HAVING A NETWORK OF SOPHISTICATED OFFICES IN ALL OVER INDIA AND ABROAD AND PROVEN PAST RECORD OF 33 YEARS.
- FOR FREE COUNSELING AND SPOT ADMISSION PLEASE CONTACT.



**RUSSIAN GOVT. UG / PG FREE SEATS (SCHOLARSHIP) FOR STUDENT WITH ABOVE 80% MARKS**

**CHENNAI OFFICE :**
"Crescent Court", 963, Poonamallee High Road,
Chennai - 600 084.TamilNadu, Tel/Fax : (044) 26614485, 25322021
Mob : (+91) 9840652729 / 9380005652

**MADURAI OFFICE :**
152A, North Veli Street, Madurai - 625 001.
Mob: 9840800632, 8903278530

**DELHI OFFICE :**
No. R-546, New Rajendar Nagar, Shankar Road,
(Near Fire Station), New Delhi - 110 060.
Ph : (011) 45706691 / 46242299, Mobile : 9810132299, 9599240873

**BRANCH OFFICES IN RUSSIA**
Stavropol : (+7) 9887034221, 9881165870
Volgograd : (+7) 92725 39395
Moscow : (+7) 96715 69161

www.russianmbbs.com, ajtrustchennai@yahoo.com

# புனித ரமலான் நோன்பில் கடைபிடிக்க வேண்டிய மருத்துவ அறிவியல் அறிவுரைகள்

**Dr. A. AMEER JAHAN,** M.B.B.S., M.D., MBA., Ph.D.(USA)
தலைவர், அகில இந்திய வெளிநாட்டில் மருத்துவம் பயின்ற டாக்டர்கள் சங்கம்
(All India Foreign Medical Graduates Association)



(1) நோன்பு வைப்பவர்கள் அவரவர் வயது, வியாதிகள், வேலைதன்மைகள், காலநிலை மாற்றங்கள் ஆகியவற்றில் டாக்டர்களின் ஆலோசனைப்படி நடக்க வேண்டும்.

( 2 ) தினசரி எடுத்துக் கொள்ளவேண்டிய மருந்துகள், மருத்துவரின் ஆலோசனைப்படி, இருவேளை உணவுக்கு பின்பு ( ரமலானின் சகர் உணவு, ,இஃப்தார் உணவு நேரம்) மாற்றி எடுத்துக் கொள்ள வேண்டும்.

( 3 ) தனி மனிதன் உடலுக்கு தேவையான தண்ணீரின் அளவு, உப்பின் அளவுகளை மருத்துவரின் அறிவுரைப்படி எடுத்துக் கொள்ளவேண்டும்.

(4) குறிப்பாக சர்க்கரை வியாதி, ,ரத்த அழுத்தம், வயிற்று புண் (Ulcer), இதயநோய், கல்லீரல் நோய், சிறுநீரக நோய் பாதிப்பு உள்ளவர்கள் நோயின் தன்மைக்கு ஏற்ப உணவின் கால அட்டவணைப்படி முறையாக உணவுகளை உட்கொள்ளவேண்டும். எந்த நிலையிலும் சர்க்கரையின் அளவு குறைந்துவிடாமல் (தாழ்நிலை சர்க்கரை) கவனத்துடன் பார்த்துக் கொள்ளவேண்டும். குறிப்பாக சர்க்கரையின் அளவு சுமார் 70 MGக்கு கீழ் சென்றுவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ,அது ஒருவகை மருத்துவ அவசர உதவி நிலையாகும். (Hypoglycemia) ,அந்த நோயாளிகளுக்கு மயக்கம் வந்தவுடன் சுமார் அரை மணி நேரத்துக்குள் , ரத்தத்தில் குளுகோஸ் ஏற்ற வேண்டியது கட்டாய கடமை.

( 5 ) நோன்பு காலத்தில் உங்களுடைய தினசரி வேலைகளை குறைத்துக் கொள்வது நல்லது. உங்களது உடல் உழைப்பு, மூளை உழைப்பு, உடற்பயிற்சிகள், மன அழுத்தம், உறக்கம் ஆகியவற்றில் முக்கிய கவனம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

( 6 ) மருத்துவ ரீதியாக சில நோய்களுக்கான அறிகுறிகள் மயக்கம், தலைச்சுற்றல், கண் பார்வை மங்குதல், நெஞ்சு வலி, வயிற்று வலி, பக்கவாத அறிகுறிகள், வலிப்பு நோய் அறிகுறிகள் ஆகியவற்றில் கவனக் குறைவாக ,இருக்க கூடாது.

7) உடம்பில் நீர்சத்து குறையாமல் குறிப்பாக தினமும் 2 லிட்டர் முதல் 3 லிட்டர் வரை தண்ணீர் குடிக்க வேண்டும். உங்கள் தினசரி உணவின் அளவு மருத்துவர் அறிவுரைப்படி 1800 கலோரி முதல் 2500 கலோரிகள் வரை ,இருக்க வேண்டும்.

(8) கடைகளில் விற்கின்ற பதப்படுத்தப்பட்ட அதிக உப்பு, எண்ணெய் சேர்ந்த உணவுகளை தவிர்ப்பது நல்லது. தினசரி உணவில் அதிக காய்கறிகள், பழங்கள், மீன் உணவுகளை சேர்த்துக் கொள்ளவேண்டும். உணவு தயாரிப்பிலும் சுகாதார முறைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும்.

(9) மாவுச்சத்தை குறைத்து காய்கறிகளை அதிகம் உண்ணுங்கள் நோய்கள் வராது. கனிகளை அதிகமாக உண்ணுங்கள் பிணிகள் உங்களை தொடராது. எனது 50 ஆண்டு கால மருத்துவ அனுபவத்தில் நான் கூறும் அறிவுரைகளை கடைப்பிடித்து வாழும்போது உங்கள் உடலில் மலச்சிக்களும் - மனச்சிக்களும் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

முடிவாக கவலையற்ற, மகிழ்ச்சியுடைய மனத்துடன் , இறைவனிடம் கையேந்தி தினமும் பிரார்த்தனை செய்யுங்கள் மற்றும் ,இந்த நோன்பு மாதம் ஏழைகளுக்கு நன்கொடைகளை அள்ளி வழங்கி ,இறைவனின் அருட்கொடைகளை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் அனைவர்களுக்கும் எனது ,இனிய ரமலான் நோன்பு மாத வாழ்த்துக்களை தெரிவித்து கொள்வதுடன் நோயில்லாத மகிழ்ச்சியான மாதமாக ,இந்த ரமலான் மாதம் அமைய எல்லாம் வல்ல ,இறைவனை வேண்டுகிறேன்.

## சுவர்க்கத்தில் தனி வாசல்

நோன்பு நோற்றவர் மறுமை நாளில் தனி வாசல் மூலம் அழைக்கப்பட்டு கவுரவிக்கப்படுவார்கள். இவ்வாசல் வழியாக நோன்பு நோற்காத எவரும் நுழைய முடியாது.

“ சொர்க்கத்தில் ரய்யான் என்று கூறப்படும் ஒரு வாசல் இருக்கிறது. மறுமை நாளில் அதன் வழியாக நோன்பாளிகள் நுழைவார்கள். அவர்களைத் தவிர வேறு எவரும் அதன் வழியாக நுழைய மாட்டார்கள். நோன்பாளிகள் எங்கே? ' என்று கேட்கப்படும். உடனே அவர்கள் எழுவார்கள். அவர்களைத் தவிர வேறு எவரும் அதன் வழியாக நுழைய மாட்டார்கள். அவர்கள் நுழைந்ததும் அவ்வாசல்கள் அடைக்கப்பட்டுவிடும். அதன் வழியாக வேறு எவரும் நுழைய மாட்டார்கள்” என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஸஹ்ல் (ரலி), நூல்: புகாரீ (1896), முஸ்லிம் (2121)

# கண்ணாடிகள் கவனம்

**எம். அப்துல் ரஹ்மான் Ex M.P.,**
மாநில முதன்மை துணைத் தலைவர்
இந்திய யூனியன் முஸ்லிம் லீக், சென்னை



நமது சமுதாயம் சந்தித்து வருகின்ற பிரச்னைகளில் மிக முக்கியமானது வரம்பு மீறிய காதல் பிரச்னைதான். ஓடிப்போகும் சீரழிவுச் செய்தி எல்லாப் பகுதிகளிலிருந்தும் நீக்கமற வந்த வண்ணமிருக்கின்றன. இதற்கெல்லாம் இதுதான் காரணமென்று பொத்தம்பொதுவாய் ஒன்றைச் சொல்ல முடியாது. செல்போன், சின்னத்திரை, பெரிய திரை, கல்வி நிலையங்களில் கலந்து பழகுதல் எனப் பல காரணங்களைச் சொல்லலாம். காரணம் எதுவாயினும் சரி செய்யப்பட வேண்டிய தலையாய விசயம் இது. இந்தப் பொறுப்பும் கடமையும் பெற்றோர்களையே சாருகின்றது.

பெற்றோர்களின் கவனக்குறைவினால்தானே அவர்கள் கீழிறங்கிப் போகின்றார்கள். செல்போன், தொலைக்காட்சி, இணையதளம் ஆகிய வசதிகளை ஏற்படுத்தித் தருவதோடு பெற்றோர்களின் பங்கு முடிந்து விடுவதில்லை. அதை அவர்கள் எப்படிப்பயன்படுத்த வேண்டும் என்பதைச் சொல்லித்தர வேண்டும். அதன் நன்மை தீமைகளை விளக்கித் தர வேண்டும். தீவிர கண்காணிப்பும் வேண்டும். மீறும்போது கண்டிக்கவும் வேண்டும்.

தொடர்ந்து தொலைக்காட்சி பார்க்கும்போது அதில் காட்டப்படும் கற்பனைக் காட்சிகளால் ஈர்க்கப்படும் பிள்ளைகள் இளமைக்கால தூண்டுதலால் தானும் அதுபோல செய்ய வேண்டுமென உந்தப்படுகிறார்கள். பிள்ளைகளை வைத்துக்கொண்டே தொடர்நாடகங்கள், சினிமாக்களைப் பார்க்கின்றோம். வரம்பு மீறிய காட்சிகளைப் பார்க்கும் சூழலை நாமே உருவாக்கித் தருகின்றோம். பெற்றோர்கள் நல்ல முன்மாதிரிகளாக இருந்து தொலைக்காட்சித் தொடர்களைப் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும். நம் பிள்ளைகள் தனி அறையில் நீண்டநேரம் யாரோடு பேசிக் கொண்டிருக்கின்றார்கள்? என்பதைக் கண்காணிக்க வேண்டும். அவர்களின் கல்லூரி நண்பர்கள் யார்? யாரோடெல்லாம் பழகுகின்றார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும். செலவுகளுக்காக அதிகமாகப் பணம் கொடுப்பதையும் தவிர்க்க வேண்டும். அதிக நகைகளை அணிவிக்காமலிருப்பதும், நகைகள் இருக்குமிடம், பணப்புழக்கம் அவர்களுக்குத் தெரியாமலிருப்பதும் நல்லது. ஏனென்றால் ஓடிப்போகலாம் என்று அவர்கள் முடிவெடுக்கும்போது பணபலமும் அவர்களுக்குச் சக்தி ஊட்டும் அம்சமாக இருக்கலாம். நம் பிள்ளைகளின் உரிமைகளில் தலையிடலாமா? என்றெல்லாம் பார்க்காமல் அவர்களின் நலன்களைக் கருதி கண்காணிக்க வேண்டும். 'படியில் பார்த்து இறங்கு' என்று சொல்வது அவர்கள் 'கீழே விழப் போகிறார்கள்' என்பதற்காக

அல்ல. 'கீழே விழுந்து விடக்கூடாது' என்பதற்காகத்தான். எல்லாவற்றிற்கும் மேலாக இறையச்சத்தையும், மறுமைச் சிந்தனைகளையும் ஊட்டி வளர்க்க வேண்டும். ஒழுக்க மாண்புகளை விதைக்க வேண்டும்.

குர்ஆனும், நபி (ஸல்) அவர்களின் அழகிய வாழ்வுமுறைகளையும் தெளிவாகப் போதித்தாலே அவர்கள் சிறந்தவர்களாக வளர்வதற்குப் போதுமானதாகும். பெண்கள் கண்ணாடிகளைப் போன்றவர்கள் என்றார்கள் நபி (ஸல்) அவர்கள். பெண்களை கண்ணாடியைப் போன்று பாதுகாக்க வேண்டும். கை தவறினால் கீழே விழுந்து உடைந்து நொறுங்கும். நம் காலையே அது குத்திக் கிழிக்கும். கவனமோடு நம் பிள்ளைகளை வளர்ப்போம். கண்ணாடிகள் கவனம்.

## முஜாஹித் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நானும் உர்வா பின் அஸ்ஸுபைர் (ரஹ்) அவர்களும் (மஸ்ஜிதுந் நபவீ) பள்ளிவாசலுக்குச் சென்றோம். அங்கே ஆயிஷா (ரலி) அவர்களின் அறைக் கருகே அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அப்போது மக்கள் பள்ளிவாசலில் முற்பகல் (ளுஹா) தொழுகையை நிறைவேற்றிக்கொண்டிருந்தனர். நாங்கள் இப்னு உமர் (ரலி) அவர்களிடம் மக்களின் இந்தத் தொழுகையைப் பற்றிக் கேட்டோம். அதற்கு அவர்கள் “இது, மார்க்க அடிப்படையற்ற புதிய நடைமுறை (பித்அத்)” என்றார்கள்.

பிறகு “அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எத்தனை ‘உம்ரா’க்கள் செய்துள்ளார்கள்?” என உர்வா (ரஹ்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு இப்னு உமர் (ரலி) அவர்கள், “நான்கு; அவற்றில் ஒன்றை ரஜப் மாதத்தில் செய்தார்கள்” என்றார்கள்.

நாங்கள் அவர்களின் இக்கூற்றை மறுக்க விரும்பவில்லை.

இதற்கிடையே, அறையில் இறை நம்பிக்கையாளர்களின் அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் பல் துலக்கும் சப்தத்தைக் கேட்டோம். அப்போது உர்வா (ரஹ்) அவர்கள், “அன்னையே! இறை நம்பிக்கையாளர்களின் தாயே! அபூஅப்திர் ரஹ்மான் (இப்னு உமர்-ரலி) அவர்கள் கூறுவதைச் செவியுற்றீர்களா?’ எனக் கேட்டார். “அவர் என்ன கூறுகிறார்?” என ஆயிஷா (ரலி) அவர்கள் கேட்டதும், “அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நான்கு ‘உம்ரா’க்கள் செய்துள்ளார்கள்; அவற்றில் ஒன்று, ரஜப் மாதத்தில் நடந்தது என்று கூறுகிறார்” என்றார்.

# எங்கள் ஊரில் ரம்ஜான் அனுபவங்கள்....



**– செ. கார்த்திகேயன்**
தலைமை ஆசிரியர் பொறுப்பு
அரசு உயர்நிலைப் பள்ளி, இளஞ்செம்பூர் --

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் எனது சொந்த ஊர்..... 1973இல்பிறந்த எனக்கு 70களில் கடைசியின் ரம்ஜான் நினைவுகள் மிகவும் அபாரம்.... சஹருக்கு அவுங்க செய்யிற உணவு நிறைய நேரம் எனக்கு காலை உணவாக ஆயிருக்கு.... அது ஆயிஷா அத்தம்மா டேய் இங்க வாடா வந்து கொஞ்சம் சாப்பிட்டு போடா என்ற குரல் இன்னும் காதிலும் மனதிலும் ஒலிக்கிறது..... எப்போதும் மொறச்சி பாக்குற மாதிரியே தெரியிற பெரியத்தா சிருச்சி கிட்ட வாடா என்பார்......நோன்பு காலம் முழுவதும் எனக்கு அவுங்க சகர் சாப்பாடு அப்புறம் நோன்பு திறந்தபின் ரோஸ் மில்க் வடை சம்சா போண்டா வட்டலப்பம் என அனைத்து எனக்கும் சேர்ந்தே கிடைக்கும்..... நோன்பு காலங்கள் அவர்களுக்கு மட்டுமல்ல எனக்கும்தான்..... பெண்கள் வீட்டில் நமாஸ் முடித்த பின் அவங்க பக்கத்துல நான் தான் காத்திருப்பேன் தொழுகை முடிந்து ஆயிஷா அத்தம்மா அவங்க ரெண்டு கைகளையும் என் முகத்தில் வைத்து ஆசீர்வாதம் செய்வாங்க.... எங்க இருந்தாலும் நான் அந்த நேரத்துக்கு அங்க போயிருவேன்....

எப்பயாச்சும் எனக்கு தராம அத்தம்மா வின் மகனுக்கோ பேரனுக்கோ கொடுத்துட்டா சண்டை போடுவேன் அவங்க அல்லா எல்லாத்துக்கும் ஆனவன் டா உனக்கும் நல்லதே செய்வான்டா என் செல்லும்போது எனக்கு மகிழ்வாக இருக்கும் இப்ப அத்தம்மா இல்ல ஆனாலும் இன்னமும் அந்த பேச்சு காதுக்குள்ள உயிரா இருக்கு ....

ஜீனத் மாமிக்கும் சாபிரா குப்பிக்கும் அவர்களின் கணவர்கள் வெளிநாட்டிலிருந்து எழுதும் கடிதத்தை நான்தான் படிப்பேன்.... அதனால ரெண்டு பேர் வீட்ல இருந்தும் நான் எப்போதும் செல்லம் தான்..... மாமா ஊர்ல இருந்து வந்தா எனக்கு சாக்லேட் கைலியும் சட்டையும் கண்டிப்பாக இருக்கும்.....

ஐந்தாவது வீட்டில் இருக்கும் ஆயிஷா மச்சி ஏத்தா இன்னைக்கு எங்க வீட்ல கஞ்சியும் பால் பாயாசமும் சாப்பிடுங்கத்தா எனும் வார்த்தை இன்னும் இனிக்கிறது.....

வெண் தாடியுடன் முகமது ஈசா நன்னா ஈத்திகாப் தொழுகை முடிந்து ஜமாத்தாருடன் படை சூழ வீட்டுக்கு வரும்போது எனக்கும் பரவசமாக இருக்கும்..... அப்போது நானும் ஜமாத்துடன் சென்று வருவேன்....

ஒன்பதாம் வகுப்பு படிப்பதற்காக வெளியூர் சென்றதால் பெருநாள் அன்று மட்டுமே அதே மகிழ்ச்சி கிடைக்கும்..... அன்சர் ,மீரா ,சிக்கந்தர் ,ஹபிபுல்லா ,என எல்லோரும் மாலை நேரங்களில் நோன்பிற்கு பின் விளையாடியது இன்னும் பசுமையாகவே உள்ளது.....நண்பன் ஹிதாயத்துல்லா உடனும் சிறப்பான நோன்புக் காலங்கள் வசந்தம் தான்....

எங்க வீட்டிலேயும் என்னைய சுதந்திரமா இருக்க விட்டாங்க..... ரம்ஜான் மாதம் வந்தாலே எனக்கு கொண்டாட்டம் தான்.....

20 வயதிற்கு பின் அவங்க அதே மாதிரி தான் இருந்தாங்க எனக்குத்தான் கொஞ்சம் கூச்சமா இருந்து அவர்கள் வீட்டுக்குச் செல்வதிலிருந்து சற்று விலகிக் கொண்டேன்..... எங்கள் டியூசனில் நோன்பு திறக்கும் நிகழ்வே அற்புதமான ஒன்றாகத் தான் இருக்கும்.......

ஆசிரியர் பணிக்கு வந்தபின் உடன் பயணிக்கும் நிரு.காஜா முகமது சார் வீட்டு மாடியில் தான் நோன்பு கஞ்சியும் வடையும் போண்டாவும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்...... இன்றும் நண்பர்களோ மாணவர்களோ தினமும் சார் நோன்பு கஞ்சி கொண்டு வாரேன் சார் என்றோ வீட்டுக்கு வாங்க சார் நோன்பு திறக்கலாம் என்று அழைத்துக் கொண்டுதான் உள்ளார்...... 50 வயதுக்கு மேல் அவர்களை பார்க்கும்போது உற்சாகமும் மகிழ்ச்சியும் உள்ளது.... யாரும் இன்றுவரை மாறவில்லை ....

நேற்று கூட ஆயிஷா மாமி நோன்பு கஞ்சியும் பால் பாயாசமும் கொடுத்து அனுப்பி உள்ளார்கள்.... அதே சுவையாக தான் உள்ளது ஆனால் என்ன செய்ய சுகரும் பிரஷரும் அந்த நோன்பு கஞ்சியையும் பால் பாயாசத்தையும் முழுமையாக குடிக்க முடியவில்லை.......

எங்க ஊர்ல இன்னமும் அதே அன்போடும் பாசத்தோடும் தான் அனைவரும் உள்ளனர்... மனசு என்னமோ சிறு பிள்ளையை போன்று துள்ளி குதிக்கிறது உடம்பால்தான் முடியவில்லை....

இன்னும் அதே அன்போடு தான் எங்கள் ஊரில் என்னை கடந்து செல்கிறார்கள்..... அத்தம்மா ,நன்னா,ராதா, மாமா,மாமி ,குப்பி, மச்சி, சச்சா,பெரியத்தா... என உறவுகள் சூழ இன்றும் வாழ்கிறேன்.....

அவர்களின் அன்பிலோ உபசரிப்பிலோ அனுசரணையிலோ எந்த மாற்றமும் இன்றி அழகான உறவாகத்தான் மிகவும் மகிழ்வுடன் பயணிக்கிறேன்....

கடைசியா அந்த ரம்ஜான் பிரியாணி எப்போதும் சிறப்பு தான்...... சரிங்க ரம்ஜான் வருது அனைவருக்கும் இனிய ரம்ஜான் வாழ்த்துக்கள்.....

இன்னும் எத்தனை ஆண்டுகள் போனாலும் எங்கள் ஊரில் நோன்பு காலம் எனக்கும் எனது இஸ்லாமிய உறவுகளுடனும் இப்படித்தான் இனிமையாக இருக்கும்...

அனைவருக்கும் இனிய ரம்ஜான் வாழ்த்துக்கள்....

# ஈகைத் திருநாள்

அழகை ஹைருன்நிஸா



ஈகைத் திருநாள்
வாழ்வியலை
கற்றுணர வந்த மாதம்

உள்ளங்களில்
மகிழ்ச்சியூட்டும்
நோன்பு அழகாகவே
உணர்வூட்டுகிறது.

ஏழையின் பசி
எல்லோரும் அறிவதற்கும்
உணர்ந்து உதவுவதற்கும்
நோன்பு

சக்காத்தின் அருமைதனை
சகலரும் உணர
நோன்பு
உயிரூட்டச் செய்கின்ற மாதம்

நான் எனும் நீ
வேறுபாட்டை
நோன்புக் கஞ்சி கலைகிறது.

இருக்கையின் ஏற்றத்தாழ்வுகளை
நோன்பு திறப்பதில் பள்ளிகளில்
காண்கிறோம்.

கோபத்தை அடக்கி
நோன்பு வைத்தவுடன்
கோபங்கள் குளிரூட்டப்படுகிறது.

அள்ளிக் கொடுப்பதிலும்
ஆடை கொடுப்பதிலும்
தர்மம் முன்னின்று
நன்மைகளை கைகளில்
அள்ளிக் கொடுக்கின்றது.

சிறப்புகள் ஏராளம்
எல்லாவற்றையும்
அடக்கி ஆளும்
மாதத்தின் தாராளம்

சஹரின் பொழுதை
அடைந்து இன்பம்
இப்தார் பொழுதில்
காணும் இன்பம்
நோன்பு பேரின்பம்.

# நோன்புப் பெருநாள்

**காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**
இலங்கை



பசித்திருந்து பலன்பெற்றோம் பெருநாளின்று.
பாக்கியமே பாக்கியமே பாக்கியந்தான்.
புசிக்காத தொன்றுமட்டும் இல்லை இன்னும்
பவமொன்றுஞ் செய்யாதே மனத்தைக் காத்தோம்
நிசியுறக்கந் தவிர்த்தெழுந்து நிலையில்நின்று
நித்தியனைத் தொழுதிறைஞ்சி பாவந் தீர்க்கக்
கசிந்துருகிப் பிரார்த்தித்தோம் தலைவா எம்மைக்
கொடுநரகந் தவிர்த்துச்சுவன் தருவா யென்றே!

இரப்பவர்க்கு இல்லையென்னா(து) அருளும் வல்லோன்
ஏந்துகரம் விடுவதில்லை வெறுமை யாகக்
சுரந்துகொண்டே இருக்குமவன் அருட்சு னையின்
செல்வத்தை அள்ளியள்ளிக் கொட்டிச் சேர்ப்பான்
பரிந்துரைகள் வேண்டாங்காண் பண்ண வன்பால்
பரிசுபெறப் படைத்தெம்மைக் காக்கும் வல்லோன்
சிரம்பணியும் அனைவருக்கும் ஒன்றே போல
தனதருளைப் பொழிவானோர் ஐயம் இல்லை!

தக்பீரின் முழக்கமெல்லாப் பள்ளி தோறும்
செவியினிக்கப் பேரொலிக்கும் பெருநாட் காலம்
திக்கெல்லாம் காற்றள்ளிச் செல்லும் மக்கள்
செய்தபவம் அழிந்தமனத் திருப்தி கொள்வார்
சொர்க்கத்தின் வாடைநெஞ்சுள் மணக்கும் வல்லோன்
தருவனெனச் செப்பியதால் தீனோர் தீனின்
பக்கலினி நாமென்னும் ஓர்மை கொள்வார்
பற்றியநற் கருமங்கள் தொடரு வாரே!

A.Mohamed Thamimun Ansari M.A.,B.Ed.,
K.A.M.Pvt.Ltd ...in

Cell: 94420 48778

# நியூ இளையன்குடி பேக் ஒர்க்ஸ்

# NEW ILAYANGUDI BAG WORKS



6/526 மீனாட்சி அம்மன் கோவில் சன்னதி,
அருணா காபி அருகில், பெரிய கடை வீதி, பரமக்குடி - 623 707.

எங்களிடம் ஆர்டரின் பெயரில் ஸ்கூல் பேக், ஆபீஸ் பேக்ஸ் அனைத்து வகை பேக்குகளும் குறைந்த விலையில் நிறைந்த தரத்துடன் மொத்தமாக தயார் செய்து தரப்படும்.

Mail Id - thameema786@gmail.com.

# ஈகை நோன்பு பெருநாள்



-கவிஞர் தமீம்
பரமக்குடி

எல்லாமும் படைப்பின் ரகசியமே!
எல்லோரும் அறிவது அவசியமே!

மண்ணுயிர்கள் யாவும் சிறக்கவே!
விண்ணுலகம் முழுதும் வாழ்த்துமே!

ஐங்கடமை அனைத்தும் அற்புதமே!
தேனமுதாய் நோன்பதில் சிறப்பே!

பசியோடு ருசியை மறப்பதுவே!
பிணியோடு சோம்பலை ஒழிப்பதுவே!

அறிவோடும் அன்போடும் வாழ்வதுவே!
அறத்தோடும் பண்போடும் மகிழ்வதுமே!

ஈகைத் திருநாள் பெருநாளே!
இயல்பாய் சிறக்கும் நன்னாளே!

இதுவே இஸ்லாம் என்போமே!
இனிதாய் மானுடம் மகிழ்வோமே!

# மறையில் சொன்னபடி வாழ்வோம்
## ( ஈகைத் திருநாள் கவிதை )
## பாவினம் : அறுசீர் விருத்தம்



**டாக்டர் பாவலர் கோவதன்**
பினாங்கு
மலேசியா

மனித நேய மாண்புணர்த்தும்
மக்கள் போற்றும் ஈகைநாள்
புனித மெங்கும் பூத்தூவப்
பொங்கி வழியும் ஈகைநாள்
கனிவில் உறவை வலுப்படுத்தும்
காணக் கிடைக்கா ஈகைநாள்
இனிமை இன்பம் தவழ்ந்தோடும்
இகத்தோர் போற்றும் ஈகைநாள் !

மாதம் ஒன்றில் நோன்பிருந்து
மாசை எல்லாம் நீக்கிமனப்
பேதம் அதனை போக்கிவிடப்
பிறந்த தினமாம் ஈகைநாள்
ஓதும் பாங்கின் ஒலிநெஞ்சில்
உணர்த்தும் இறையின் அருட்கொடையை
கோதும் அன்பில் குடியிருக்கும்
கொற்ற வன்தாள் வணங்குவமே !

குறையை நிறைவாய் ஆக்கிநெறிக்நெறிக்
கோட்டை யதனை ஆண்டிடுவோம்
இறையை எண்ணித் தொழுதபடி
இன்ப மழையில் நனைந்திடுவோம்
பிறையின் ஒளியைக் கண்டுவந்து
பெருநாள் வரவைக் குறித்திடுவோம்
மறையில் சொன்ன வாக்குணர்ந்து
மண்ணில் இனிதே வாழ்ந்திடுவோம் !



# எது நிரந்தரம்

கவின்முகில் மு முகமது யூசுப்
உடன்குடி



நீரில் நிலவின் பிம்பம்
நிலவில் நீந்தும் மீன்கள்
முகில்கள் மறைக்க பிம்பம் களைய
முழுகி முழுகி மீன்கள் தேடிட

பிம்பங்கள் நிரந்தரமல்ல

வெயிலின் கடுமையில் கண்களின்
வெளிறிய காட்சிப் பிழை தான்
கானல்நீர், கடந்து போக
கனத்த ஏமாற்றம் தான்

கானல்நீர் நிரந்தரமல்ல

மங்கிய வெளிச்சத்தில் மழைத்துளியின்
ஒளிச்சிதறல்
வானவில்லாய் வளைந்தன
வானம் வெளிற மறைந்தன

வானவில் நிரந்தரமல்ல

கருமேகம் கரு கொண்டு
பெரும் இடியோடு மழை
கொட்டி தீர்த்தது அதுவும்
கொஞ்ச நேரம் தான்
பூமி பந்து மீண்டும் பூத்தது

மழையும் நிரந்தரம் அல்ல

உலகில் வாழ்வும் வளமும்
உறவும் சுற்றமும் நட்பும்
செல்வமும் செல்வாக்கும்
சிதறுமே எல்லாம்
மரணித்தால்

எதுவும் நிரந்தரமல்ல

பிள்ளைகளின்
பிரார்தனைகள்
பயனுற செய்த கல்வி
பொது சேவை சதக்கத்துல்
ஜாரியா
பெரும் பேற்றைத் தரும்

இன்றைக்கும்
என்றைக்கும்
இம்மைக்கும்
மறுமைக்கும்
மகிழ்வைத் தரும்

அதுவே நிரந்தரம்


FSSAI No: 22423423000383
கலப்படம் இல்லாத
அம்மாவின் பேரன்பு
HUTHA Health Care Product
பாரம்பரிய சைவ / அசைவ மசாலா & தொக்கு வகைகள்
மரபு வழி இடியாப்ப மாவு வகைகள்
ரசாயனமற்ற முகப்பொலிவு & குளியல் பொருட்கள்
குழந்தைகளுக்கான மால்ட் & சர்க்கரை நோயாளிகளுக்கான சத்து மாவு
மூலிகை பொடிகள்
சிறப்பு: ஆர்டரின் பெயரில் பிரசவ லேகியம் செய்து தரப்படும்.
வாய்ப்பு : மகளிருக்கான வியாபார வாய்ப்பு உண்டு.
90253 03765
Chromepet, Chennai - 44

# ரமளான் தூது



முதுவைக் கவிஞர் மௌலவி
**ஏ. உமர் ஜஹ்பர்** மன்பயீ

அல்ஹம்து லில்லாஹி அகிலத்துப் புகழெல்லாம்
அன்பாளும் அருளாளும் ஈருலகை அரசாளும் !
அல்லாஹு வல்லவனே ! உன்பாதம் காணிக்கை !
அருள் தா என் நல்லவனே ! அதுதான் என்கோரிக்கை !
சொல்லாலும் செயலாலும் பேருலகைக் காப்பதற்கு
சன்மார்க்க நெறிதந்த சாந்தி நபி நாதருக்கு –
ஸல்லல்லாஹு என்ற ஸலவாத்து மலர் தூவி
சங்கையினை சமர்பித்து கவிதையினைப் பாடுகிறேன் !

அங்காச புரியினிலே அழகுமலர்ச் சோலையிலே,
அருள் மணக்கும் நிலையினிலே வானொலியாம் ஆறினிலே
மங்காத புகழ்படைக்கும் ரமளானின் பெருமையினை
மனமகிழ்ந்து பாடிடவே கவிக்குயில்கள் வந்திடவே
சங்கை மிகுஹாஜி கவிசுல்த்தான் தலைமையிலே
சாந்தமிகு ஹாஜி ஊகா சபையுடனே ஹாஜா முஹைதீன்
அங்கமர்ந்த வேலையிலே, அரும் நாச்சியார் நற்படைப்பில்
அருமை மிகு கவியரங்கம் ! பெருமையுடன் அது துவங்கும் !

வேதங்கள் தந்து நிற்கும் மாதங்களின் மன்னவனே !
வேதனைகள் வேரறுத்துச் சாதனைகள் தந்தவனே !
மாதங்கள் பன்னிரண்டில் மலைபோன்ற மனத்தவனே !
மனதுகளின் கறைகழுவ மகிமையுடன் வந்தவனே !
வேதனையாம் நரகத்தைத் தாழிட்டு வைத்தவனே !
விந்தை மிகு சொர்க்கத்தை திறந்து விட்டு வந்தவனே !
ஆதியிறை அல்லாஹ்வின் பேரருளே ரமளானே !
அன்புடனே வரவேற்போம் அகமகிழ வாழ்த்துரைப்போம் !

கற்கண்டில் எப்பக்கம் இனிப்பாகும்? எனக்கேட்டால்
கடிக்கின்ற பக்கமெலாம் இனிப்பே தான் எனவுரைப்போம் !
அற்புதமாய் இறையளித்த ரமளானே ... உன் அமலில்
அத்தனையும் கற்கண்டுச் சுவையான அமலென்போம் !
துற்குணங்கள் நீக்குகிற தொழுகையுடன் தருமங்கள்,
தூய பசி நோன்புடனே தவ்பாவும் தராவீஹும்

பொற்புடைய இங்திகாபும் புனித குர்ஆன் திலாவத்தும்
பேணி நின்ற அமல்களிலே பெருமை கொண்டோம் ரமளானே !

பதினான்கு மணிநேரம் புசியாமல் பசித்திருந்தோம் !
பச்சைநீர் அருந்தாமல் தாகத்தை சகித்திருந்தோம் !
சதிபதிகள் சல்லாபம் கொள்ளாமல் தனித்திருந்தோம் !
சங்கை மிகு ரமளானே ... கண்ணியத்தைக் காத்திருந்தோம் !
பதி புகழும் ரமளானின் ஒரு மாத வாழ்க்கையிலே,
பக்தியுடன் அஞ்சியிருந்த முப்பசியை முழுவதுமாய்
மதியுடனே கணக்கிட்டால் நானூற்று இருபத்து
மணிநேரம் ரமளானே உனக்காக வாழ்ந்திருந்தோம் !

நற்குணத்துப் பெண்ணுக்கும் நாயனுக்கும் தெரிந்த பண்பு
நானிலத்து வாழ்வினிலே நல்லொழுக்கக் கற்பாகும் !
பொற்புடைய கற்பென்னும் இரகசியத்தை யாரறிவார்?
பேணி நிற்கும் பெண்மணியும் பேரிறையும் தானறிவார் !
கற்பொன்றே ஒழுக்கங்களில் மறைவான ஒழுக்கம் போல் –
கடமை மிகு நோன்பதுவும் மறைவான அமலாகும் !
கற்பென்னும் புனிதத்தைப் பேணுகிற பெண் போல –
கண்ணியமாம் ரமளானே... உனைக்காத்து வைத்திட்டோம் !

சிக்கனத்தை அறிவுறுத்திச் சொல்லாத போத மில்லை !
சீரழிவை அச்சுறுத்திக் கூறாத வேத மில்லை !
சிக்கனத்தின் சிறப்பினையும், சீரழிவின் படிப்பினையும்
சிந்தையிலே விதைக்க வந்த ரமளானே சோபனங்கள் !
சிக்கனத்தை நோன்பின் வழி சொல்லிவிட்ட ரமளானே...
சீர்திருத்த ஆசானே ! சோபனங்கள் ! சோபனங்கள் !
பக்தியெனும் பெயர் தாங்கிப் பண்புகளைப் பாருலகில்
பதியமிட வந்து செல்லும் ரமளானே ! சோபனங்கள் !

உலகமெலாம் ஒருசேர ஒருமாதம் நோன்பிருந்தால்
உலகத்துக் கடனையெல்லாம் உடனடியாய் அடைத்திடலாம் !
நிலைகுலைக்கும் காமத்தை நிதானமுடன் வென்று விட்டால்
நிலவுலகில் பெண்ணினத்தைக் கண்ணியமாய் காத்திடலாம் !
பலவுணவு படைத்திருந்தும் அளவுடனே உண்டு வந்தால்
பல்லாயிரம் நோயைப் பாரினிலே விரட்டிடலாம் !
அளவிடவே முடியாத தத்துவங்கள் தந்து விட்ட
அற்புதமே ரமளானே ! அருமருந்தே வாழியவே !

அல்லாஹ்வின் அருளாக எங்களிடம் வந்து செல்லும்
அன்பான ரமளானே ! அல்லாஹ்விடம் சென்று
நில்லாது புகழ்பாடும் நானிலத்து முஸ்லிம்களின்

நிலைகளையும் நினைவினையும் நெஞ்சார நீ சொல்லு
நல்ல அடக்க நாடுகளை நஞ்சுவெனக் கூறுகிறார் !
நலிந்திருக்கும் மக்களையே நசுக்குகிறார் பொசுக்குகிறார் !
சொல்லுகிற 'தீவிரத்துச்' சொற்களுக்கா நாம் சொந்தம்?
சோதனைகள் வேதனைகள் கொஞ்சமல்ல நஞ்சமல்ல !

எம்மினத்து மக்களெல்லாம் ஆளுகிற தேசங்களில்
ஏனெதற்கோ நெருக்கடிகள் கூட்டுகிறார் ! வாட்டுகிறார் !
நிம்மதியாய் வாழ்வதற்கு நீதியில்லை பாரினிலே
நின்றாலும் நிமிர்ந்தாலும் பழிச்சொல்லே வாழ்வினிலே !
உம் வரவால் இழந்துவிட்ட நிம்மதியை மீட்டு வர
இறைவனிடம் சொல்ரமளான் ! எம்மிதயம் குளிர்ச்சி பெற !
எம்மண்ணில் எவரேனும் காழ்ப்புணர்வைக் கக்கிவிட
இயலாது செய்துவிடு ! ஏற்றங்கள் தந்துவிடு !

இல்லாத நிலைகளெல்லாம் இல்லாமல் ஆக்கிவிடு !
இயலாமை எனும் சொல்லை எம்நாட்டில் எடுத்துவிடு !
செல்வாக்கும் சொல்லாக்கும் எல்லோர்க்கும் கொடுத்துவிடு !
செறுக்கோடு எமைநோக்கும் சிறுமைகளைத் தடுத்துவிடு !
வல்லரசு போக்குகளில் நியாயத்தை நிலைத்து விடு !
வலியவந்து வம்பிழுக்கும் போக்குகளை நிறுத்தி விடு !
அல்லாஹ்வின் அருட்கொடையே சென்று மீண்டும் வந்து விடு !
அனுதினமும் உன் நினைவே ! சொர்க்கத்தைத் தந்து விடு !
வஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி
வ பரக்காத்துஹு

## அப்துர் ரஹ்மான் பின் அபீபக்ர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்களை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்று 'தன்யீம்' எனுமிடத்தில் உம்ராவுக் காக இஹ்ராம் கட்டச் செய்ய வேண்டும் என எனக்குக் கட்டளையிட்டார்கள்.

(இதன் அறிவிப்பாளர்களில் ஒருவ ரான) சுஃப்யான் பின் உயைனா (ரஹ்) அவர்கள் ஒரு முறை, "அம்ர் பின் தீனார் (ரஹ்) அவர்களிடம் இதைக் கேட்டுள் ளேன்; எத்தனையோ முறை கேட்டுள் ளேன்" என்று கூறினார்கள்.



# வாசிப்பை நேசிப்போம்

ஒருகோடி கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது, ஒரு நூலகம் கட்டுவேன் என்று பதிலளித்தாராம் **“மகாத்மா”.**

தனிமைத்தீவில் தள்ளப்பட்டால் என்ன செய்வீர்கள் என்று கேட்ட போது புத்தகங்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து விட்டு வருவேன் என்று பதிலளித்தாராம் **“ஜவஹர்லால் நேரு”**

என் கல்லறையில் மறக்காமல் எழுதுங்கள் இங்கே ஒரு புத்தகப் புழு உறங்குகிறதென்றாராம் **“பெட்ரண்ட் ரஸல்”**

மனிதனின் ஆகப் பெரிய கண்டுபிடிப்பு எது என்று வினவப்பட்டபோது சற்றும் யோசிக்காமல் புத்தகம் என பதிலளித்தார் **“ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்”**

வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம் சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும் என்றாராம் **“நெல்சன் மண்டேலா”**

பிறந்த நாளுக்கு என்ன வேண்டும் என கேட்டபோது புத்தகங்கள் வேண்டும் என சற்றும் தயக்கமின்றி **“லெனின்”** கூறிட குவிந்த புத்தகங்கள் பல லட்சம்...

ஒவ்வொரு படமும் நடிக்க ஒப்புக் கொள்ளும்போது வரும் முன் பணத்தில் முதல் நூறு டாலருக்கு புத்தகம் வாங்குவாராம் **“சார்லிசாப்லின்”**

ஒரு குழந்தைக்கு நீங்கள் வாங்கித்தரும் ஆகச் சிறந்த பரிசு ஒரு புத்தகம்தான் என்றார் **“வின்ஸ்டன் சர்ச்சில்”**

பயங்கரமான போராட்ட ஆயுதங்கள் எவை என கேட்கப்பட்டபோது புத்தகங்கள் தான் என்றாராம் **“மார்டின் லூதர்கிங்”**

தான் தூக்கிலிடப்படுவதற்கு ஒரு நிமிடம் முன்பு வரை வாசித்துக்கொண்டே இருந்தாராம் **“பகத்சிங்”**

நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன். **“ஆபிரகாம் லிங்கன்”**

ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள்; அவனே எனது வழிகாட்டி **“ஜூலியஸ் சீசர்”**

உலக வரைபடத்திலுள்ள மூலைமுடுக்குகளுக்கெல்லாம் போக விரும்புகிறாயா, ஒரு நூலகத்துக்குச் செல். **“டெஸ்கார்டஸ்”**

போதும் என்று நொந்துபோய், புதுவாழ்வைத் தேடுகிறீர்களா... ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்கு **“இங்கர்சால்”**

சில புத்தகங்களை சுவைப்போம்... சிலவற்றை அப்படியே விழுங்குவோம்... சில புத்தகங்களை மென்று ஜீரணிப்போம்! **“பிரான்சிஸ் பேக்கன்”**

புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளைவிட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே! **“லெனின்”**

உண்மையான வாசகன், வாசிப்பதை முடிப்பதே இல்லை! **“ஆஸ்கார் வைல்ட்”**

உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அதுபோல மனதுக்குப் பயிற்சி புத்தக வாசிப்பு! **“சிக்மண்ட் ஃப்ராய்ட்”**

பழங்காலத்திய மகா புருஷர்களை நேரில் தரிசித்து, அவர்களுடன் உரையாட வேண்டுமா? நூலகத்துக்குப் போ **“மாசேதுங்”**

**வாசிக்கும் பழக்கம் ஓர் மனிதனை முழு மனிதனாக மாற்றிவிடும்...**

**உலகில் வாழ்ந்து மறைந்த மாமனிதர்கள் பலரும் நூல்கள் வழியாகத் தான் வாழ்வின் வெளிச்சத்தை நோக்கி பயணித்தனர்...**

**வாசிப்பை நேசிப்போம் மற்றும் நபிமொழிகளின் அடிப்படையில் அறிவை வளர்ப்பதை வலியுறுத்தும் முக்கிய கருத்துகள்:**

**அறிவு தேடல்:** கல்வி கற்பது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும் (நபிமொழி). புத்தகங்கள் வாசிப்பது அறிவை விசாலமாக்கி, மனிதனைப் பண்படுத்துகிறது.

**வாசிப்பின் முக்கியத்துவம்:** புத்தகங்களை நல்ல நண்பர்களாகக் கருதி, அவற்றை வாசிப்பதை ஒரு சிறந்த பழக்கமாக மாற்ற வேண்டும்.

**வாசிப்பை சுவாசிப்போம்:** புத்தகங்களை தேர்ந்தெடுத்து வாசிப்பதன் மூலம், வாசிப்பை ஒரு சுவாசமாக மாற்றி, அறிவார்ந்த சமூகத்தை உருவாக்க வேண்டும்.

இனிய ஈகைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

# (ECO) Mens Tailoring
# தமிழ் டெய்லர் கடை



## All Kinds of Uniforms :
## Hotels, Taxi, Restaurants
## Garage & Companies

**Tel : 04-226 2444**
**Mobile : 055 531 4932 / 055 450 1877**
**Shop No. 3 Khalifa Building,**
**P. O. Box. 184682**
**Hor Al Anz, Dubai – UAE**
**E-mail : mohamedgani123@yahoo.com**

# இறையச்சம் கொண்டவர்களின் வாழ்க்கை....

**பேராசிரியர். அ. முகமது அப்துல் காதர்,**
கல்வியாளர் மற்றும் எழுத்தாளர்.
ஆலோசகர் AMS பொறியியல் கல்லூரி.சென்னை.



பூமியில் உள்ள உயிரினங்கள் அனைத்தையும் படைத்தவன் ஏக இறைவன் அல்லாஹ். இறைவனின் படைப்புகளில் உயர்ந்த படைப்பான மனிதன் இந்த பூமியில் எப்படி வாழ வேண்டும், தனது மறுமை வாழ்வுக்காக என்ன நற்காரியங்களில் ஈடுபட வேண்டும் என்பதை தனது திருமறையில் மிக தெளிவாக அல்லாஹ் விளக்கி கூறியுள்ளான்.

மனிதனின் இந்த உலக வாழ்வில் அவன் மிக முக்கியமாக செய்யவேண்டியது அல்லாஹ் மீது நம்பிக்கை கொள்வது. அவனை ஏக இறைவனாக ஏற்றுக்கொண்டு அவன் காட்டிய வழியில் தனது வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். அப்படி யார் அல்லாஹ் மீது இறையச்சம் கொண்டு நற்காரியங்களில் ஈடுபடுகிறார்களோ அவர்கள் தங்களது வாழ்க்கையில் வெற்றிபெற்றவர்கள் என்று திருக்குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகிறது.

## வெற்றி தரும் இறையச்சம்

“இறையச்சம் கொண்டவர்கள் நிச்சயமாக வெற்றி பெற்று விட்டனர். அவர்கள் எத்தகையயோரென்றால், தங்கள் தொழுகையில் உள்ளச்சத்தோடு இருப்பார்கள். இன்னும், அவர்கள் வீணான (பேச்சு, செயல் ஆகிய)வற்றை விட்டு விலகியிருப்பார்கள். ஜகாத்தையும் தவறாது கொடுத்து வருவார்கள். மேலும், அவர்கள் தங்களுடைய வெட்கத் தலங்களைக் காத்துக் கொள்வார்கள்”. (திருக்குர்ஆன் 23:1-5)

அடுத்ததாக, இறைவன் மீது பயபக்தி கொண்டவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் திருக்குர்ஆன் இவ்வாறு வழிகாட்டுகிறது:

“(பயபக்தியுடையோர் எத்தகையோர் என்றால்,) அவர்கள் இன்பமான (செல்வ) நிலையிலும், துன்பமான (ஏழ்மை) நிலையிலும் (இறைவனின் பாதையில்) செலவிடுவார்கள்; தவிர கோபத்தை அடக்கி கொள்வார்கள்; மனிதர்(கள் செய்யும் பிழை)களை மன்னிப்போராய் இருப்பார்கள்; (இவ்வாறு அழகாக) நன்மை செய்வோரையே அல்லாஹ் நேசிக்கின்றான். (திருக்குர்ஆன் 3:134)

## பாவ மன்னிப்பு

மனிதன் தவறு செய்யக்கூடியவனாகவே இருக்கின்றான். அறிந்தும் அறியாமலும் மனிதன் செய்யும் பாவங்களை மன்னிக்கக்கூடியவன் இறைவன். எனவே நாம் அறியாமல் ஏதேனும் பாவத்தை செய்துவிட்டால் அதற்காக மனப்பூர்வமாக இறைவனிடம் பாவ மன்னிப்பு கேட்க வேண்டும். மேலும் ஒரு செயல் பாவமானது என்று தெரிந்தால் உடனே அதில் இருந்து விலகி காத்துக்கொள்ள வேண்டும். மேலும் பாவமன்னிப்பு கேட்கும்போது இறைவன் ஏற்றுக்கொண்டு பாவங்களை மன்னிப்பதுடன் சொர்க்கமும் கிடைக்கும். இதையே திருக்குர்ஆன் இவ்வாறு தெரிவிக்கின்றது:

"தவிர, மானக்கேடான ஏதேனும் ஒரு செயலை அவர்கள் செய்துவிட்டாலும், அல்லது (ஏதேனும் பாவத்தினால்) தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டாலும் உடனே அவர்கள் (மனப்பூர்வமாக) அல்லாஹ்வை நினைத்து தங்கள் பாவங்களுக்காக மன்னிப்புத் தேடுவார்கள்; அல்லாஹ்வைத் தவிர வேறு யார் பாவங்களை மன்னிக்க முடியும்? மேலும், அவர்கள் அறிந்து கொண்டே தங்கள் (பாவ) காரியங்களில் நிலைத்திருக்க மாட்டார்கள்". (திருக்குர்ஆன் 3:135)

அத்தகையோருக்குரிய (நற்) கூலி, அவர்களுடைய இறைவனிடமிருந்து மன்னிப்பும்; சுவனபதிகளும் ஆகும்; அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக் கொண்டே இருக்கும்; அவர்கள் அங்கே என்றென்றும் இருப்பர்; இத்தகைய காரியங்கள் செய்வோரின் கூலி நல்லதாக இருக்கிறது. (திருக்குர்ஆன் 3:136)

## அனைத்தையும் அறிந்தவன்

மனிதன் ஒரு தவறு, பாவம் செய்துவிட்டால் அதில் இருந்து தன்னை காத்துக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். ஆனால் சிலர் மறைவாக தான் செய்த தவறுகள், பாவங்களை பிறர் அறியமாட்டார்கள் என்று எண்ணுகிறார்கள். இதனால் அவர்கள் நீதி தவறி விடுகிறார்கள். இத்தகைய மனிதர்களை திருக்குர்ஆன் இவ்வாறு எச்சரிக்கிறது.

"இறைநம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியைக் கடைப்பிடிப்பவராகவும் அல்லாஹ்வுக்காக சான்று வழங்குபவராகவும் திகழுங்கள்! (நீங்கள் செலுத்தும் நீதியும், வழங்கும் சாட்சியும்) உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினருக்கோ பாதகமாக இருந்தாலும் சரியே! (நீங்கள் யாருக்காக சாட்சி சொல்கின்றீர்களோ) அவர் செல்வந்தராகவோ ஏழையாகவோ இருந்தாலும் சரியே! அல்லாஹ் அவர்களின் நலனில் உங்களைவிட அதிக அக்கறை உள்ளவனாக இருக்கின்றான். எனவே,

மன இச்சையைப் பின்பற்றி நீதி தவறி விடாதீர்கள். நீங்கள் உண்மைக்குப் புறம்பாக சாட்சி சொன்னாலோ, சாட்சியளிக்காமல் விலகிச் சென்றாலோ திண்ணமாக அல்லாஹ் நீங்கள் செய்கின்றவற்றையெல்லாம் நன்கு அறிபவனாக இருக்கின்றான்". (திருக்குர்ஆன் 4:135)

"இறைநம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்காக வாய்மையில் நிலைத்திருப்போராயும் நீதிக்குச் சான்று வழங்குவோராயும் திகழுங்கள்! எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள பகைமை உங்களை நீதியிலிருந்து பிறழச் செய்துவிடக் கூடாது. நீங்கள் நீதி செலுத்துங்கள். இதுவே இறையச்சத்திற்கு மிகப் பொருத்தமானது. அல்லாஹ்வுக்கு அஞ்சிச் செயலாற்றுங்கள். நீங்கள் செய்வனவற்றை முழுமையாக அல்லாஹ் அறிந்தவனாக இருக்கின்றான்". (திருக்குர்ஆன் 5:8)

நாம் செய்கின்ற அனைத்தையும் இறைவன் நன்கு அறிகின்றான். அவனது பார்வையில் இருந்து மறைவாக எதையும் நாம் செய்ய முடியாது. எனவே நாம் இறைவனுக்கு பயந்து, இறையச்சத்துடன் நடந்து இம்மையிலும், மறுமையிலும் நிறைவான வாழ்க்கை வாழ்வோம். ஆமின்.

## உக்பா பின் ஆமிர் அல்ஜுஹனீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

"எனது சமுதாயத்தின் அழிவு வேதத்திலும், பாலிலும் உள்ளது" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது மக்கள், "அல்லாஹ்வின் தூதரே! வேதமும் பாலும் என்றால் (இதற்கான விளக்கம்) என்ன?" என்று கேட்டனர்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள், "(வேதம் என்பது) அவர்கள் குர்ஆனைக் கற்றுக்கொள்வார்கள்; ஆனால் அல்லாஹ் இறக்கிவைத்த (உண்மையான) கருத்துக்கு மாற்றமாக அதற்குத் தவறான விளக்கம் அளிப்பார்கள். (பால் என்பது) அவர்கள் பாலை (அதிகமாகப் பெறுவதை) விரும்புவார்கள்; (அதற்காகத் தங்கள் கால்நடைகளுடன் ஊருக்கு வெளியே சென்று தங்கிவிடுவார்கள்). அதனால் ஜமாஅத் தொழுகைகளையும், ஜுமுஆக்களையும் விட்டுவிடுவார்கள்; கிராமப்புறவாசிகளாக (நாடோடிகளாக) மாறிவிடுவார்கள்" என்று கூறினார்கள்.

# இன்பம் பொங்கும் ஈகைப் பெருநாள்



**கவிஞர்.வி.எஸ்.முஹம்மது பஸ்லுல்லாஹ்(வேலூர்)**
மாநில கவுரவ ஆலோசகர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்

அகில உலகத்தில் பரவி வாழும் முஸ்லிம்கள் அனைவருக்கும் இறையருள் பொழியும் இனிய மாதம் புனித மிகு ரமலான்.

இஸ்லாமிய மார்க்கத்தை பின்பற்றி வாழும் முஸ்லிம்களுக்கு அல்லாஹ் ஐந்து கட்டாய கடமைகளை நிர்ணயித்துள்ளான்.

1. ஈமான்! (இறைவன் ஒருவன் என்ற உறுதியான நம்பிக்கை கொள்ளுதல்)
2. தொழுகை!(ஐந்து வேளை இறைவணக்கம் செய்தல்)
3. நோன்பு! ( புனித ரமலான் மாதத்தில் 30 நாட்கள் உண்ணாவிரதம் மேற்கொள்ளுதல்)
4. ஜகாத்! (ஏழைகளுக்கு தான தர்மம் செய்தல்)
5. புனித ஹஜ்! (வசதி படைத்தவர் மட்டும் புனித மக்கா யாத்திரை செய்தல்)

இதில் ஹஜ் கடமையை தவிர்த்து மற்ற நான்கு கடமைகளும் அனைத்து முஸ்லிம்கள் மீது கடமையாக்கப்பட்டுள்ளது.

## புனித ரமலான் மாதம்

தொழுகை, நோன்பு, ஜக்காத்து ஆகியவற்றின் மூலம் இறைவனுக்கும், மனித சமுதாயத்திற்கும் தனக்கும் உரிய கடமைகளை செவ்வேனே நிறைவேற்ற வேண்டிய மாதமாக புனித ரமலான் திகழ்கிறது.

## நோன்பைப் பற்றி திருக்குர்ஆன்

விசுவாசிகளை உங்கள் முன்னிருந்தவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த பிரகாரமே உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது.(அதனால்) நீங்கள் பரிசுத்தவராகலாம் என்று இறைவன் தனது அருள் மறையில் கூறுகிறான்.

## திருக்குர்ஆன் வந்த புனித இரவு

இந்த இறையருள் பொழியும் இனிய மாதத்தில் வரும் “லைலத்துல் கதர்” என்னும் மகத்துவமிக்க இரவில் தான் திருக்குர்ஆனின் திருவசனம் முதன்முதலாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வினால் அருளப்பட்டது. அந்த புனித இரவு ஆயிரம் மாதங்களை விட சிறந்தது என்று இறைவன் கூறுகிறான்.

இந்தப் புனித இரவின் செய்யப்படும் துஆக்கள் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது

## நோன்பின் நோக்கம்

முஸ்லிம்களுக்கு அல்லாஹ் கடமையாக்கிய புனித மிக்க நோன்பின் தனித்தன்மை என்னவென்றால் பசி எத்தனை கொடியது, வறுமை எத்தகைய கசந்தது, கொடுமையானது, என்பதை ஒவ்வொரு மனிதரும் உணர வேண்டும்.

இதனால் வறுமையில் வாடும் ஏழைகளுக்கும் பசித்தவர்களுக்கும் உதவிடும் மனப்பக்குவம் உண்டாகும், இதன் மூலம் ஏழை, எளியவர்களிடம் அன்பு செலுத்தி ஆதரவு கரம் நீட்ட, தர்மம் செய்ய நோன்பு தூண்டுகிறது.

## ஜகாத் என்னும் ஏழை வரி

புண்ணியங்கள் பூத்து குலுங்கும் இந்த புனித மாதத்தில் தான் இஸ்லாத்தின் 4 - வது கடமையான 'ஜகாத்' என்னும் ஏழை வரியை செல்வந்தர்கள் தங்கள் உழைத்து ஈட்டிய வருமானத்தில் 40-ல் ஒரு பங்கினை கணக்கு பார்த்து ஏழைகளுக்கு கட்டாயம் வழங்கிடுமாறு இஸ்லாம் கட்டளையிடுகிறது.

இதன்மூலம் வறுமை ஒழிந்து சமதர்ம சமுதாயத்தை உருவாக்கவும், ஏழை மக்களும் ஈத்பெருநாள் மகிழ்ச்சியில் பங்கு கொண்டு புத்தாடை உடுத்தி புன்னகை பூத்து, ருசியான உணவு உண்டு மகிழவும் வழி வகுக்கும். புனிதமிகு ரமலானின் ஈகைப்பெருநாளை இன்னல்கள் அகன்று, இன்பம் பொங்க கொண்டாட வழிகாட்டும் மார்க்கமாக இஸ்லாம் திகழ்கிறது.

## மகிழ்ச்சி வெள்ளம்

வல்ல அல்லாஹ் ஒருவனை வணங்கி வாழ்வதும்,
வாழும் மக்களுடன் இணங்கி வாழ்வதும்
வறுமைப்பட்டோருக்கு வழங்கி வாழ்வதும்
முஸ்லிம்களின் அடிப்படை கொள்கை ஆகும்!

இந்த கடமைகளை நிறைவேற்றிய மகிழ்ச்சியில் கொண்டாடப்படுவது தான் ரமளானின் ஈகைப்பெருநாள்.

இன்பம் பொங்கும் ஈத் பெருநாளில் மக்களின் மனங்களில் பொங்கி பூரிக்கும் மகிழ்ச்சி திருநாளின் மகிழ்ச்சி ஒளி எங்கும் பரவட்டும் இறையருள் இனிதே பொழியட்டும் என்று இறைவனிடம் இருகர மேந்துகிறேன். ஆமீன்.

இஸ்லாமிய சமுதாய மக்கள் அனைவருக்கும் நமது ஈகைப் பெருநாள்-மகிழ்ச்சி திருநாள் நல்வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன் ஈத் முபாரக்.

தாய்நாடு செழிக்க - நாட்டு மக்கள் அனைவரும் மதநல்லிணக்கம் பேணி ஒற்றுமையுடன் வாழ வல்ல அல்லாஹ்வின் அருள் வேண்டி இறைஞ்சுவோம்.

# நோன்பும் மாண்பும் !

## ( அறுசீர் விருத்தம் )



**எம்.ஆர்.தனசேகரன்**
மலேசியா

அகிலத்தில் நாமெல்லாம் அமைதியுடன் வாழ்வதற்கே
அனைத்தும் தந்தார்
மகிழ்வோடு மற்றவரை மனந்திறந்தே எந்நாளும்
மதிக்கச் சொன்னார் !
தகிக்கின்ற சொல்லாலே புண்படுத்தும் செயலதனைத்
தவிர்க்கச் சொல்லிச்
சகிப்பென்ற நற்குணத்தால் சமத்துவத்தை நாட்டிடவும்
சார மானார் !

அல்லாவின் கருணைபெற அனுஷ்டிக்கும் நோன்பென்னும்
அறமே மாண்பு
நில்லாதே அவனருளும் நீடிக்கும் தலைமுறைக்கும்
நிறைவே கொள்வீர் !
நல்லாசி பெறுவதற்கும் நயமுடனே உயர்வதற்கும்
நாடு நேர்மை
ஒல்லும்நற் பணியதனை ஒழுக்கமுறப் புரிபவர்க்கும்
ஒளியும் ஈந்தார் !

அருளுமவர் வரம்பெற்றே அவரவரும் இன்புறலே
அவரின் சித்தம்
அரும்பொருளை வேண்டுவர்க்கே அருகிவரும் பேரின்பம்
அன்பைப் பேணு !
தருவதற்கே ஏதுமில்லாத் தருணமெனில் தாழ்வில்லை
தயவைக் காட்டு !
உருகியழும் பரிவுகுண உணர்வதுவும் இருந்துவிட்டால்
உயரும் பண்பே !

# HABUL HAJAR

## VEGETABLES & FRUITS TRADING CO. L.L.C

### IMPORT & EXPORT

FOLLOW US
HABULHAJAR_VEGTRADING

# இறக்குமதி & ஏற்றுமதி




Aavin Ghee | Vegetables | Fruits | Cold Pressed Oil

Rices | Banana Leafs | Egg | All Pulsess & Spices

**ஆவின் நெய், காய்கறிகள், பழங்கள்,**
**அனைத்து வகையான சமையல் எண்ணெய்**
**வாழை இலைகள், முட்டை**
**அனைத்து பருப்பு வகைகள் & மசாலாப் பொருட்கள்**

## +971 58 588 1419 / +971 54 439 4943

PO. BOX NO: 128172,
Al Aweer Fruits & Vegetables
Wholesale Market, Building No:1
Shop No:22A, Dubai - UAE

Bloom Market,
B Block, Shop No:B7,
Al Aweer Fruits & Vegetables
Wholesale Market, Dubai - UAE

habulhajar@gmail.com

# இன்பம் பயக்கும் “ஈதுல்ஃபித்ர்” என்ற ரம்ஜான் பண்டிகை



**முனைவர் ஹா.ஹிதாயத்துல்லா,**
இணைப்பேராசிரியர் & ஆய்வு நெறியாளர்,
இஸ்லாமிய இலக்கியக் கழக மாநிலச் செயலாளர்,
தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை,
புதுக்கல்லூரி (தன்னாட்சி), சென்னை – 14.

இன்று ஈகைத் திருநாள் 'ஈதுல்ஃபித்ர்' பெருநாள் பண்டிகை, சீர்மிகு இத்திருநாள் மகிழ்வுடன் அமைய என் வாழ்த்துக்களுடன் இறைவனைப் ஓதிப் பிரார்த்திக்கக் துவங்குகிறேன்.

இஸ்லாமிய மக்கள் ரமலான் மாதம் அதிகாலையில் நான்கு மணிக்கெல்லாம் எழுந்து இறைவனைத் துதித்துவிட்டு சுமார் 4.30 மணியளவில் “ஸஹர்” என்று அழைக்கக்கூடிய நேரத்தில் உணவு உண்பார்கள். மாலை சூரியன் மறைந்த பிறகு நோன்பை முடிப்பார்கள். இந்த பகல் நேரம் முழுவதும் ஒரு மிடறு தண்ணீர்கூட அருந்த மாட்டார்கள். புறம் பேசுவதை விட்டும், அந்நியர்களைப் பார்த்து வேறுபாலினர் காம கச்சைக் கொள்வதை விட்டும், தவிர்த்து இருப்பர். நோன்பு நோற்று இருக்கும் கணவன் மனைவியையோ, மனைவி கணவனையோகூட இச்சையுடன் பார்க்கக்கூடாது என்றும் இஸ்லாம் வலியுறுத்துகிறது.

தீய செயல்களை விட்டும் தவிர்த்து இருக்கும் அவர்கள் பள்ளிவாயில்களிலும், தங்களுடைய இல்லங்களிலும் இறைமறையான “திருக்குர்ஆனையும்” இரைவனைத் துதிக்கும் “திக்கருளையும்” ஓதிப் பொழுதைக் கழிப்பர்.

பெருமையை நீக்கி பொறுமையைக் கடைப்பிடித்து வறியவர்களுக்கு உதவி செய்து வாழக்கூடிய மேலான மனிதனாக மனிதனை ஆக்குகிறது இந்த நோன்பு. பகல் முழுவதும் பசித்திருந்தும், பகல்நேரத் தொழுகைகளையும் மகிழ்வுடன் நிறைவேற்றி “தராவிஹ்” எனும் இரவு நேரத் தொழுகையைத் தொழுவர். ரமலான் மாதம் முழுவதும் தொழக்கூடிய “தராவிஹ்” தொழுகையில் “திருக்குர்ஆன்” முழுவதும் ஓதப்பட்டுச் செவிசாய்த்துக் கேட்கப்படும். பகலில் வரக்கூடிய ஏழை, எளிய மக்களுக்கு ”ஜகாத்” என்ற ஏழை வரியைக் கொடுத்து மகிழ்வர்.

இப்படிப்பட்ட மனிதப் புனிதர்களைத்தான் தன் மலக்குகளிடம் (வானவர்கள்) பெருமை பாராட்டி இறைவன் பேசுகிறான். நோன்பாளியின் வாயிலிருந்து வரக்கூடிய வாடையைக் கஸ்தூரியைவிட மிகுந்தமணம் பொருந்தியதாக எண்ணி இறைவன் நுகர்கிறான், என்று ஈருலக இரட்சகர் எம் பெருமான் நபி(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

புனிதம் பொருந்திய ரமலான் மாதத்தை அடைந்தும் அதில் செய்யக் கூடிய செயல்களைச் செய்யத் தவறிய மனிதர்களை நபி(ஸல்) அவர் சபித்துள்ளார்கள். நோன்பு வைத்துக் கொண்டு பிறமனிதர்களைப் பற்றிப் புறம் பேசித்திரியும் மனிதர்களையும் நபி(ஸல்) அவர்கள் சாடியுள்ளார்கள்.

நோன்பினால் மனிதனின் உடலும் உள்ளமும் பரிசுத்தமடைகிறது. பதினொரு மாதங்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த மனிதன் ஒரு மாதம் நோன்பு இருப்பானேயானால் அவனுடைய நோய்களெல்லாம் நீக்கப்படுவதாக இன்றைய விஞ்ஞானம் கூறுகிறது.

பசித்திருந்தும், தனித்திருந்தும், விழித்திருந்தும் பெறக்கூடிய ஒரு அந்தஸ்தே "பதவி" என்பதாகும். உணவுண்ணாது பசித்திருந்தும், இறைவனைத் துதிக்க தனித்திருந்தும், இரவில் வணங்க விழித்திருந்தும், கடமையாற்றிய மனிதர்களுக்கே 'சுவர்க்கம்' என்று சொல்லக்கூடிய 'பதவி' கிடைக்கும் என்று நபி(ஸல்) அவர் நவின்றுள்ளார்கள்.

இப்புனிதம் பொருந்திய இம்மாதத்தில்தான் இறைமறையாம் "திருக்குர்ஆன்" இறக்கி வைக்கப்பட்ட்து. இம்மாதத்தில்தான் ஜபூர்,தவ்ராத், இஞ்சில், ஆகிய வேதங்களும், முறையே தாவூத் நபி(அலை), முஸா நபி(அலை) மற்றும் ஈசா நபி(அலை) அவர்களுக்கும் இறக்கி வைக்கப்பட்டது. இம்மாதத்தில்தான் சமுதாயத்தின் அடித்தரத்தில் இருக்கக் கூடிய ஏழை, எளிய மக்களும் பொருளாதாரத்தில் முன்னுக்கு வரக்கூடிய வகையில் "ஜகாத்" என்ற ஏழை வரியைச் செலுத்த வேண்டுமென்ற கட்டளை இறைவனால் இடப்பட்டது.

ஆயிரம் மாதங்கள் நின்று வணங்கும் வணக்கத்தைவிட அதிக நன்மை தரக்கூடிய "லைலத்துலகத்ர்" என்ற இரவும் இம்மாதத்தில்தான் இறைவனால் மனிதகுலத்தில் அருட் கொடையாக அருளப்பட்டது.

ரமலான் மாதம் முழுவதும் இறைவனுக்காக நோன்பு நோற்றபின் ஷவ்வால் மாதம் முதல் பிறையைப் பார்த்த பின் கொண்டாடப்படும் பெருநாளே "ஈதுல்ஃபித்ர்" என்று சொல்லப்படும் "ரம்சான்" பண்டிகையாகும். "ஈத்" என்ற அரபுச் சொல்லுக்குத் திரும்பத் திரும்ப வருதல் என்று பொருள். பெருநாட்கள் திரும்பத்திரும்ப வருவதால் இது "ஈத்" பெருநாள் என்று அழைக்கப்படுகிறது. ரமலான் மாதம் முழுவதும் தனக்காகப் பசித்திருந்து நோன்பு நோற்ற மக்களுக்குப் பரிசாக இறைவனால் கொடுக்கப்பட்டுள்ள நாளே "ரம்சான் பெருநாள்" ஆகும்.

இதன் சிறப்பைப் பற்றி நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள். ஷவ்வால் மாதத் துவக்க நாளாகிய பெருநாள் காலை புலர்ந்ததும் அல்லாஹ் தன் அமரர்களை ஒவ்வொரு ஊருக்கும் அனுப்புகிறான். அவர்கள் மண்ணகம் இறங்கி ஊர்களின் ஒவ்வொரு தெருமுனைகளிலும் நின்று கொண்டு மனிதர்களைப் பார்த்து, முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத்தார்களே! அருள்புரிந்தாலும் உங்களின் இறைவனின் பக்கம் செல்லுங்கள்! அவன்தான் அருளைச் சொரிகிறான்; பெரும் வெகுமதிகளை வழங்குகிறான். பெரும் பாவங்களை மன்னிக்கிறான்" என்று கூறுகின்றனர். அவர்களின் கூவலை

மனிதர், ஜின் ஆகியோரைத் தவிர்த்து ஏனைய படைப்பினங்கள் அனைத்தும் கேட்கின்றன.

முஸ்லிம்கள் புத்தாடை புனைந்து, நறுமணம் பூசி இறைவனைத் தொழுவதற்காகப் பள்ளிவாயில்களுக்கும், ஈத்காவென்னும் பெருநாள் தொழுகைக்கென்றே இருக்கும் வெட்டவெளிக்கும் செல்லும் பொழுது இறைவன் தன் அமரர்களை(வானவர்கள்) நோக்கி "தொழிலாளி தன் அலுவலல் அனைத்தையும் முடித்தபின் அவனுக்கு என்ன வழங்கவேண்டும்? என்று வினவுவான். அதற்கு வானவர்கள் முழுக் கூலியையும் கொடுத்து விடவேண்டுமென்று விடையளிப்பார். நீங்கள் அனைவரும் சாட்சியாக இருங்கள்" அவர்கள் நோற்ற ரமலான் மாத நோம்பையும், "தராவிஹ்" தொழுகையையும் நான் ஏற்றுக் கொண்டேன் அவர்களின் பாவங்களையும், மன்னித்துவிட்டேன். கூலியாக தானாகவே இறைவன் ஆகிவிடுகிறான். இதுவே நான் அவர்களுக்கு அளிக்கும் நற்கூலியாகும் என்று கூறுவான்.

"பின்னர் அவன் தன் அடியார்களை நோக்கி" என் அடியார்களே! நீங்கள் என்னிடமே கேளுங்கள்! என் மான்பின் மீது ஆணையாக இந்தக் கூட்டத்தில் வைத்து இம்மை, மறுமைக்கான நன்மைகள் அனைத்தையும் நான் உங்களுக்கு அனிக்கிறேன். என் வல்லமையின் மீது ஆணையாக நான் உங்களை இழிவுபடுத்தமாட்டேன். இன்று என் அருளையும்பெற்றுக் கொள்ளுங்கள்! நீங்கள் அனைவரும் மன்னிக்கப்பட்டுவிட்டீர்கள்! நீங்கள் என்னைத் திருப்திபடுத்தினர்கள். நான் உங்களைக் கொண்டு திருப்தியுற்றேன் என்று கூறுவான்.

ஷவ்வால் மாதம் பிறை பார்த்தது முதல் பெருநாள் தொழுகை முடியும் வரை "தக்பீர்" என்ற இறை புகல்பாக்கள் ஓதப்பட்டுவரும். இப்புனிதம் பொருந்திய நந்நாளில் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ உறுதி எடுத்துக் கொள்வோம். சாதி, மத பேதம் நீக்கி அனைவரும் மகிழ்வுடன் வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பான்!

**இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:**

நபி (ஸல்) அவர்கள் (ரமளான் பற்றிக் கூறுகையில்) "மாதம் என்பது இவ்வளவு, இவ்வளவு, இவ்வளவுதான்" என்று கூறினார்கள். மூன்றாவது தடவையில் தமது பெருவிரலை மடக்கிக்கொண்டார்கள்.

# Dr. ZAKIR HUSAIN COLLEGE

**(Minority Aided College)**
**(Affiliated to Alagappa University)**
**(Reaccredited by NAAC in the 4th Cycle)**
**Ilayangudi - 630 702, Sivagangai District, Tamil Nadu, India.**




## Aided

- B.A. Tamil
- B.A. English
- B.A. Economics
- B.Sc. Mathematics
- B.Sc. Physics
- B.Sc. Chemistry
- B.Sc. Zoology
- B.Com.
- M.Com.

## Research Courses

- Ph.D. Commerce
- Ph.D. English
- Ph.D. Tamil

## Self Finance

- B.Sc. Computer Science
- B.Sc. Data Science
- B.Sc. Mathematics
- B.Com. Computer Applications
- B.A. English
- M.Com. Computer Applications
- M.Sc. Mathematics
- M.Sc. CS & IT
- M.A. Tamil
- M.A. English

## B.Ed. (2 years)

**All UG & PG and B.E. / B.Tech.**

**Career Oriented Programme (UGC Sponsored)**

Certificate Programme in "Accounting with Computers"

Janab **S.M. AHAMED JALALUDEEN**
President

Haji. **V.M. JAFARULLA KHAN**
Secretary & Correspondent

Janab **S.A.M. ABDUL AHAD**
Treasurer

Prof. **S.E.A. JABARULLAH KHAN**
Principal

**Management Committee Members**

# வாழ்க்கை

**ஹ.ரோஷன் ஹபிகா**
இளங்கலைத் தமிழ், மூன்றாம் ஆண்டு
டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி
இளையான்குடி, சிவகெங்கை மாவட்டம்

தொலைக்காட்சிகளில் தொலைத்து
முடித்த இரவு
காலை அலைப்பேசியின் அழைப்பில்
தான் எழுக்கின்றது!
சிலரின் வாழ்க்கை!!

மரம் இலையுதிர்ந்த பின்பும்
அழகாகின்றது!
ஏனோ மனிதன் மட்டும்
வயது முதிர்ந்த பின்
சுமையாகி விடுகின்றான்!
தன் பிள்ளைகளுக்கு

வெள்ளைச் சட்டைகளுக்கு
கொடுக்கும் முக்கியத்துவம்
வெள்ளைச் சேலைகளுக்கு
கிடைப்பதில்லை!
சுப நிகழ்ச்சிகளில் மட்டும்!!

நிகழ்ந்ததையே நினைத்து
நிகழ்காலத்தை இழந்தால்
வரும் காலம் வழியறியா
கேள்விக்குறியே!

குடும்பம் என்னும் சூழலில்
வரையறுக்கப்பட்ட பெண்
சிங்க பெண்ணாகின்றாள்
மகளிர் தினத்தில் மட்டும்!!

அழுகைக்குநூல் கேட்கின்றது.
நீதிமன்றத்தின் நுழைவாயிலில்
தாயும் தந்தையும்
வெறுப்புடன் விவாகரத்து
பெற்ற பின் குழந்தைகள்!!!

# ரமலான் கால நினைவலைகள்



சம்சுல் ஹூதா பானு

எங்களது ஊர் இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர்,பிறந்த ஊரின் மண்ணும், தண்ணியும்,காற்றும் பிழைக்கச் சென்ற ஊருக்கெல்லாம் எங்க கூட வந்துவிடும். "வானம் பார்த்த பூமியின்"-வீரியம், மிக மகத்துவமனாது. "வெயிலோடு விளையாடி, வெயிலோடு மல்லுக்கட்டி"- வாழ்ந்த எங்கள் ஊரின் நோன்புகால நினைவுகளை எழுதப் பக்கங்கள் போதாது. ஊரின் எல்லையில் பரந்து பட்ட, பெரிய கண்மாய், ஊரைச் சுற்றியும் ஊரணிகள் தோண்டி பெய்யும் மழையைத் தேக்கி, ஆத்துப் பாசனம் இல்லாவிட்டாலும் விவசாயத்தை வாழ வச்சு, ஊர் மக்க பஞ்ச காலத்துலையும் ஊருணி,க(ண்)ம்மாயில குழிதோண்டி ஊத்துத் தண்ணி எடுத்துக் குடித்தும் நஞ்சை விளையலைனாலும், பிஞ்சைக் காட்டுல சோளம், குருதாலி- விளைய வச்சுக் கட்டிக கட்டியாக் குடிக்கலைனாலும், கரைச்சுக் கரைச்சுக் குடிச்சு வயித்தை ஆத்திக்கும் மக்க, எங்க ஊர் மக்க. கோவமுனாலும் வேகந்தேன், பாசமுன்னாலும் வேகந்தேன் எங்க மக்களுக்கு. இப்படிப்பட்ட மக்க முப்பது நோன்புக் காலத்துல நோன்பு புடிக்கிற அழகும், நோன்பு திறக்குற அருமையையும், பெருமையாச் சொன்னால் பக்கம் பத்தாது, ஆனாலும் அவ்வளவையும் விரிவாச் சொல்றேன்.

**ரஜப், ஷஃபான்:**

முப்பது நோன்புப் பொறைவாரதுக்கு முந்தியே ரஜப் மாசத்தில் இருந்து முப்பது நோன்புக்கான வேலைகளை ஆரம்புச்சுருவாக எங்க ஊர் மக்க. ரஜப்புல சஹுபர் சாதிக் மௌலுது(பூரிப்பாத்திஹா) ஓதுறதோட, மெஹ்ராசு ராவுல தொழுது நோன்பு வச்சதோட இடியாப்பம் மாவு வீட்டுக்கு, வீடு இடுச்சு வறுத்து வைக்க ஆரம்பிச்சுருவாக. தெருவுக்குத் தெரு முப்பது நோன்பு வந்துரும், அதுக்குள்ள தேடும் பண்டம் தேடனுமுன்னு இடியாப்பம் மாவுக்கு இடுச்சு, வறுத்து வச்சதுக்குப் பிறகு நெல்லு அவுச்சு புழுங்க வச்சு,பொறவு காயவச்சு அவுச்ச நெல்லை மாட்டு வண்டியில ஏத்தி மிஷினுல புழுங்க அரிசியா அரைச்சு வீட்டுக்குக் கொண்டாந்து திண்ணையில போட்டு பொடச்சு, குருணை அரிசினு பிரிச்சு குதுலுப் பானையில அள்ளி வச்சுருவாக. பச்சை நெல்லு மிஷினுல கடகப் பொட்டியில நெல்ல வச்சு தலைச் சொமையா, சொமந்து மிஷினுக்குக் கொண்டுபோயி அரச்சுப், பொடச்சு குருணை தனி, அரிசி தனியா மிடாப் பானையில அள்ளிவச்சுருவாக. உளுந்தை எண்ணெய் தடவி காயவச்சு சின்னத் திருகையில உடைச்சு கல்லுரல்லை "பொத்துப் பொத்துன்னு " உலக்கையால குத்தி தோலைப் பொடைச்சு கல்லுப்போக நாவி, குருணை கொழுச்சு, நாவி அடுக்குப் பானையில எடுத்து வைப்பார்கள்.

நோன்பு மாசக் கைச் செலவுக்கு, சக்காத்து, சதக்காத்துக் கொடுக்கனுமுன்னு, பத்திருவது நெல்லு மூட்டைய கிட்டங்கிக் கடையில

போட்டு காசாக்கி வச்சுக்குருவாக. வெறகு வெட்டி அடுக்கி, முள்ளைவெட்டி கட்டுக்கட்டா அடுக்கி மாட்டுச் சாணியில எருதட்டி- காயவிட்டு அடுக்கிவச்சு, நோம்புல வார மிஸ்கினு, பக்கிரிஷாமார்களுக்கு கேப்பை, நெல்லு, அரிசி, கடகப் பொட்டியில எடுத்து முன் ஆல்பத்தியில வச்சு- அதுல ஒரு முட்டைத்தட்டைப் போட்டு வச்சுருவாக. வாசலுக்கு வார சீதேவிகளுக்கு முட்டைத் தட்டுல ஒரு தட்டுத் தானியம் குடுக்க அவங்க நாலு பிரிவா தச்சு வச்சுருக்குற, தோலுல போட்டுருக்குற பைக்கட்டுல, அந்தந்த தானியத்துக்கு ஏத்துக் கொட்டிருவாக. அதுக்கப்பறம், மொளகா தூளு, மல்லி தூளு அரைச்சு வச்சு, கத்தரி வத்தல்,சீனியவரைக்காய் வத்தல், மோர்மொளகாய் வத்தல் போட்டு வச்சு, அடைமாங்கா சம்பல் பிசையப் போட்டுவச்சு உப்பு எலுமிச்சைங்காய் போட்டு வச்சு-மொச்சைப் பயறு,தட்டான் பயறு, சுண்டைப் பயறு, பாசிப் பயறுக சுண்டலுக்கு காயவச்சு பத்திரப் படுத்தி, அடுக்குப் பானையில கொட்டிவச்சு, புளி குத்தி,கடகப் பானையில அமுக்கி, கற்பட்டி,மண்டவெல்லம் சாயல்குடில பனையோலப் பொட்டியில தூக்கி வந்து தெருவுக்கு ரெண்டு பேரு பிரிச்சுக்குருவாக. ஷஃபான் மாதக் கடைசியில (ஷபே பராத்)பராத் ராவுக்குத் தொழுது, பராத்து நோன்பு வச்சு பராத்து நோன்பு தொறக்கும்போது நெல்லும்மாவுல பராத்து ரொட்டி(பச்சரிசி மாவு)சுட்டு முர்தாக்களுக்கு பாத்திஹா ஓதி(மௌத்தானவங்களுக்கு)குடும்பத்து மக்களுக்கு ஆயுசக் குடுக்கச் சொல்லி யாசின் ஓதிஅல்லாகிட்ட துஆக் கேட்டு ரொட்டியத் தெருமக்களுக்கெல்லாம் பகுந்துண்டு முடிஞ்சதும், இதுல முக்கியமா, வகுத்துக்கு பேதி மருந்து குடுத்து பேதி போக விட்டு, வாயுவை வெளியேத்தி, மோரைக் குடிக்க வச்சு, வகுத்தக் குளிர வச்சுருவாக. ஊருல பெரியமக்க, சின்னவுக அம்பூட்டுப் பேரும் “முப்பது நோன்பு வருது”-முப்பது நோம்பு வருதுனு பெருமையாய் பேசித் திரியிறது கண்கொள்ளாக் காட்சியாத்தேன் இருக்கும்.

**தலை நோம்பு வந்துருச்சு:**

“இன்னைக்கிப் பொறை தெரிஞ்சதும் நோன்பு, இன்னைக்கிப் பொறை தெரியனும் அல்லாவே, பொறை தெரியனும்”-என ஓது பள்ளியில், பள்ளி கூடத்தில்- என பேசிக் கொண்டே அன்னைக்கி சாயங்காலம் வானத்தை பொம்பளப்புள்ளைக அண்ணாந்து பாத்து, ஆம்பள மக்க தென்னை மரத்து மேல, புளிய மரத்து மேல ஏறி பொறைப் பாக்குறதும்,பெரியவுக ரேடியாப் பொட்டியில பேட்டரியப் போட்டு வச்சுக்கறனும் கரண்டு போயிட்டா ... சிலோன் ரேடியாவுல தலைப் பொறைச் சேதிக் கேக்க ஆலாப் பறந்து எங்க ஊர்ச் சனமே திரிவாக. பொறைப் பார்த்து நோன்புனு அறிவிச்சதும்.. கொய்யாப்பு கொளுத்தி வச்ச கறிஆனம் சஹருக்கு ஆக்குறதென்ன, திரவியாத் தொழுகைக்கு. கச்சிப் பெருநாளைக்கி எடுத்த துணிய குளிச்சு முழுகிக் கட்டி,பத்தரமா வச்சுருக்குற அத்தர ஒரு சொட்டு எடுத்துத் தடவி, ஊதுபத்திய தலை வாசல்ல ஏத்திவச்சு, அல்லா ரகுமானே...நோம்புக் காலத்தை எங்களுக்கு நல்ல காலமா ஆக்கி வையினு...புள்ளைப் பெத்தவுக,நெற மாசமா இருக்குறவுக,படுத்த படுக்கையா இருக்குற வயசானவுக, ஏலாதவுக மட்டும் வீடுகள்ள இருக்க ஆம்பள மக்க, பள்ளிவாசலுக்கு தொழுகப் போக பொம்பளமக்களுக்கு ஊர்ல ரெண்டு வீட்டுல மட்டும் திராவியாத் தொழுக நடக்கும் அந்த ரெண்டு வீட்டுலையும் பெண்களோட கூட்டம் அலைமோதும்.

ஊர்த் தெருவுல ஒரு “சுடுகஞ்சி”-இருக்காது. இறைவனின் நூர் இறக்கப்பட்ட தெருக்களாக எங்கள் ஊர்த் தெருக்கள் இருக்கும். முதல் நோன்பு

திறக்கும் நேரம்.., அதுவரை நோன்பு..நோன்பு..எனக் குஷியாட்டம் போட்ட என்போன்ற என் வயதையொத்த பிள்ளைகள் தண்ணீர்தாகம் நாக்கை வறட்ட, நோன்பு வைத்த "நவைத்து ஸ்வ்மஆதின்..இறைவா உன்னைக் கொண்டே நோன்பு வைத்தேன், என் நோன்பை கபுலாக்கித்தா நாயனே!".. என்று கேட்ட அந்த துஆ இறைவன் மேல் கொண்ட ஈமானைக் கற்றுத்தந்த இபுறாம்ஷா அசரத்தின் நினைவுவர, நாவறட்சி போன இடம் தெரியாது எங்களுக்கு. நோன்பு கஞ்சி வாங்க பள்ளிவாசலுக்கு தூக்குச்சட்டியோட போய்... வரிசையில் நின்று நோன்புக் கஞ்சியை வாங்கி வைத்துவிட்டு, ஐஸ் கடைக்கி ஐஸ் வாங்க ஓடி..அங்கும் வரிசையில் நின்று "உப்புக்கட்டி"-ஐஸ் வாங்கி வந்து "ஓன்டிப் புலி"-கம்பெனி நன்னாரி சர்பத் போடுவதற்கு கொடுத்துவிட்டு... நோன்பு திறக்கக் காத்திருக்கும்போது, "எதிர்த்த வீட்டு செல்வியக்கா வகுத்துப் புள்ளையா இருக்கா"-இந்தா, இந்த நோன்புக் கஞ்சியக் கொடுத்து வரச் சொல்வதும், அந்தா வடிவேலு பய மாட்டை கட்டி ஆந்து.. ஆந்து பாக்குறான் அவனையும் கூப்புடுங்க..என அனைவரும் பள்ளிவாசலில் "அல்லாஹூம்மா" மைக்கில குருவி மோதினார் நன்னா சொல்றதைக் கேட்க, காதைக் கூராக்கி இருக்கும் அந்த முதல் நோன்புத் திறக்கும் ஒரு பட..படப்பு அலாதியானது.

ஒரு உப்புக் கல்லை வாயில் வைத்து நோன்பு திறக்கும் நிய்யத்து சொல்லி,பிஸ்மிஞ் சொல்லி மூணு மடக்குத் தண்ணி குடிச்சு, கந்தசாமி நாடார் மாமா கடையில வாங்குன எண்ணெய் தடவுன,மினு மினுனு வெரப்பா இருக்குற ஈத்தம் பழத்தை மென்னு முழுங்கி, நோன்புக் கஞ்சியை குடிச்சு, தட்டாம் பயறு,மூக்குக்கடலை,பாசிப்பயறு,மொச்சைப் பயறுனு ஏதாவது சுண்டலைத் தின்னுட்டு மஹரிபு தொழுகைக்குப் போன அந்த எளிமையான நோன்பு நாட்கள் திரும்ப வராதா?.. உளுந்து வடை, ஆமை வடை(பருப்பு வடை) என பதினைந்தாம் நோன்பு, 27-ஆம் நோன்புக்குத்தன் தருவார்கள்.எங்க ஊர் பள்ளிவாசலில்,உப்புக் கஞ்சி, கற்பட்டிக் கஞ்சி, சூச்சிக் கஞ்சி என மாறி மாறி ஊற்றுவார்கள்.சூச்சிக் கஞ்சிக்கு இரண்டு தூக்குகளை எடுத்துக் கொண்டு, எங்க அக்கா மகனையும் இடுப்பில் தூக்கிக் கொண்டுச் செல்வேன். இரண்டுபேர் கணக்குக்காக. வெள்ளைச் சீனீ, தேங்காய்ப்பால் ஊற்றிக் காய்ச்சிய ரவைக் கஞ்சிதான் சூச்சிக் கஞ்சி. "சுஜி" என்றால் ரவை...என்பது எனக்கு சென்னை வந்த பிறகுதான் தெரியும். "சுஜி" சூச்சியாக மறுவியதோ என நினைத்துக் கொள்வேன். நோன்பு பதினஞ்சு பாத்திமா நாச்சியாருக்குனு, நோன்பு பதினாலு ராவுல பாத்திமா நாச்சியாருக்கு யாசீன் ஓதி, தலைப் ஃபாத்திஹா ஓதி, பாச்சோறாக்கிப் பகுந்து, வாவரிசிப் பூவும் பகுருவார்கள். நோன்பு மாசத்துல புள்ளப் பொறந்தா பொம்பளப் புள்ளைக்கி ரம்ஜான் –என பேரும், ஆம்பளப் புள்ளைக்கி முகம்மது ரம்ஜான்- என பேரும் வைப்பாக. நோன்பில் ஊரில் மௌத்து நடந்தால், "நோன்புல மௌத்து சொர்க்கம்தான்"-என்பார்கள்.

நோன்புக் காலம் முழுவதும் நூரானிகள் குர்ஆன் ஆயத்துகள ஏந்தியவாறு சொர்கத்து வாசலில் இருப்பார்கள் என்றும், சொர்க்க வாசல் திறந்தே இருக்கும் எனவும் சொல்வார்கள். நோன்பின் மௌத்து ஆன மௌத்துக்காரவுக வீட்டில் "நல்ல மௌத்து"-எனப் பேசுவதைக் கேட்டு, யா அல்லாஹ்... என்னையும் நல்லோர் அடியார்கள் கூட்டத்தில் சேர்த்துவிடு நாயனே!..எனச் சொல்கிறேன் நான். வீடுகள்ள மூணு வயசு, நாலுவயசு அஞ்சு வயசு, ஆறு வயசுப் புள்ளைகள்ளாம் நாங்களும் நோம்பு வைக்கிறோமுனு அவக்காச்சியோட, சஹருக்கு எந்திருச்சு சாப்புட்டு, நிய்யத்து சொல்லி

நோம்பை வச்சு, தூங்கி எந்துருச்சு "நானும் நோம்பு... நானும் நோம்புனு"- சொல்லித் திரியிறதுக நேரம் ஆக...ஆக...தாகத்துலையும், பசியிலையும் சுருண்டு போக, அத்தாவும், அம்மாவும் நீங்க "வகுத்து நோம்பு"-என மத்தியானம், ஒரு மணி வரைத் தாக்குப் புடிக்க வச்சு "அல்லாஹூம்ம" சொல்லச் சொல்லி கஞ்சியத் தண்ணிய அந்தப் பிள்ளைகளுக்கு குடுத்து "அல்லா உங்களைக் குத்தம் புடிக்க மாட்டான்"- அடுத்த வருஷம் நெறை நோம்பாக்கித்தா நாயனேனு துஆச் செய்யிங்கனு, அரைநாள், நோம்பை அந்தப் பிஞ்சுகள் வைத்துப் பழக வைத்த பெரியவர்களின் அன்பும், கருணையும் ஆனந்தமானது.பினாங்கு, மலேசியாவுல இருந்து சவுராளிக கடல்பாசி கொண்டுவருவாங்க, அந்த கடல்பாசிய ஆக்கத் தெரியாம ஆக்கி,செய்யத் தெரியாம செஞ்சு அந்த கடல்பாசி செஞ்சது கல்லு மாதிரி இருக்கும் ஆனாலும், அது அம்பூட்டு ருசியாக இருக்கும். மலேசியாவுல இருந்து கவுனி அரிசி கொண்டு வருவாங்க அதை பதனியில வேகவச்சு தேங்காப்பூ சேர்த்து நோன்புத் திறக்கத் தருவாங்க. சவுராளி வீட்டுப் பண்டம், பலகாரம் தெருவுல இருக்குற மக்களுக்கும் கொடுப்பாங்க. மலேசியா கைலி, தாவாணி சவுராளி இல்லாத வீட்டு பொம்பள மக்க பெருநாளைக்கி நமக்கு கிடைக்காதானு ஏக்கத்தோட இருப்பார்கள்.

சஹருக்கு தெருவுல ஒரு வீட்டுத் திண்ணையில தெருச் சனமே சோத்தைக் கஞ்சியைக் கொண்டாந்து,இந்தா என் வீட்டுக் கருவாட்டு வெஞ்சனம் , இந்தா சலுறாம்மா வீட்டுப் பருப்பானம், அந்தா சவரம்மா வீட்டு மீனானம்- எனப் பகுந்துண்ட மக்க, நோம்பு வைக்காத நோயாளியோ, வயசானவுகளுக்காக- அவுக நோம்பு புடிக்க முடியாததுனால, ஏழை,எளிய மக்களுக்கு ரெண்டு ஆளுச்சோத்தை சேத்து ஆக்கி, எங்க வீட்டுல வந்து நோம்ப வைங்க என சஹர்ச் சாப்பாடும், நோம்பு திறக்க சர்பத்,சுண்டலு,வடையைக் கொடுக்குறதுனு நோன்புக் காலப் பரிவும், பாசத்தையும் சொல்லி மாளமுடியாது.

நோம்புல எங்க ஊர் ஜமாத் சார்புல தோண்டிய ஊரணி சுந்தராணியில(ஊரணியின் பெயர்), மத்தியானம் ரெண்டு மணியில இருந்து நாலு மணி வரை ஆம்பள மக்க ஊரணிப் பக்கம் போகவே கூடாது, நோம்பு வச்ச பொம்பள மக்க மட்டுந்தேன் ஊரணியில குளிப்பாக, இது ஜமாத்தோட உத்தரவு. ஆம்பள மக்களுக்கு பள்ளிவாசல்ல, பெரிய,பெரிய தொட்டிகள்ள தண்ணியை பம்பு செட்டுப் போட்டு நெப்பி வச்சுருப்பாக. ஆம்பள மக்க பள்ளிவாசல்ல போயிக் குளிச்சுக்குவாக, வீடுகள்ள தண்ணிக் குழாய்லாம் இல்லாத காலம், முனிசிபாலிடில தெருக்குழாய்ல விடுறத் தண்ணி வீட்டுக்கு நாலு, அஞ்சு பானைதேன் வரும். மதர்ஷாக் கிணறு என்ற பெரிய கிணறு எங்க ஊர் ஜமாத் சார்பாக தோண்டியிருந்தார்கள் அதில் தண்ணீர் எடுத்து வந்து புழக்கத்துக்கு வைத்துக்கொள்வோம். குடிக்கிற, குளிக்கிற தண்ணிக்கி கருமாயப்பட்ட காலத்துலையும், ஜமாத் சார்பாக ஊர் மக்களுக்கே தண்ணிப் பஞ்சத்தைத் தீர்த்த பெரியவுக இருந்த ஊர் நோன்பின் மாதத்தில்- ஊரணி பெண்களுக்கே மட்டுமான பயன்பாடு என்பதும், பெண்கள் நோன்பை வைத்துக் கொண்டு அதிகமாக தண்ணீர் இறைக்க வேண்டாம் என்பதன் நோக்கம்தான்.மழைக் காலத்துல வார நோன்புக்கு களையெடுக்க, நாத்து நட, நோன்பு வச்சுட்டு வயகாட்டுக்குப் போற மக்க, குளிர்காலத்துல வார நோன்புல கருதறுக்க, கட்டுச்சொமக்க, நோன்போட களத்து மேட்டுக்குப் போற மக்க, வெயில் காலத்துல பருத்தி,எள்ளு, மிளகாய் தோட்டம், வெள்ளரித் தோட்டமுனு

நோன்பு வச்சுகிட்டு அரும்பாடு படுற மக்க வறண்ட நாவோட நிறஞ்ச ஈமானோட அல்லாவோட ஓர்மையில நோன்ப வைக்கிறது அந்த கருமாயப்பட்ட மக்களுக்கு ரொம்ப சந்தோஷமாத்தேன் இருக்கும். அப்படியென்றால் அவர்களிடம் இஸ்லாத்தின் மார்க்க நெறிகளை கொண்டுவந்து கொடுத்த ஞானிகளை எப்படியெல்லாம் நாம் புகழ வேண்டும், எவ்வாறெல்லாம் பெருமைப்படுத்த வேண்டும். அவர்களின் சிறப்புகளை நம் தலைமுறைகளுக்கு கொண்டுச் செல்ல வேண்டும் இன்று எனது மனதில் உதிக்கும் மேலான எண்ணமாக இருக்கிறது. எத்தனை வசதிகள் இன்று நமக்கு இத்தனை வசதிகளும் கிடைத்து இன்று நாம் நோன்பு வைப்பது இலகுவானது. தலையில் சுமையுடன் வெயிலிலும், நோன்போடு உலக்கைப் போடுவதும், நெல்லுத் தூத்துவதும், நெல்லுப் புடைப்பதும்,புடைத்த தானியங்களை மரசலில் கொண்டு சேர்த்தபோதும் சோர்வடையாத மக்களின் ஈமானுடன் கூடிய உழைப்பு உலகறிய வேண்டும், முக்கியமாக இன்றைய தலைமுறைக்கு கடத்தப்பட வேண்டும்.

**27ஆம் கிழமை:**

எங்களது ஊரில் “ஹிம்மத்துல் இஸ்லாம் வாலிபர் சங்கம்”-இருந்தது இன்னும் இருக்கிறது. சங்கத்தின் சார்பாக மஹரிப் தொழுதவுடன் இளைஞர்கள், சிறுவர்கள் சங்க வாசலில் இருந்து “பைத்” பாடல்கள் பாடியபடி பிறைக் கொடியைப் பார்த்தவாறு பெட்ரோமாக்ஸ் விளக்கை இருவர் தலையில் முன்னும், பின்னும் தூக்கி வர...ஊர்வலமாக தெருவுக்குத் தெரு சென்று பள்ளிவாசலில் நின்று துஆ ஓதி முடிவாக சங்கத்துக்கு வந்து ஊர்வலம் முடியும். ஊர்வலத்தில் போகும் அனைவருக்கும் ஊரில் தினசரி ஒருவர் வீட்டில் சுண்டலோ,பயறோ செய்து கொடுப்பார்கள். ஊரில் பிறைக்கொடி பிடிப்பவர்களுக்கு பயறு இரண்டு பொட்டனமும்,பெட்ரோமாக்ஸ் விளக்கு தூக்கியவர்களுக்கு நான்கு பொட்டனமும், ஊர்வலத்தில் பாடிச் சென்றோருக்கும் பின் பைத்து ஓதுபவர்களுக்கு ஒரு பொட்டனமும் கொடுப்பார்கள். பைத் ஓதி ஊர்வலம் போகும்போதே வீட்டுக்கு வீடு உண்டியல் குலுக்கிச் செல்வார்கள் அந்த உண்டியலுக்கு காசுப் போட நான்,நீ என சிறுவர்கள் திண்ணையில் காத்திருப்பார்கள் அந்த உண்டியல் பணத்தை சங்கத்தின் வளர்ச்சிக்கு செலவிட்டு ஏழைக் குமருகளுக்கும் உதவுவார்கள். ஏழை, எளிய வீட்டு ஆண்பிள்ளைகளுக்கு சுன்னத்து உண்டியலில் வந்த பணத்தில் பண்ணுவார்கள் எங்க ஊர் இளவட்ட மக்க, பைத் ஊர்வலம் முடிந்த பிறகு ஆம்பளப்பிள்ளைக இஷ்ஷா,திராவியா தொழுகைக்கு பள்ளிவாசலுக்குச் செல்வார்கள்.

ஊரின் தனம்வந்தர்கள் பொறுப்பு நாளன்று, எங்கள் ஊர் சுல்தானியா ஓட்டல், “ஓரைப்பு மிச்சர்”-பொட்டலம் கொடுப்பார்கள், மிகச் சிலர் பூந்தி பொட்டலம் கொடுப்பார்கள். காலையிலேயே ஹிம்மத்துல் இஸ்லாம் வாலிபர் சங்கம் வாசலில் இன்று யாருடைய பொறுப்பில், என்ன பகுறுகிறார்கள் என எழுதிப் போடுவார்க்ள். மிக்ஸர்,பூந்தி இன்று என பலகையில் எழுதியிருப்பதைப் பார்த்து விட்டால்,..எனது அண்ணன் திராவியா முடித்து வரும்வரை காத்திருந்த நோன்பு நாட்கள் அழகானவை. இன்றும் ஹிம்மதுல் இஸ்லாம் வாலிபர் சங்கம் இயங்குகிறது ஆனால், நோன்புக் கால ஊர்வலங்களெல்லாம் இல்லை.

நோன்பின் இரவில் ஒரு மணிக்கு பக்கிரிஷாமார் “ஊமைக் கொட்டு”-பைத்து எதுவும் பாடாமல் பக்கிரிஷாமார்கள் தப்புசுக் கொட்டு(தாஹிராக்

கொட்டு) கொட்டிச் செல்வார்கள். ஊமைக் கொட்டைக் கேட்டு முழிப்பவர்கள்- உலைவைத்து சோறை ஆக்கி சஹருக்கு வைப்பார்கள். மத்தியானம் ஆக்கி வைத்த ஆனத்தை உறியில் வைத்தால்தான் பூனையிடம் இருந்தும் ஆனம் தப்பிக்கும்.அடுத்து மூன்று மணிக்கு பைத்து ஓதி பக்கிரிஷாமார் கொட்டுக் கொட்டி வருவார்கள். ஒவ்வொரு வீட்டு வாசலிலும் நின்று செல்வார்கள், அவர்கள் தெருவின் முனையில் வரும்போதே கேப்பையோ,நெல்லோ, அரிசியோ- முட்டைத் தட்டில் அள்ளி வைத்துக் காத்திருப்போம். சிறுமிகளாகிய நாங்கள். சில வீடுகளில் அஞ்சுபைசா,பத்துப்பைசா கொடுப்பார்கள்.

இருபத்தி ஆறாம் நாள் நோன்பின் பகலில் பக்கிரிஷாமார் ஊரில் உள்ள வீட்டுக்கு, வீடு வருவார்கள். ஒவ்வொரு வீட்டிலும் நல்லெண்ணெய், சீயக்காய்,100ரூபாய்,கைலி,துண்டு,சட்டைத் துணி கொடுப்பார்கள். இருபத்தியேழாம் இரவு பக்கிரிஷாமார் வரமாட்டார்கள். அன்று எண்ணெய் தடவி, சீயக்காய் தேய்ச்சு, சுடுதண்ணீரில் குளித்து, நெஞ்செலும்பு சூப் வைத்துக் குடிப்பார்கள். 25-நாளும் இரவில் தூக்கம் இல்லாமல் கொட்டுக்,கொட்டி ஊரைச் சுற்றிய அலுப்பு, உடல் சூட்டை அன்று தணிப்பதற்கு எனச் சொல்வார்கள். இருபத்தியேழாம் இரவு ஹிம்மதுல் இஸ்லாம் வாலிபர் சங்கத்தில், பள்ளிவாசலில் சரலைட்டு, நட்சத்திரம், பொறை-லைட்டு மின்ன...ஊர்ச் சனமே புதுத்துணியோட பொம்பளமக்க தலை நெறைய மல்லிகைப் பூவோட, வாவரிசிப் பூப் பகுந்து..விடிய,விடியத் தொழுது அழுது,அழுது துஆக் கேட்டு ஊரே அல்லாவின் நூரின் ஒளி இறங்கியது போல ஒளிவோடு இருக்கும்.

பள்ளிவாசலில் கேசரி பகுருவார்கள், பைத்தில் மூன்று வகை தின்பண்டம் கொடுப்பார்கள் அன்று. அத்தர் மனமும்,ஊதுபத்தி மணமும்,மல்லிப்பூ வாசமும்,புதுத்துணி சர,சரப்பும் என... நன்னிமார்க கைலிக்கி அட்ரஸ் வச்சுத் தைப்பது. சீட்டுத் துணி வாங்கி உயரம் பத்தாததுக்கு இடுப்புப் பகுதிக்கு கருப்பு உள்பாவாடைத் துணி ஜாய்ன்டு பண்ணித் தக்கிறது "அட்ரஸ்"-வச்சுத் தக்கிறதுனு சொல்லுவாக. டெய்லரு கடையில நோன்போடு கால் கடுக்க காத்திருந்து துணி வாங்கிய நோன்பு நாட்களை நினைத்தாலே அந்த நாள் நோன்பின் மாண்போடு மனதில் மீண்டுவருகிறது, அழுகையும் கூடவே வருகிறது.

இஸ்லாமிய மாதத்தின் முதல் மாதமான முஹர்ரம் மாசத்திலிருந்து, கல்யாணம் நடந்த புதுப் பொண்ணு, மாப்பிள்ளைக்கி முப்பது நோன்புப் பெருநாள் தலைப் பெருநாள். 27- ஆம் நோம்பை மாப்பிள்ளை வீட்டுல வச்சுட்டு, 29-ஆம் நோம்புல பொண்ணு வீட்டுக்கு மாப்பிள்ளை, பொண்ணைக் கூட்டியாருவாக. பொண்ணு வீட்டுல இருந்து பதினோருபடி அரிசி, மூணுபடி பச்சரிசி, அஞ்சு கற்பட்டி வட்டு, ஏழு தேங்காய், வாழைப்பழம் அஞ்சு சீப்பு, கும்பகோணம் வெள்ளை வெத்தலை ஒரு கவுளி, களிப் பாக்கு ஒரு கையளவு, முனை முறியாத புள்ளைமஞ்சள் ஏழு (மஞ்சளின் இருபுறமும் கிளைகள்போல நீண்டியிருக்கும் மஞ்சள் புள்ளை மஞ்சள் என்பார்கள், மஞ்சள் உடையாமல் இருக்கனும் என்பதில் கவனமாக இருப்பார்கள்) மாப்பிள்ளை, பொண்ணுக்கு புதுத்துணி, வெத்தலைச் சுருளு 101-ரூபாய் பெருநாளுச் சீரு கொடுத்து மாப்பிள்ளை, பொண்ணை- பொண்ணு வீட்டுக்கு அழைத்து வருவார்கள், சில பொண்ணு வகுத்துப்புள்ளையோட இருந்தால் பெத்தவுகளுக்கு இன்னும் கொண்டாட்டந்தேன்.

தாம் பெத்த மகள் தலைசூழியென, தங்கமெனத் தாங்கி, வாய்க்கி ருசியாக ஆக்கிக் கொடுத்து, மகள்,மருமகனைத் தாங்கு,தாங்கென தாங்குவார்கள், மகளைப் பெத்த சீதேவி மக்க. பொண்ணு,மாப்புள்ளை தலைப் பெருநாள் கொண்டாடுற வீடு பகுமானம், பகுசியாக இருக்கும். மாமனார் வீட்டுல ஆராத்தி எடுத்து வீட்டுக்குள்ளே மருமகனைக் கூட்டியாந்து, காலைப் பெருநாப் பசியாறியதும், பொண்ணும் மாப்பிள்ளையும் அவுக வீட்டுக்குப் போயி, பெத்தவுக,பெறந்தவுகளுக்கு சலாம் கொடுத்து, மலக்காத்து செஞ்சு, பொண்ணு,புள்ளைக்கி சேமியா இனிப்புக் கஞ்சி காய்ச்சிக் குடுத்து- துஆச் செஞ்சு மறுபடி பொண்ணு வீட்டுக்கு அனுப்புவாக, மத்தியானச் சோறு, கறி சாப்பிட்டு-வெத்திலை போட்டு செவந்த நாக்கைக் காட்டி, சிரிச்சுப் பேசி மகுந்து, பெருநாளைக் கொண்டாடி, மேக்கொண்டு அஞ்சுநாள் பெருநாள் விருந்தை அனுபவிச்சு வெத்தலை பாக்கு, மஞ்சள சீராக் கொண்டாந்துக் குடுத்து மாப்பிள்ள வீட்டுப் பெரியவுக வந்து பொண்ணு, மாப்பிள்ளையைக் கூட்டிப் போவாக.

புதுப் பொண்ணு, மாப்புள்ள கல்யாணத்தன்னக்கிக் கட்டுன பட்டுச் சேலை சர,சரக்க அதுக்கு மேல வெள்ளத் துணியில, சுத்தி எம்ராய்ட் பூவச்சு தச்ச துணியச் பட்டுச் சேலைக்கி மேல, ஜில்லாத் துணி போர்த்தி, கண்ணாடி வளையல் கல,கலக்க தலை நிமூற மல்லிகைப் பூவோட, தேங்காப்பூக் கொலுசுக் காலுல நெற பூட்டா இருக்க, நெளி மிஞ்சி மூணு முத்து சலங்கையோட(மெட்டி) கால் கட்டை விரலுக்கு அடுத்த விரலில் போட்டிருக்க, காதுகளில் கொட்டைப் பாக்குச் சிமிக்கி, இல்லைனா சரத்தோடு கழுத்தில் பெருக்கிக் பூசாந்தாரத்தோடு கோர்க்கப்பட்ட புதுக் கருக்கு கலையாத கருகமணி, ரெட்டைப் பட்ட சங்கிலி, தாமரைப்பூக் கல்லு நெக்லசு- போட்டுப் போகும் பொண்ணும், கலியாண வேஷ்டி, முழுக்கை சில்க் சட்டை, அத்தர் மணத்தோட மாப்பிள்ளையையும் தெருவுல போகும்போது எட்டுக் கண்ணும் விட்டெரியும் இறையின் பேரொளியுடன் இருப்பார்கள். தெருவுல சீரோடு அழைச்சுப் போறது,ஒவ்வொரு வீட்டுத் திண்ணையிலையும் வந்து தெருமக்க பாக்குறது...நோன்பு மாதத்தின் "பேரழகு"- தெருவுக்களில் வந்திருக்கும்.

**நோன்புப் பெருநாள்:**

நோன்பு இருபத்தியெட்டு, இன்னைக்கிப் பொறையைப் பாத்தா கொறை நோம்பு, நாளைக்கிப் பொறைத் தெரிஞ்சா முழு நோம்பு என்பார்கள். தலை நோம்புப் பொறைப் பாக்குறது போலவே பெருநாப் பொறை பாக்குறதும் பொழுதடஞ்சதும் ஊரே ஜே..ஜே..னு வானத்தையே பார்த்துத் திரிவாக. பெருநாளைக்கி, தோட்டிமாரு, வண்ணாத்தி, உழவு வேலை பாக்குறவுகளாம் சாப்பாடு வாங்க வருங்க. அந்த மக்களுக்கும் சேர்த்து சோத்தை, ஆனத்தை ஆக்கனும். காலையில முனுசுப்புள்ள,கணக்குப்புள்ள அப்புமாரு பள்ளிக்கூட டீச்சரு மாருகளுக்குப் பசியாரக் குடுத்து விடனும். மளிகைக் கடைக்கி பில்லைப் போடனும்,அல்லாவே எம்பூட்டு வேலை கெடக்குது மக்கானு... ஊர் மக்க அலமாசிப்பட்டுத் திரிவாக. ஆடு வளக்குற "இபுறாமு"கூட்டுக் கறி போட்டா நாம ஒரு கூறு சேரனும் என்ற பேச்சும், கறிக்கடைக் கனிவாட்டை கறிக்கச் சொல்லி வைக்கனும் எனவும், வீட்டுல வளக்குற கோழி ரெண்டப் புடுச்சு அறுத்து, முடியை ஆஞ்சு,தீயில வாட்டி-கொழம்பு வைக்கனு எனவும், காலையில பூரி,கறிச்சாறு எங்க வீட்டுல,எங்க வீட்டு உளுந்த வடை,பனியாரம்-எனப் பேசித் திரிவதும், பெருநாள் தொழுகை காலையில எத்தனை மணிக்குனு பள்ளிவாசல்ல எழுதிப் போடுவாக, இந்த சுந்தரம் டெய்லரு சட்டைக்கி கொக்கி

இன்னும் வைக்கலைங்கிறாரு, அதைப் போயி வாங்கியாறனும். சவுராளி வந்த வீட்டுல இந்த வருஷம் வீட்டு பொறுப்பாம்பள வீட்டுல பெருநாள் கொண்டாட இருக்காக, அடுத்த வருஷம் வல்ல நாயன் எப்படி வைக்கிறானோ?... என்ற சந்தோஷத்தில் ஏக்கமும், கலந்து ஒலிக்கும் குரலும் என... இந்திகாப் இருக்குற "தாவுது"-நன்னா பெருநாள் தொழுகை முடிஞ்சு வீட்டுக்கு வந்ததும் "ஸலாம்" குடுக்கப்போகனும். பெருநாக் காசு வாங்கி, பம்பாய் முட்டாய் வாங்கனும், எங்க ஊர்ல மருதாணி மரம் இருக்கிறது ரெண்டே வீட்டுலதேன். பெருநாளைக்கி மருதாணி வைக்க அந்த வீடுகள்ள சிறுமிகளான நாங்களே பறிச்சு மருதாணி மரத்துக்காறவுங்ககிட்ட குடுத்து ஒலக்கு அஞ்சு ருவாயினு வாங்குவோம். ஊரே மருதாணி பறிக்க அந்த ரெண்டு மரமும் மொட்ட மரமாயிரும், மருதாணியோட கொட்டப் பாக்கு, காய்ஞ்ச பனையோலையும் வச்சு அரச்சு கையில வட்ட, வட்டமாக பொட்டு வச்சு விரல்களுல பொட்டு வச்சு, கால் பாதமெல்லாம் அப்பி படுத்து தூங்குனாக்க கனவுலாம் மருதாணி செவந்ததாத்தேன் இருக்கும். நோன்பு வைக்க சஹருக்கு எந்திரிக்கிறப்போ மருதாணி வச்ச கையக் கழுவி சிவந்துருச்சானு பாத்து கை ரெண்டையும் மூக்குல வச்சு மோந்துப் பாக்குற அந்த மருதாணி வாசம் இன்னும் என் நினவுல இருக்கு. வளவிக்கார மாமி,வளவிக்கார மாமா சுத்து வளவி, நெலி வளவி, குர்பானி வளவி, பார்டர் வளவி என வித, விதமாக கொண்டுவர தெருவுக்கு ஒரு திண்ணையில வளவிப் போடுற பெண்களின் அந்த நோன்புக்கால வாழ்வியல் மிக அழகானது.

செட்டியாரப்பு கொலுசு புது டிசைன்ல கொண்டு வருவாரு...சுல்தான் வீட்டுத் திண்ணையில கடையைப் போடுவாரு...ஒரு குண்டுமணி ஆடாம, அசையாம நிறுத்து பில்லைப் போடுவாரு, பழைய கொலுசு என்ன வெலக்கி எடுப்பாறோ?... என்ற அங்கலாய்ப்புகளுடன்...பொறைப் பார்த்துப் பெருநாள் அறிவிச்சு பெருநாள் தொழுகை தொழுது, அந்த வருஷம் மௌத்தான மக்களை நினச்சு, மூணு வருஷமோ, அஞ்சு வருஷமோ மலேசியா,பினாங்குல இருக்குற புருஷன நினச்சு அழுகுற பொண்டாட்டிகளும் தெரிஞ்சும், தெரியாம செஞ்ச பாவங்களையும் நினச்சு அழுது,அழுது கேட்ட துஆவுக்கு "ஆமீன்" சொல்லி, கை கொடுத்து, சலாம் சொல்லி... நோம்புப் பெருநாள் பெருநாள்பட்ட பாடாக இருந்து ஆறுநொன்பு வைக்கும் பெரியவுக... ஆறு நோம்புப் பேச்சைத் தொடர ஆறுநோம்பு கழிச்சு கல்யாணம் ஆகப் போகும் குமரிகளின் குசு,குசுப் பேச்சுடன் நோன்பில் பெற்ற பிள்ளையை எம்புள்ள நோன்புல பிறந்தது என்ற தாயின் நினைவுகளுடனும் முப்பது நோன்பு எங்களை விட்டு விடை பெற்றிருக்கும்.

அடுத்த ரமலான் இதோ வருகிறது,..எனது பேரனுக்கு ரமலான் எனது ரமலான் நினைவுகளைக் கடத்தப் போகிறேன். அவன் ஆவணப் படுத்தி அவனது பிள்ளைகளுக்கும் கொண்டு செல்வான்.

**ஆமீன்!அமீன்! யாரப்பல் ஆலமீன்!**

## நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்

அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்பிக்கை கொண்ட எவரும் கீழாடையின்றி (பொதுக்) குளிப்பிடங்களில் நுழைய வேண்டாம். அறிவிப்பவர்: ஜாபிர் (ரலி)

# தேவி திருவிழா ஊர்வலமும், பாங்கு விளியும்!



ஞான ராஜசேகரன் IAS

மத நல்லிணக்கத்தில் சிறந்து விளங்கும் மாநிலம் கேரளா. என்னைப் பொறுத்தவரை அதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. இந்துமதம்( 54.7%) அதிகமான ஜனத்தொகையைப் பெற்றிருந்தாலும் பிற மதங்களான இஸ்லாமும்(26.6%) கிருத்துவமும்(18,4%) சிறுபான்மையினர் என்று சொல்லமுடியாத அளவுக்கு ஜனத்தொகை கொண்டவர்களாக இருப்பது. கிருத்துவமும் இஸ்லாமும் தோன்றிய காலம் முதலே கேரளாவில் இருந்துவருவதாக கருதப்படுவது.

இயேசுவின் சிஷ்யரான செயின்ட் தாமஸ் கிபி 1ஆம் நூற்றாண்டிலேயே கேரளாவுக்கு வந்து கிருத்துவ மதத்தை பரப்பினார் என்று நம்பப்படுகிறது. அதைப்போலவே நபிகள் நாயகம் (ஸல்) உயிரோடிருந்த காலத்திலேயே இஸ்லாம் கேரளத்துக்கு வந்ததாக கருதப்படுகிறது. கேரளாவிலிருந்த சேர மன்னன் சேரமான் பெருமாள் ஒருநாள் இரவு தன் மனைவியோடு முற்றத்தில் உலாவிக் கொண்டிருந்தபோது வானத்தில் நிலவு இரண்டாக பிளந்திருந்ததை

கண்டதாகவும் அதைப்பற்றி அரேபிய வணிகர்களிடம் விசாரித்தபோது அவர்கள் முகம்மது நபி (ஸல்) செய்த அதிசயம் என்று கூற, நபியை தரிசிக்க சேரமான் பெருமாள் அரேபியா சென்று நபியைக் கண்டு இஸ்லாமிற்கு மதம் மாறியதாகவும் திரும்பி வரும் வழியில் அவர் இறந்து போனதாகவும் சொல்லப்படுகிறது. அவருடன் சென்று திரும்பியவர்கள் இஸ்லாமை கிபி 7 ஆம் நூற்றாண்டிலேயே கேரளாவில் பரப்பியதாக நம்பப்படுகிறது.

மேலும் இந்தியாவிலேயே முதல் மசூதி கட்டப்பட்டது கேரளாவில்தான். அது, இந்தியாவிற்கு பிற்காலத்தில் முஸ்லிம் அரசுகள் அறிமுகப்படுத்திய மினாரட்களை கொண்டதாக இல்லை. கேரளாவின் இந்து கோயில்களின் மாடலில் தான் அமைந்திருக்கிறது.

இந்து மதத்தைப் போல பழைமைத்தன்மை இல்லாவிட்டாலும் பல நூற்றுக்கணக்கான ஆண்டுகள் கிருத்துவமும், இஸ்லாமும் மலையாள மண்ணில் இந்து மதத்தோடு சேர்ந்தே பயணித்திருக்கின்றன. மலையாளமே மூன்று மதங்களின் மொழியாக இருந்திருக்கிறது. இவர்களுக்கிடையே இந்தியாவில் வேறு எங்குமே காண இயலாத ஒருங்கிணைவை (ASSIMILATION) நம்மால் காண முடியும். கிருத்துவ மதத்தை எடுத்துக் கொண்டால் இந்துக்களின் நிலவிளக்கு, கொடிமரம் முதலானவை சிலுவை அடையாளங்களோடு சர்ச்களில் பார்க்கலாம்.

இந்துமத விழாக்களின் சிறப்பு அடையாளமாக கருதப்படும் பொற்குடைகள், யானைகளின் அணிவகுப்பு,செண்டை மேளம் வானவேடிக்கை முதலானவை இல்லாத மாதா கோயில் திருவிழாக்களை கேரளாவில் பார்ப்பது கடினம். இஸ்லாமிலும் தாக்கங்கள் இல்லாமலில்லை. மாப்ளா பாட்டு, ஒப்பனா முதலானவை கேரள முஸ்லிம்களுக்கு மட்டுமே உரித்தானவை. நபிகள் நாயகத்துக்கும் கதீஜாவிற்கும் இடையே மலர்ந்த காதலை கொண்டாடுகிற பாடல்கள் பாடப்படாத முஸ்லிம் திருமணங்கள் இங்கில்லை.பிற முஸ்லிம் சமூகத்தில் இது ஹராம் என்று கருதப்படுகிற விஷயம் ஆகும்.

மூன்று சமுதாயத்தினரிடையில் உள்ள இணக்கம் எல்லா துறையிலும் வெளிப்படுவதைக் காணலாம். அரசியல், இலக்கியம், கல்வி, சினிமா எல்லா துறையிலும் மதம் ஒரு பிரச்னையாக இங்கு இருப்பதில்லை. நான் கலெக்டராக இருந்த போதுதான் அயோத்தியில் பாபர் மஸ்ஜித் இடிக்கப்பட்டது. எங்கள் மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெருவாரியாக வாழும் சாவக்காடு பிரதேசத்தில் கலவரம்

ஏற்பட்டுவிடுமோ என்று முன்னேற்பாடாக பாதுகாப்பு நடவடிக்கைகளை செய்து வைத்திருந்தோம். அங்கே ஒரு சிறு அசம்பாவிதமும் நடக்கவில்லை. அங்கே மட்டுமில்லை. கேரளா முழுவதுமே ஒரு சலனமும் ஏற்படவில்லை.

ஆனாலும் சில நேரங்களில் சில இடங்களில் சட்டம் ஒழுங்கை குலைக்கும் நிகழ்ச்சிகள் நடப்பதுண்டு. நான் கலெக்டராக இருந்தபோது நடந்த ஒரு சம்பவம் இது. சாவக்காடு பகுதியில் ஒரு கிராமம். அதில் பிரதானமாக இந்துக்களும் முஸ்லிம்களும் வாழ்ந்து வந்தனர்.

அந்த கிராமத்தில் இந்துக்களின் தேவி கோயில் ஒன்று பிரசித்தி பெற்றிருந்தது. விபத்தில் கை கால் முறிவு ஏற்பட்டவர்கள் அந்த உறுப்புக்களின் மாதிரியை பொம்மை போல் செய்துவந்து தேவியிடம் சமர்ப்பித்து பிரார்த்தனை செய்தால் உடனே குணமாகி விடும் என்கிற நம்பிக்கை அந்தப்பகுதி மக்கள் அனைவருக்கும் உண்டு.

அதைப்போலவே அந்த கிராமத்திலுள்ள மசூதி,பிரசித்தி பெற்ற ஒன்றாக இருந்தது. வெள்ளிக்கிழமை பிரார்த்தனை முடிந்து முஸ்லிம்கள் வெளியே வரும்போது குழந்தைகளுக்கு 'ஓதி'னால் குழந்தைகளுக்கிற நோய்கள் குணமாகும் என்கிற நம்பிக்கை அந்தப்பகுதி மக்களுக்கு இருந்தது.

ஆண்டுக்கு ஒரு முறை தேவி கோயிலின் திருவிழா அந்த கிராமத்தில் விமரிசையாக நடக்கும். அந்த திருவிழாவின் பாகமாக ஒரு பெரிய ஊர்வலம் ஊருக்கு வெளியே உள்ள சிறு கோவிலில் இருந்து புறப்பட்டு மெயின் ரோடு வழியாக ஊருக்குள் இருக்கிற தேவி கோயிலை அடைவது வழக்கம். அந்த மெயின் ரோடில்தான் முன்பு சொன்ன பிரசித்தி பெற்ற மசூதியும் அமைந்திருந்தது.

பல வருடங்களாக தேவி திருவிழாவும், ஊர்வலமும் பிரச்னை ஒன்றுமில்லாமல் நடந்து வந்தது. கடந்த வருடம் ஊர்வலத்தில் வந்த சில இந்து

இளைஞர்கள் மசூதியை கடக்கும் போது மசூதியில் இருந்து "அல்லாஹூ அக்பர்" என்கிற 'பாங்கு' விளி கேட்க அங்கேயே ஊர்வலத்தை சிறிது நேரம் நிறுத்தி பாங்குவிளிக்கு எதிராக முஸ்லிம்களை கேலி செய்து ஆட்டமும் கோஷமும் போட, மசூதியின் உள்ளே இருந்த முஸ்லிம் இளைஞர்கள் கற்களை ஊர்வலத்தின் மீது வீச ஒரு கலவரம் அங்கே ஏற்பட்டது. இரு குழுவினரும் மோதிக் கொண்டதில் பல பேருக்கு ரத்த காயங்கள்.சிலருக்கு கை கால்கள் முறிந்தன. ஆட்கள் யாரும் இறக்கவில்லை. இந்தக் கலவரத்தை போலீஸ் சற்றும் எதிர்பார்க்காததால் அவர்களிடம் போதுமான ஆள்பலமில்லை. எப்படியோ போராடி கலவரத்தை ஒருவழியாக அடக்கி விட்டார்கள்.

ஆனால் இந்த வருடம் போலீஸ் முன் ஜாக்கிரதையோடு நடவடிக்கைகள் எடுக்க முடிவெடுத்தது. இரண்டு சமுதாயத்திலும் இருக்கிற சில இளைஞர்கள் இந்த முறை இரண்டில் ஒன்றை பார்த்துவிடுவது என்று மோதலுக்கு தயாராகி வருகிறார்கள் என்றும் இதற்காக ஆட்களை இருபுறமும் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் உளவுத்துறை எச்சரிக்கை தந்திருக்கிறது. தேவி கோயிலின் திருவிழாவிற்கு ஒரு வாரமே உள்ள நிலையில் திருவிழா பிரச்னையின்றி நடைபெற கலெக்டர் தலையிட்டால் உதவியாக இருக்கும் என்று எஸ்பி கேட்டுக்கொண்டார். நான் இரண்டு சமுதாயங்களைச் சேர்ந்த ஊர் பெரியவர்களையும் இளைஞர் அமைப்பை சேர்ந்தவர்களையும் அழைத்து பேசினேன். இரண்டு சமுதாயத்தை சேர்ந்த ஊர் பெரியவர்களும் சமாதானத்தை வலியுறுத்தி பேசினார்கள். கலகம் செய்வோர் யாராக இருந்தாலும் பாரபட்சம் பார்க்காமல் கலெக்டர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். போலீஸ் தரப்பில் ஊர்வலம் நடத்த வேறு ஒரு பாதையை ஏற்பாடு செய்து தருவதாகசொன்னார்கள். இந்து பெரியவர்கள் அதற்கு சம்மதித்தார்கள். ஆனால் இந்து இளைஞர்கள் 'எந்த காரணம் முன்னிட்டும் வேறு பாதையில் ஊர்வலம் போக சம்மதிக்கமாட்டோம்' என்று கூட்டமாக எழுந்து மறுப்பு தெரிவித்தார்கள். தேவி கோவில் ஊர்வலம் மசூதி இருக்கும் மெயின் ரோடு வழியாகத் தான் வரவேண்டும் என்று அவர்கள் அடம் பிடித்தார்கள். முஸ்லிம் இளைஞர்கள், "4 மணிக்கு "பாங்கு"விளிப்பது முடிந்து விடும். அதற்குப்பிறகு ஊர்வலத்தை நடத்திக்கொள்ளட்டும். எங்களுக்கு ஆட்சேபணை இல்லை" என்றார்கள். "நாங்கள் எந்த நேரத்தில் ஊர்வலம் நடத்தவேண்டும் என்று சொல்ல நீங்கள் யார்?" என்று இந்து இளைஞர்கள் கோபத்தோடு கேட்க அதற்குப் பிறகு இரு குழுவினரும் ஒருவரை ஒருவர் கடுமையாக எதிர்த்து வாதமிடத் தொடங்கினார்கள்.

“போன வருடம் நடந்த கலவரத்தில் கையில் காயம் அடைந்த முஸ்லிம் ஒருவர் அவரது இந்து நண்பர் மூலமாக தேவி கோவிலில் கை பொம்மையை சமர்ப்பித்து வேண்டுதல் செய்தது எங்களுக்குத் தெரியாதா?" என்று ஏளனமாக பேசினார், இந்து இளைஞர் ஒருவர். அந்த இந்து இளைஞரை மடக்குவது போல் ஒரு முஸ்லிம் இளைஞர் உடனே எழுந்து சொன்னார்:" உங்கள் அண்ணி குழந்தைக்கு உடம்பு சரியில்லாம போனபோது ஓதுவதற்காக மசூதிக்கு வந்ததை உங்களால் மறுக்க முடியுமா?"

எனக்கு ஒரு விஷயம் நன்றாகப் புரிந்தது. அந்த ஊரிலுள்ள இரு சமுதாயங்களும் அல்லாவின் மகிமையிலும் தேவியின் சக்தியிலும் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பது. ஆனால், இரு பிரிவைச் சேர்ந்த இளைஞர்களும் ஒருவரை ஒருவர் அடித்துக்கொள்ள சாக்கு ஒன்று கிடைக்காதா என்று ஏங்குகிறார்கள்.கிராம மக்கள் ஆதரவு இந்த இரு பிரிவு இளைஞர்களுக்கும் சுத்தமாக இல்லை. எனவே இந்த இளைஞர்களிடம் சமாதானம் பேசுவதில் பிரயோஜனமில்லை. சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்த இவர்களை தனிப்படுத்தி இவர்களிடம் கடுமையாக நடந்துகொள்வது தான் சரி என்று நான் முடிவெடுத்தேன். உடனே இரண்டு அறிவிப்புகளையும் செய்தேன்:

1) ஊர்வலம் நடக்கிற அன்று மசூதி போலீஸ் கட்டுப்பாட்டில் இருக்கும். பாங்கு விளிப்பவரைத்தவிர வேறு யாருக்கும் மசூதிக்குள் அனுமதி இல்லை.

2) ஊர்வலம் ஆரம்பிப்பதிலிருந்து முடிகிற வரை இளைஞர்களின் நடவடிக்கை முழுவதும் வீடியோவில் பதிவு செய்யப்படும். கலகம் விளைவிக்க முயல்பவரை வீடியோ மூலம் கண்டுபிடித்து அவர்கள்மேல் கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திருவிழா நாள்**

எஸ்.பி, அசம்பாவிதம் ஏதாவது நடந்தால் அதை எதிர்கொள்ள எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.

போலீஸ் மசூதியை தங்களுடைய கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிட்டது. மசூதிக்கு எதிரே பத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் வீடுகள் இருந்தன. அவற்றில் கலகம் விளைவிக்கும் நோக்கத்துடன் யாராவது பதுங்கி இருக்கிறார்களா என்று ஆராயப்பட்டது. ஆள் நடமாட்டத்தை கண்காணிக்க போலீஸ் ஆங்காங்கே நிறுத்தப்பட்டது நானும் எஸ்பியும் இணைந்து மசூதியையும், தேவி கோயிலையும், சிறு கோயிலையும் இன்ஸ்பெக்ட் செய்தோம். மூன்றும் மெயின் ரோட்டில் தான் இருந்தன. எர்ணாகுளம் செல்கிற ரோடாக அது இருந்ததால் மிதமான போக்குவரத்து காணப்பட்டது.

தேவி கோயில் திருவிழா சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. கிராம மக்கள் பக்தி பரவசத்தோடு யாதொரு கவலையுமின்றி திருவிழாவில் பங்கெடுத்தபடி இருந்தனர்.

நான் எஸ்பி இடம் சொன்னேன்: "இரண்டு பிரிவு இளைஞர்களும் கலகம் செய்ய காத்திருப்பது உண்மை. இந்து இளைஞர்கள் மசூதியில் பாங்கு விளிக்கும்போது முஸ்லிம் இளைஞர்களை சீண்ட முடிவெடுத்திருக்கிறார்கள். அதற்கு எதிர் வினையாற்றவும் முஸ்லிம் இளைஞர்கள் தயாராக இருப்பது போல் தெரிகிறது. இதெல்லாம் நடக்க வேண்டுமானால் 2 மணிக்கு சிறு கோவிலில் துவங்குகிற ஊர்வலம் பாங்கு விளிக்கும் நேரமான 4 மணிக்கு மசூதி முன்பு சென்றடைய வேண்டும். அவர்கள் இதற்காக திட்டமிட்டு தங்கள் ஊர்வலத்தை வழி நடத்தி வருவார்கள். பாங்குவிளி சமயத்தில் மசூதி முன்பு இவர்கள் இருந்தால் தான் முஸ்லிம்களை எதிர்த்து கோஷமிட முடியும். கலவரத்துக்கு தூண்டுதல் செய்யமுடியும். பாங்குவிளியை எக்காரணம் கொண்டும் தவற விடக்கூடாது என்பதில் அவர்கள் குறியாக இருப்பார்கள்." என்று சொல்லி நிறுத்தினேன்.

பின்னர் சற்று யோசித்துவிட்டு "எனக்கொரு யோசனை. பலனளிக்குமா என்று தெரியாது." என்று எஸ்பி இடம் எனது ஐடியாவை சொன்னேன். எஸ்பியும் " முயற்சிக்கிறேன்" என்று சொல்லி அதை பகிர்ந்து கொள்ள தனது உதவியாளர்களிடம் சென்றுவிட்டார்.

மசூதிக்கு எதிரே நானும் எஸ்பியும் போலீஸ் படையுடன் நின்றிருந்தோம். தேவி திருவிழாவின் ஊர்வலம் ஏராளமான ஆண்பெண் பக்தர்களோடு சிறு கோவிலில் இருந்து ஆரம்பித்தது . அந்தக்கூட்டத்தை வழிநடத்துபவர்கள் போல் முன்வரிசையில் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர் கூட்டம் உற்சாகத்தோடு வந்து கொண்டிருந்தது.அவர்களை காணும்போது இன்று எப்படியாவது ஒரு அசாதாரண சூழ்நிலையை உருவாக்கி விடவேண்டும் என்கிற வெறியுடன் வருவதாகவே தோன்றியது.

ஊர்வலம் நிதானமாக வந்துகொண்டிருந்தது. பாங்கு விளிப்பதற்கு இன்னும் நேரம் இருக்கிறது அல்லவா?

மசூதியிலிருந்து சுமார் 500 மீட்டர் தூரத்தில் ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. இன்னும் கொஞ்ச நேரம் தான். அவர்கள் மதம் சம்பந்தமான கோஷங்களை உச்ச சப்தத்தில் சொல்ல ஆரம்பித்தார்கள். அப்போது தானே மசூதியில் பாங்குவிளிக்கும்போது எதிர்கோஷம் போட வசதியாக இருக்கும் என்று அவர்கள் கருதுவது போன்று தோன்றியது.

ஊர்வலம் சுமார் 250 மீட்டர் அருகே வந்துவிட்டது . போலீஸ் பிரச்னையை எதிர்கொள்ள தயாராகிவிட்டது. கலவரம் ஏற்பட்டால் உபயோகிக்கும் தடுப்பு கவசங்கள், கண்ணீர் புகை, ஆயுதம் ஏந்திய போலீஸ் இத்யாதி ஏற்பாடுகள் தயார் நிலையில் இருந்தன.

நானும் எஸ்பியும் தயார் நிலையில் நின்றோம், அசம்பாவிதத்தை எதிர்கொள்வதற்காக.

அப்போது அந்த ரோடில் யாருமே எதிர்பாராத விதத்தில மிகப்பெரிய டிராபிக் ஜாம். ஏராளமான வாகனங்கள் தாறுமாறாக நின்றன. போலீஸ்காரர்கள் ஓடிச்சென்று டிராபிக்கை ஒழுங்குபடுத்த முயல்கிறார்கள் . ரோடின் அகலம் குறைவாக இருப்பதால் வாகனங்கள் ஒன்றுக்கொன்று முந்தி ரோடை முழுக்கவும் அடைத்தபடி நிற்கின்றன.

ரோடின் ஓரங்களில் கூட செல்ல முடியாதபடி ஊர்வலம் ஸ்தம்பித்து நின்றுவிடுகிறது. ஊர்வலத்தின் முன் வரிசையில் இருக்கிறவர்கள் ரோடின் ஓரமாக போக முயற்சிக்க அங்கேயும் வண்டிகளின் நெரிசல். வாகனங்கள் எழுப்புகின்ற ஹாரன் சத்தம், டிரைவர்களின் கூச்சல் இவற்றுக்கிடையில் ஊர்வலத்தில் உள்ளவர் எழுப்பும் கோஷம் மேலெழ முடியாமல் போகிறது.

இந்த சமயம் பார்த்து பாங்கு விளிக்கும் நேரம் வந்துவிட்டது. "அல்லாஹூ அக்பர்....." முழுதாக ஒலிக்கிறது. வாகனங்களுக்கு அப்பால் இருக்கும் ஊர்வலத்தில் வரும் இளைஞர்களுக்கு இந்த "பாங்குவிளி" கேட்டதா இல்லையா என்று தெரியவில்லை. சிறிது நேரத்துக்குள்"பாங்கு விளி"முடிந்தும் விட்டது. தற்போது மசூதி பகுதியில் பூரண அமைதி நிலவத் தொடங்கிவிட்டது.

டிராபிக் ஜாம் சரியாக சுமார் 10 நிமிடம் எடுக்கிறது. வண்டிகள் எல்லாம் போகவும் வரவும் தொடங்கிவிட்டன. ஊர்வலம் நகரத் தொடங்குகிறது. பாங்கு விளி முடிந்து வெகு நேரம் ஆகிவிட்டதை அறிந்த ஊர்வலத்தில் வருகிற இளைஞர்கள் முகத்தை தொங்கப் போட்டவாறு நடந்து வருகிறார்கள். அமைதியாக இருக்கும் மசூதியைக் கடக்கும்போது வழக்கமான கோஷத்தை போடக்கூட அவர்களிடம் உற்சாகமில்லை. ஊர்வலம் தற்போது அடக்கமான பக்தி ஊர்வலமாக தேவி கோயிலை நோக்கி சென்று கொண்டிருந்தது, முன் வரிசையில் இருந்த இளைஞர்கள் மட்டும் தங்கள் ஏமாற்றத்தை பொறுக்க முடியாமல் "பாழாய்ப்போன டிராபிக் ஜாமை" சப்தம்போட்டு சபித்தபடி சென்று கொண்டிருந்தார்கள்.

சட்டம் ஒழுங்கு பணியில் ஈடுபட்டிருந்த அனைவரும் நிம்மதி பெருமூச்சு விட்டனர். ஊர்வலம், தேவி கோயிலை எந்த ஒரு பிரச்னையும் இல்லாமல் அடைந்துவிட்டதை அறிந்தவுடன் போலீஸ்காரர்கள் அனைவரது முகத்திலும் மகிழ்ச்சியின் ரேகைகள் வரத்தொடங்கிவிட்டன.

ஒரு போலீஸ்காரர் தேவி கோயில் பிரசாதம் வாங்கி வந்து எங்களுக்கு கொடுத்தார். நாங்கள் மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொண்டோம். எஸ்பி லோக்கல் எஸ்ஐயை எனக்கு அறிமுகப்படுத்தினார்: "இவர்தான் நீங்கள் சொன்னதை செய்து காட்டியவர்" எஸ்ஐ எனக்கு சல்யூட் செய்தார். நான் அவரது கைகளை குலுக்கி நன்றி தெரிவித்தேன்.

எஸ் ஐ சொன்னார்:" சார், நீங்க கேட்டுக்கொண்டபடி இந்த ரோட்டில் டிராபிக் ஜாமை உருவாக்கறது அவ்வளவு சுலபமா இல்லை. எனக்கு தெரிஞ்சவங்க ஐம்பது பேரையாவது வண்டியோடு வரவழைத்து J A M ஐ உண்டாக்கினேன். எங்கே லேட்டாயிடுமோன்னு பயந்தேன். கரைக்ட்டா நடந்துட்டது"

## ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நாங்கள் மினாவில் தங்கும் நாளிலிருந்து மூன்று நாட்களுக்கு மேல் குர்பானிப் பிராணிகளின் இறைச்சியை உண்ணாமல் இருந்தோம். பிறகு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், “(இப்போது நீங்கள் உண்ணலாம்;சேமித்தும்வைக்கலாம்” என்று கூறி, எங்களுக்கு அனுமதி வழங்கினார்கள்.

## இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது.

அறிவிப்பாளர்களில் ஒருவரான இப்னு ஜுரைஜ் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: நான் அதாஉ (ரஹ்) அவர்களிடம் “நாங்கள் மதீனா வரும்வரை (சேமித்துவைத்தோம்)” என்று ஜாபிர் (ரலி) அவர்கள் கூறினார்களா?” என்று கேட்டேன். அதற்கு அவர்கள், “ஆம்” என்று விடையளித்தார்கள். அத்தியாயம்: 35

# முதுகுளத்தூரின் சிறப்புகள்

மார்க்க மேதை
**P.K.N. மவ்லானா அப்துல் காதிர் ஆலிம்**
தலைவர் IUML., மதுரை தெற்கு மாவட்டம்



இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் சிறப்புக்குரிய ஊராகும். மார்க்க மேதைகள் அரசியல் நிபுணர்கள், மருத்துவர்கள். ஆசிரியர்களை உருவாக்கி தந்த ஊராகும். 1913ம் ஆண்டு அரபு மொழியின் டிக்ஷனரியை, அரபுத் தமிழில் தமிழகத்துக்கு உருவாக்கி தந்த ஊராகும்.

அரபி மதரஸாவையும் மன்பஉல்ஹஸனாத் என்ற பெயரில் நடைபெற்று இந்த டிக்ஷனரி உருவாக துணை நின்றிருக்கிறது. இதில் முகம்மது இப்ராஹிம் ஆலிம் பாகவி முகம்மது ஹனீப்ஃஆலிம் பாகவி பெயர்கள் இடம் பெற்றிருக்கின்றன.

கடல் கடந்த நாடுகளில் வர்த்தகத்தை மேற்கொண்ட போதும் அப்துல் அஜீஸ் ஆலிம் முதுகுளத்தூர் முன்னேற்றத்திற்கு இருந்திருக்கிறார். புரலவலராக சுதந்திர போராட்ட வீரர் சுபாஸ் சந்திர போஸின் நண்பராகி சுதந்திரத்திற்காக பாடுபட்டார்.

சின்ன ஆலிம் குடும்பத்தின் பெயர்களும் காணப்படுகின்றன. முகம்மது சுல்தான் லெப்பை... ஆலிம் பாகவி, இமாம் அப்துல் ரஹீம் (எ), பேலெவை, பர்மா, முதுகுளத்தூர், தலைமை இமாம் M. ஷம்சுதீன் சேட் ஆலிம் நூரி, அகமது பஷீர், சேட் ஆலிம் மன்பஈ (திருச்சி டவுன் காஜி) ஜலீல் சுல்தான் ஆலிம் மன்பஈ, ஷர்புத்தீன் ஆலிம் மன்பஈ, ஹாரூன்சேட் ஆலிம்மன்பஈ தமிழகத்தில் நன்கு அறிமுகமானவர்களாகும்.

முதுகுளத்தூரில் சின்னப்பால் குடும்பம் என்றும் வாழ்ந்தி ருக்கிறது. அதில் இமாம் அப்துல் ரஹ்மான் (எ) கிட்டிகம்பு ஹஜரத், அப்துல் காதர் ஆலிம் நூரி, முதுவை கவிஞர் உமர்ஜாஃபர் பாஜில் மன்பஈ, இமாம் ஷர்புத்தீன், ஆலிம் பாகவி, அப்துல்ரஜாக் பாகவி, சலாஹூத்தீன் பாஜில் மன்பா, நஜ்முத்தீன் மிஸ்பாஹி, நிஜாமுத்தீன் ஜமாலி, சுலைமான் ஆலிம் மிஸ்பாஹி ஆகியோர் சிறந்த உலமாக்கள் உருவாகி இருக்கிறார்கள்!

1919ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட முகம்மதிய அரபி பாட சாலை பள்ளிவாசல் மேல்நிலை பள்ளியாக இன்றும் வளர்ச்சியுற்று காணப் படுகின்றன. பல டாக்டர்கள், பல ஆசிரியர்கள் பல வழக்கறிஞர்களை உருவாக்கி தந்த கேந்திரமாகும். அரசியல் தலைவர்களில் அலியார், அப்துல்கரீம் சேர்மன் ஹஸன், B.A. அயிரை அப்துல் காதர் சௌகத்அலி போன்றோர் பல அரசியல் கட்சிகளில் பணியாற்றி இருக்கிறார்கள்.

தலைமை ஆசிரியர் அப்துல்காதர் அவர்கள் தேசிய நல்லாசிரியர் விருதுபெற்று முதுகுளத்தூரின் சிறப்பை உயர்த்தியிருக்கிறார். ஹிம்மத்துல் இஸ்லாம் வாலிபர் சங்கம் திடல் ஷரீஅத் இஸ்லாம் சன்மார்க்க சங்கம் இளைஞர்களின் எழுச்சிக்கு அஸ்திவாரமாக திகழ்கிறது.

கடல் கடந்த நாடுகளில் வாழ்ந்தாலும் பிறந்த மண்ணின் பெயரோடு ஜமாஅத் அமைப்பை நிறுவி செயல்படுகின்ற விதம் தமிழகத்திற்கே முன் மாதிரியாக திகழ்கிறது.

வாழ்க! முதுகுளத்தூர் ஜமாஅத்

!! வெல்க பணிகள்

# வெறுப்பின் கோற்றம் வீழட்டும்



**முகவை கவிஞர் மானுடப்பிரியன்,எம்.ஏ.,**
முத்தமிழ் மன்றத் தலைவர்,
கம்பன் கழக பொதுச் செயலாளர்,
கலை இலக்கிய பெருமன்றத்தின் ஒருங்கிணைப்பாளர்,
சேது செம்மொழி இலக்கிய பேரவை பொதுச் செயலாளர்,
இராமநாதபுரம்.

இந்தியா என்றால் தாஜ்மஹால் நினைவுக்கு வரும். இந்தியா என்றால் மகாத்மா காந்தி பெயர் நினைவுக்கு வரும். ஒரு முறை வின்ஸ்டன் சர்ச்சில் இப்படிக் கூறினார், காந்தி விடுதலை போராட்டத்தில் கத்தியை தூக்கியிருந்தால் நாங்கள் துப்பாக்கியை தூக்கி இருப்போம். காந்தி துப்பாக்கியை தூக்கி இருந்தால் நாங்கள் இயந்திர துப்பாக்கியை தூக்கியிருப்போம். ஆனால் காந்தி அகிம்சை எனும் ஆயுதத்தை தூக்கினார். நாங்கள் காந்தியின் முன்னால் நிராயுதபானியாய் நின்றோம். காந்தியின் அகிம்சை கோட்பாடு பல காந்திகளை உருவாக்கியது. மார்ட்டின் லூதர் கிங் அமெரிக்காவின் காந்தியானர், நெல்சன் மண்டேலா தென் ஆப்பிரிக்கா காந்தியானார். செல்வநாயகம் பிள்ளை ஈழத்துக் காந்தியானார், கான்அப்துல் கபார் கான் எல்லை காந்தியானார், இப்படி அகிம்சையை தந்த மண்ணில் மத மோதல்களும், ஜாதி மோதல்களும் தலைப்புச் செய்தியாய் மாறி உள்ளது. கங்கை கரையில் ஒருவருக்கு காயம் என்றால் காவேரிக் கரைக்காரன் மருந்து கொண்டு ஓடினான் என்பது தான் தமிழர் வரலாறு. கடல் அலை கரை தட்டித் திரும்பும் அலையின் சப்தத்தைக் கூட ஒரு பெண்ணின் அழுகுரலாக பாவித்து கண்ணீர் விட்டவன் தமிழன்.

ஓடும் நதிகளுக்கு எல்லாம் கங்கா, யமுனை, சரஸ்வதி என்று பெண்ணின் பெயரைச் சூட்டி தாய்மையை போற்றிய மண் நம் இந்திய மண். பெண்ணாய் பிறந்திட மா தவம் செய்திடல் வேண்டும் என்று பைந்தமிழ் போற்றும் பாரதி கவிதை தேர் ஓட்டிய மண் நம் தமிழ் மண். 50000க்கு மேற்பட்ட பெண்கள், சிறுமிகள் காணாமல் போனதாக அதிர்ச்சியூட்டும் செய்தி பெண்கள் தினத்தை கொண்டாடும் இந்நாளில் நடந்ததாக குறிப்பு தெரிவிக்கிறது. தங்கள் குழந்தைகளை இழந்த தாய் தந்தையரின் மனநிலை எப்படி இருககும் என்பதை உங்கள் சிந்தனைக்கு விட்டுவிடுகிறேன். அந்த பெண்களின் நிலை என்ன? என்னானார்கள் என்பது இந்தியாவில் மர்மமாகவே உள்ளது. எந்த பத்திரிக்கையும் அதைப் பற்றி துப்பு துலக்கவில்லை, விட்டெறியும் காசுக்கு விலை போய் நிற்கிறது. செருப்பு கடித்து செத்தவனை தியாகி என்றும் மலேரியாவில் மாண்டவனை மாவீரன் என்றும் எழுதும் எழுத்து வியாபாரிகள் பெருகிவிட்டார்கள். செய்திதாள்களை 10 நிமிடத்திற்கு மேல் படிப்பதில்லை. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கலவரம், ஜாதி மோதல் இவை தான் தலைப்புச் செய்தி என்று வேதனையோடு அன்று மொராஜி தேசாய்

குறிப்பிட்டது புறந்தள்ளிவிட முடியாது. இன்று தேசம் எங்கே போகிறது என்பதை உங்கள் சிந்தனைக்கே விடுகிறேன்.

ஒரு முறை கண்ணதாசனிடம் இந்தியாவின் பலம் எங்கே இருக்கிறது என்று கேட்ட போது இந்தியாவின் பலம் ராணுவத்தில் இல்லை. பொருளாதாரத்தில் இல்லை, ஆன்மீகத்தில் இல்லை, இந்தியாவின் பலம் வேற்றுமையில் ஒற்றுமை என்ற தாரக மந்திரத்தில் இருக்கிறது என்று கூறினார். அந்த ஒற்றுமையை எவன் உடைக்கிறானோ? அவன் தான் தேசத்துரோகி என்றார். அற்ப அரசியல் ஆதாயத்திற்காக தேச ஒற்றுமையை உடைக்க கூடிய யாரையும் எந்த அரசியல் கட்சியையும் நாம் அனுமதிக்க கூடாது. இந்தியாவின் ஜாதிகளை கணக்கு எடுத்தேன் 4000 த்தை தாண்டியது. இங்கே ஒரு எரிமலை கனன்று கொண்டிருக்கிறது. அது எப்பொழுது வேண்டுமானாலும் வெடிக்கும் என்றான் ஆங்கில எழுத்தாளன் நிக்கோலஸ். இந்தியா என்பதே பல ஜாதிகள், மதங்கள், பல மொழிகள், பண்பாடுகள், கலாச்சாரம், உணவு பழக்க வழக்கங்கள், வழிபாட்டு முறைகள் போன்ற வேறுபாட்டை நாம் மறந்து இந்தியர்கள் என்ற ஒருமைப் பாட்டை உயிராக மதிக்கிறோம். அந்த ஒருமைப்பாட்டை நம் முன்னோர்கள் கட்டிக் காத்திருக்கிறார்கள். மதத்தால் பிரிந்து போன நாடு இரண்டு துண்டுகளாக உடைந்து கிடக்கிறது. நம் தேசத்தை மதத்தால் கட்டி எழுப்பாமல் மதச் சார்பு அற்ற நாடாக கட்டினார்கள். மதம் தனி மனிதனுடைய ஆன்மீகம் சார்ந்தது ஒருவன் கோவிலுக்கு போகலாம் சர்ச்சுக்கு போகலாம் பள்ளிவாசலுக்கு போகலாம் போகாமலும் இருக்கலாம். நாத்திகர்களாக இருக்கலாம் அது அவரவரின் தனிப்பட்ட விவகாரம். இது தான் நம் தேசத்தின் வளர்ச்சிக்கு உகந்தது. ஆகையால் தான் தமிழ்நாடு இந்தியாவிலே கல்வி, தொழில், வளர்ச்சி போன்றவற்றால் முதல் இடத்தை பெற்றிருக்கிறது.

சமூக பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்ற நாடுகள் அதிகமாக தமிழர்களை வேலைக்கு எடுப்பதற்கு காரணம் அவர்களுடைய அறிவு கூர்மை, படிப்பு, அற்ப்பணிப்பு, புரிந்துணர்வு இவை எல்லாம் தமிழர்களின் உயர்வுக்கு காரணம். வட மாநிலங்களில் பல நாடுகள் தொழில் தொடங்க அச்சப்படுவதற்கு காரணம் மதச் சண்டைகள் தாம் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று உலகமே என் வீடு, உயிர் எல்லாம் என் உறவு என்று சொன்னான் தமிழன் என்றால் அப்படிப்பட்ட மானுடப் நேயத்தை கனியன் பூங்குன்றன் பெற்றிருந்தான் என்பதே நமக்கு வியப்பாக இருக்கிறது. வெறுப்பின் தோற்றம் வீழட்டும் அன்பின் அறம் எழட்டும், யாரோடும் பகை கொள்ளன் என்ற பின் போர் ஒடுங்கும், புகழ் ஒடுங்காது என்ற கம்பன் வரிகளை உயர்த்திப் பிடிப்போம். நாம் இந்தியர்களாக வாழ்வது எவ்வளவு பெருமையோ அதை விட பெருமை நாம் மனிதர்களாக வாழ்வது. அந்த மனிதம் புனிதம் பெற மத வெறியை மாய்ப்போம். மானுடராய் மகரந்த மணம் பரப்புவோம். வெறுப்பின் கோற்றத்தை வீழ்த்துவோம். அன்பின் அறத்தை உயர்த்திப் பிடிப்போம்.

நன்றி ! வணக்கம் !

# தத்துவ ரமளான் !



முதுவைக் கவிஞர் மர்ஹூம் மௌலவி
உமர் ஜஃபர் மன்பயீ

எத்தனையோ மாதங்கள் வருடத்தில் வந்தாலும்,
இனிதான மாதமென ரமளானைத் தந்தவனே !
எத்தனையோ வேதங்கள் உலகத்தில் உதித்தாலும்,
எளிதான போதமென குர்ஆனை உதிர்த்தவனே !
எத்தனையோ வணக்கங்கள் அடியார்க்கு விதித்தாலும்,
ஏற்றமிகு நோன்பதனை 'முடியாக' வைத்தவனே !
உத்தமனே ! சத்தியனே ! உலகாளும் ரட்சகனே !
உரைக்கின்ற புகழெல்லாம் உனக்காகும் இறையவனே !

தத்துவத்தைத் தரணியிலே தரம்பிரித்துப் பார்க்கையிலே
தனித்திருந்து விழித்திருந்து பசித்திருந்து வாழுவதை
உத்தமர்கள் போற்றுகிறார் ! புகழுகிறார் ! பாடுகிறார் !!
உலகமெலாம் இக்கருத்தை ஏற்று நடை போடுகிறார் !
சத்தியத்தை சமத்துவத்தை சரித்திரத்தில் தேடுகிறார் !
சரிநிகராய்ச் சமுதாயம் படைப்பதற்கு நாடுகிறார் !
இத்தரையில் இவையாவும் ஏற்றமிகு ரமளானின்
எழில்நோன்பு நோற்பவரே எளிதாகக் காணுகிறார் !

உதிரத்தை வியர்வையென உடல்சிந்தி உழைத்திட்ட
உயர் 'ரிஸ்க்'கை இறைவனுக்காய் உண்ணாமல் பசித்திருப்பார் !
சதிபதியாய் சல்லாபம் சந்தோஷம் கொண்டாடும்
சகலமெலாம் இறைவனுக்காய் செய்யாமல் தனித்திருப்பார் !
விதியில்லா வணக்கமதும் இரவுபகல் தொழுவதற்கு
விருப்பமுடன் இறைவனுக்காய் உறங்காமல் விழித்திருப்பார் !
புதிதல்ல இதுவெல்லாம் பொன்னான முஃமினுக்கு !
புடம்போட்ட தங்கமென மின்னுகிற நோன்பாளிக்கு !

# தப்பித்துக் கொள்ளுங்கள்



காயாமொழி
எம். அபுல் கலாம் ஆஸாத்

அஸ்ஸலாமு அலைக்கும் (உங்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக)

**சிந்தியுங்கள் மனிதர்களே!**

இந்த உலகம் வீணுக்காக படைக்கப்படவில்லை. இறைவன் ஒவ்வொரு உயிரையும் படைத்து அதற்கு தனித்தனி திறமைகளையும் புகுத்தியுள்ளான். இறைவனின் சிறந்த படைப்புக்கு மனிதன் ஒரு சிறந்த அத்தாட்சியாகும். 'நமது உடலை நாமே படைத்துக்கொண்டோமா' என்ற சிந்தனை ஒவ்வொரு மனிதனுக்கும் வரும்போது மட்டும்தான் இதனை உணரமுடியும். சாதாரண ஒரு விந்தணுவில் உருவாக்கப்பட்ட மனிதனுக்கு கண், செவிப்புலன், இதயம், பேச்சாற்றல், எழுத்தாற்றல் என்று அனைத்து ஆற்றலையும் இறைவன் மூலம் பெற்றுவிட்டு நன்றி மறந்தவனான இறைவனுக்கே சவால்விடும் மனிதனாக மாறிவிடுகிறான்.

சில மனிதர்கள் இறைவன் கொடுத்த ஆற்றலை சுயநலனுக்காகவும், பிறருக்கு தீங்கு விளைவிப்பதற்காக மட்டுமே பயன்படுத்துகிறார்கள். நமது செயல், நமது சொல் இவை அனைத்தும் பதிவு செய்யப்பட்டு மரணத்துக்கு பின்னர் நமது செயல்குறிப்பு அறிவிக்கப்படும் நாளை எண்ணி பயந்து கொள்ளுங்கள் என்று இறைவன் குர்ஆனில் தெரிவித்து எச்சரித்து இருப்பதை மனிதர்கள் மறந்துவிடக்கூடாது.

"உங்களில் எவர் செயலால் மிகவும் அழகானவர் என்பதை சோதிப்பதற்காக அவன், மரணத்தையும், வாழ்வையும் படைத்தான்' (திருக்குர் ஆன் -67:2)

'மேலும் வானங்களையும், பூமியையும் இவ்விரண்டிற்கும் இடையே உள்ளவற்றையும் விளையாட்டிற்காக நாம் படைக்கவில்லை' (திருக்குர்ஆன் - 44:38)

"நீங்கள் செலுத்தும் இந்திரியத்தை கவனித்தீர்களா? அதனை சிசுவாக நீங்கள் படைக்கின்றீர்களா? அல்லது நாம் படைக்கின்றோமா? பயிரை கவனித்தீர்களா? அதனை நீங்கள் முளைப்பித்து பயிராக்குகின்றீர்களா? அல்லது நாம் பயிராக்குகிறோமா? நீங்கள் குடிக்கின்ற தண்ணீரை கவனித்தீர்களா? மேகத்தில் இருந்து அதனை நீங்கள் பொழிய வைக்கின்றீர்களா? அல்லது நாம் பொழிய வைக்கிறோமா-? நாம் விரும்பினால்

அதனை நீங்கள் குடிக்க முடியாத உப்பு நீராக ஆக்கி இருப்போம். நீங்கள் அடுப்பில் மூட்டுகின்ற நெருப்பையும் கவனித்தீர்களா? அதன் விறகை நீங்கள் உற்பத்தி செய்கின்றீர்களா? அல்லது நாம் உற்பத்தி செய்கிறோமா? இது சந்தேகமற்ற உண்மையாகும்'. (திருக்குர்ஆன்-56:58 முதல் 72)

## தொழில்நுட்பங்களை வழங்கியவன் யார்?

பறவைகள், மிருகங்கள், மற்ற உயிரினங்களுக்கு சூழ்ச்சி செய்ய தெரியாது. ஆனால் மனிதன் மட்டும் மற்றவர்களுக்கு சூழ்ச்சி செய்து சிரமங்களை கொடுப்பவனாக திகழ்கிறான். கருணையுள்ள இறைவன் அனைத்து தொழில் நுட்பங்களையும் வாரி வழங்கி மனித வாழ்க்கையை எளிமைப்படுத்தியுள்ளான். போக்குவரத்துக்கு கால்நடைகளை பயன்படுத்தி வந்தநிலை மாறி, சைக்கிள், மோட்டார் கார், பஸ், ரெயில், விமானம், ராக்கெட் என்று பல்வேறு வசதிகள் பெருகிவிட்டன. இது போக்குவரத்து மட்டுமல்ல, ஒவ்வொருபிரிவிலும் இறைவன் தொழில்நுட்ப அறிவை மனிதனுக்கு வழங்கி, தகவல்தொடர்பு, மருத்துவம் என்று அனைத்து பிரிவுகளிலும் மனிதனுக்கு வசதிவாய்ப்புகளை அளித்து வாழ்க்கை முறையை சிரமப்படாமல் அமைத்துக் கொடுத்துள்ள இறைவனுக்கு நாம் நன்றி செலுத்த மறந்து விடக்கூடாது.

## அவசரமான உலகம்

இந்த உலகம் தற்போது அவசரமான உலகமாகிவிட்டது. செல்போன் மனிதசமூகத்துக்கு பயன்படத்தொடங்கியது முதல் சாதாரண இயக்கமாக இருக்கத்தொடங்கிய மனித வாழ்க்கை முறை மிக அவசரமான இயக்கத்துக்கு தள்ளப்பட்டுவிட்டது. அனைத்து தொழில்நுட்பங்களும் அவசியம்தான். ஆனால் அவற்றில் நமக்கு கிடைக்கும் நல்ல விஷயங்களை மட்டுமே பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தீய,கெட்ட விஷயங்களை நாம் பயன்படுத்தத் தொடங்கினால் நமக்கு இடையூறுதான் உருவாகும். இதனை உணர்ந்து கொள்ள வேண்டும். இறைவன் எல்லாவிதமான தொழில்நுட்பங்களையும் மனிதனுக்கு வழங்கினாலும், அவனுடைய கட்டளைப்படியேதான் இந்த உலகம் இயங்குகிறது என்பதை மறந்துவிடக்கூடாது. உதாரணமாக நமது கைகளில் உள்ள செல்போனை பயன்படுத்தி ஒரு சில வினாடிகளில் நமது உறவினர்கள், நண்பர்களிடம் பேசிவிட முடியும். ஆனால் நமது உறவினர்களிடமும், நண்பர்களிடமும் நாம் பேசி பல நாட்கள், பல மாதங்கள் ஆகி இருக்கும். 'அய்யோ உன்னிடம் பேசி ரொம்பநாட்களாகிவிட்டதே!' என்று நாம் எப்போதாவது அங்கலாய்ப்போம். கையருகே போன் இருந்தும் பெற்றோரிடமும், உறவினர்களிடமும் பேச முடியாத அளவுக்கு வாழ்க்கை சூழ்நிலை அவசர கதியாகிவிட்டது.

## ஒழுக்கம் அவசியம்

என்னதான் வாழ்க்கை முறை அவசர கதியாகிவிட்டாலும் ஒழுக்கம் இல்லாவிட்டால் வாழ்க்கையில் நிம்மதி இருக்காது. நாம் எவ்வளவு சம்பாதித்தாலும் அது பலன் அளிக்காது. ஓட்டை விழுந்த பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பி வைத்தால் ஒரு சில நிமிடங்களில் ஒழுகி காணாமல்

போய்விடுவதை போல, ஒழுக்கம் இல்லாவிட்டால் வாழ்க்கையை அசுத்தத்தில்தான் தொலைத்துவிட்டு தேடுவோம்.

மனைவிக்கு தெரியாமல் கணவன் தவறு செய்வது. கணவன்தான் தவறு செய்கிறானே என்று அறிந்து கணவனுக்கு தெரியாமல் மனைவி தவறு செய்வது. இருவரும் தவறு செய்து குடும்பத்தில் குழப்பம் நிலவும்போது, 'தாயும், தந்தையும் தவறுசெய்கிறார்களே. அவர்கள் யோக்கியமா?' என்று அறிந்து மகன், மகள் தவறு செய்வது என்று தவறுக்குமேல், தவறு செய்து குடும்பமே தவறில் மூழ்கி நிம்மதியில்லாமல் அலையும் கூட்டத்தை இப்போது நாம் பார்க்கத்தானே செய்கிறோம்.

**எங்கே நிம்மதி?**

எத்தனைகோடி பணம் இருந்தாலும் நிம்மதியை வாங்க முடியுமா? நிம்மதி இழப்புக்கு நாமே காரணமாக இருந்துவிட்டு இறைவன் மேல் பழிபோட எண்ணலாமா?. இறைவள் எந்த உயிருக்கும் தீங்கோ, கஷ்டமோ கொடுக்க விரும்புவதில்லை. மனிதன் தன்னுடைய கைகளால் செய்யும் தீமைகள் காரணமாகவே கஷ்டத்தை விலைகொடுத்து வாங்கிக்கொள்கிறான் என்று குர்ஆனில் இறைவன் குறிப்பிட்டுள்ளான்.

**போதையின் பக்கம் நெருங்காதீர்**

போதையின் பக்கம் நெருங்கி விடாதீர்கள் என்று இறைவன் எச்சரித்துள்ளான். மது அனைத்து தீமைகளுக்கும் காரணமாகிறது.

'மதுவும் சூதாட்டத்திலும் பெரும் பாவங்கள் இருக்கின்றன. பயன் இருப்பதை போல் தோன்றும். இதில் பயனைவிட பாவம் பெரிது. (திருக்குர்ஆன்-2:219)

இன்று உலகம் முழுவதும் சர்க்கரை நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது .உலக நாடுகளில் இந்தியாவில்தான் மிக அதிக அளவுக்கு சர்க்கரை நோயாளிகளின் எண்ணிக்கை உள்ளது. சர்க்கரை நோய் என்பது கரையான் போல் நமது உடலை அரித்துவிடக்கூடியது. அனைத்து நோய்களுக்கும் ஒரு வழிப்பாதையாக மாற்றி உடல்நலனை கெடுத்து வருகிறது. சர்க்கரைநோய் உள்ளவர்கள் உள்பட யாரும் மதுவின் பக்கம் நெருங்கி விடாதீர்கள். மது உடல்நலனை கெடுத்து உழைக்க முடியாதவனாக மாற்றி விடுகிறது. மூளையை கெடுத்து, அவனுக்கு நல்ல சிந்தனையை தடைசெய்துவிடுகிறது. அதற்குமாறாக தலைவலியைத்தான் உருவாக்குகிறது.

மதுஅருந்திவிட்டு ஒருவன் செய்யும் செயல்கள், அவனுக்கு சாதகமாக அமைவதாக தோன்றும். ஆனால் அவனுக்கு பாதகமாக அமைந்து அவனுடைய நிம்மதியை கெடுத்து பிரச்சினையை உருவாக்கிவிடும். இன்று நடைபெறும் குற்றங்களுக்கு மது முக்கிய காரணமாக அமைந்துவிடுகிறது.கொலை, கொள்ளை, திருட்டு, வழிப்பறி, பாலியல் கொடுமைகள், குடும்ப தகராறுகள், குடும்ப வன்முறைகள், விபத்துசாவுகள், மதுவினால் ஏற்படும் தற்கொலைகள் அதன்காரணமாக இளம்வயதில் விதவையாகி, குழந்தைகள் நிர்கதியாகி தவிக்கும் நிலை என்று மதுவினால் எண்ணிலடங்கா தீமைகள்

உருவாகிவிட்டது. எனவே மதுவின் பக்கம் யாரும் நெருங்கிவிட வேண்டாம்.

பாலியல் கொடுமைகள்

தற்போது உலகம் முழுவதும் பாலியல் குற்றங்கள், பாலியல் கொடுமைகள் பெருகிவிட்டது. இதற்கு ஆண், பெண் இருபாலாரையும் குற்றம்சாட்ட வேண்டும். ஆடை குறைப்பு என்பது ஒரு பேஷனாகிவிட்டது. எவ்வளவுக்கு எவ்வளவு ஆடைகுறைப்போ அந்த அளவுக்கு நாம் அழகாக இருக்கிறோம் என்று இளம்பெண்கள் கருதி ஆடை குறைப்புடன் கண்கூசச்செய்யும் வகையில் சாலைகளில் நடந்துசெல்லும் நிலை அதிகரித்துள்ளது.

பாலியல் கொடுமைகளுக்கு செல்போன், இணையதளம் ஆகியவையும் காரணமாகிவிட்டது. செல்போனில் ஆபாச படங்களை பார்க்கும் நிலைமை அதிகரித்துவிட்டதால் மாணவ-மாணவிகளின் கல்வி கற்கும் திறன், இளைஞர்களின் உழைக்கும் திறன், சிந்தனை திறன் அனைத்தும் சுருங்கி வருகிறது. இணையதளம் மூலம் ஆண், பெண்களுடன் உறவாடுவது, இதன் மூலம் பாலியல் தொடர்புகளை வளர்த்துக்கொள்வது ஆகிய செயல்கள் அதிகரித்துள்ளது. சமூக வலைத்தளங்கள் தற்போது நட்பை வளர்த்துக்கொள்ள உதவினாலும், இதுவும் தவறுக்கு காரணமாக அமைந்துவிடுகிறது. இணையதளத்தில் போலி முகங்களை வைத்து உறவாடுவது, அதன்பின்னர் தவறு இழைப்பது போன்ற பிரச்சினைகளும் அதிகரித்து வருகிறது.

எனவே இம்மையில் அதிகம், அதிகம் நன்மை செய்து, தீமையை புறக்கணித்து இறைவனின் கருணையை பெற்று, நரகத்தில் இருந்து தப்பித்துக் கொள்வோம்

### ராஃபிஉ பின் கதீஜ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம், ‘‘அல்லாஹ்வின் தூதரே! எங்களிடம் (கூரான) கத்திகள் இல்லையே” என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், ‘‘இரத்தத்தைச் சிந்தக்கூடியது எதுவானாலும் அல்லாஹ்வின் பெயர் கூறப்பட்டு (அதனால் அறுக்கப்பட்டு)விட்டால் அதை நீங்கள் உண்ணலாம். நகத்தாலும் பல்லாலும் (அறுக்கப்பட்டதைத்) தவிர. நகங்களோ அபிசீனியர்களின் கத்திகளாகும். பல்லோ எலும்பாகும்.

(நபி (ஸல்) அவர்கள் பங்கிட்டுக் கொடுத்திருந்த) ஒட்டகம் ஒன்று வெருண்டோடியது. அதை ஒருவர் (அம்பெய்து) தடுத்து நிறுத்தினார். அப்போது நபி (ஸல்) அவர்கள் வன விலங்குகளுக்கிடையே கட்டுக்கடங் காதவை சில இருப்பதைப் போன்றே, இந்த ஒட்டகங்களுக்கு இடையேயும் கட்டுக்கடங்காதவை சில உண்டு. ஆகவே, அவற்றில் உங்களை மீறிச் செல்பவற்றை இவ்வாறே (தடுத்து நிறுத்தச்) செய்யுங்கள்” என்று சொன்னார்கள்.26 (அத்தியாயம்: 72)


Read and Reflect
KVIS
KANNADI VAPPA
INTERNATIONAL SCHOOL
Where Every Child's Potential
Takes Flight
2026
2027
ADMISSIONS
OPEN NOW!
Open For KG- Grade 9 & 11
E-Mail:
admin.kvis@rmindseducation.org.in
Instagram: kvis_2023
Facebook: Kannadi Vappa
WhatsApp: 80720 36762, 99408 68446



# ரமலான்

அபிவிருத்திஸ்வரம்
**தா.நியாஸ் அஹமது**
துபாய்..!



அல்-குர்ஆன் இறங்கிய அற்புத மாதம்

ஆன்மீக சுடர்வீசும் ரமலான் மாதம்

உடலுக்கு ஓய்வுதரும் மகத்துவ மாதம்

நோய்களை குணப்படுத்தும் ரமலான் மாதம்

இச்சையை மறக்கச்செய்யும் இனிய மாதம்

இறைவனே கூலிதரும் ரமலான் மாதம்

தராவிஹ் தொழுகையினை தந்த மாதம்

ஜக்காத்தை வழங்கிடும் ரமலான் மாதம்

பசியை செல்வந்தருக்கு உணர்த்தும் மாதம்

கண்ணியம் பொருந்திய ரமலான்  மாதம்

விஞ்ஞானம் வியக்கும் பல உண்மைகள்

நோன்பு வைப்பதால் ஏற்படும் நன்மைகள்..!



# உலகக் கல்வியும் மார்க்கக் கல்வியும்

முனைவர் பேராசிரியர்
**வ. கமால் நஸீர்**
தலைவர், கணிதத்துறை,
புதுக்கல்லூரி, சென்னை - 600 014.



**அறிமுகம்**

மனிதன் பிறந்த தருணத்திலிருந்து இறக்கும் வரை அவனை வழிநடத்துவது கல்வியே. கல்வி என்பது வெறும் புத்தக அறிவு அல்ல; அது மனிதனை முழுமையான மனிதனாக மாற்றும் ஒளி. உலக வாழ்க்கையை முன்னேற்றும் அறிவை அளிப்பது உலகக் கல்வி; மனிதனின் உள்ளத்தை செம்மைப்படுத்தி இறையறிவு, ஒழுக்கம் மற்றும் ஆன்மீகப் பொறுப்புணர்வு வளர்ப்பது மார்க்கக் கல்வி. இவ்விரண்டும் மனித வாழ்வில் இரு கண்களைப் போன்றவை. ஒன்று இல்லாமல் மற்றொன்று முழுமையடையாது. மனித சமூகத்தின் வளர்ச்சியில் "கல்வி" மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. கல்வி என்பது வெறும் தொழில் திறனை அளிக்கும் கருவி அல்ல; அது மனிதனின் சிந்தனை, செயல், நெறி, ஆன்மீகம் ஆகிய அனைத்தையும் வடிவமைக்கும் அடித்தளம்.

**கல்வி பொதுவாக இரண்டு பரிமாணங்களைக் கொண்டுள்ளது:**

- **உலகக் கல்வி (Secular / Worldly Education)**
- **மார்க்கக் கல்வி (Religious / Moral-Spiritual Education)**

இவ்விரண்டும் மனித வாழ்க்கையின் இரு தளங்களாக செயல்படுகின்றன. ஒன்று வெளிப்புற முன்னேற்றத்தைக் குறிக்கிறது; மற்றொன்று உள்நிலை மேம்பாட்டைக் குறிக்கிறது.

**மகாத்மா காந்தி கூறுகிறார்:**

**"By education, I mean an all-round drawing out of the best in child and man — Body, Mind Heart and Soul."**

("கல்வி என்பது உடல், மனம், இதயம் மற்றும் ஆன்மா ஆகியவற்றின் சிறந்த பண்புகளை வெளிக்கொணரும் செயலாகும்.")

இந்த மேற்கோள் கல்வியின் முழுமை தன்மையை வலியுறுத்துகிறது.

**உலகக் கல்வி – அறிவியல் மற்றும் சமூக முன்னேற்றத்தின் கருவி**

உலகக் கல்வி அறிவியல், தொழில்நுட்பம், மருத்துவம், பொருளாதாரம், சட்டம், நிர்வாகம் போன்ற துறைகளில் அறிவை வழங்குகிறது.

**உலகக் கல்வியின் நோக்கங்கள்**

1. அறிவியல் சிந்தனை வளர்த்தல்

2. ஆராய்ச்சி மனப்பாங்கு உருவாக்கல்
3. தொழில் வாய்ப்பு உருவாக்கல்
4. சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம்

**டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் கூறுகிறார்:**

**“Education is the most powerful weapon which you can use to change the world.”**

உலகக் கல்வி ஒரு நாட்டின் பொருளாதார வலிமையை நிர்ணயிக்கிறது. தொழில்நுட்ப முன்னேற்றம், மருத்துவ கண்டுபிடிப்புகள், தகவல் தொடர்பு வளர்ச்சி - **all are fruits of worldly education.**

**உலகக் கல்வியின் வரம்புகள்**

ஆனால் உலகக் கல்வி மட்டும் மனிதனை முழுமையாக்காது. அறிவு உயர்ந்தாலும் ஒழுக்கம் இல்லையெனில் அது சமூகத்திற்கே ஆபத்தாக மாறலாம்.

**ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கூறுகிறார்:**

**“Science without religion is lame, religion without science is blind.”**

இந்த கூற்று அறிவும் மதிப்பும் இணைந்திருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

**மார்க்கக் கல்வி – ஒழுக்கமும் ஆன்மீகமும்**

மார்க்கக் கல்வி மனிதனின் உள்ளத்தை நெறிப்படுத்துகிறது. இது இறைநம்பிக்கை, கருணை, பொறுப்பு, நேர்மை, தன்னடக்கம் போன்ற பண்புகளை வளர்க்கிறது.

**மார்க்கக் கல்வியின் அடிப்படை**

மத நூல்கள் அனைத்தும் நெறி வாழ்க்கையை வலியுறுத்துகின்றன.

**திருக்குறள் கூறுகிறது:**

**“அறத்தொடு நடுவுவேண்டும் என்பார் தமக்கு**
**அறத்தொடு நடுவே உலகு.”** (குறள் 113)

இது ஒழுக்கம் உலக வாழ்வின் மையம் என்பதை காட்டுகிறது.

**குர்ஆனில் கூறப்படுகிறது:**

“நிச்சயமாக அல்லாஹ் நீதி, நன்மை, உறவினர்க்கு உதவி ஆகியவற்றை ஆணையிடுகிறான்.” (16:90)

இது சமூக நியாயம் மற்றும் நெறியைக் கற்பிக்கிறது.

**மார்க்கக் கல்வியின் சமூகப் பயன்**

- ஊழல் குறையும்
- அநீதி குறையும்
- மனித உறவுகள் வலுப்படும்
- மன அமைதி ஏற்படும்

**ஸ்வாமி விவேகானந்தர் கூறுகிறார்:**

**“Education is the manifestation of the perfection already in man.”**

மார்க்கக் கல்வி அந்த “உள்ளூறை நற்பண்புகளை” வெளிக்கொணருகிறது.

**உலகக் கல்வி vs மார்க்கக் கல்வி – மோதலா? இணைப்பா?**

சிலர் உலகக் கல்வி மற்றும் மார்க்கக் கல்வி ஒன்றுக்கொன்று மாறானவை என்று கருதுகின்றனர். ஆனால் உண்மையில் அவை ஒருவரை ஒருவர் பூர்த்தி செய்பவையாகும்.

**உலகக் கல்வி மட்டும் இருந்தால்**

- பொருளாதார வளர்ச்சி இருக்கும்
- ஆனால் ஒழுக்கச் சீர்கேடு அதிகரிக்கலாம்
- அறிவு அதிகாரமாக மாறலாம்

**மார்க்கக் கல்வி மட்டும் இருந்தால்**

- ஒழுக்கம் இருக்கும்
- ஆனால் தொழில்நுட்ப முன்னேற்றம் தடைப்படலாம்
- சமூக போட்டியில் பின்தங்க வாய்ப்பு உள்ளது

எனவே சமநிலை அவசியம்.

**ரபீந்திரநாத் தாகூர் கூறுகிறார்:**

“The highest education is that which does not merely give us information but makes our life in harmony with all existence.”

இது உலக அறிவும் ஆன்மீக சமநிலையும் ஒன்றிணைந்த கல்வியைக் குறிக்கிறது.

**ஒருங்கிணைந்த கல்வி முறை – எதிர்காலத் தேவை**

**இன்றைய உலகில்:**

- தொழில்நுட்ப முன்னேற்றம் அதிகம், ஆனால் மன அழுத்தமும் அதிகம்
- பொருளாதார வளர்ச்சி உள்ளது, ஆனால் மதிப்புக் குறைபாடு அதிகரித்துள்ளது

இதற்குத் தீர்வு: **முழுமையான கல்வி முறை (Holistic Education Model)**

**இதில் அடங்க வேண்டியவை:**

1. அறிவியல் & தொழில்நுட்ப பயிற்சி
2. ஒழுக்கக் கல்வி
3. சமூகப் பொறுப்பு பயிற்சி
4. ஆன்மீக விழிப்புணர்வு

**இரண்டும் இணையும் போது**

ஒரு பறவைக்கு இரண்டு இறக்கைகள் தேவைப்படுவது போல, மனித வாழ்வுக்கும் உலகக் கல்வியும் மார்க்கக் கல்வியும் தேவை.

- உலகக் கல்வி திறமையை அளிக்கிறது; மார்க்கக் கல்வி திசையை அளிக்கிறது.
- உலகக் கல்வி வெற்றியை அளிக்கிறது; மார்க்கக் கல்வி அர்த்தத்தை அளிக்கிறது.
- உலகக் கல்வி மனிதனை உயர்த்துகிறது; மார்க்கக் கல்வி மனிதனை நிலைநிறுத்துகிறது.
- உலகக் கல்வி வலிமை அளிக்கிறது; மார்க்கக் கல்வி மதிப்பு அளிக்கிறது.

ஒரு மருத்துவர் உலகக் கல்வியால் நோயை குணப்படுத்தலாம்; மார்க்கக் கல்வியால் கருணையுடன் சேவை செய்யலாம்.
ஒரு நீதிபதி உலகக் கல்வியால் சட்டத்தை அறியலாம்; மார்க்கக் கல்வியால் நியாயமாக தீர்ப்பளிக்கலாம்.
ஒரு ஆசிரியர் உலகக் கல்வியால் பாடம் கற்பிக்கலாம்; மார்க்கக் கல்வியால் மாணவரின் உள்ளத்தை உருவாக்கலாம்.

**முடிவுரை**

கல்வி என்பது வேலை பெறுவதற்கான சான்றிதழ் அல்ல; அது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கும் ஒளி. உலகக் கல்வி இல்லாமல் முன்னேற்றம் இல்லை. மார்க்கக் கல்வி இல்லாமல் மனிதநேயம் இல்லை. அறிவும் ஒழுக்கமும் இணைந்தால்தான் உண்மையான முன்னேற்றம் சாத்தியம்.

திருக்குறள் கூறும் இறுதி உண்மை:

**“அறத்தினூஉங்கு ஆக்கம் இல்லை; அதனை**
**மறத்தலின் ஊங்கில்லை கேடு.”** (குறள் 31)

அறத்தை விட உயர்ந்த செல்வம் இல்லை.

எனவே, உலகக் கல்வியும் மார்க்கக் கல்வியும் ஒன்றிணைந்தாலே மனிதம் முழுமையடையும்; சமுதாயம் சமநிலையடையும்; நாடு நெறிப்படுத்தப்பட்ட முன்னேற்றத்தை அடையும்.

**இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:**

நபி (ஸல்) அவர்கள் (ரமளான் பற்றிக் கூறுகையில்) “மாதம் என்பது இவ்வளவு, இவ்வளவு, இவ்வளவுதான்” என்று கூறினார்கள். மூன்றாவது தடவையில் தமது பெருவிரலை மடக்கிக் கொண்டார்கள்.



# ரமலான் வந்தால் கொண்டாட்டம்



**முனைவர் சே.முனியசாமி**
உதவிப்பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி
பசுமலை, மதுரை.

1990களில் முதுகுளத்தூர் டி.இ.எல்.சி பள்ளியில் படித்த காலம் அது. எங்கள் வீட்டிற்கும் அந்தப் பள்ளிக்கும் 5 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். தினந்தோறும் பள்ளிக்கு நடந்து செல்வதுதான் வழக்கமாக இருந்தது. காலையில் 5 கிலோமீட்டர் மாலையில் 5 கிலோமீட்டர். ஒரு நாளைக்கு பத்து கிலோமீட்டர் நடைபயணம். வீட்டிலிருந்து வயல்வெளி பனை மரங்கள், திடல் ஊரணி இவற்றைக் கடந்து தினமும் செல்வேன்.

திடல் ஊரணியைத் தாண்டியவுடன் நாடார் தெரு, திடல் பள்ளிவாசல் தெரு அப்படியே சென்று ஹையர் நிஷா மருத்துவமனை வழியாகப் பேருந்து நிலையம் அடைந்து பள்ளியேச் சென்றடைவேன்.

எப்போதுமே காலையில் பள்ளிக்குச் செல்லும் பொழுதுப் பள்ளிக்கு நேரமாகிவிடும் என்பதால் எதையும் கண்டுகொள்ளாமல் விரைந்து நடந்து செல்வதுண்டு. ஆனால் மாலை பள்ளியைவிட்டு இல்லம் வரும்போது மனதில் ஆனந்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். சில நேரங்களில் திடல் ஊரணியில் நன்றாக ஒரு குளியல் போட்டுச் செல்வதுண்டு. அன்றைய காலத்தில் திடல் ஊரணி கடல்போலக் காட்சியளிக்கும்.

அதேபோல் நாடார் தெருவில் மனோகரன் மிச்சர் கடைக்குத் தேவையான பொருள்களைத் தயாரிக்கும் குடோன் ஒன்று உள்ளது. அங்கே ஒரு ரூபாய்க்கு தூள் பக்கோடா கிடைக்கும். வீட்டில் கொடுத்த காசைப் பத்திரமாக வைத்திருந்து மாலை வீடு திரும்பும்போது பக்கோடா, சீவல், சேகு முதலிய தூள்களைத் தின்று கொண்டே இல்லம் செல்வதுண்டு. சில நேரங்களில் அந்தப் பக்கோடா தூளை வாங்கிக் கொண்டு வீட்டில் வந்தவுடன் கஞ்சிக்கு சைடிஸ் ஆகச் சாப்பிடுவதுண்டு. அன்றைக்கு பக்கோடா தூளாக இருந்தாலும் அவ்வளவு சுவையாக இருக்கும்.

திடல் பள்ளிவாசல் தெருவில் அமைந்துள்ள பெருநாழி திரு.ரஜாக் பாய் (லாரிக்காரர்) மற்றும் திருமதி பாத்திமா கனி ஆகிய இருவரின்

இல்லத்தில் என்னுடைய அம்மா பணிபுரிந்து வந்தார்கள். தினந்தோறும் பணி முடித்துவிட்டு மாலை இல்லம் வருகையில் மீதமுள்ள உணவுப் பொருட்களைக் கொண்டு வருவார்கள். அதைப் பகிர்ந்து உண்ணுவதுண்டு.

பக்ரீத், ரமலான் பண்டிகைகள் வந்தாலே கூடுதல் மகிழ்ச்சிதான். புதிய ஆடைகள், பிரியாணி, இனிப்புப் பலகாரங்கள் எல்லாம் எங்கள் வீடு வந்துச் சேரும். என்னுடைய தந்தை திரு.சேது அவர்கள் முதுகுளத்தூர் பேரூராட்சியில் பணியாற்றியவர். முதுகுளத்தூத்தூரில் உள்ள ஒவ்வொரு தெருவிற்கும் குடிநீர் வினியோகம் செய்வதால் அத்தனைப் பேருக்கும் பரிச்சயமானவர். இன்னும் சொல்லப்போனால் எனது தந்தையைத் தெரியாதவர் யாரும் இருக்க மாட்டார்கள். குறிப்பாகச் சிறுபிள்ளைகள் சாப்பிடாமல் அடம் பிடித்தாலோ, சேட்டை செய்தாலோ அவர்களைப் பயமுறுத்துவதற்கு அவருடையப் பெயரைப் பயன்படுத்துவார்கள். அந்த அளவிற்கு இஸ்லாமியர்களின் உள்ளங்களில் இன்றளவும் பேசப்பட்டு வருகிறார்.

குறிப்பாக, நோன்பு காலங்களில் மாலை வேளையில் திடல் பள்ளிவாசலில் நோன்புக் கஞ்சி ஊற்றுவார்கள். அன்றையக் காலகட்டங்களில் பள்ளி எப்போது முடியும் என்ற சிந்தனைப் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கும். ஏனென்றால் மாலை பள்ளி முடிந்ததும் திடல் பள்ளிவாசலில் சில மணி நேரங்கள் குடி பெயர்ந்தே இருப்போம். நுழைவாயிலில் இரும்பு கேட்டுக்குப் பின்பாக நீண்ட நெடிய வரிசையில் கையில் சாப்பாடுத் தட்டுடன் காத்திருப்போம். நோன்புக் கஞ்சியின் சுவை தனியோரு சுவைதான். நோன்புக் கஞ்சியில் இரண்டு வகை உண்டு. ஒன்று இனிப்புக் கஞ்சி. மற்றொன்று உப்பு கஞ்சி. உப்புக் கஞ்சி உடலுக்கு மிகவும் ஆரோக்கியமானது. ஆனால் அன்றையச் சூழலில் உப்புக் கஞ்சி என்றால் முகம் சுளிக்கும். அதே வேளையில் இனிப்புக் கஞ்சி என்றால் ஆனந்த பரவசம் பொங்கும். பள்ளிவாசலுக்குள்ளே மிகப்பெரிய அண்டாவில் ஆவி பறக்கச் சூடானக் கஞ்சியை ஊற்றுவார்கள். பலர் பெரிய பெரிய தூக்குவாளிகளில் வாங்கிச் செல்வதுண்டு. நான் உள்ளிட்ட என்னுடைய நண்பர்கள் பள்ளி விட்டு வருவதால் புத்தகப் பையில் வைத்திருக்கும் சாப்பாடுத் தட்டை எடுத்துக் கழுவி சூடான நோன்பு கஞ்சியைச் சுவைத்து விட்டுதான் வீடு செல்வோம். நோன்புக் கஞ்சியை முற்றிலுமாகச் சாப்பிட்டபின் தட்டைக்கழுவத் தேவையில்லை. அந்தளவிற்குச் சுத்தமாகச் சுத்தம் காலி செய்வோம்.

வீடு சென்றால் அங்கே இன்ப அதிர்ச்சி காத்திருக்கும். அம்மா பணிபுரிந்த இல்லங்களிலிருந்து பெரிய தூக்கு வாளிகளில் தினமும் இனிப்புக் கஞ்சியும், உப்பு கஞ்சியும் மாறி மாறி வந்துவிடும். அதையும் சுவைப்பதுண்டு.

ரம்ஜான் அன்று காலை உணவாக வடை, போண்டா, இட்லி, பூரியெனப் பலவகை உணவுகள் வீடு வந்து சேரும். மதியமானால் மட்டன் பிரியாணியோடு சிக்கன் கிரேவியோடு எல்லா வகை உணவுகளும் அம்மா கொண்டு வந்துச் சேர்ப்பார்கள். எங்களுக்கு அன்றுதான் உண்மையான தீபாவளி. அது மட்டுமின்றி இனிப்பு பொருள்களும் இடம்பெறும். சக்காத்து காசு வசூல் செய்து விட்டு வரும் அப்பா அம்மா இவர்களுக்குக் கணக்குப்பிள்ளை நான் தான். இப்படியாக ரம்ஜான் என்றாலே மறக்க முடியாத நினைவுகள் இன்றும் இழையோடி இருக்கின்றன.

இஸ்லாமிய உறவுகளுக்கு
அனைவருக்கும் ரம்ஜான் நல்வாழ்த்துக்கள்

## ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மரணிக்கும் வரை, எந்தவொரு தொழுகையையும் அதன் கடைசி நேரத்தில் இரண்டு முறை தொழுததில்லை.

**திர்மிதீ இமாம் கூறுகிறார்:**

இந்த ஹதீஸ் 'கரீப்' எனும் தரத்தில் அமைந்ததாகும். மேலும் இதன் அறிவிப்பாளர் தொடர் 'முத்தஸில்-சங்கிலித் தொடராக' இல்லை.

**ஷாபிஈ இமாம் கூறுகிறார்:**

தொழுகையை அதன் ஆரம்ப நேரத்தில் தொழுவதே மிகவும் சிறந்ததாகும். இறுதி நேரத்தை விட ஆரம்ப நேரம் சிறந்தது என்பதற்கு ஆதாரமாக நபி (ஸல்) அவர்கள், அபூபக்ர் (ரலி), உமர் (ரலி) ஆகியோரின் நடைமுறை உள்ளது. அவர்கள் மிகச் சிறந்ததைத் தவிர வேறெதையும் தேர்ந்தெடுக்க மாட்டார்கள்; சிறப்பானதை விட்டுவிடவும் மாட்டார்கள். அவர்கள் ஆரம்ப நேரத்திலேயே தொழுது வந்தனர்.

இந்த தகவலை அபுல்வலீத் அல்மக்கீ அவர்கள் ஷாபிஈ இமாமிடமிருந்து எங்களுக்கு அறிவித்தார்.

# ரமலான் வாழ்த்துக்கள்

சிலேடை **சித்தர் சேது சுப்பிரமணியம்**
கோவை



அமைதி மார்க்கமாம் இஸ்லாத்தின்
அறிவுரைப்படி வாழ்கின்ற என்
அருமைமிகு நண்பர்களுக்கு
அன்பான ரமலான் வாழ்த்துக்கள்.

அல்லாவின் நெறிமுறைகளை
அண்ணல் நபி தொகுத்தளித்த
அருமை வேதம் குர் - ஆனை
அனுதினமும் ஓதுவோர்க்கு
அன்பான ரமலான் வாழ்த்துக்கள்.

அஞ்சு வேளை தொழுகை செய்து
அந்தி வேளை நோண்பு முடித்து
அல்லல்படும் வறியவர்க்கு
அருபசியைத் தீர்த்து வைக்க
அறம் செய்து புனிதர் வழியை
அன்றாடம் கடைப்பிடித்து
அன்புவழி வாழ்ந்து வரும்
அமைதி மார்க்க நண்பர்களுக்கு
அன்பான ரமலான் வாழ்த்துக்கள்.

இஸ்லாமியர்க்கு
முதல் கை தொழுகை
இரண்டாம் கை ஈகை
மூன்றாம் கை நம்பிக்கை
மூன்றுமிருந்தால் சிறக்கும் அனைவருக்கும் வாழ்க்கை.
புனித ரமலான் வாழ்த்துக்கள்.

# இனிய திசைகள்

INIYA THISAIGAL

சமுதாய மேம்பாட்டு மாத இதழ்

## அன்புடன் விழைகிறோம்!

பேரன்புடையீர்,
இறையருள் அனைவர்மீதும் என்றென்றும் நிறைவதாக....

வல்லோன் ஏகன் இறையவன் அளப்பரும் கருணையால் 24 ஆண்டுகளாக மாதந்தோறும் இடைவிடாது தொடர்ந்து பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் 'இனிய திசைகள்' மேம்பாட்டு மாத இதழ் வெளிவந்துகொண்டிருக்கிறது. (அல்ஹம்து லில்லாஹ்)

இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிதழ்களுக்குப் பல வகைகளில் முன்னோடி இதழாகத் திகழும் 'இனிய திசைகள்' சமுதாயத்தினர் அனைவரும் விரும்பிப் படிக்கும் வண்ணம் அரசியல், சமுதாயம், மார்க்கம், ஆன்மிகம், இலக்கியம், மருத்துவம், மகளிர் பக்கம், உணவே மருந்து முதலான பல கட்டுரைகளையும், கவிதைகளையும் தாங்கி இலங்குகிறது. இலாப நோக்கற்றுச் சமுதாய முன்னேற்றம் என்ற ஒற்றை நோக்கில் அர்ப்பணிப்பு உணர்வோடு மாதந் தவறாது மக்கள் கரங்களிலும் சமூக ஊடக வலைத்தளங்களிலும் அறிவொளி பரப்பும் 'இனிய திசைகள்' இதழை மேன்மேலும் ஒளிரச் செய்வது ஒவ்வொருவரின் பொறுப்பாகும்.

25 மாதங்களுக்கு ரூ.500/-, 50 மாதங்களுக்கு ரூ.1000/- என்ற வகையில் சந்தா செலுத்தியும், இதழின் வளர்ச்சிக்கு நன்கொடைகள் தந்தும், தங்களது நிறுவன விளம்பரங்களை மனமுவந்து அனுப்பியும் உதவ அன்புடன் விழைகிறோம்.

**வங்கி விவரம்**

KARUR VYSYA BANK,
KODAMBAKKAM BRANCH
CHENNAI-600 024.

IFSC KVBL 0001165

A/c Name: INIYA THISAIGAL

A/c No.: 1155 1350 0000 7603

**G Pay மூலம் அனுப்ப:**
**94441 65156**

தொடர்பு முகவரி:
**இனிய திசைகள்**
27/53, நரசிம்மபுரம், மயிலாப்பூர்,
சென்னை - 600 004.

# இப்னு பதூதா: வரலாற்றின் மாபெரும் பயணி!



- நாகூர் ரிஸ்வான்

உலக வரலாற்றின் மாபெரும் பயணி இப்னு பதூதா பற்றி நாம் அவசியம் அறிந்திருக்க வேண்டும். அவரது பயணங்கள் நம்மை இன்றும் வியப்பில் ஆழ்த்துகின்றன. வாகனங்கள், விமானங்கள், G P S அல்லது நவீன தொழில்நுட்பங்கள் எதுவும் இல்லாத 14ஆம் நூற்றாண்டில், அவர் மொத்தம் 1,20,000 கிலோமீட்டர் தூரம் பயணித்தார். இது பூமியை மூன்று முறை சுற்றும் அளவுக்கு அதிகம்!

அபு அப்துல்லாஹ் முஹம்மது இப்னு பதூதா 1304இல் மொராக்கோவின் டேஞ்சியர் நகரில் பிறந்தவர். 21 வயதில் ஹஜ் செய்யும் நோக்கத்துடன் வீட்டை விட்டுக் கிளம்பிய அவர், அந்தப் பயணம் 16 மாதங்களில் முடிந்து வீடு திரும்பியிருக்க வேண்டும். ஆனால் அந்தப் பயணம் முடிய அவருக்கு 29 ஆண்டுகள் ஆகின. ஆம், 1354இல் தான் அவர் மொராக்கோவுக்குத் திரும்பினார்.

அவரது ஆர்வமும் அறிவுத் தேடலும் அவரை எகிப்து, சிரியா, ஈராக், பெர்ஷியா, துருக்கி, ரஷ்யா, இந்தியா, சீனா, மாலத்தீவு, இலங்கை, சுமத்ரா, மாலி (மேற்கு ஆப்பிரிக்கா) என 40க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு அழைத்துச் சென்றது. அவர் மக்காவுக்குச் சென்று நான்கு முறை ஹஜ் செய்தார். பல நாடுகளின் ஆட்சியாளர்கள் அவரை மரியாதையுடன் வரவேற்று, பரிசுகள் வழங்கினர். அவரது அறிவுக்காக அவரை உயர் பதவிகளில் நியமித்தனர்.

1333இல் இந்தியாவைச் சென்றடைந்த இப்னு பதூதாவுக்கு டெல்லி சுல்தான் முஹம்மது பின் துக்ளக் அரசவையில் பெரும் மரியாதை கிடைத்தது. சுல்தான் அவரை தலைமை காஜியாக ஆக்கினார். எனினும், சுல்தானின் சிக்கலான ஆட்சியால் தனக்கு ஆபத்து என்று உணர்ந்த இப்னு பதூதா, சீனாவுக்குத் தன்னை தூதராக அனுப்பும்படி மன்னரிடம் கோரினார். இதைத் தொடர்ந்து 1341இல் அவர் சீனப் பேரரசருக்கு பரிசுப் பொருட்களுடன் புறப்பட்டார்.

கப்பல் பயணத்தின்போது கடும் புயலில் கப்பல் உடைந்தது. அரசருக்குக் கொடுக்க வேண்டிய பரிசுகள் அனைத்தும் கடலில் மூழ்கின. பயந்த இப்னு பதூதா, மாலத்தீவுக்குச் சென்று ஒளிந்தார். அங்கு அவர் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார். மாலத்தீவு மன்னர் குடும்பத்துடன் தொடர்பு கொண்டு திருமணமும் செய்துகொண்டார். அங்கு சுமார் ஒன்றரை முதல் இரண்டு ஆண்டுகள் தங்கினார்.

பின்னர் தனது பயணத்தைத் தொடர்ந்து இலங்கை, சுமத்ரா வழியாக சீனாவைச் சென்றடைந்தார். அங்கும் அரசவை மரியாதை பெற்றார். இறுதியில் மக்கா வழியாக மொராக்கோ திரும்பி, தன் குடும்பத்தைச் சந்தித்தார்.

இப்னு பதூதா தனது 75,000 மைல் பயணம், சந்தித்த மனிதர்கள், நாடுகளின் கலாசாரம், அரசியல், பழக்கவழக்கங்கள் அனைத்தையும் தன் நினைவுக் குறிப்புகளாக ரிஹ்லா என்ற புத்தகத்தில் பதிவு செய்திருக்கிறார். இந்த நூல் இன்றும் உலகின் மிகச் சிறந்த பயண இலக்கியங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. மார்க்கோ போலோவை விட அதிக தூரம் பயணித்த இப்னு பதூதா, இஸ்லாமிய வரலாற்றின் மாபெரும் பயணியாகப் போற்றப்படுகிறார்.

அவர் வாழ்வின் வெறும் 21 வயதில் தொடங்கிய ஒரு ஹஜ் பயணம், உலக வரலாற்றையே மாற்றிய அற்புதப் பயணமாக கருதப்படுகிறது. இன்றும் அவரது பயணப் பாதைகள் உலகெங்கும் ஆய்வு செய்யப்படுகின்றன. அறிவுத் தேடலும் துணிவும் இருந்தால் நம்மை எந்தத் தடையும் தடுக்காது என்பதை இப்னு பதூதாவின் பெரும் பயணம் நமக்கு உணர்த்துகிறது.






# சீறவும் இசையருவியும்



**Dr A Nazeema**
MA.MPhil.,MBA.,PhD.,
Assistant Professor
B.S. Abdur Rahman Crescent
Institute of Science and Technology

இசுலாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில், சீறாப் புராணம் ஒரு மணிமகுடமாகத் திகழ்கிறது. இறைத்தூதர் முஹம்மது நபியின் (ஸல்) வாழ்க்கை வரலாற்றை, தமிழ் மொழியின் செம்மரபுகளைப் பின்பற்றி, முத்தமிழின் சுவையோடு எழுதப்பட்ட பெருங்காப்பியம் இது. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தலைசிறந்த தமிழ்ப்புலவர் உமறுப் புலவர் அவர்கள், வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளை ஏற்று இக்காப்பியத்தை எழுதத் தொடங்கினார். 'சீறத்' என்ற அரபுச் சொல்லின் தமிழ்த் திரிபாகிய 'சீறா' (சீறத்துன்னபி - நபியின் வரலாறு) என்ற சொல்லின் அடிப்படையில், இது 'சீறாவைக் கூறும் புராணம்' எனப் பெயர்பெற்றது. வடமொழிச் சொற்களின் கலப்பின்றி, உயர்ந்த தமிழ்ச் சொற்களைக் கொண்டு இயற்றப்பட்டிருப்பதால், தமிழ் இலக்கிய வரிசையில் இதற்கெனத் தனிச்சிறப்பான இடம் உண்டு எனத் தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

### சீறாவின் காலமும் செழுமையும்

உமறுப் புலவர் அவர்கள் கி.பி. 1642 முதல் 1703 வரை வாழ்ந்ததாகக் கருதப்படுகிறது. இவரது தந்தையார் சேகு முகமது அலியார் என்னும் சேகு முதலியார். இவரது ஆசான் கடிகை முத்துப் புலவர். மார்க்க மேதை செய்கு சதக்கத்துல்லா அப்பாவிடம் காப்பியம் இயற்றக் கருப்பொருள் பெற்றார். வள்ளல் சீதக்காதியின் (செய்கு அப்துல் காதிர் மரைக்காயர்) வேண்டுகோளுக்காக உமறுப் புலவர் சீறாப் புராணத்தை எழுதத் தொடங்கினார். எனினும், நூல் நிறைவடைவதற்கு முன்பே சீதக்காதி மறைந்ததால், பின்பு அபுல் காசிம் என்ற வள்ளலின் உதவியால் இந்நூல் நிறைவுற்றது. சீறாப் புராணம் கி.பி. 1703-ஆம் ஆண்டளவில் இயற்றப்பட்டு, தமிழ் இலக்கியத்திற்குப் பெரும் பங்களிப்புச் செய்தது. உமறுப் புலவர், சீறாப் புராணத்தோடு மட்டுமின்றி, முதுமொழிமாலை என்ற எண்பது பாக்களால் ஆன நூலையும் இயற்றியுள்ளார்.

சீறாப் புராணம், தமிழ் இலக்கியத்தின் தொன்மையான பெருங்காப்பிய மரபைப் பின்பற்றி, தொல்காப்பியம், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற நூல்களின் யாப்பு மற்றும் கதை அமைப்பைப் போலச் சிறப்புறப் படைக்கப்பட்டுள்ளது. இசுலா மியக் காவியமாக இருப்பினும், இது தமிழ் இலக்கணத்தின்படி அமைந்து, தமிழ் காப்பியச் செழுமைக்கு ஒரு புதிய சமயச் சார்பற்ற கருப்பொருளை அளித்தது. இதன்மூலம் தமிழ்மொழி, மேலும் பரந்துபட்ட கருப்பொருளைக் கையாளும் திறனைப் பெற்றது. இக்காப்பியம்,

நபிகளாரின் வரலாற்றை விலாதத்துக் காண்டம் (பிறப்பு), நுபுவ்வத்துக் காண்டம் (தீர்க்க தரிசனம் அல்லது நபிப் பட்டம் பெறுதல்), ஹிஜ்ரத்துக் காண்டம் (இடம் பெயர்தல் - மக்காவை விட்டு மதீனா செல்லுதல்) என்று மூன்று காண்டங்களாகப் பிரித்து பாடல்களைப் புனைந்துள்ளது.

## சீறாவின் தனித்தன்மைகள்

உமறுப் புலவரின் தமிழ்ப் புலமையையும், தமிழ்நாட்டுப் பற்றையும் விளக்கும் வகையில், உவமைகளும் உருவகங்களும் அழகுற சீறாப் புராணத்தில் அமைந்துள்ளன.

பாடல்கள் இனிய ஓசையுடன் தமிழினிமையை நெஞ்சில் அள்ளுகின்றன. இதற்கு உதாரணமே காப்பியத்தின் முதல் பாடலாகும்.

திருவினும் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினும் தெளிவதாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக்கு அணுவாய்
மதித்திடாப் பேரொளி அனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்தபல் உயிரின்
கருவினும் கருவாய்ப் பெருந்தவம் புரிந்த
கருத்தனைப் பொருந்துதல் கருத்தே-

புலவரின் உயர்வையும் பாடலின் உயர்வையும் நம்மை உணரவைக்கும் தொடக்கப்பாடலே இக்காப்பியத்தின் எளிய நடைக்கும் ஏற்றமிகு கருத்துக்கும் எடுத்துக்காட்டாகும்.

குறிஞ்சி நிலைக்காட்சியை தன் ஓவியக்கவியில் வரையும் உமறுப்புலவர் குறிஞ்சி நிலத்தில் தினைப் பயிர்கள் உள்ளன. அவற்றின் இலைகள் நீண்டவை; அவற்றின் பளுவான கதிர்கள் காரணமாக அந்த இலைகள் வளைந்தன. குறத்தியர் மணம் தரும் பூக்களைத் தலை முடியில் சூடியுள்ளனர். தினைக் கதிர்களை உண்ணச் சிவந்த வாய் உடைய கிளிகள் வந்திருந்தன. கிளிகளை விரட்டக் கவண் கல்லைக் குறத்தியர் எறிந்தனர்; பாடினர். கிளிகளும் 'கீச்' என ஒலி எழுப்பின. இந்த இனிய ஓசைகள் பாடலாகக் கேட்டன. காட்டுப் பசுக்கள் அப்பாடலைக் கேட்டு உறங்கின. இத்தகைய வளமான மலைச்சாரலைப் போர் வீரர்கள் அடைந்தனர் என்னும் பாடலைப் பாப்போம்:

நீட்டுஇலை மிடறு சாய்த்த
நெடுங்கதிர் தினையின் சார்பில்
கோட்டலர் கமழும் கூந்தல்
குறத்தியர் கவண்கல் ஏந்திப்
பாட்டிசை மிழற்றும் செவ்வாய்ப்
பசுங்கிளி கடியும் ஓதை
கேட்டுஇனிது ஆமா துஞ்சும்
கிளைவரைச் சாரல் போந்தார்

(பதுறுப் படலம்),

இப்பாடலில் பன்னிரெண்டாம் நூற்றாண்டு எழுதப்பட்டதாக அறியப்படும் கம்பராமாயணத்தில் இடம் பெற்றுள்ள 'தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்க.. ' என்னும் பால காண்டம் நாட்டுப்படலத்தில் இடம்பெற்ற பாடலையொத்த கற்பனை நயமும் கவிவளமும் ஒளிர்வதைக் காண்கிறோம்.

**சீறாப் புராணத்தின் பரவலாக்கம்**

திருவினும் திருவாயுள்ள மிகச்சிறந்த இலக்கியப் படைப்பு அதன் பெருஞ்சிறப்பை அடைவதென்பது உலகம் யாவையும் அதனைப் பரவலாக்குவதும் உலகெலாம் உணர்ந்து அதைப் போற்றுவதென்பதேயாகும். அத்தகைய பரவலாக்கத்திற்கு உற்றதுணையாக உழைத்தோர் குறித்து உற்றுநோக்குவோம்.

- பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த புலவர் நாயகம் ஷெய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை அவர்கள், நான்கு காப்பியங்கள் உட்பட, மொத்தம் 1

  4,347 பாடல்களைத் தமிழுக்கு வழங்கிய பெருமைக்குரியவர். 1842-ஆம் ஆண்டில் (ஹிஜ்ரி 1258), புலவர் நாயகம் ஷெய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை அவர்கள்,

  சீறாப் புராணத்தின் பிழையில்லாப் பதிப்பாகப் பதிப்பித்து, தொன்மையான நூலைப் பேணிக் காக்கும் அரிய பணியைச் செய்தார்.
- சீறாவுக்கு முதன்முதலில் தெளிவான உரை எழுதி, பொதுமக்களிடம் அதைக் கொண்டு சென்ற முக்கியமான ஆளுமைகளில் ஒருவர் சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர்.
- சீறாப் புராணத்தை இலக்கிய, வரலாற்றுப் பார்வையில் முழுமையாக ஆய்வு செய்து, கல்வித்துறையில் அதன் மதிப்பை நிலைநாட்ட உதவிய முக்கியப் படைப்பு "சீறாப் புராண ஆய்வு" என்னும் நூலாகும், இதை எழுதியவர் எஸ். ஏ. எம். உசேன்.
- சீறாவுக்கு ஆய்வுரை எழுதிய மற்றொருவர் பேராசிரியர் ந. சஞ்சீவி. இசுலாமியர் அல்லாத தமிழறிஞர்கள் சீறாப் புராணத்தின் இலக்கியச் செழுமையைப் போற்றவும், ஆய்வு செய்யவும் இவரது பணிகள் வழிவகுத்தன.
- பல்கலைக்கழகங்களில் சீறாப் புராணத்தின் ஆய்வுகளை ஊக்கப்படுத்தியவர் டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி/
- 1973-ஆம் ஆண்டில் செந்தமிழ்க் கவிமணி யூசுப் என்னும் நாச்சிகுளத்தார் சீறாப் புராணத்தைச் சந்தி பிரித்துத் தனி நூலாக மலேசியாவில் வெளியிட்டார்.
- 1974-ஆம் ஆண்டில், இளையான்குடி டாக்டர் ஜாஹிர் உசேன் கல்லூரியில் அன்றைய முதல்வர் 'சீறாவுக்குச் சீரிய விழா' என்ற இரண்டு நாள் விழாவை நடத்தினார். இந்த விழாவையொட்டி நாச்சிகுளத்தாரின் சீறா நூல்கள் பல அறிஞர்களுக்கு வழங்கப்பட்டு, வாசிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் பாடநூலாக இடம்பெற்றன. இது தமிழக மக்களிடையே சீறாப் புராணம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

- இதனைத் தொடர்ந்து, தமிழறிஞர் மணவை முஸ்தபா அவர்களின் ஒருங்கிணைப்பில் மூத்த தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் சென்னையில் சீறாப் புராணச் சொற்பொழிவு நிகழ்த்தினார். மக்களின் மனங்களில் பசுமையாகத் தங்கிய அச்சொற்பொழிவு மணவை முஸ்தபா அவர்களால் நூலாக வெளியிடப்பட்டது.

- பேராசிரியர் க.நா. சுப்ரமணியம், டாக்டர் மு. வரதராசனார் (மு.வ.) போன்ற தமிழறிஞர்கள், சீறாப் புராணத்தின் இலக்கிய நயத்தையும், கவித்திறனையும் வியந்து பாராட்டி, தமிழ்க் காப்பிய மரபில் அதன் தனித்துவமான இடத்தைப் போற்றினர். பேராசிரியர் அப்துல் கபூர், கவிஞர் ஜின்னா ஷரிபுத்தீன் போன்ற இசுலாமியப் புலவர்களும் காப்பிய மரபைப் போற்றியுள்ளனர்.

- அக்காலங்களில் கவி கா.மு.செரீப் அவர்களின் சீறாப் புராண உரைக்கேட்க உலகின் பலநாடுகளில் பெருங்கூட்டம் திரண்டு வந்தது. கவியின் பெரும்பணிகளை காலம் மகிழ்வோடு பதிவு செய்தது.

- கவி கா.மு.ஷெரீப் சீறாப் புராண உரை நிகழ்த்த தமிழகத்தின் எந்த ஊருக்குச்

  சென்றாலும், குமரி மாவட்டம் காஞ்சாம்புரம் என்னும் சிற்றூரில் பிறந்து பின்னர் சென்னையில் குடியேறிய இசையோடு பாடுவதில் வல்லவரான 'இசையருவி' குமரி அபூபக்கர் அவர்கள் அங்கு கவிகா.மு.ஷெரீப் உரை நிகழ்த்துமுன் தன் கணீர் குரலால்

  கர்நாடக இசையில் பலவித ராகங்களில் பாட, அப்பாடல் வரிகளின் பொருளை கவிஞர் அவர்கள் விளக்கி உரையாற்றுவார். அபூபக்கரின் தங்கு தடையின்றி பிரவாகமாக

  ஊற்றெடுத்துவரும் தமிழ் இன்னிசை பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. தமிழ்நாடு மட்டுமன்றி சிங்கப்பூர், மலேசியா, துபாய் போன்ற கடல் கடந்த நாடுகளிலும், பிறமாநிலங்களிலும் பள்ளிவாசல்களில் நடக்கும் மீலாது விழாக்களிலும், சீறாப்புராணச் சொற்பொழிவுகளிலும் குமரி அபூபக்கரின் இசையருவி பவனி வந்தது.

- இசையருவி' குமரி அபூபக்கர் உலகின் பல நாடுகளுக்குச் சென்று சீறாப் புராணத்தின் பாடல்களைப் தேனினும் இனிய குரல் வளத்துடன் சந்தங்கள் செவிப்புகும் ஈர்ப்புடன் பாடிய நாடுகள் ஒன்றல்ல இரண்டல்ல, எண்ணற்றவை. . தன் வாழ்க்கையின் பெரும்பகுதியில் தமிழ்த்தவ உழைப்புடன் காசிம்புலவரின் திருபுகழோடு அருணகிரிநாதரின் திருபுகழையும் ஒருசேர எண்ணற்ற மேடைகளில் மனனமாக, விரைவாகப் பாடுவதும், ஞானப் புகழ்ச்சி, குணங்குடி மஸ்தான் அப்பா நாயகத்தின் பாடல்கள், தக்கலை பீர்முகமது அப்பாப் பாடல்கள், சூஃபிப் பாடல்களின் தத்துவங்கள் என அனைத்து தொன்மைக் காவியங்களைத் கர்நாடக இசை மற்றும் பாடல்களுக்கேற்ற எளிய நாட்டுப்புற இசையுடன் பாடுவதோடு சீறாவின் பாடல்களை மேடைதோறும் பாடியவர் குமரி அபூபக்கர்.

- நபிகள் நாயகத்தின் பிறப்பு, இளமை, கதீஜா நாயகியாரின் திருமணம், ஃபாத்திமா பிறப்பு போன்ற நிகழ்வுகளின் பாடல்களை புத்துணர்வு

ததும்பும் துள்ளும் மழைத்துளிகள் போல அவற்றுக்குரிய ராகம் அமைத்துப் பாடினார் குமரியார்.

நபிகள் நாயகம் நபிப் பட்டம் பெறுதல், திருக்குர்ஆன் வேத உரைகள் வெளிப்படுத்தப்படுதல், மக்களிடம் அறிவுரை கூறுதல் என்னும் தீர்க்க தரிசனமிகு நுபுவ்வத்துக் காண்டப் பாடல்களை மற்றும் இடம் பெயர்தலினூடே மக்காக் குறைசிகளின் கொடுமைகள், மக்காவை விட்டு மதீனாவிற்குச் சென்று இசுலாமிய அறநெறியை வளர்த்த வரலாறு உள்ளிட்ட பயணப் பதிவுகளை, ஹிஜ்ரத்துக் காண்டப் பாடல்களை குமரி அபூபக்கர் கருத்தூன்றிப் பாடும்போது

விருத்தப்பாக்களில் ஒரு வருத்தப்பா இயைந்தோடும், இறையருள் பாதுகாவலில் மகிழ்வலைகள் அசைந்தாடும்.

- இசுலாமியக் கருத்துகளையும், தமிழ் மொழியையும் இணைக்கும் பாலமாக விளங்கும் சீறாப் புராணப் பாடல்கள் அமைந்ததால் அப்பாலத்தைத் இசைப்பாலமாக இனிமையாக்கியவர் இசையருவி குமரி அபூபக்கர். இத்தகு சீரான பணிகளைச் சீறாவிற்காகப் புரிந்த குமரி அபூபக்கர் 1937ஆம் ஆண்டு குமரி மாவட்டத்துக் காஞ்சாம்புரத்தில் மலுக்முஹம்மது - ஆயிஷா பீவி அம்மையார் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். பள்ளிக்கல்வியைத் தொடரவியலாத சூழலில்

கேள்வி ஞானத்தால் இசைப் பாடகராகப் பரிணமித்தார். அன்னைத் தமிழின் மீது அளப்பரிய அன்புப்பற்று (மஹப்பத்) கொண்டிருந்தார். குரல்வளத்தோடு (ஸவ்த்),

பாடலின் பொருளைச் சிதைக்காத நேர்த்தியான உச்சரிப்புடன் இவர் பாடல்களை இசைக்கும்போது, கேட்போர் அதில் லயித்து, வேறு கவனமின்றி முழுமையாய்க் கட்டுண்டு நின்றனர். சீறாப்புராணம், இராஜநாயகம், திருப்புகழ், ஆயிரமசலா, குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள், ஞானப்புகழ்ச்சி, சொக்க நீதி, சந்தத் திருப்புகழ், சௌந்தர்ய முத்திரை, நபிமார்கள் வரலாறு, முஹயித்தீன் மாலை, யூசுப்லைகா காவியம், வேத புராணம், சாரணபாஸ்கரனார் பாடல்கள், செய்யிதத்துப் படைப்போர், கவிமூஸாவின் பாடல்கள் போன்ற தொன்மைமிக்க இசுலாமியத் தமிழ்க் காவியங்களையும், தனிப்பாடல்களையும் கர்நாடக இசை, எளிய நாட்டுப்புறப் பாடல்கள் என இசை வடிவங்கள் பலவற்றிலும் பாடி, சமநிலை கண்ட சாதுர்யம் மிக்கவர்.

- தமிழ், மலையாளம் என இரு மொழிகளிலும் இசுலாமியப் பாடல்களை பாடிப் புகழ் பெற்ற ஒரே பாடகர் குமரி அபூபக்ககர். கேள்வி ஞானத்தின் துணையால் இசைப்பாடகராகப் பரிணமித்தார். தமிழ், மலையாளம், அரபி எனும் முத்தமிழ்களில் வல்லவரான மாமா எம்.பி.வி. ஆசானின் ஆசியும், ஏக இறைவனின் கிருபையும்

(ரஹ்மத்) இவருக்குத் துணையாயின. இளம் பிராயத்திலேயே மேடைகள் கண்டார்; 12 வயதிலேயே மௌலுதுப் பாடல்களை உரத்தகுரலில் ஓதி, தம் திறனை மெருகேற்றிக் கொண்டார். ஒருமுறை பூவார் நூஹூ ஒலியுல்லா தர்காவில் இவர் பாட, அங்கிருந்த கர்நாடக இசைக் கலைஞர்களான முஹம்மதலி, சாலி சகோதரர்கள் இவரின் கணீரென்ற வெண்கலக் குரலைக் கேட்டு உளமார வாழ்த்தினர்.

- சென்னைக்கு வருகை தந்த இவரை, சங்கு மார்க் கைலி நிறுவன உரிமையாளர் ஜனாப் அப்துல் காதர் அவர்கள், இசுலாமியப் பாடகராக வானொலி, தொலைக்காட்சியில் அரங்கேற உதவினார். 1976ஆம் ஆண்டு புலவர் காசிம் புகழ்பாடும் மாநாட்டில் கிடைத்த வாய்ப்பு, பெருங்கவி கா.மு. ஷெரீப்

  அவர்களின் நட்பை இவருக்கு ஈட்டித் தந்தது. அன்றுமுதல் இருபெரும் கலைஞர்களும் இணைந்து இசைத் தமிழ்த் தொண்டாற்றினர். . முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அகில இந்திய வானொலியில் இசுலாமிய இலக்கியக் கீர்த்தனைகளைப் பாடினார். குமரி அபூபக்கர்.

- இளம்வயதிலேயே தமிழ், மலையாளம் இரு மொழித்திறனோடு வளர்ந்ததால் தமிழைப் போன்றே மலையாள மொழியிலும் சீறாப்புராணப் பாடல்கள், சூஃபிப் பாடல்களைப் பாடியதோடு மட்டுமல்லாமல் சென்னை அகில இந்திய வானொலிபோன்று கேரளாவில் பல்வேறு தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பாடிய பெருமை பெற்றவர். கண்ணே றஹ்மானே', 'குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள்', 'தன்னைப் பிழிந்த தவம்', தக்கலை பீர்முகமது அப்பாப் பாடல்கள்; ஆகியவை பாடிப் பதிந்த குறுந்தகடுகளை பல சான்றோர்களின் துணையோடு வெளியிட்டுள்ளார். யூடியூப் புலனத்தில் இவரது பாடல்கள் உலகம் முழுவதும் பலரால் மீண்டும் மீண்டும் கேட்கப்படுகிறது.'

- இவரது இசைச் சேவைக்குப் பல பட்டங்கள் வழங்கப்பட்டன. கொங்குத் தமிழ்ப் பேரவை இவருக்கு இரண்டு முறை 'தமிழ் மாமணி' பட்டம் அளித்தது. எனினும், சீறாப்புராணச் சொற்பொழிவு நடக்கும் போதெல்லாம் இறைவனின் அருளால் மழை பொழிவது தொடர் நிகழ்வாய் இருந்ததால், மக்கள் அன்பளித்த 'இசையருவி' என்ற பட்டத்தையே இவர் 'பெரும்பேறு' எனக்கருதினார். சென்னை கம்பன் கழக விருதையும் பெற்றவர் இவர். முன்னாள் நீதியரசர் மு.மு. இஸ்மாயில், முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி, நெடுஞ்செழியன், ஜி.கே.மூப்பனார், ம.பொ.சி, குன்றக்குடி அடிகளார், மௌலவி அப்துல் வஹாப் சாஹிபு, பேராயர் எஸ்ரா சற்குணம், அப்துல் சமத், அப்துல் லத்தீப், காதர் மொய்தீன், கவிக்கோ, இதாயத்துல்லா எனப் பல்துறை வித்தகர்கள் இவரது இசைத் திறனை நேரில் புகழ்ந்துள்ளனர். குமரி அபூபக்கர் அவர்களின் இசையுலகச் சாதனைகள் குறித்து ஐந்து முனைவர்பட்ட ஆய்வேடுகள் வெளியிடப்பட்டுள்ளன.

- இசைப்புயல்' ஏ ஆர் ரெஹ்மான் அறக்கட்டளை நிர்வாகத்தின் கீழ் அவரது மகள் கதீஜாவால் சீறாப்புராணம் பாடல்களைப் பதிவேற்றம் செய்யும் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டுவந்த இசையருவி' குமரி அபூபக்கர் அப்பணி நிறைவுறும் முன்னே இவ்வுலக வாழ்வைத் துறந்தார். குமரி அபூபக்கரின் மறைந்தவுடன் அகில இந்திய சென்னை வானொலி நிலையமும், கேரள ஊடகங்களும ஒலி , ஒளிப் பதிவுகளை ஐந்து நிமிடங்கள் வெளியிட்டு நினைவஞ்சலி செலுத்தின.

- இசையருவி குமரி அபூபக்கரின் குரல் நிரந்தரமாக காற்றின் சுவாசமாக ஒலித்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில் இவரின் நேர்த்தியான,

தெளிவான தமிழ் உச்சரிப்பினை இன்றும் தொடரும் இவரின் வாரிசுதான் தூர்தர்ஷன் மற்றும் ராஜ் தொலைக்காட்சிகளில் பிரபலமான செய்தி வாசிப்பாளராகப் பணிபுரிந்த, கல்லூரிப் பேராசிரியர் முனைவர் அ. நசீமா அவர்கள். தமிழ் மீதான தந்தையின் பெருங்காதலும், அவர் அளித்த தன்னிகரற்ற உச்சரிப்புப் பயிற்சியாலுமே மகள் நசீமா செய்தி வாசிப்பிலும், இலக்கிய மேடைத் தொகுப்புரைகளிலும் தமிழ் உச்சரிப்பிற்காகவே பல விருதுகள் பெற்றுப் பெருமை சேர்த்தார். என்னும்போது 'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை என்நோற்றான் கொல்எனும் சொல் (குறள் 70)" என்னும் குறளின் மொழிதலுக்கேற்ப தன்னைத் சிறந்த தமிழ் உச்சரிப்பாளராக்கிய தந்தைக்கு மகள் செய்யும் கைம்மாறாக தன்னைத் தமிழில் புலமை மிக்கவராய் ஆக்கிக்கொண்டதோடு இவ்விலக்கிய நூலின் இணையாசிரியராகப் பரிமளித்துக்கொடுள்ளார் பேராசிரியர் முனைவர் அ நசீமா.

சீறாப் புராணம் வெறும் ஒரு சமய இலக்கியம் மட்டுமல்ல; அது தமிழ்ப் புலமைக்கும், யாப்பு நுணுக்கத்திற்கும், காப்பிய இலக்கணத்திற்கும் ஒரு சிறந்த சான்றாகும். உமறுப் புலவரின் கவித்திறனும், அவர் கையாண்ட அழகிய தமிழும், நபிகள் நாயகத்தின் சீரிய வரலாற்றை உலகுக்கு உணர்த்திய விதமும் என்றென்றும் போற்றத்தக்கவை. மலேசியா தொடங்கி தமிழகத்தின் பல்கலைக்கழங்கள் வரை சீறாப் புராணம் பரவலாக்கப்பட்டதன் வரலாறு, இந்த மகத்தான காப்பியம் மொழி, மதம் கடந்து பெற்ற பெரும் வரவேற்பையும், தமிழ்ச் சமூகத்தில் அதன் ஆழமான தாக்கத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. இத்தகு சிறப்புகள் மிகு காப்பியத்தை உலகம் அறிந்து உவந்தேற்கும் வண்ணம் உழைத்த, இசுலாமியத் தமிழ் இலக்கியத்தின் இனிய சாரலை இசை வெள்ளமாய்ப் பாமரரின் செவிக்குத் தேனாய்ப் பாய்ச்சி, தமிழின் மாண்பை உயர்த்திய இசையருவி குமரி அபூபக்கர் உள்ளிட்ட பெருமக்களைப் போற்றுவது அனைவரின் மகிழ்ச்சிமிகு கடமையாகும்.

**அப்துர் ரஹ்மான் பின் அபீபக்ர் (ரலி) அவர்கள் கூறியதாவது:**

நபி (ஸல்) அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்களை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்று ‘தன்யீம்’ எனுமிடத்தில் உம்ராவுக் காக இஹ்ராம் கட்டச் செய்ய வேண்டும் என எனக்குக் கட்டளையிட்டார்கள்.

(இதன் அறிவிப்பாளர்களில் ஒருவ ரான) சுஃப்யான் பின் உயைனா (ரஹ்) அவர்கள் ஒரு முறை, “அம்ர் பின் தீனார் (ரஹ்) அவர்களிடம் இதைக் கேட்டுள் ளேன்; எத்தனையோ முறை கேட்டுள் ளேன்” என்று கூறினார்கள்.

# நன்மைகள் நாடியே நாளும் நடப்பது நல்லது !



கவிஞர் முனைவர்
கொடிநகரான் **இ. எம். ஜிப்ரில்**
தோஹா - கத்தார்.

சங்கடமின்றி சாந்தமாய் வாழ்வு
நடத்தவது நல்லது

கவலையின்றி நிதம் களிப்பாய்
வாழ்வது நல்லது

இயன்றது பிறருக்கும் வழங்கி
வாழ்வது நல்லது

சண்டைச் சச்சரவும் இல்லாது
வாழ்வது நல்லது

சாதி சமயமதில் சமத்துவமாக
வாழ்வது நல்லது

நல்லவருடன் நட்புக் கொண்டு
வாழ்வது நல்லது

தீயவரைக் கண்டால் விலகியே
இருப்பது நல்லது

வாய்மை தவராதும் உலகினில்
வாழ்வது நல்லது

எச்சூழலிலும் நேர்மை தவறாது
வாழ்வது நல்லது

வறுமையில் வாடாது வாழ்க்கை
அமைவது நல்லது

ஏழ்மையில் தைரியமாய் வாழ்வு
நடத்துவது நல்லது

உண்மையாய் உழைத்து உயர்வு
காண்பது நல்லது

நேர்வழியில் முன்னேறி ஏற்றம்
காண்பது நல்லது

தாயின் கருவறைக் காலமதை
நினைப்பது நல்லது

உடன்பிறப்பிடம் நல்ல உறவுடன்
வாழ்வது நல்லது

உற்றா உறவுடன் நட்புடனே
நடந்திடுவது நல்லது

வாழ்வில் துரோகம் செய்யாது
வாழ்வது நல்லது

பசித்தப்பின் உணவு உண்பது
உடலுக்கது நல்லது

இல்லற துணையின் அன்பில்
வாழ்வது நல்லது

பெற்றோரை துன்பம் இல்லாது
பார்ப்பது நல்லது

மக்களை காக்கும் ஆட்சியாளர்
அமைவது நல்லது

கலப்படமற்ற பொருள் விற்பது
என்றுமே நல்லது

இளமையில் இறையை துதித்து
வணங்கிட நல்லது

கற்பனைக் கவிதை காலத்தில்
வடிப்பது நல்லது

உண்ணா நோன்பை உவப்புடன்
நோற்பது நல்லது

இறையின் அருளை இனிதாக
பெறுவது நல்லது

இயம்பியக் கடமை நோன்பை
முடிப்பது நல்லது

லைலத்துல் கத்ரின் பாக்கியம்
கிடைப்பது நல்லது

கணக்கிட்டு ஜக்காத் ஏழைக்கு
அளிப்பது நல்லது

வறியவர் வாழ்வை வளமாக்கி
வைப்பது நல்லது.

# புனித ரமழானில் நடைபெறும் பன்முக கலாச்சார லகெம்பா சந்தை



**எஸ்.ஏ.அப்துல் அஜீஸ்**
ஊடகவியலாளர்



புனித ரமழான் மாதத்தில் உலகம் முழுவதும் உள்ள சந்தைகள் புத்துயிர் பெற்று மக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்து விடுகின்றன. இஸ்லாமிய நாடுகளில் மட்டுமல்லாமல், முஸ்லிம்கள் சிறுபான்மையின மக்களாக வாழும் நாடுகளிலும், ரமழான் காலத்தில் இஸ்லாமியர்களின் கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் போற்றும் வகையில், பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அத்துடன் இஸ்லாமியர்களை கண்ணிப்படுத்தும் வகையிலும் சிறப்பு சந்தைகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

அந்த வகையில், 2026 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் சிட்னியின் மிகவும் பிரபலமான பன்முக கலாச்சார நிகழ்வான ஹால்டன் ஸ்ட்ரீட் லகெம்பா இரவு சந்தை நடைபெற்றது. பிப்ரவரி 19 முதல் மார்ச் 15 வரை ஒவ்வொரு வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமையும் மாலை 6 மணி முதல் அதிகாலை 2 மணி வரை துடிப்பான உலகளாவிய உணவு பஜாராக இந்த சந்தை மாறி, மக்களை வரவேற்று மகிழ்வித்தது. இந்த பாரம்பரிய சந்தையில் 60 ஸ்டால்கள் வரை இடம்பெற்றன. இந்த அற்புதமான வருடாந்திர நிகழ்வு, நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் உலகம் முழுவதிலுமிருந்து வரும் சுவையான உணவு வகை விருந்துகளை ருசிக்கவும், பல முஸ்லிம்கள் ஒன்றாக சேர்ந்து அமர்ந்து நோன்பை முடிக்கவும் ஒரு தனித்துவமான அனுபவத்தை வழங்கியது.

**பன்முக சந்தைக்கு மக்கள் வரவேற்பு:**

தென்மேற்கு சிட்னியில் புனித ரமழானின் ஒரு மாத காலம் நடைபெறும் இந்த இரவு சந்தைகளுக்கு பத்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வருகை தந்து, அங்கு 'எல்லோரும் மகிழ்ச்சியாக இருப்பதை உணருகிறார்கள்.

சந்தை தொடங்கும் வியாழக்கிழமை இரவு, லகெம்பா மஸ்ஜித்தின் படிகள் திருப்தியான அமைதியுடனும், இனிப்பு ரொட்டி சுடும்

வாசனையுடனும் முனகுகின்றன. பள்ளிவாசலுக்கு வரும் அனைவரும் அன்புடன் வரவேற்கப்படுகிறார்கள். சிறுவர்கள் நோன்பு திறப்பத்திற்கு முன்பு கொஞ்ச நேரம் விளையாடி விட்டு, பின்னர் நோன்பு திறக்க மஸ்ஜித்திற்கு சென்று நோன்பை திறந்துவிட்டு, தொழுகையை நிறைவேற்றி விட்டு, ஏக இறைவனின் அருளை பெறுகிறார்கள். பின்னர் நடைபெறும் தாராவிஹ் தொழுகையில் ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் லகெம்பா மஸ்ஜித்தில் குவிந்து தொழுகையை சிறப்பான முறையில் நிறைவேற்றிவிட்டு, லகெம்பா இரவு சந்தைகளுக்குச் செல்கிறார்கள்.



**முஸ்லிம்களுக்கான மையம் :**

சிட்னிக்கு மேற்கே சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புறநகர்ப் பகுதியான லகெம்பா, ஆஸ்திரேலிய முஸ்லிம்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க மையமாகும். ஒவ்வொரு ஆண்டும் ரமழான் மாதத்தில் முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்கள் என சுமார் 10 லட்சம் மக்கள் லகெம்பா இரவு சந்தைகளில் கலந்து கொள்கிறார்கள்.

லகெம்பா இரவு சந்தைகளில் ஹால்டன் தெருவில் டஜன் கணக்கான பச்சை மற்றும் சிவப்பு கூடாரங்களுக்கு அடியில் இருந்து புகை பறந்து, சுவையான இறைச்சிகள் மற்றும் ரொட்டிகளின் சூடான நறுமணத்தை சுமந்து செல்லும் வகையில் விதவிதமான உணவுகள் தயாரிக்கப்படுகின்றன. மேலும், வேகவைத்த கபாப்களின் சுவையை சுவைக்க ஏராளமான மக்கள் அந்த கடையின் முன்பு குவிந்துவிடுகிறார்கள். லகெம்பா இரவு சந்தைகள் தங்கள் வழக்கமான ஆற்றலைப் பெருமைப்படுத்திக் கொண்டு, மறுநாள் அதிகாலை வரை தொடரும் என்ற உறுதிமொழியுடன் தொடர்ந்து நடைபெறுகின்றன.

காபி மற்றும் நபுல்சி நஃபே, சீஸ், பிஸ்தா, மொறுமொறுப்பான பேஸ்ட்ரி மற்றும் குங்குமப்பூ ஆகியவற்றின் அடுக்கு இனிப்பு வகைகளை வழங்கும் கடைகளிலும் கூட்டத்திற்கு குறைவு இருப்பதில்லை. லெபனான் நாட்டைச் சேர்ந்த பிலால் என்பவர் நடத்தும் இந்த கடையில் இனிப்பின் சுவையை ரசிக்க வாய்ப்பு கிடைக்கிறது.

**சுவையான உணவு வகைகள் :**

அனைத்து ஆஸ்திரேலிய மக்களும், சீனர்கள், இந்தியர்கள், இந்த சந்தையை ஆதரிக்கிறார்கள், உண்மையில் அதை விரும்புகிறார்கள். கான்பெர்ரா, மெல்போர்ன் மற்றும் பல்வேறு மாநிலங்களிலிருந்து வரும் ஆஸ்திரேலியர்கள் சந்தையில் விற்கப்படும் சுவையான உணவு வகைகளில் மிகவும் விரும்புகிறார்கள்.





இரவு முழுவதும், பலவிதமான உணவு வகைகளை எடுத்துக் கொள்கிறார்கள். பிரகாசமான பச்சை கொத்தமல்லி கோழி, சுண்ணாம்பு நனைந்த முர்தாபாக், மிகவும் மென்மையான மலேசிய மாட்டிறைச்சி மற்றும் சீஸ் ரோல்ஸ், மேலும் பானம்

அல்லது இனிப்பு ஆகியவற்றையும் விரும்பி உண்ணுகிறார்கள். பாரம்பரிய காபி தயாரிக்கும் ஒரு கடை இந்த சந்தையில் மிகவும் புகழ்பெற்றதால், அங்கும் கூட்டம் அலை மோதுகிறது. ஒரு பல்பொருள் அங்காடியின் பச்சை விளக்கின் கீழ் ஒரு பிளாஸ்டிக் மேசையைச் சுற்றி அமர்ந்து கொண்டு உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தரும் இஸ்லாமியர்கள் நோன்பு திறந்து மகிழ்ச்சி அடைகிறார்கள்.



ஹால்டன் தெருவில் நடைபெறும் லகெம்பா ரமழான் இரவு சந்தைகளில் பல்வேறு மத்திய கிழக்கு, ஆசிய மற்றும் ஆப்பிரிக்க உணவு வகைகளுடன் ,ஒட்டக பர்கர்கள் மற்றும் நஃபே போன்ற தெரு உணவுகளும் கிடைக்கின்றன. பிரபலமான இந்த துடிப்பான, மது இல்லாத மற்றும் குடும்ப நட்பு நிகழ்வு ஆயிரக்கணக்கானவர்களை நோன்பை முடிக்க ஈர்க்கிறது.

**ஆஸ்திரேலிய பிரதமர் மகிழ்ச்சி :**

புகழ்பெற்ற லகெம்பா ரமழான் இரவு சந்தைக்கு சென்ற ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ், சந்தை முழுவதும் சுற்றிபார்த்து தன்னுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். மேலும், பல தலைமுறைகளாக ஆஸ்திரேலிய முஸ்லிம்கள், ஆஸ்திரேலிய நாட்டிற்கு மிகுந்த பங்களிப்பை அளித்து வருவதாக அவர் பெருமையுடன் கூறி பெருமைப்படுத்தினார். லகெம்பாவில் உள்ள ரமழான் இரவு சந்தைகளில் சமூகத்துடன் கொண்டாடுவது தமக்கு கிடைத்த ஒரு மரியாதை என்றும் பெருமையும்ன கூறியதுடன் அனைவருக்கும் ரமழான் முபாரக் என்றும் பிரதமர் அந்தோணி அல்பானீஸ் தெரிவித்து இருப்பது, முஸ்லிம்கள் மீது அவர் கொண்டுள்ள பாசத்தையும் அன்பையும் வெளிப்படுத்தியது. மத நல்லிணக்கத்தையும், சகோதரத்துவத்தையும், அன்பையும் பரப்பும் இதுபோன்ற சந்தைகள் ரமழான் காலங்களில் மட்டும் அல்லாமல் எப்போதும் உலகம் முழுவதும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். அதன்மூலம், இஸ்லாமிய நெறிமுறைகள் உலக மக்களின் பார்வைக்குக் கொண்டுச் செல்ல வாய்ப்புகள் உருவாகும் என்பது உறுதி.

**இப்னு ஜுரைஜ் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:**

இக்ரிமா பின் காலித் (ரஹ்) அவர்கள் ஹஜ்ஜுக்குமுன் உம்ரா செய்வது பற்றி இப்னு உமர் (ரலி) அவர்களிடம் கேட்டார் கள். அதற்கு ‘தவறில்லை’ என இப்னு உமர் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்.3

மேலும், “நபி (ஸல்) அவர்கள் ஹஜ் செய்வதற்குமுன் உம்ரா செய்தார்கள்” என்று இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாகவும் இக்ரிமா (ரஹ்) அவர்கள் கூறினார்கள்.

இந்த ஹதீஸ் மூன்று அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது.

# இலையுதிர் காலம்

கம்பம் மீரான் கவிதைகள்



தீதைச்
சுட்டெரிக்கும்
வெம்மையோ
தீன் மார்க்கச்
செம்மையோ

பாவம் பொசுக்குதல்
ரமலானின் பணியோ
ரஹ்மானின்
பாணியோ

மனிதப் பாவங்கள்
உன் எரிபொருளோ!
கருக்குதல் உன்
கருமமோ!

இறையச்சக் காற்றில்
பாவச் சருகுகள்
உதிர்கின்றது

பாவ இலைகள்
பழுத்து உதிரட்டும்
அறத் துளிர்கள்
துளிர்க்கட்டும்...

மனிதப் பாவங்களின்
இலையுதிர் காலம்
ரமலான்

# அளவற்ற அருளாளன்

கம்பம் மீரான் கவிதைகள்



ஒன்று
பத்து
எழுபதென
நற்செயல்
ஒவ்வொன்றுக்கும்
நிர்ணயிக்கப்பட்ட
கூலி உண்டு

ஆயினும்
அச்செயலுக்கு மட்டும்
கூலியளவு நிர்ணயம்
செய்யப்படவில்லை

அச்செயல்
எனக்குரியது!
அக்கூலியை நானே
வழங்குவேன்
என்கின்றான்
இறைவன்!!

விருந்துக்கு
அழைத்தவரே
பரிமாறுவது போல்

தாயே பிள்ளைக்கு
ஊட்டுவது போல்

நோன்புச் செயலுக்கு
அவனே கூலி
தருகின்றான்!

நிர்ணய வரம்புகளை
மிகைக்கின்றான்
அளவற்ற அருளாளன்



# ரய்யான்

## கம்பம் மீரான் கவிதைகள்

ராஜபாட்டை
அணிவகுப்பை
ரசிக்கின்றோம்

பிரதானிகள்
புகுவதற்கு
தனி வழி
அமைக்கின்றோம்

இது பொது வழி அல்ல
என்கின்றோம்

சுவன தேசத்தின்
கவனம் ஈர்க்கும்
ரய்யான் எனும்
மெய்யான வழி

அது
உணவிருந்தும்
பசித்திருந்த
தண்ணீரிருந்தும்
தாகித்திருந்த

இச்சை இருந்தும்
இறையச்சம்
கொண்டிருந்த
நோன்பாளிகள்
மட்டும் நுழையும் வழி

ஏழைப் பசி அறிந்த
ஈகை ருசி தெரிந்த
நோன்பு நோற்றோர்
பாதச்
சுவடுகளுக்காய்
ரய்யான் பிறந்தது
சுவனத்தின்
ராஜ பாட்டையானது



# மண்: பூமியின் உயிர், மனிதகுலத்தின் எதிர்காலம்

(காலநிலை மாற்றம், உணவு பாதுகாப்பு மற்றும் உயிரியல் சமநிலையை காப்பதில் மண்ணின் மறுக்க முடியாத பங்கு)

Prof **Chithirai Pon Selvan**, PhD, PDF, SFHEA
John Curtin Distinguished Professor
Director of Research; Head of School - Science and Engineering
Curtin University Dubai



**உலக வெப்பமயமாதல்**

இந்த கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் இந்த தருணத்தில், உலகின் சராசரி வெப்பநிலை தொழிற்புரட்சி முன் நிலையை விட (pre-industrial level) சுமார் 1.5 டிகிரி செல்சியஸ் அதிகரித்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகள் – 2023, 2024 மற்றும் 2025 – உலகின் மிக அதிக வெப்பமான ஆண்டுகளாக பதிவாகி உள்ளன. ஜூலை 22, 2024 அன்று உலக சராசரி வெப்பநிலை 17.6 டிகிரி செல்சியஸ் ஆக பதிவாகி, இதுவரை பூமியில் பதிவான மிக அதிக வெப்பமான நாளாகும். இந்த வெப்பநிலை உயர்வு மனிதர்களை மட்டும் அல்லாமல், மண்ணிலும் நீரிலும் வாழும் அனைத்து உயிர்களையும் தீவிரமாக பாதித்து வருகிறது.

**காடுகள் மற்றும் காட்டுத்தீ**

காடுகள் எரியும் நிகழ்வுகள் ஆண்டு தோறும் அதிகரித்து வருகின்றன. ஐக்கிய நாடுகள் பேரிடர் அபாயக் குறைப்பு அமைப்பு (UNDRR) வெளியிட்ட தகவலின்படி, 2030 ஆம் ஆண்டிற்குள் வறட்சி நிகழ்வுகள் 30% வரை அதிகரிக்கலாம். இதன் விளைவாக உயிரினங்களும் பறவைகளும் பெரும் ஆபத்தை எதிர்கொள்கின்றன. உயிரியல் பல்வகைமை வேகமாக குறைந்து வருகிறது. நாம் உயிரியல் பல்வகைமையை (Biodiversity) இழந்து கொண்டிருக்கிறோம். உதாரணமாக, தமிழ்நாட்டில் உள்ள வேதாந்தாங்கல் பறவைக் காப்பகம் கடந்த சில ஆண்டுகளில் கடுமையான நீர் பற்றாக்குறையை சந்தித்துள்ளது. இதனால் பல பறவைகள் அங்கு வராமல் போனதோடு, சில பறவைகள் உயிரிழந்ததும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மண்: உயிரின் அடித்தளம்

மண்ணும், வனமும், உயிரினங்களும் அனைத்தும் ஒரே சூழலின் பகுதியாக இருக்கின்றன. கடந்த 30 ஆண்டுகளில் பூமியில் 80% க்கும் மேற்பட்ட பூச்சி வகைகள் அழிந்துவிட்டன. காலநிலை மாற்றம் தொடர்பான அரசுகளுக்கிடையேயான குழு (IPCC) அறிக்கையின் படி, உலகில் சுமார் மூன்று பில்லியன் மக்கள் காலநிலை மாற்றத்தால் அதிக ஆபத்தில் வாழ்கின்றனர்.

மண்ணின் நிலை மனித வாழ்வின் அடித்தளம் ஆகும். மண்ணின் உயிரியல் சமநிலையை அழிப்பதால் உணவு உற்பத்தி, தண்ணீர் கிடைமட்டம், வனங்கள் மற்றும் மனித உயிரின் பாதுகாப்பு எல்லாம் பாதிக்கப்படும். இதனால் வறட்சியும், உணவு உற்பத்தி குறையும், சமூக சங்கடங்களும் ஏற்படும்.

**மண்ணின் அழிவு: ஒரு மறைமுக நெருக்கடி**

பனி உருகுதல், வெள்ளம், வெப்ப அலை போன்ற மாற்றங்கள் நமக்கு நேரடியாக கண்ணுக்குத் தெரிகின்றன. ஆனால் மண்ணின் அழிவு பெரும்பாலும் கண்ணுக்குத் தெரியாத ஒரு பெரிய நெருக்கடி. அதேபோல் ஆபத்தானது.

**மண்ணின் தரத்தை நிர்ணயிக்கும் முக்கியமான அம்சம் கரிமச் சத்து (Organic Matter) ஆகும்.**

பொதுவாக ஒரு நல்ல வேளாண்மை மண்ணில் 3–4% கரிமச் சத்து இருக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் தரநிலைப்படி, மண்ணாகக் கருத குறைந்தது 2% கரிமச் சத்து இருக்க வேண்டும்.

ஆனால் தற்போது உலகின் எந்த நாட்டிலும் மண்ணில் தேவையான குறைந்தபட்ச கரிமச் சத்து அளவு இல்லை. சராசரியாக ஐரோப்பாவில் சுமார் 1.67%, அமெரிக்காவில் 1.26%, இந்தியாவில் சுமார் 0.6% மற்றும் ஆப்பிரிக்காவில் 0.3% மட்டுமே உள்ளது.

உலக மண் அழிவு தரவுகள் படி, உலகின் 75% மண்ணுகள் ஏற்கனவே அழிக்கப்பட்டுள்ளன. மண் அழிவு தொடர்ந்தால் 2050-ஆம் ஆண்டுக்குள் 90% மண்ணும் பாதிக்கப்படும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

**உணவு பாதுகாப்பும் மண்ணும்**

வேளாண்மை நிலங்கள் வேகமாக வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளாக மாறி வருகின்றன. கடல் மட்ட உயர்வு மற்றும் நிலச்சரிவு காரணமாகவும் மண் குறைந்து வருகிறது.

உலக மக்கள் தொகை 2045 ஆம் ஆண்டிற்குள் 9 பில்லியனைத் தாண்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் உணவு உற்பத்தி சுமார் 40% குறையும் என்று அனைத்து விஞ்ஞானிகளும் கூறுகின்றனர்.

உலக உணவு நாளில் (World Food Programme) தெரிவிக்கப்பட்டதுபோல், இன்றே உலகில் 730 மில்லியன் மக்கள் பசியுடன் வாழ்கிறார்கள். ஒவ்வொரு 11 பேரில் ஒருவர் பசியால் பாதிக்கப்பட்டுள்ளார். சுமார் 40 மில்லியன் மக்கள் பஞ்சம் தலைவிரித்தாடும் நிலையில் வாழ்கிறார்கள். பஞ்சம் என்பது மனிதன் அனுபவிக்கக்கூடிய மிகக் கொடூரமான நிலைகளில் ஒன்று. பசியால் ஒருவர் இறப்பதற்கு பல மாதங்கள் ஆகும்; அது மிகுந்த வேதனையைக் கொண்டது. இது தற்போது உலகின் 8 நாடுகளிலும் நடக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்த எண்ணிக்கைகள் அதிகரித்து கொண்டிருக்கின்றன

**விவசாயமும் மண்ணும்**

மண்ணின் தரம் குறைவதால் விவசாயிகளின் வாழ்க்கையும் பாதிக்கப்படுகிறது.இந்தியாவில் கடந்த 20 ஆண்டுகளில் சுமார் மூன்று லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்துள்ளனர்.. அமெரிக்காவில் மேற்பரப்பிலுள்ள மண்ணின் (topsoil) சுமார் 50% அழிந்துவிட்டது. இதனால் வேதியியல் உரங்களின் பயன்பாடு அதிகரித்து, உணவின் ஊட்டச்சத்து குறைந்து வருகிறது.

நாம் உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை அளவுக்கு மீறி பயன்படுத்துவதால் மண்ணின் இயற்கை சமநிலை பாதிக்கப்படுகிறது. இதன் காரணமாக, உணவில் தேவையான ஊட்டச்சத்து குறைந்து, குழந்தைகளின் ஆரோக்கியமும் பாதிக்கப்படுகிறது.

**மண் மற்றும் உயிர்**

ஒரு கையளவு மண்ணில் சுமார் எட்டு பில்லியன் நுண்ணுயிரிகள் வாழ்கின்றன. மண் இல்லாமல் வாழ்க்கை இல்லை; வாழ்க்கை இல்லாமல் மண்ணும் இல்லை. நாம் மண்ணிலிருந்து உணவு பெறுகிறோம். மற்ற உயிரினங்களும் மண்ணிலேயே வளர்கின்றன. விதை விதைத்தால் பழம் கிடைக்கும். இறந்ததை புதைக்கும் போது, புதிய உயிர் பிறக்கும். மண் அனைவருக்கும் வாழ்வின் ஆதாரமாகும்.

ஒரு சிறிய பூச்சியிலிருந்து தொடங்கி புழுக்கள், விலங்குகள், தாவரங்கள், மரங்கள், பறவைகள் — இறுதியில் மனிதர்களும் — அனைவரும் மண்ணுடன் தொடர்புடையவர்களே.மண்ணிலிருந்தே தோன்றியவர்கள்.

மண் ஒரு அதிசயமான இடம். ஒரு சிறிய விதையை அதில் நட்டால் அது மரமாக வளர்ந்து உணவையும் உயிரையும் தருகிறது..

நாம் பார்க்கும் ஒவ்வொரு உயிரும், நம்மைச் சுற்றி உள்ள பல பொருட்களும் நேரடியாகவோ மறைமுகமாகவோ மண்ணோடு தொடர்புடையவையே.

அதனால் மண் என்பது வெறும் நிலம் அல்ல; அது வாழ்க்கையின் மூலாதாரம். மண்ணை பாதுகாப்பது என்பது உயிரையும் எதிர்காலத்தையும் பாதுகாப்பதற்குச் சமமானது.

**மண்ணின் பங்கு: தண்ணீர், காற்று, உணவு மற்றும் காலநிலை**

மண் தாவரங்களை வளர்க்கிறது. தாவரங்கள் கார்பன் டையாக்சைடை உறிஞ்சி மனிதர்கள் சுவாசிக்கும் ஆக்சிஜனை உமிழ்கின்றன. இதன் மூலம் காலநிலை சமநிலை பாதுகாக்கப்படுகிறது.

மண் நீரை சேமித்து மெதுவாக வெளியிடுகிறது. மண் ஆரோக்கியமாக இருந்தால் உணவும் சத்தானதாக இருக்கும்.

மண் பாதிக்கப்பட்டால் தண்ணீர், காற்று, உணவு அனைத்தும் பாதிக்கப்படும்.

**எதிர்கால தலைமுறைகளுக்காக**

மண்ணில் கரிமச் சத்து உருவாகும் முக்கிய மூலங்கள் தாவர வாழ்க்கையும் விலங்கு வாழ்க்கையும் மட்டுமே. எந்த இயந்திரங்களாலும் அல்லது தொழில்நுட்பங்களாலும் இயற்கையான கரிமச் சத்துகளை உருவாக்க முடியாது.

தாவரங்களின் இலைகள், வேர் மற்றும் உயிரியல் சிதைவுகள் மண்ணில் சேர்ந்து அதன் வளத்தையும் உயிர்ச்சக்தியையும் அதிகரிக்கின்றன.

எனவே மண்ணை பாதுகாக்க மிகச் சிறந்த வழி தாவரங்களை வளர்ப்பது.

அதிக அளவில் மரங்களை நடுதல், பசுமை நிலங்களை பாதுகாத்தல் மற்றும் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல் மிகவும் அவசியம்.

அதிக அளவில் மரங்கள் மற்றும் தாவரங்களை நட்டால் மண் அரிப்பு குறையும், கரிமச் சத்து அதிகரிக்கும், மேலும் சுற்றுச்சூழல் சமநிலையும் பாதுகாக்கப்படும்.

தாவரங்கள் மனித வாழ்க்கைக்கும் பூமியின் இயற்கை சமநிலைக்கும் அடிப்படையாக உள்ளன. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, உணவு பாதுகாப்பு, பொருளாதார முன்னேற்றம் மற்றும் மனித நலன் ஆகிய அனைத்திலும் தாவரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவை கார்பன் டையாக்சைடை உறிஞ்சி காலநிலை மாற்றத்தை குறைக்க உதவுவதோடு, ஆக்ஸிஜனை வழங்கி உயிர்களை ஆதரிக்கின்றன. மேலும், மண் பாதுகாப்பு, நீர் சுழற்சி சமநிலை மற்றும் உயிரின பல்வகைமையை பாதுகாப்பதில் தாவரங்களின் பங்களிப்பு மிக முக்கியமானது.

உலகளாவிய நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய தாவரங்களின் பாதுகாப்பும் வளர்ப்பும் அவசியமாகிறது. நிலையான வேளாண்மை, நகர பசுமை வளர்ச்சி மற்றும் இயற்கை வளங்களின் பொறுப்பான பயன்பாடு ஆகியவை எதிர்கால தலைமுறைகளுக்கான பாதுகாப்பான உலகை உருவாக்க உதவும்.

எனவே, தாவரங்களை பாதுகாப்பது என்பது சுற்றுச்சூழல் பொறுப்பு மட்டுமல்ல; அது சமூக, பொருளாதார மற்றும் மனித முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவையாகும். நிலையான வளர்ச்சி தாவரங்களிலிருந்தே தொடங்குகிறது.

**முடிவுரை**

நாம் எதிர்காலத்தை காப்பது நமது கடமை. அடுத்த 15 ஆண்டுகள் அவசர காலமாக கருதப்பட வேண்டும் என்று விஞ்ஞானிகள், மற்றும் காலநிலை செயற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள். இப்போது நாம் செய்யும் நடவடிக்கைகள் மட்டுமே அடுத்த தலைமுறைக்கு வாழக்கூடிய பூமியை வழங்கும்

மண் என்பது வெறும் நிலம் அல்ல; அது வாழ்க்கையின் அடித்தளம். மண்ணை பாதுகாப்பது என்பது சுற்றுச்சூழல் பொறுப்பு மட்டுமல்ல; அது மனிதகுலத்தின் எதிர்காலத்தை பாதுகாப்பதற்கான கடமை.



**நாம் வாழும் பூமி ஒரே ஒன்று.**
**அந்த பூமியின் உயிர் — மண்.**
**மண்ணை காப்போம்!**

# இனிமை பொங்கும் ஈகைத் திருநாள்

ஹைச்.முஹம்மது நஸீறுத்தீன்
அஞ்சு வன்னம் திருவிதாங்கோடு
கன்னியாகுமரி மாவட்டம்.



நோன்பு பெருநாள் நல்ஈகை திருநாள்!
ரமழான் முழுதும் நோன்பை நோற்று இரவில் நின்று

தொழுதோம் நாமெலாம்!
நோன்பு எனக்குரியது! அதற்கு கூலியும் நானே! என

தன் நல்லடியார்களுக்கு பரிசு தரும் மேலான

பொன்னாள்!
ஈகை திருநாள் நன்னாள்!
பயிற்சி பாசறையில் புடம் போட்ட பொன்னை போல்

இதய பரிசுத்தம் பெற்று மகிழும் ஈகைத் திருநாள்!
பெருநாளின் போது தக்பீர் முழங்கும் நேரம் வருகின்ற

முஸ்லிம்களை முஸாபஹா செய்து மகிழ்வார்கள்

வானவர்கள்!
பெருநாளில் நல்ல உணவு உண்டு மகிழ ஏழையர்க்கு

ஃபித்ரா எனும் கொடையை கொடுத்து விட ஏவுகின்ற

நன்மார்க்கம் நம் இஸ்லாம்!
இறையோனின் பேரருளால் இனி வரும்

ரமழான்களிலும்
இன்புற்று வணங்குவதற்கு இனிதே வா! நல்லருள் தா!
மகிழ்வை தரும் பெருநாளே!
மாண்பு நிறை திருநாளே!
ஈதுல் ஃபித்ரின்
ஈத் முபாரக்!

# Eid, Celebrating Faith Gratitude and Unity




**Mohammed Rehaan**
**GRADE:** 11
**SCHOOL:** India International School Sharjah

Eid bursts into life as millions mark it with quiet joy and deep meaning. Following weeks of dawn-to-dusk fasting, faces light up - not just from celebration, yet lifted by inner peace too. Gratitude flows freely once Ramadan ends, carried on soft prayers and shared meals. Hearts swell when families gather - held together less by routine, more by unseen threads of care. Hope hums beneath laughter, echoing through streets alive with new clothes and old traditions. This moment matters - shaped by sacrifice, softened by mercy.

Ramadan brings lessons in patience, kindness, giving without measure, while opening hearts to others struggling through hardship. As light breaks each day, fasting begins - no food, no drink, just prayer woven into quiet moments. Charity grows during these hours, one small act after another shaping a deeper sense of discipline. A bond with Allah tightens when distractions fade and attention turns inward. Then comes Eid, bright and full, closing the chapter on weeks of reflection and effort.

Morning light kicks off the Eid celebration. People rise before sunrise, pull on fresh garments - sometimes brand-new ones - and head out together toward mosques or wide-open fields meant for worship. Shoulder by shoulder they line up, rich beside poor, young near old, showing how belief flattens every difference. A shared hush falls during the central prayer, one rhythm tying strangers into kinship. Voices lift afterward with cheerful “Eid Mubarak” greetings echoing through the crowd - blessings traded like small gifts between neighbors. Stillness follows, heavy with warmth

Eid carries moments of quiet beauty, especially when hands open wide in generosity. Just before prayers begin, many offer Zakat al-Fitr - a gift meant to lift burdens for the less fortunate. So meals are made possible, laughter included in homes that might otherwise feel empty. Joy spreads not through grand gestures but steady care woven into tradition. Belonging grows where compassion shows up without fanfare.

Festive moments often bring folks close, especially during Eid. Inside homes, joy bubbles up through shared meals and chatter that lingers too long. Sweets simmer on stoves while stories pass between generations sitting cross legged on floors. Little ones clutch presents with wide eyes, surprised by small wonders handed out with pride. Relatives trace familiar paths from one house to another, weaving bonds tighter along the way. Elsewhere, doorsteps see new faces showing up just to say hello and leave smiles behind.

Eid means more than just celebration. After the festivities fade, what stays matters most. Good things picked up in Ramadan? They belong in everyday moments. Being kind shows up not just once but again and again. Truthful words fit every season, not only holy ones. Giving helps people long after special dates pass. Waiting calmly does not lose value when calendars change. Each act of care grows stronger if lived regularly. This time points ahead rather than looking back.

When life moves quick, moments such as Eid quietly pull folks into shared space. Even with schedules packed tight, what sticks is belief, kinship, care - held close without needing words.

Truth lives inside Eid, not just festivity. A moment like this whispers about growing closer to what matters, saying thank you in silence to Allah, holding others gently. Perhaps kindness begins again when light touches old traditions. Unity grows where people listen. Peace builds slowly, hand by hand, without speeches.

Eid Mubarak to all.

Dubai, United Arab Emirates

# GHARIB GROUP

Excellence Across Horizons: The Evolution of Gharib Group.

Founded in Dubai, **Gharib Group** has grown from a regional logistics powerhouse into a diversified conglomerate. By integrating the precision required for global trade with the artistry needed for luxury manufacturing, the group offers a unique ecosystem for global partners. Reliability and Uncompromising Quality are the cornerstones of everything we do.




## GHARIB SHIPPING & TRADING

Moving the World, Empowering Trade.

From our strategic Dubai hub, we provide high-impact logistics and sourcing solutions. Whether it is Air, Sea, or Road, we ensure your global trade never stops.

- Logistics: Sea, Air & Road Freight Forwarding.
- Support: Customs Clearance & Secure Warehousing.
- Trading: General Trading & Global Sourcing.
- Reach: Real-Time Tracking & Global Representation.










## GHARIB PERFUMES & FAZUSI

The Artistry of Scent.

Redefining Arabian luxury by blending heritage Ouds with modern French notes. We specialize in the rare art of Personalized Identity.

- Gharib Perfumes: Signature Oud & Modern EDP.
- Bespoke Service: Customized Fragrances (Your unique scent).
- Fazusi Perfumes: Niche, exclusive collections for the connoisseur.
- Quality: Rare ingredients and long-lasting elegance.

Gharib PERFUMES Since 1993 | FAZUSI WHERE LUXURY BREATHS | Gharib SHIPPING SERVICES L.L.C | GHARIB FOUNDATION Helping. Healing. Caring | Gharib TRADING Since 1993

www.gharibshippingservices.com | @GharibGroup | @thegharibshipping




## அருள் மாதம் - பரம்பை இதயா

சுவனம் செலுத்திடும் சுந்தர மாதம்
புவனம் மலரப் புகுந்திட்ட மாதம்
கவனம் செலுத்திக் கருத்தினை ஊட்டி
அவனியில் ஏகனை ஆவலுடன் போற்றுவோம்.

அல்லா அருளிய அற்புத வேதமே
நல்லார் மனத்தில் நடந்திடும் நாதமே
வல்லோன் புகழினை வாகுடன் ஓதியே
இல்லாரை ஈந்தே இறையருள் தேற்றுவோம்.

வான்மறை மண்ணில் மலர்ந்திட்ட திங்களில்
வான்இறை தந்தே இலங்கிய நோன்பதில்
ஆயிரம் நன்மை அருளும் ரமலானைப்
பாயிரம் பாடி மகிழ்.



# ஆண்டுக்கு ஆண்டு வருகின்ற பெருநாள்

இப்பாடலை இசையோடு பாடியவர்:
தீனிசை தென்றல், டாக்டர்
**A.S. தேரிழந்தூர் தாஜுதீன் ஃபைஜீ**

ஆண்டுக்கு ஆண்டு வருகின்ற பெருநாள்
ஆண்டவன் அருளை தருகின்ற திருநாள்
மானுட நோன்பு நோற்றவரெல்லாம்
அன்பினில் ஊறிய கூலியை பெரும் நாள்
வாரி வழங்கவே வரும் இன்பப் பெருநாள்
வந்து போகுமே ஒரு நாள்...

30 நாளில் முப்பெரும் பகுதி கொண்ட திம் மாதம்
ஒப்பற்ற இறைவன் அன்புடன் ஒப்பி ஈடேற்றும் மாதம்
உயர்வு, தாழ்வெனும் பிரிவுகள் இன்றி
முயன்று அமல் செய்வோம் மனமொன்றி
நன்மை நல்கிட வரும் இன்ப பெருநாள்
வந்து போகுமே ஒரு நாள்...

30 நாட்கள் நோன்பு நோற்று வந்ததின் பலனாய்
ஒப்பிட முடியா பாவங்கள் யாவும் அற்றன இதனால்
தப்பினை கொய்து தருமங்கள் செய்து செப்பிடும் தக்பீர்
மலை என பெய்து வாழ்த்து கூறவே வரும் இந்த திருநாள்
வந்து போகுமே ஒரு நாள்...



# தமிழக முஸ்லிம்களின் ஒரே நாளிதழ்!






















SINCE 29-04-1987

# மணிச்சுடர்

## தமிழ் நாளிதழ்

நிறுவனர் : சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது

ஆசிரியர் : பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் Ex.M.P.

காயிதே மில்லத் மன்ஸில்
36, மரைக்காயர் லெப்பைதெரு மண்ணடி,
சென்னை-600001.

PHONE : 044 - 2521 7890 | E-mail : manichudardaily@gmail.com

# “காலம்”

-முனைவர் மு. அ. காதர்
சிங்கப்பூர்



தூங்கப் போகிறோம்
நீண்ட காலம்!

எழுந்து வா
தூக்கம் துற
துக்கம் மற

பரிகாசம் போதும்
அவகாசம் அதிகம் இல்லை
இதிகாசம் இயற்று!

காலமாவதற்கு முன்பு
காலம் போவதை கவனி!

ஆத்ம சாந்திக்கு
விதை போடு
பாதச் சுவடுகளை
சிற்பங்கள் ஆக்கு!

வெறும் மூச்சு விட்ட
குற்றம் செய்யாமல்
வாழ்ந்து விட்டு போ!


மறுமை உன்னை
பெருமைப் படுத்த
விட்டுக் கொடு!

பிரதிபலன் எதிர்பாரா
பிரதி எடு
மறதி பழகு!


புன்னகையும் மௌனமும்
பேசும் மொழியாக்கு
மூடரிடம் வாய் மூடு
அமைதிக்கு பாய் போடு

குறையோடு பேசியது போதும்
இறையோடு பேசு!

தூங்கப் போகிறோம்
நீண்ட காலம்!
எழுந்து வா இப்போது!



# முப்பசி வென்ற முஸ்லிம்கள்



மௌலவி அல்ஹாஜ் முதுவைக்
**கவிஞர் ஏ. உமர் ஜஹ்பர்** மன்பயீ

பசியினையே பசியறியார் புரிந்திடவே
பசிக்காகப் படைத்திட்டான் ரமளானிதையே !
"பசித்திருப்பீர்" ஓர்திங்கள் முழுதும் எனக்கே !
பகல்மட்டும் இரவல்ல ! என்றானிறையே !
பசிக்காக உண்போர்கள் புவியில்கோடி !
பசியெனவே மாண்டோர்கள் புவியில்கோடி !
ருசிக்காகத் தின்போரும் உலகில்கோடி !
ரமளானை உணர்ந்தோரும் உலகில்கோடி !


கட்டியவள் கனிவுடனே காத்திருப்பாள் !
கணவனையே வழிநோக்கிப் பார்த்திருப்பாள் !
கட்டிலையும் கன்னியையும் ஒதுக்கிவைத்துக்
காணிக்கை செய்திடுவான் காமத்தை !
சுட்டுவிழிப் பார்வையிலே சுருண்டுபோகும்
சுந்தரியைச் சீண்டியுமே பார்க்கமாட்டான் !
கட்டுடலைக் கட்டிவைப்பான் இறைவனுக்கு !
காளையவன் தேர்ந்துவிட்டான் சுவனத்திற்கு !

நேர்மையுடன் உழைத்தெடுத்த பொருளிருக்க
நேர்த்தியுடன் சமைத்தெடுக்கப் பெண்ணிருக்க
ஆர்வமுடன் படைத்துவைக்கத் தாயிருக்க
ஆவலுடன் உண்பதற்கு மனமிருக்க -
பார்படைத்த பேரிறையின் அருளைத்தேடி
பக்தியுடன் பசியினையே தியாகம்செய்வான் !
சீர்மிகுந்த சொர்க்கமதைத் தெரிவுசெய்வான் !
சத்தியமாய் சொர்க்கவாசி இவரே காண்பீர் !

பழமிருக்க பாலிருக்கப் பழச்சாறிருக்க
பளிங்குகளின் கிண்ணங்களும் அழகாயிருக்க
பழகிவந்த நண்பர்களும் பக்கமிருக்க
பாங்குடனே ஊற்றிவைத்தும் மனம்வெறுக்க
அழகுமிகு ரமளானைக் கருத்தேகொண்டு
அத்தனையும் ஒதுக்கிவைத்துத் தாகித்திருப்பார் !
அழகுடனே 'முப்பசி'யும் வென்றமுஸ்லிம்
அருளுடனே சொர்க்கமதில் வீற்றிருப்பார் !

நன்றி :
நம்பிக்கை மாத இதழ்,
மலேசியா
ஜனவரி 1998

# பிறந்தது பெருநாளே.!




சேமுமு. முகமதலி

பற்றிப் பிணித்த
நரகக் கொழுப்பை ...
உருக்கு ஒழித்தது.
நோன்பு விருந்து!
மண்டிக் கிடந்த
செல்வக் குப்பையை..
உரமாய்ப் பரப்பியது
ஜகாத் காற்று!
முப்பது நாளில்
முப்பது மடங்காக....
நீண்டு படர்ந்த
நன்மைக் கதிரின்
நரங்களில் சிக்கித்
திணறித் தவித்து....
மறைந்து ஒளிந்தது
பாவப் பனி!
அங்கே –
புனிதொளி சுவாசித்துப்
புனிதமாய் ஒளிர்ந்தது
மனித நேயம்!
சூரிய ரமளானின்
நோன்பு ஜோதியைப்
பொங்கும் பூரிப்போடு
அகத்துள் தாங்கி...
மெல்ல... மிக மெல்ல....
இதழ் அவிழ....
சிரித்தது ஷவ்வால் பிறை
பிறந்தது பெருநாளே!

# நோன்பு ஒரு தத்துவமே !

முதுவைக் கவிஞர், ஹாஜி உமர் ஜஹ்பர்



தத்துவத்தைத் தரணியிலே தரம்பிரித்துப் பார்க்கையிலே
தனித்திருந்து விழித்திருந்து பசித்திருந்து வாழுவதை
உத்தமர்கள் போற்றுகிறார் ! புகழுகிறார் ! பாடுகிறார் !!!
உலகமெலாம் இக்கருத்தை ஏற்றுநடை போடுகிறார் !
சத்தியத்தை சமத்துவத்தை சரித்திரத்தில் தேடுகிறார் !
சரிநிகராய் சமுதாயம் படைப்பதற்கு நாடுகிறார் !
இத்தரையில் இவையாவும் ஏற்றமிகு ரமளானின்
எழில்நோன்பு நோற்பவரே எளிதாகக் காணுகிறார் !

உதிரத்தை வியர்வையென உடல்சிந்தி உழைத்திட்ட
உயர்'ரிஸ்கை' உண்ணாமல் இறைவனுக்காய் பசித்திருந்தார்
சதிபதியாய் சல்லாபம் சந்தோஷம் கொண்டாடும்
சகலத்தையும் செய்யாமல் இறைவனுக்காய் தனித்திருந்தார்
விதியில்லா வணக்கத்தையும் இரவுபகல் தொழுவதற்கு
விருப்பமுடன் உறங்காமல் இறைவனுக்காய் விழித்திருந்தார்
புதிதல்ல இதுவெல்லாம் பொன்னான முஃமினுக்கு
புடம்போட்ட தங்கமென நோன்பாளி மின்னுகிறார் !

சிக்கனத்தைச் சேமிப்பைப் புகழாத ஏடுமில்லை !
சிறுதுளியே பெருவெள்ளம் என்னுமொரு முதுமொழியில்
தக்கதொரு தருணத்தில் தான்சிறிது சேர்த்துவைத்தால்
தரும் நல்ல பலனையது ! பயனடைந்தோர் கண்டதிது !
இக்கருத்தை ஏற்காத ஏடுமில்லை ! நாடுமில்லை !
இஸ்லாமும் சிக்கனத்தைச் சொல்லாத நாளுமில்லை !
பக்திக்குள் ஓர்முடிச்சும் பொருளியலில் ஓர் முடிச்சும்
பக்குவமாய் போட்டுவைத்த நோன்புவொரு தத்துவமே !

பேராசை தடுப்பதற்கு நோன்புவொரு கேடயமே !
பெருமாசை கொண்டலைந்தோர் பின்னடைந்தார் ! சரித்திரமே !
பாராண்ட மன்னவரும் பேராசை கொள்வதனால்
பிறந்த மண் பறிகொடுத்து புகுந்திடுவார் வேறிடமே !

சீரான வாழ்வமைத்துச் சிறப்பாகப் பேரெடுத்துச்
சரித்திரத்தில் புகழடைய மனக்கட்டு அவசியமே !
யாராரோ சொல்வதற்கும் கேட்பதற்கும் இனித்திடுமே;
எளிதாகப் பயிற்சிபெற நோன்புவொரு தத்துவமே !

உண்பதிலோர் கட்டுப்பாடு ! பருகுவதில் கட்டுப்பாடு !
உணர்ச்சிதனைக் கட்டிப்போட்டு வாழ்வதிலோர் கட்டுப்பாடு !
எண்ணியெண்ணிப் பார்க்கையிலே இத்தகைய கட்டுப்பாடு
ஏற்றமிகு வாழ்வைத் தரும் ! என்றுமில்லை தட்டுப்பாடு !
மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை கொள்வதெல்லாம்
மனக்கட்டுப் பாடுயின்றி மனம்போன போக்காலன்றோ?
கண்ணியமும் கட்டுப்பாடும் எங்கிருந்து பிறக்கிறது?
காட்டுமெழில் நோன்புதரும் தத்துவத்தில் தெரிகிறது !

நோன்பு தந்த கட்டுப்பாடை நாளெல்லாம் பேணி நின்றால்
நோயற்று நொடியற்று நலமுடனே வாழ்ந்திடலாம் !
நோன்பு தந்த தத்துவத்தை நாமெல்லாம் நினைத்து வந்தால்
நாடுகளில் நகரங்களில் கண்ணியமாய் நடந்திடலாம் !
நோன்பு தந்த முப்பசியை நாளெல்லாம் கடைப்பிடித்தால்
நலமுடனே வளமுடனே நாமெல்லாம் வாழ்ந்திடலாம் !
நோன்பு தந்த கடமைகளை வாழ்வெல்லாம் கடைப்பிடித்தால்
நாட்டிலொரு நன்மகனாய் ஏட்டினிலே மின்னிடலாம் !

## அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் பிறை பார்த்ததும் நோன்பு நோறுங்கள். (மறு)பிறை பார்த்ததும் நோன்பை விடுங்கள். உங்களுக்கு (வானில்) மேகமூட்டம் தென்பட்டால், அந்த மாதத்தை (முப்பது நாட்களாக)க் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

இதை அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

## அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ரமளான் வந்துவிட்டால் சொர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்றன; நரகத்தின் வாயில்கள் அடைக்கப்படுகின்றன; ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றனர்.

இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

# துஆ செய்து வாழ்த்துகிறேன் !

முதுவை கவிஞர், ஹாஜி, உமர் ஜஹ்பர்



முப்பத்து நாள் தொடர்ந்து முழுதாக நோன்பிருந்து
முறையான பயிற்சியினால் முப்பசியைத் தானறிந்து
அப்பழுக்கு இல்லாத மனிதரெனப் புனிதரென
ஆகிவிட்ட முஃமின்களே ! முஸ்லிம்களே ! உங்களுக்கு
இப்பொழுது இன்பத்தின் எல்லையென மலர்ந்திருக்கும்
ஈதுப்பெருநாள் பிறந்திருக்கும் ! சொர்க்கமது திறந்திருக்கும் !
செப்பியதோர் ரஹ்மத்தும் மஃபிரத்தும் சேர்ந்திருக்கும் !
சங்கைமிகு ஸலாமத்தும் பரக்கத்தும் குவிந்திருக்கும் !

"ரய்யானின் சொர்க்கபதி அலங்கரித்துக் காத்திருக்கும் !
"ராஹத்தாய் கஸ்தூரி வாசமங்கு கமழ்ந்திருக்கும் !
மெய்யான "ஹூர்" என்னும் சுவனமங்கை சிரித்து நிற்கும் !
மேலான இறையோனின் 'ரிலா' பொருத்தம் சிறந்திருக்கும் !
துய்ய மலக் "ரில்வானும்" விழி மலர்ந்து வரவேற்கும் !
தூதர் ஹபீப் "ஷபா அத்தும்" தடையின்றித் தொடர்ந்திருக்கும்
தெய்வீக மார்க்கத்தின் திருக்கடமை நிறைவேற்றித்
திகழ்கின்ற "முத்தக்கீன்" தீனவரே ! வாழ்த்துகிறேன் !

பகலெல்லாம் பசித்திருந்த உத்தமரே வாழ்த்துகிறேன் !
பண்பாடித் தராவீஹைத் தொழுதவரே வாழ்த்துகிறேன் !
முகமலர தர்மங்கள் ஈந்தவரே வாழ்த்துகிறேன் !
முழுதாக குர்ஆனை முடித்தவரே வாழ்த்துகிறேன் !
இகபரமும் இறையருளைப் பெற்றவரே வாழ்த்துகிறேன் !
இருகரமும் ஏந்தி நின்று "துஆ" செய்து வாழ்த்துகிறேன் !
அகங்குளிர அருள்கோடி வென்றவரே வாழ்த்துகிறேன் !
ஆண்டுபல ரமளானைப் பெற்றிடவே வாழ்த்துகிறேன் !

# குர்ஆனிய சிந்தனை

மவ்லவி ஹாஃபிழ்
Dr A. அப்துல்லாஹ் யூசுஃபி M.dip. Acu (மதுரை

Gen Z எதிர்கொள்ளும் அறிவுப்போர்: விரல் நுனியில் வீணாகும் ஞானம்!

விதைக்கப்படாத நிலம் எப்படித் தரிசாகக் கிடக்குமோ, அப்படித்தான் பயன்படுத்தப்படாத மூளையும் மழுங்கிப் போகிறது. வைகறைப் பொழுதில் விரியும் மலரைப் போல, மனிதப் பிறவி என்பது அறிவாலும் சிந்தனையாலும் மலர வேண்டிய ஒரு பேரதிசயம். ஒரு காலத்தில் மனிதன் ஒரு புத்தகத்தைத் தேடி மைல்கணக்கில் நடந்தான்; அன்று அந்தத் தேடல் அவனுக்குப் பொறுமையையும், ஆழமான ஞானத்தையும் தந்தது. ஆனால் இன்று, தகவல்கள் நம் விரல் நுனியில் வந்து விழுகின்றன. 'தேடல்' எளிதாகிவிட்ட இடத்தில் 'சிந்தனை' சோம்பலடைந்து விடுகிறது.

இதைத்தான் சமீபத்தில் சன் நியூஸ் (Sun News) வாயிலாக நாம் அறிந்த அந்த நரம்பியல் ஆய்வு முடிவுகள் ஒரு எச்சரிக்கை மணியாக ஒலிக்கின்றன. விஞ்ஞானி ஜாரெட் ஹோர்வத் நடத்திய அந்த ஆய்வின்படி, முந்தைய தலைமுறையினரை விட இன்றைய நவீனத் தலைமுறை அறிவுத்திறனில் (IQ) பின்தங்கி இருப்பதாக வரும் செய்தி நம்மைத் திடுக்கிடச் செய்கிறது. அலைபேசித் திரைகளில் நாம் செய்யும் ஒவ்வொரு 'ஸ்க்ரோலிங்கும்' நம் கவனச் சிதறலை அதிகமாக்கி, ஆழமாகச் சிந்திக்கும் ஆற்றலை மழுங்கடித்துக் கொண்டிருக்கிறது. நாம் எதை முன்னேற்றம் என்று நினைத்தோமோ, அதுவே நம் அக வளர்ச்சியைப் பாதிக்கும் தடையாக மாறியிருப்பதுதான் காலத்தின் பெரும் முரண்.

இறைவன் மனிதனுக்கு வழங்கிய ஆகச்சிறந்த அருட்கொடை அறிவு. "நீங்கள் சிந்திக்க மாட்டீர்களா?" என்கிற குர்ஆனின் வினா, உறங்கிக் கிடக்கும் நம் சிந்தனை நரம்புகளைத் தட்டி எழுப்பும் ஒரு பேரொலி. இறைவனால் வழங்கப்பட்ட 'அக்ல்' எனும் பேரறிவை, ஒரு சிறிய டிஜிட்டல் திரைக்குள் நாம் அடக்கி விடலாமா? சரிந்து வரும் இந்த அறிவுத் திறனை இஸ்லாமிய வாழ்வியல் நெறிகள் கொண்டு எப்படிச் சீர் செய்யலாம் என்பதை சில முக்கியப் பார்வைகளில் நாம் இக்கட்டுரையில் காணப்போகிறோம்.

## தஃபக்குர்: மௌனத்தில் விளையும் ஞானம்

கடல் அலைகளை எண்ணுவதை விட, கடலின் ஆழத்தில் நிலவும் அமைதியைக் கவனிப்பதே ஒரு முத்துக்குளிப்பவனின் லட்சியம். இன்று நம்

இளைஞர்களின் அறிவுத்திறன் குறைவதற்குக் காரணம், நாம் அறிவின் மேற்பரப்பில் சறுக்கிக் கொண்டிருக்கிறோமே தவிர, அதன் ஆழத்திற்குள் மூழ்கத் தயங்குகிறோம்.

உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் ஒருமுறை சொன்னார்கள்: "இறைவனின் அருட்கொடைகளைப் பற்றிச் சிந்திப்பது மிகச்சிறந்த இபாதத்தாகும். " இதையே இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் தனது இஹ்யா கிதாபில் இன்னும் ஆழமாகப் பதிவு செய்கிறார்கள்

تَفَكُّرُ سَاعَةٍ خَيْرٌ مِنْ عِبَادَةِ سَنَةٍ

ஒரு மணிநேரம் ஆழமாகச் சிந்திப்பது, ஓர் ஆண்டு காலம் (நஃபில்) இபாதத் செய்வதை விடச் சிறந்தது. (ஆதாரம்: இஹ்யா உலூமித்தீன் -பாகம் 4, கிதாபுத் தஃபக்குர்)

ஏன் தெரியுமா? காகிதப்பூக்களுக்கு வாசனை கிடையாது; திரையில் ஓடும் பிம்பங்களுக்கு ஆன்மா கிடையாது. சஹாபாக்கள் ஒரு மரத்தின் இலையசைவில் கூட இறைவனின் பேராற்றலின் சான்றுகளைத் தரிசித்தார்கள்.அந்தத் தேடல்தான் அவர்களின் அறிவைக் கூர்மையாக்கியது.

குர்ஆன் வினவுகிறது

أَفَلَا يَنظُرُونَ إِلَى الْإِبِلِ كَيْفَ خُلِقَتْ

"ஒட்டகம் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது என்று அவர்கள் பார்க்க வேண்டாமா?" ( அல்குர்ஆன்: 88:17)

இங்கே 'பார்ப்பது' என்பது வெறும் விழித்திரைச் செயல் அல்ல; அது அறிவின் ஊற்றுக்கண்ணைத் திறக்கும் செயல். இன்று நாம் திரைகளைப் பார்க்கிறோம், ஆனால் எதையும் 'உற்று நோக்குவதில்லை'. தகவல்கள் நம் மூளையை நிரப்புகின்றன, ஆனால் ஞானம் நம் இதயத்தைத் தொடுவதில்லை. இந்த 'தஃபக்குர்' எனும் ஆழ்ந்த சிந்தனை குறையும்போது, மனித மூளை வெறும் தகவல்களைச் சேமிக்கும் கருவியாக மாறுகிறதே தவிர, ஒரு வழிகாட்டியாக (Leader) பரிணமிப்பதில்லை

## சிந்தனையே வெற்றியின் திறவுகோல்

வாள்களின் கூர்மையை விடவும், வீரத்தின் வேகத்தை விடவும் சில நேரங்களில் ஒரு மனிதனின் 'ஆழ்ந்த சிந்தனை' வரலாற்றின் திசையையே மாற்றிவிடும். அறிவின் சாளரங்கள் திறந்திருக்கும்போதுதான் ஓர் ஆன்மா ஒளியைப் பெறுகிறது. மதீனாவின் மணல் பரப்பில் பத்தாயிரம் பகைவர்களின் காலடி ஓசை கேட்ட அந்த இக்கட்டான சூழலில், ஒரு மனிதனின் அறிவுக்கூர்மை எப்படி ஒரு தேசத்தையே காத்தது என்பதற்குச் சரித்திரப் புகழ்பெற்ற கந்தக் எனப்படும் அகழிப் போர் ஒரு உன்னதச் சான்று.

பகைமையின் நிழல் திசையெங்கும் படர்ந்து, மதீனாவே ஒரு நெருக்கடியில் சிக்கியிருந்த அந்தத் தருணத்தில், ஸல்மான் பார்ஸி (ரலி)

அவர்கள் மற்றவர்கள் யோசிக்காத ஒரு கோணத்தில் சிந்தித்தார்கள். அறிவு என்பது வெறும் தகவல்களின் குவியல் அல்ல; அது நெருக்கடியில் பிறக்கும் தீர்வின் வெளிச்சம். பாரசீகத்தின் தற்காப்பு முறையான அகழி வெட்டும் முறையை அவர் முன்மொழிந்தபோது, அது ஒரு புதிய விடியலாக அமைந்தது.

إِنَّا كُنَّا بِأَرْضِ فَارِسَ إِذَا حُوصِرْنَا خَنْدَقْنَا عَلَيْنَا   يَا رَسُولَ اللَّهِ

இறைத்தூதர் அவர்களே! பாரசீக மண்ணில் நாங்கள் முற்றுகையிடப்பட்டால், எங்களைச் சுற்றி அகழிகளை வெட்டிப் பாதுகாத்துக் கொள்வோம். (ஆதாரம்: அல்-பிதாயா வந்-நிஹாயா.)

அரபியர்கள் அதுவரை அறிந்திராத அந்தப் புதிய வியூகம், ஒரு மனிதனின் தனித்துவமான தேடலால் விளைந்தது. இன்று ஆய்வுகள் சொல்லும் "அறிவுத்திறன் குறைபாடு" என்பது வெறும் மனப்பாடத் திறன் குறைவதல்ல; ஒரு சூழலை ஆராய்ந்து, அதில் புதிய பாதையை உருவாக்கும் அந்த 'ஞானம்' மழுங்குவதுதான்.

சல்மான் பார்ஸி (ரலி) போன்ற சஹாபாக்கள் அன்றாடச் சிதறல்களில் தங்கள் சிந்தனையைச் சிறைவைக்கவில்லை. மாறாக, உலகத்தின் இயங்கியலை உற்று நோக்கினார்கள். அவர்கள் பெற்ற அந்தத் தெளிவுதான், இன்றும் உலகம் வியக்கும் போர் வியூகங்களை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தது. அறிவு என்பது சேகரித்து வைக்கும் சுமையல்ல; அது இருளைக் கிழிக்கும் சுடர். அந்தச் சுடர் மங்கும்போது, ஒரு சமூகத்தின் எதிர்காலமே இருளுக்குள் தள்ளப்படுகிறது.

**வீழ்வது போல் வெல்லும் விவேகம்**

சல்மான் பார்ஸி (ரலி) அவர்கள் அன்று மண்ணைத் தோண்டி அகழி வெட்டியது வெறும் தற்காப்பு அல்ல; அது பாரசீகத்தின் அனுபவத்தையும், மதீனாவின் தேவையையும் இணைத்த ஒரு 'அதிநவீனச் சிந்தனை'. ஆனால் இன்று, நம் விரல்கள் திரைகளைத் தோண்டிக் கொண்டிருக்கின்றன- எதையும் எட்ட முடியாத ஆழத்தில்!

அறிவின் ஆழம் தகவல்களை சேகரிப்பதை விட எதை விடுவது என்று தீர்மானிப்பதில் இருக்கிறது. ஒருமுறை கலீஃபா உமர் (ரலி) அவர்கள் சொன்னார்கள்

لَيْسَ الْعَاقِلُ الَّذِي يَعْرِفُ الْخَيْرَ مِنَ الشَّرِّ ، وَلَكِنَّ الْعَاقِلَ الَّذِي يَعْرِفُ خَيْرَ الشَّرَّيْنِ

அறிவாளி என்பவன் நன்மையையும் தீமையையும் பிரித்தறிபவன் மட்டும் கிடையாது; இரண்டு தீமைகள் வரும்போது அதில் மிகக்குறைந்த தீமை எது எனத் தேர்ந்தெடுப்பவனே உண்மையான அறிவாளி. (ஆதாரம்: முஸன்னஃப் இப்னு அபீ ஷைபா - (கிதாபுஸ் ஸுஹ்த்), பாகம்: 7)

இன்று ஆய்வு சொல்லும் IQ குறைவு' என்பது மூளை சுருங்கிப் போனதால் வந்ததல்ல; அது தேவையற்ற குப்பைகளால் நிரம்பி வழிவதால் வந்த விபத்து. ஹுதைபியா உடன்படிக்கையின் போது, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எடுத்த

அந்த அமைதியான முடிவு, ஒரு வீரனின் வாளை விடவும் கூர்மையானது. எதிரிகள் நிபந்தனைகளை அடுக்கியபோது, உணர்ச்சிவசப்படாமல் உற்று நோக்கிய அந்தப் பார்வைதான் பின்னாளில் 'மக்கா வெற்றிக்கான' திறவுகோலாக மாறியது.

அங்கே செயல்பட்டது 'பஸீராஹ்' (Basirah) எனும் அகப்பார்வை. திருமறை சொல்லும் அந்த நுட்பமான பார்வை நம்மிடம் இருக்கிறதா?

أَفَلَمْ يَسِيرُوا فِي الْأَرْضِ فَتَكُونَ لَهُمْ قُلُوبٌ يَعْقِلُونَ بِهَا

"அவர்கள் பூமியில் பிரயாணம் செய்யவில்லையா? (அவ்வாறு செய்திருந்தால்) அவர்களுக்குச் சிந்திக்கக்கூடிய இதயங்கள் உண்டாகியிருக்குமே!" (அல்குர்ஆன்: 22:46)

நமது முன்னோர்கள் ஒரு செய்தியைச் சரிபார்க்க மைல்கணக்கில் நடந்தார்கள். அந்தப் பயணம் அவர்களுக்குப் பொறுமையைக் கற்றுத் தந்தது; அந்தப் பொறுமைதான் 'ஆழமான சிந்தனையாக' உருமாறியது. இன்று அந்தப் பயணம் ஒரு 'கிளிக்'கில் முடிந்துவிடுகிறது. தேடல் சுருங்கிய இடத்தில், ஞானமும் சுருங்கிப் போய்விட்டது. அறிவாற்றல் குறைகிறது என்பது நம் தலைமுறைக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையல்ல; அது நம் சிதறிய கவனத்தை நாம் மீட்டெடுக்க விடுக்கப்பட்ட ஓர் எச்சரிக்கை மணி. இறைவன் நமக்குத் தந்த மூளை ஒரு திசைகாட்டி; அதைத் திரைகளுக்குப் பின்னால் தொலைத்துவிட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கிறோம். வாசிப்பாலும், மௌனத்தாலும் நம் சிந்தனையைச் சீர்செய்வோம். அதுவே நம் அறிவுத்திறனை மீட்கும் ஒரே வழி.

**கவனச் சிதறல்: அறிவைக் கொல்லும் கண்ணுக்குத் தெரியாத நச்சு**

பயணங்கள் சுருங்கி, தகவல்கள் விரல் நுனியில் வந்து விழுந்தபோது நாம் இழந்தது நம் 'நிதானத்தை'. இன்று ஆய்வுகள் சொல்லும் அந்த அறிவுத்திறன் குறைபாட்டிற்கு (IQ drop) முக்கியக் காரணம், மூளை எதிலும் நிலைக்காமல் திசைமாறிக்கொண்டே இருப்பதுதான். ஒரு சிறிய அலைபேசித் திரை நம் கவனத்தை ஆயிரம் துண்டுகளாக உடைக்கிறது. அறிவைச் சிதறவிடாமல் ஒரு புள்ளியில் குவிப்பது எவ்வளவு பெரிய பேராற்றல் என்பதற்கு, மதீனாவின் அந்தப் பள்ளிவாசலில் அரங்கேறிய ஒரு நெகிழ்ச்சியான சம்பவம் ஆகச்சிறந்த சான்று.

திண்ணைத் தோழர்களில் ஒருவராக, வறுமையின் பிடியில் வயிறு ஒட்டிப் போயிருந்தாலும், அறிவின் தாகத்தில் விழி விரித்துக் காத்திருந்தவர் அபூ ஹுரைரா ரலி). சஹாபாக்களிலேயே அதிக ஹதீஸ்களை நினைவில் வைத்திருந்த அந்தப் பேராற்றல், வெறும் மனப்பாடத் திறனால் வந்தது என்பதை விட, அது புறச் சூழல்கள் எதற்கும் இடங்கொடாத 'கவனக் குவிப்பால்' (Laser Focus) விளைந்தது எனலாம்.

ஒருநாள், தனது மறதியைப் பற்றி அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் அவர்கள் முறையிட்ட அந்தத் தருணம் மிக அழகானது. சுற்றியிருக்கும்

உலகத்தை மறந்து, தன் ஆசானின் முகத்தையே உற்று நோக்குகிறார். நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: "உமது மேலாடையை விரியும். "சுருக்கங்கள் விழுந்த அந்த எளிய மேலாடையை அவர் விரித்தபோது, அங்கே நிலவியது ஒரு நிசப்தமான மௌனம். நபி (ஸல்) அவர்கள் தன் அருட்கரங்களால் தனது உபதேசங்களை அள்ளி அந்த ஆடையினுள் கொட்டுவது போல சைகை செய்தார்கள்..

இதை உமது நெஞ்சோடு அணைத்துக்கொள்ளும் என்றார்கள்.

فَضَمَمْتُهَا فَمَا نَسِيتُ شَيْئًا بَعْدَهُ

நான் அதை என் நெஞ்சோடு இறுக்கி அணைத்துக்கொண்டேன். அதன் பிறகு என் வாழ்நாளில் நான் எதையும் மறக்கவே இல்லை. (ஆதாரம்: ஸஹீஹ் புகாரி - 119)

அந்தத் தருணத்தை எண்ணிப் பாருங்கள்! ஆடையினுள் விழுந்ததை அணைத்துக்கொண்டது வெறும் சைகை அல்ல; அது தன் ஆசான் மொழிந்த ஒவ்வொரு சொல்லையும், அசைவையும், அதன் ஆழத்தையும் ஒரு புள்ளியில் குவித்துத் தன் ஆன்மாவுக்குள் கடத்திய அந்த 'தீவிரமான கவனம்.

இன்று நம் கைகளில் இருப்பது 'மேலாடை' அல்ல; அது 'டிஜிட்டல் திரை'. அது எதையும் அணைத்துக்கொள்ள விடுவதில்லை; மாறாக எல்லாவற்றையும் நழுவ விடுகிறது. ஜாரெட் ஹோர்வத் தனது ஆய்வில் சொல்வது போல, இன்றைய தலைமுறை எதையும் ஆழமாகப் பதிவு செய்வதில்லை.

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் ஒரு செய்தியை எப்படிக் கேட்டார்களோ, அப்படியே தன் இதயத்தின் ஆழத்தில் செதுக்கினார்கள். ஆனால் நாம், ஒரு செய்தியை வாசித்து முடிப்பதற்குள் அடுத்த 'நோட்டிபிகேஷன்' நம் கவனத்தை அறுத்துவிடுகிறது. நம் மூளை தகவல்களைச் சேகரிக்கும் கருவியாக இருக்கிறதே தவிர, அதைச் செரித்து ஞானமாக மாற்றும் வலிமையை இழந்து நிற்கிறது.

**மீட்சிக்கான திறவுகோல்: தியானமாக மாறும் வாசிப்பு**

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அன்று காட்டிய அந்த 'லேசர்' போன்ற கவனக் குவிப்பு (Laser Focus) இன்று நம்மிடம் தொலைந்து போயிருக்கிறது. நம் மூளை தகவல்களைச் சேகரிக்கும் கருவியாக இருக்கிறதே தவிர, அதைச் செரித்து ஞானமாக மாற்றும் வலிமையை இழந்து நிற்கிறது. இந்தச் சிதைந்த கவனத்தை மீட்டெடுக்கும் அருமருந்து, வாசிப்பை ஒரு தவமாக மாற்றுவது மட்டுமே.

வாசிப்பு என்பது ஒரு தளம். இன்று நம் கவனம் ஒரு வண்ணத்துப் பூச்சியைப் போலத் திரைக்குத் திரை தாவிக்கொண்டிருக்கும் வேளையில், ஒரு புத்தகத்தின் பக்கங்களில் நாம் மூழ்கும்போது நம் சிதறிக் கிடக்கும் சிந்தனை நரம்புகள் ஒரு புள்ளியில் குவியத் தொடங்கும்.

அறிவைத் தேடி அலைந்த நம் முன்னோர்களின் வாழ்வில் இதற்கு உன்னதமான ஒரு உதாரணம் உண்டு. இமாம் இப்னுல் ஜவ்ஸீ (ரஹ்) அவர்கள்

புத்தகங்களை வாசிப்பதில் எவ்வளவு கவனம் கொண்டிருந்தார்கள் என்றால், ஒரு செய்தியைத் தேடும்போது சுற்றியுள்ள உலகத்தையே மறந்து விடுவார்கள். அவர்கள் சொல்கிறார்கள்

"நான் ஒரு புத்தகத்தைப் பார்க்க நேர்ந்தால், எனக்குப் புதியதொரு உலகம் திறந்தது போன்ற உணர்வு ஏற்படும். நான் பல்லாயிரக்கணக்கான புத்தகங்களை வாசித்திருக்கிறேன்."

அவர்களின் அந்தத் தீவிரமான கவனத்தைக் குறித்து ஒரு பொன்மொழி

كُلّ عِزّ لَا يُؤَكَّدُ بِعِلْمٍ فَإِلَى ذُلّ مَا يَصِيرُ

"அறிவினால் உறுதிப்படுத்தப்படாத எந்தப் பெருமையும், இறுதியில் இழிவாகவே முடியும்.

ஆதாரம்: صيد الخاطر - ஸைதுல் காதிர் அவர்கள் உணவருந்தும் நேரத்தைக் கூடக் குறைத்துக் கொண்டு வாசிப்பில் மூழ்கினார்கள். அந்த நிதானம்தான் அவர்களை 500-க்கும் மேற்பட்ட நூல்களை எழுத வைத்தது.

**இது வீழ்ச்சியல்ல, புதிய விடியலுக்கான ஆயத்தம்!**

ஜாரெட் ஹோர்வத் எச்சரிக்கும் இந்த அறிவுத்திறன் வீழ்ச்சி என்பது "ஜென்-இசட்" (Gen-Z) தலைமுறையின் தோல்வியல்ல; மாறாக, தகவல்கள் மலிந்த ஒரு சூழலில் நம்மைத் தற்காத்துக் கொள்ள வேண்டிய தருணத்தின் கட்டாயம். முந்தைய தலைமுறையினர் புத்தகங்களைத் தேடிச் சென்றார்கள், இன்றைய தலைமுறையினரோ தகவல்களின் பெருவெள்ளத்தில் நீந்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த வேகமான உலகில், அந்த வேகம் நம் விவேகத்தைக் கொன்றுவிடாமல் பார்த்துக் கொள்வதே இப்போதைய சவால்.

மாற்றம் ஒன்றே மாறாதது" என்பார்கள். இன்றைய இளைஞர்கள் தொழில்நுட்பத்தைக் கையாள்வதில் கில்லாடிகள். அதே வேகத்தை ஒரு நிமிடம் நிறுத்தி, 'தஃபக்குர்' எனும் ஆழ்ந்த சிந்தனைக்குள் நுழையும்போது, அவர்கள் உலகமே வியக்கும் மேதைகளாக மாறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. அலைபேசித் திரையில் நாம் செய்யும் ஒவ்வொரு 'ஸ்க்ரோலிங்கும்' நம் கவனத்தை அறுக்கிறது என்றால், புத்தகத்தின் ஒவ்வொரு பக்கமும் அதைத் தைக்கிறது என்பதை உணர வேண்டும்.

இறைவன் நமக்குத் தந்த மூளை ஒரு திசைகாட்டி; அதைத் தேவையற்ற தகவல்களுக்குப் பின்னால் தொலைத்துவிட்டுத் தடுமாறக் கூடாது. நம் முன்னோர்கள் ஒரு செய்தியைச் சரிபார்க்கப் பல மைல்கள் நடந்த அந்தப் பொறுமையையும், அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் காட்டிய அந்தப் பேராற்றல் மிக்க கவனக் குவிப்பையும் இன்றைய நவீனத் தொழில்நுட்பத்தோடு இணைத்தால், இந்த உலகம் இதுவரை கண்டிராத ஒரு மாபெரும் அறிவுப் புரட்சியை இந்தத் தலைமுறையால் நிகழ்த்த முடியும்.

எனவே, ஜென்-இசட் தோழர்களே! திரைகளைத் தாண்டித் தேடுங்கள். தினமும் ஒரு 20 நிமிடம் அலைபேசியை ஓரம் தள்ளிவிட்டு, ஒரு புத்தகத்தின்

பக்கங்களில் உங்கள் ஆன்மாவைப் பதிய வையுங்கள். வாசிப்பால் உங்கள் சிந்தனையைச் சீர்செய்யுங்கள்; மௌனத்தால் உங்கள் ஞானத்தை வளர்த்தெடுங்கள். அப்போதுதான் உங்கள் அறிவுத்திறன் மழுங்காமல், மதீனாவின் விடியலைப் போலப் பிரகாசிக்கும்! நீங்கள் வெறும் திரையைப் பார்ப்பவர்கள் அல்ல; இந்த உலகின் திசையை மாற்றப் போகும் தெளிவான அகப்பார்வை கொண்ட வெற்றியாளர்கள்!

டிஜிட்டல் திரைகளுக்குப் பின்னால் ஓடுவதை நிறுத்திவிட்டு, நம்மைச் சுற்றியுள்ள பிரபஞ்சத்தையும் அதன் நுணுக்கங்களையும் ஒரு நிமிடம் சிந்தித்துப் பார்ப்போம். இறைவன் நமக்குத் தந்த அந்த மகத்தான சிந்தனைத் திறனைச் சரியாகப் பயன்படுத்தினால் மட்டுமே, இந்தத் தலைமுறை இழந்த ஞானத்தை மீண்டும் மீட்க முடியும்.

اَفَلَمْ يَسِيْرُوْا فِى الْاَرْضِ فَتَكُوْنَ لَهُمْ قُلُوْبٌ يَّعْقِلُوْنَ بِهَاۤ اَوْ اٰذَانٌ يَّسْمَعُوْنَ بِهَا ۚ فَاِنَّهَا لَا تَعْمَى الْاَبْصَارُ وَلٰكِنْ تَعْمَى الْقُلُوْبُ الَّتِىْ فِى الصُّدُوْرِ ‏

அவர்கள் பூமியில் பிரயாணம் செய்து (இவற்றைப்) பார்க்கவில்லையா? (அவ்வாறு பார்த்திருந்தால்) அவர்களுக்கு விளங்கிக் கொள்ளக்கூடிய உள்ளங்களும், (நல்லவற்றைச்) செவியேற்கும் காதுகளும் உண்டாகியிருக்கும், நிச்சயமாக (புறக்) கண்கள் குருடாகவில்லை; எனினும், நெஞ்சுக்குள் இருக்கும் இதயங்கள் (அகக் கண்கள்) தாம் குருடாகின்றன. (அல்குர்ஆன் 22-46)

## இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள், "நாம் எழுதப்படிக்கத் தெரியாத சமுதாயம் (உம்மத்துன் உம்மிய்யா) ஆவோம்; எழுதுவதை நாம் அறியமாட்டோம்; (நட்சத்திரக்) கணிதத்தையும் நாம் அறியமாட்டோம். மாதம் என்பது (சில வேளைகளில்) இப்படியும் இப்படியும் இப்படியும் (இருபத்தொன்பது நாட்களாக) இருக்கும்" என்று (மூன்று தடவை) கூறி, மூன்றாவது தடவையில் பெருவிரலை மடக்கிக்கொண்டார்கள். மேலும், மாதம் என்பது (சில வேளைகளில்) இப்படியும் இப்படியும் இப்படியும் -அதாவது முப்பது நாட்களாகவும்- இருக்கும் என்று கூறினார்கள்.

இந்த ஹதீஸ் மூன்று அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது.

- மேற்கண்ட ஹதீஸ் மற்றோர் அறிவிப்பாளர் தொடரிலும் வந்துள்ளது. அதில் இரண்டாவது மாதத்தைக் குறிப்பிடுகையில், "அதாவது முப்பது இரவுகள்" எனும் விளக்கக் குறிப்பு இடம்பெறவில்லை.

# ரமழானுக்குப் பின் நான் யார்?..

மௌலவி அல்ஹாஃபிழ்
N. S. M பஷீர் அஹமது உஸ்மானி
முதல்வர், ஸபீலுல் ஹுதா நிஸ்வான் மதரஸா, சிவகங்கை



ரமழானின் நிறைவுப் பகுதியில் ரமழானின் இறுதி ஜும்ஆவில் நாம் வீற்றிருக்கின்றோம்.

ஏனெனில், அடுத்த வியாழக்கிழமை மாலை பிறை பார்க்க வேண்டிய நாள். ஒரு வேளை பிறை தென்பட்டால் வெள்ளிக்கிழமை ஈதுடைய நாள். இல்லை என்றால் வெள்ளிக்கிழமை முப்பதாவது நோன்பாகும்.

ரமழான் இன்னும் ஏழு நாட்களில் விடை பெற இருக்கிறது. ஆனால் நாம் விடை கொடுக்கும் மனோ நிலையில் இல்லை.

இந்த ரமழானில் இருந்து அடுத்த பதினோரு மாதங்களுக்கு என்ன கொண்டு செல்ல இருக்கின்றோம். இந்த ரமழானில் நாம் எதை எடுத்துக் கொண்டோமோ அதைத் தான் நாம் அடுத்த பதினோரு மாதங்களுக்கு கொண்டு செல்ல முடியும்.

நம்மில் ஒருவர் ஹஜ்ஜுக்கு சென்று திரும்பி வருவார். உம்ராவுக்கு சென்று திரும்பி வருவார்.

இது போன்று புனித பயணங்களில் இருந்து திரும்பி வருபவரிடம் அவரின் குடும்பமும், உற்றாரும் சுற்றத்தாரும் என்ன எதிர் பார்ப்பார்களோ? அது போன்று தான் இந்த ரமழானில் இருந்து நாம் விடை பெறும் போது நம்மைச் சுற்றியுள்ளவர்கள் நம்மிடம் புனிதமான ரமழானில் நம்மை எப்படியெல்லாம் இருக்க கண்டார்களோ அப்படியெல்லாம் மற்ற மாதங்களில் இருக்க வேண்டும் என்று ஆசைப் படுவார்கள்.

எனவே, ரமழானில் நாம் எதை எடுத்துக் கொண்டிருக்கின்றோம்? என்பது முக்கியத்துவம் பெறுகிறது.

ஐந்து நேரத் தொழுகைகளை உரிய நேரத்தில் பேணுதலாக தொழுதவர்கள் பலர் உண்டு.

தராவீஹ் உட்பட தஹஜ்ஜத் மற்றும் உபரியான முன் பின் சுன்னத்தான தொழுகைகளை நியமமாக தொழுதவர்கள் பலர் உண்டு.

நோன்பாளிகள் சவுகரியமாக நோன்பு திறக்க பதறாமல், முகம் சுளிக்காமல் ஆர்வத்துடன் பணிவிடைகள் செய்தவர்கள் பலர் உண்டு.

ஸதகா, ஜகாத் மூலம் தர்ம காரியங்களில் தமது பொருளாதாரத்தை ஏழை எளிய மக்களுக்கு, வறிய மக்களுக்கு வாரி வழங்கிய பலர் உண்டு.

ஹாஃபிழ்களை, ஆலிம்களை, முஅத்தின்களை அன்பளிப்புகளால் அரவணைத்தவர்கள் பலர் உண்டு.

வீட்டு வேலைகளை மனைவியோடு, தாய் சகோதரியோடு அகமகிழ்ந்து பகிர்ந்து கொண்டவர்கள் பலர் உண்டு.

நன்மை பெற்றிடும் நோக்கத்துடன் அரும் பணியாற்றிய பல பிரமுகர்கள், நிர்வாகிகள், தன்வந்தர்கள் பலர் உண்டு.

பிறரை ஏசாமல் பேசாமல் தமக்கு சிரமம் கொடுத்தவருக்கு எந்த வகையிலும் பழி தீர்க்காமல் பண்போடு கடந்து சென்றவர்கள் பலர் உண்டு.

தன்னால் முடிந்த இபாதத்களை, குர்ஆன் திலாவத்தை, திக்ர்களை, நபி ﷺ அவர்கள் மீது ஸலவாத் ஓதி, தான் உண்டு தன் வேலை உண்டு என நேரத்தை கச்சிதமாக பயன்படுத்திய பலர் உண்டு.

எல்லாவற்றுக்கும் மேலாக இறைவன் மீது உள்ள பயத்தால் பாவங்களில் இருந்து விலகி, தன்னை தற்காத்துக் கொள்ள ஷைத்தானுடன் போராடிய முஜாஹித்கள் இங்கு பலர் உண்டு.

இவை எல்லாம் இந்த ஒரு மாதத்திற்காகவா? இல்லை, வாழ்க்கை முழுவதும் எடுத்துச் செல்வதற்காகவா?

ரமழானில் நாம் செய்த அனைத்து நற்காரியங்களும் வாழ்க்கை முழுவதும் எடுத்துச் செல்வதற்காக என்று இருக்குமானால் ஒரு சபதம் எடுத்துக் கொள்வோம்.

ரமழானில் நான் எப்படி இருந்தேனோ அது போன்றே என் வாழ்நாள் முழுவதும் நான் செயல் பட நீ அருள் புரிவாயாக! ரப்பே!

யாஅல்லாஹ்! ரமழானில் என்னை எப்படி நீ வழிநடத்தினாயோ அது போன்றே என் வாழ்நாள் முழுவதும் நீ என்னை வழிநடத்துவாயாக! என்று துஆ செய்து விட்டு,

இப்போது நாம் அல்லாஹ்வின் மீது சபதம் எடுத்துக் கொள்வோம்! யாஅல்லாஹ்!

இன்ஷா அல்லாஹ்.... முதற் கட்டமாக நான் ரமழானில் எடுத்துக் கொண்ட என் சிறந்த செயல்பாடுகளை எதிர் வரும் ரமழான் வரை பதினோரு மாதங்களும் தவறாது கடை பிடிப்பேன்.

அல்லாஹ் ரப்புல் ஆலமீன் நம்மை அவனுடைய மார்க்கத்திற்காக கபூல் செய்தருள்வானாக! ரமழானின் நிறைவை அல்லாஹ் ரப்புல் ஆலமீன் நமக்கு நன்மையானதாக ஆக்கியருள்வானாக!

**1) ரமழானின் நிறைவு நல்லதாக அமையட்டும்!!**

பொதுவாக ஒரு முஃமின் செய்கிற எந்த ஒரு காரியத்தின் இறுதியும் நல்லதாக அமைய வேண்டும். அதற்காக நாம் அல்லாஹ்விடம் துஆச் செய்ய வேண்டும்.

மாநபி ﷺ அவர்கள் தங்களுடைய பிரார்த்தனையில் அமல்களின் முடிவு நல்லதாக அமைய அதிகம் பிரார்த்தித்திருக்கின்றார்கள்.

اَللَّهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ فَوَاتِحَ الْخَيْرِ وَخَوَاتِمَهُ وَجَوَامِعَهُ، وَأَوَّلَهُ وَآخِرَهُ، وَظَاهِرَهُ وَبَاطِنَهُ، وَالدَّرَجَاتِ الْعُلَى مِنَ الْجَنَّةِ.

யா அல்லாஹ்! நன்மைகளின் ஆரம்பங்களையும் முடிவுகளையும் இன்னும் எல்லா நன்மைகளையும் நிச்சயம் நான் உன்னிடம் கேட்கின்றேன். நன்மைகளின் ஆரம்பம், முடிவு, அதன் வெளிப்படை, அந்தரங்கம் மற்றும் சுவர்க்கத்தின் உயர்ந்த அந்தஸ்துக்களையும் நான் உன்னிடம் கேட்கின்றேன்.( நூல்: தப்ரானி )

إِنَّ الَّذِينَ هُمْ مِنْ خَشْيَةِ رَبِّهِمْ مُشْفِقُونَ (57) وَالَّذِينَ هُمْ بِآيَاتِ رَبِّهِمْ يُؤْمِنُونَ (58) وَالَّذِينَ هُمْ بِرَبِّهِمْ لَا يُشْرِكُونَ (59) وَالَّذِينَ يُؤْتُونَ مَا آتَوْا وَقُلُوبُهُمْ وَجِلَةٌ أَنَّهُمْ إِلَى رَبِّهِمْ رَاجِعُونَ (60) أُولَئِكَ يُسَارِعُونَ فِي الْخَيْرَاتِ وَهُمْ لَهَا سَابِقُونَ

நிச்சயமாக எவர்கள் தங்கள் இறைவனுக்குப் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கிறார்களோ அவர்களும், எவர்கள் தங்கள் இறைவனின் வசனங்களை மெய்யாகவே நம்பிக்கை கொள்கிறார்களோ அவர்களும், எவர்கள் தங்கள் இறைவனுக்கு எவரையும் இணை ஆக்காமல் இருக்கின்றனரோ அவர்களும், எவர்கள் தங்களுக்குச் சாத்தியமான வரை தானம் கொடுப்பதுடன் அவர்களுடைய உள்ளங்கள் நிச்சயமாக தங்கள் இறைவனிடம் செல்வோம் என்று பயந்து கொண்டிருக்கின்றனவோ அவர்களும், ஆகிய இவர்கள்தான் நன்மையான காரியங்களில் விரைந்து செல்கிறவர்கள். மேலும், அவர்கள் அவற்றை செய்வதில் ஒருவரை ஒருவர் முந்திக் கொள்கின்றனர். ( அல்குர்ஆன் 23 : 57-61 )

قال الإمام أحمد : حدثنا يحيى بن آدم ، حدثنا مالك بن مغول ، حدثنا عبد الرحمن بن سعيد بن وهب ، عن عائشة; أنها قالت : يا رسول الله ، ( والذين يؤتون ما آتوا وقلوبهم وجلة ) ، هو الذي يسرق ويزني ويشرب الخمر ، وهو يخاف الله عز وجل؟ قال : " لا يا بنت أبي بكر ، يا بنت الصديق ، ولكنه الذي يصلي ويصوم ويتصدق ، وهو يخاف الله عز وجل ". وهكذا رواه الترمذي وابن أبي حاتم ، من حديث مالك بن مغول ، به بنحوه . وقال : " لا يا بنت الصديق ، ولكنهم الذين يصلون ويصومون ويتصدقون ، وهم يخافون ألا يقبل منهم ،

மேற்கூறிய அல்முஃமினூன் அத்தியாயத்தின் 57 முதல் 61 வரையிலான வசனங்கள் இறக்கியருளப்பட்ட போது ஆயிஷா (ரலி) அவர்கள் நபி ﷺ அவர்களிடம் "அல்லாஹ்வின் தூதரே! செய்வதை செய்வார்கள், அவர்களுடைய உள்ளங்களோ அல்லாஹ்வின் பக்கம் தாங்கள் திரும்பவேண்டும் என்ற பயத்தில் இருக்கும் என்று அல்லாஹ் கூறுகிறனே? இந்த செய்வதை செய்வார்கள் என்றல் பாவங்கஊ செய்து கொண்டு மது அருந்திக் கொண்டு, திருடிக் கொண்டு, விபச்சாரம் செய்து கொண்டு அல்லாஹ்வை பயப்படுவதையா? இந்த வசனம் குறிக்கிறது" என்று கேட்டார்கள்.

அதற்கு நபி ﷺ அவர்கள் இல்ஊல சித்தீகின் மகளே! (ஆயிஷா!) இதைப்பற்றி அல்லாஹ் இங்கு சொல்லவில்ஊல. அல்லாஹ் இங்கு எதை சொல்கிறன்? ஒரு முஸ்லிம் அல்லாஹ்வை நம்பிக்கை கொண்ட ஒரு முஃமின் அல்லாஹ்வை இரவெல்லாம் வழிபட்டதற்குப் பிறகு, அவனுடைய பாதையில் போர் செய்த பிறகு, தான தர்மங்கஊ வாரி வழங்கியதற்கு பிறகு, அல்லாஹ்வை பயப்படுவான்.

அல்லாஹ் இதை ஏற்றுக் கொள்வானா? அல்லது இதை நிராகரித்து விடுவானா?" என்று அவர்களின் உள்ளங்கள் அஞ்சிக் கொண்டு இருக்கும் என்று நபி ﷺ அவர்கள் பதில் கூறினர்கள். ( நூல்: அஹ்மத் )

**2) நக்கலை, ஏளனத்தை புறந்தள்ள வேண்டும்!**

ரமழானுக்கு பிந்தைய நம்முடைய செயல்பாடுகள் சமூக மக்களிடையே ஒரு மாற்றத்தை பிரதிபலிக்க வேண்டும்.

சில போது நம்மை சமூகம் ஏற்றுக் கொள்ளவும் செய்யும் சில போது நம்மை ஏளனமாகவும் பேசும்.

என்னப்பா ஒரு மாதத்திலேயே மாறிட்ட போல! எத்தனை நாளைக்குன்னு பார்ப்போம் என்று நக்கலாக பேசலாம்.

ஆனால், எந்த ஒரு நல்ல அமலுக்கும் மாற்றத்திற்கான பிரதிபலிப்பு உண்டு என்ற நம்பிக்கையை மக்களுக்கு நம் இபாதத்கள் மூலம், நம் செயல்பாடுகள் மூலம் ஏற்படுத்த வேண்டும். மேலும், நெஞ்சுரத்தோடு அதை எதிர் கொண்டு ஈமானிய வாழ்க்கையில் தொடர வேண்டும்.

நபி ஷுஐபு அலை அவர்களின் ஏகத்துவ பிரச்சார பணியின் முனைப்பை கண்ட அவரது சமூகத்தினர் ஷுஐபு அலை அவர்களிடம் வியந்து கேட்டதை குர்ஆன் குறிப்பிடும் போது...

قَالُوْا يٰشُعَيْبُ اَصَلٰوتُكَ تَاْمُرُكَ اَنْ نَّتْرُكَ مَا يَعْبُدُ اٰبَآؤُنَآ اَوْ اَنْ نَّفْعَلَ فِىْٓ اَمْوَالِنَا مَا نَشٰٓؤُا اِنَّكَ لَاَنْتَ الْحَلِيْمُ الرَّشِيْدُ

(அதற்கு) அவர்கள் "ஷுஐபே! நாங்கள் எங்கள் மூதாதையர் வணங்கிய தெய்வங்களை விட்டு விடுமாறும், நாங்கள் எங்கள் பொருட்களை எங்கள் விருப்பப்படிச் செலவு செய்வதை விட்டுவிடுமாறும் உம்முடைய தொழுகையா உம்மை ஏவுகிறது? நிச்சயமாக நீர் கிருபையுள்ளவரும் நேர்மையானவரும் தான்" என்று (ஏளனமாகக்) கூறினார்கள்.

قَالَ يٰقَوْمِ اَرَءَيْتُمْ اِنْ كُنْتُ عَلٰى بَيِّنَةٍ مِّنْ رَّبِّىْ وَرَزَقَنِىْ مِنْهُ رِزْقًا حَسَنًا وَمَآ اُرِيْدُ اَنْ اُخَالِفَكُمْ اِلٰى مَآ اَنْهٰٮكُمْ عَنْهُ اِنْ اُرِيْدُ اِلَّا الْاِصْلَاحَ مَا اسْتَطَعْتُ وَمَا تَوْفِيْقِىْٓ اِلَّا بِاللّٰهِ عَلَيْهِ تَوَكَّلْتُ وَاِلَيْهِ اُنِيْبُ

(அதற்கு) ஷுஐபு கூறினார்: "(என்னுடைய) சமூகத்தவர்களே! நான் என்னுடைய இறைவனின் தெளிவான அத்தாட்சி மீது இருப்பதையும், அவன் தன்னிடமிருந்து எனக்கு அழகான ஆகார வசதிகளை அளித்து இருப்பதையும் நீங்கள் அறிவீர்களா? (ஆகவே) நான் எதை விட்டு உங்களை விலக்குகின்றேனோ, (அதையே நானும் செய்து உங்கள் நலனுக்கு) மாறு செய்ய நான் விரும்பவில்லை. என்னால் இயன்ற வரையில் (உங்களின்) சீர் திருத்தத்தையேயன்றி வேறெதையும் நான் நாடவில்லை; மேலும், நான் உதவி பெறுவது அல்லாஹ்வைக் கொண்டல்லாது வேறில்லை, அவனிடமே பொறுப்புக் கொடுத்திருக்கிறேன்; இன்னும் அவன் பாலே மீளுகிறேன். (அல்குர்ஆன்: 11: 87, 88)

**3) அமல் செய்யாத போது நமது மனம் உறுத்த வேண்டும்!**

ரமழானில் எப்படி அமல் செய்து கொண்டு அழகிய செயல்பாடுகளோடு இறைவனை பயந்து வாழ்ந்தோமோ அது போன்றே மற்ற பதினோரு மாதங்களும் வாழ முற்பட வேண்டும்.

ரமழானுக்கு முந்தைய பழைய மாதிரியான வாழ்க்கை முறையே நம்மிடம் தொடருமானால் நம்முடைய மனம் உறுத்த வேண்டும்.

عن أبي ربعي حنظلة بن الربيع الأسيدي الكاتب- رضي الله عنه- أحد كتاب رسول الله صلى الله عليه وسلم قال: لقيني أبو بكر رضي الله عنه فقال: كيف أنت يا حنظلة؟ قلت: نافق حنظلة! قال: سبحان الله ما تقول؟! قلت: نكون عند رسول الله صلى الله عليه وسلم يُذَكِّرُنَا بالجنة والنار كأنا رَأْيَ عَيْنٍ فإذا خرجنا من عند رسول الله صلى الله عليه وسلم عَافَسْنَا الأزواج والأولاد وَالضَّيْعَاتِ نسينا كثيرا، قال أبو بكر رضي الله عنه : فوالله إنا لنلقى مثل هذا، فانطلقت أنا وأبو بكر حتى دخلنا على رسول الله صلى الله عليه وسلم . فقلت: نافق حنظلة يا رسول الله! فقال رسول الله صلى الله عليه وسلم : «وما ذاك؟» قلت: يا رسول الله، نكون عندك تذكرنا بالنار والجنة كأنا رأي العين فإذا خرجنا من عندك عافسنا الأزواج والأولاد والضيعات نسينًا كثيرًا. فقال رسول الله صلى الله عليه وسلم : «والذي نفسي بيده، لو تدومون على ما تكونون عندي، وفي الذِّكر، لصافحتكم الملائكة على فرشكم وفي طُرُقِكُمْ، لكن يا حنظلة ساعة وساعة» ثلاث مرات.

[رواه مسلم]- [صحيح]

நபி ﷺ அவரகளின் எழுத்தாளர்களில் ஒருவரான அபூரிப்ஈ என்ற ஹன்ளலா இப்னு ரபீஉ அல் உஸைதி (ரழி) அறிவிக்கிறார்கள். ஒரு தடவை என்னை அபூபக்கர் (ரழி) அவர்கள் சந்தித்து "ஹன்ளலா எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்கள் அதற்கு "ஹன்ளலா முனாபிக் ஆகிவிட்டான் என்று நான் கூறினேன். "ஸுப்ஹானல்லாஹ் என்ன கூறுகிறீர்?" என்று கேட்டார்கள். அதற்கு நான் "நபி ﷺ அவர்களிடம் நாம் இருக்கும் போது சொர்கத்தையும், நரகத்தையும் நாம் நேரில் பார்ப்பது போலவே நினைவு கூர்கிறோம். நபி ﷺ அவர்களிடமிருந்து நாம் வெளியேறி வந்துவிட்டால் நம் மனைவியரை, குழந்தைகளை கவனிப்பதிலும் வாழ்க்கைத் தேவைகளுக்காக உழைப்பதிலும் மூழ்கிவிடுகிறோம். இதனால் அதிகமானதை மறந்து விடுகிறோம்." என்று கூறினேன்.

"அல்லாஹ்வின் மீது சத்தியமாக நிச்சயமாக இது போன்றே நானும் உணர்கிறேன்" என்று அபூபக்கர் (ரழி) கூறினார்கள். உடனே நானும் அபூபக்கர் அவர்களும் நபி ﷺ அவர்களிடம் வந்தோம். "இறை தூதர் அவர்களே! ஹன்ளலா நயவஞ்சகன் ஆகிவிட்டார்." என்று கூறினேன். "என்ன கூறுகிறீர்?" என்று நபி ﷺ அவர்கள் கேட்டார்கள். "இறைதூதர் அவர்களே! உங்களுடன் இருக்கும் போது கண்ணால் பார்ப்பது போல் சொர்க்கத்தையும்,நரகத்தையும் நினைவு கூர்கிறோம். உங்களை விட்டும் நாங்கள் வெளியேறி விட்டால் மனைவியர், குழந்தைகள், வாழ்க்கைத் தேவை என மூழ்கி அதிகமாக மறந்துவிடுகிறோம்." என்று கூறினேன். "எனது ஆத்மாவை தன் கைவசம் வைத்திருப்பவன் மீது சத்தியமாக என்னிடம் நீங்கள் இருக்கும் நிலையிலேயே இறைவனை நினைவு கூர்வதிலேயே தொடரந்தும் இருந்தால் உங்கள் படுக்கையிலும் உங்கள் வழிகளிலேயும் வானவர்கள் கைகொடுத்து மகிழ்வார்கள்.எனினும் ஹன்ளலாவே வணக்கத்திற்கு என ஒரு நேரம் உண்டு, வாழ்க்கைக்கு உழைப்பதற்கு என்று ஒரு நேரம் உண்டு." என்று மூன்று முறை கூறினார்கள். ( நூல்: முஸ்லிம் )

**4) நலவுகளின், நன்மைகளின் திறவுகோலாக இருக்க வேண்டும்!**

ரமழான் மாதத்தில் நாம் நன்மைகளின் குவியல்களை கண்ணாரக் கண்டு, அல்குர்ஆன் வசனங்கள், நபி ﷺ அவர்களின் நபிமொழிகள், முன்னோர்களின் வாழ்க்கை வரலாறுகளை காதால் கேட்டு, மனமார அனுபவித்து, உடலால் செல்வத்தால் வணக்க வழிபாடுகளில் கவனம் செலுத்தி இஸ்லாமிய வாழ்வியல் முறைகளை கனக் கச்சிதமாக பேணி வந்தோமோ அதே முறைகளை ரமழானுக்கு வெளியே மற்ற மாதங்களில் நாம் பேணுவதோடு நின்று விடாமல் நம் குடும்பம் நம்மைச் சுற்றியுள்ளவர்களும் நன்மையான காரியங்களை செய்ய, செய்த நன்மையான காரியங்களை தொடர தூண்டு கோலாக இருக்க வேண்டும்.

حَدَّثَنَا الْحُسَيْنُ بْنُ الْحَسَنِ الْمَرْوَزِيُّ، أَنْبَأَنَا مُحَمَّدُ بْنُ أَبِي عَدِيٍّ، حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ أَبِي حُمَيْدٍ، حَدَّثَنَا حَفْصُ بْنُ عُبَيْدِ اللَّهِ بْنِ أَنَسٍ، عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ ـ صلى الله عليه وسلم ـ " إِنَّ مِنَ النَّاسِ مَفَاتِيحَ لِلْخَيْرِ مَغَالِيقَ لِلشَّرِّ وَإِنَّ مِنَ النَّاسِ مَفَاتِيحَ لِلشَّرِّ مَغَالِيقَ لِلْخَيْرِ فَطُوبَى لِمَنْ جَعَلَ اللَّهُ مَفَاتِيحَ الْخَيْرِ عَلَى يَدَيْهِ وَوَيْلٌ لِمَنْ جَعَلَ اللَّهُ مَفَاتِيحَ الشَّرِّ عَلَى يَدَيْهِ " . خلاصة حكم المحدث : حسن بمجموع طرقه الراوي : أنس بن مالك | المحدث : الألباني | المصدر : السلسلة الصحيحة الصفحة أو الرقم : 1332

“மனிதர்களில் சிலர் நலவுக்கு திறவு கோலாகவும், தீமைகளுக்கு தடையாகவும் உள்ளனர், வேறு சிலர் தீமைகளுக்கு திறவு கோலாகவும் நலவுக்கு தடையாகவும் உள்ளனர், அல்லாஹ் எவரின் கரத்தினால் நலவின் வாயில்களை திறந்து விடுகிறானோ, அவருக்கு சுபசோபனம் உண்டாகட்டும், மேலும் எவன் மூலம் தீமைகளின் வாயில்கள் திறக்கப் படுகிறதோ அவன் மீது நாசம் உண்டாகட்டும்” என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி), ) நூல்: இப்னு மாஜா )

மாநபி ﷺ அவர்கள் இப்படி ஒரு அறிவிப்பை செய்ததோடு நிறுத்திக் கொள்ளாமல் அதற்கு செயல் வடிவமும் கொடுத்து நாம் எப்படி எல்லாம் நலவுகளின் திறவுகோலாய், நன்மைகளின் திறவுகோலாக இருக்க வேண்டும் என்று வழிகாட்டியும் இருக்கின்றார்கள்.

பத்ர் யுத்தத்திலே கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாதபடி மக்கா குரைஷிகளின் படை முஸ்லிம்களிடம் தோல்வியடைந்திருந்தது.

சிறைபிடிக்கப்பட்ட கைதிகளுள் சுஹைல் இப்னு அம்ரும் ஒருவர். அவருக்கு விலங்கிட்டு மதீனாவிற்கு இழுத்துச் சென்றார்கள் முஸ்லிம்கள்.

عندما وقع سهيل بن عمرو أسيرا في غزوة بدر اقترب عمر بن الخطاب من رسول الله ﷺ وقال: يا رسول الله.. دعني أنزع ثنيتي سهيل بن عمرو حتى لا يقوم عليك خطيبا بعد اليوم".. فأجابه الرسول: ﷺ كلا يا عمر.. لا أمثل بأحد، فيمثل الله بي، وان كنت نبيا، يا عمر..لعل سهيلا يقف موقفا يسرك غدا "...!!

உமர் (ரலி) அவர்கள் நபி ﷺ அவர்களிடம் சென்று, “அல்லாஹ்வின் தூதரே! சுஹைலின் முன் பற்களை நான் உடைத்து எடுத்து விடுகிறேன். அதன் பிறகு அவரது நாக்குத் துறுத்தி, எங்கும் எவர் முன்னிலையிலும் தங்களுக்கு எதிராகப் பேச இயலாதவராக ஆகிவிடுவார்” என்று அனுமதி கேட்டார்.

அதற்கு, முஹம்மது நபி ﷺ அவர்கள் “நான் எவருடைய அங்கத்தையும் சிதைக்க மாட்டேன். ஏனெனில், நான் அல்லாஹ்வின் தூதராகவே இருந்தபோதிலும் அல்லாஹ் என் அங்கத்தைச் சிதைக்கக்கூடும். ஒரு காலம் வரலாம். அப்பொழுது இவர் எழுந்து நின்று பேசப்போகும் பேச்சு நீங்கள் குறை காணமுடியாத ஒன்றாக அமையக்கூடும்” என்று பதில் அளித்து விட்டார்கள்.

ஹிஜ்ரி 8 வரை இஸ்லாத்தை எதிர்த்து நின்ற ஸுஹைல் இப்னு அம்ரு மக்கா வெற்றியின்போது தான் இஸ்லாத்தை ஏற்றார். எந்தளவு இஸ்லாத்தை எதிர்ப்பதில் அவர் உறுதியாக இருந்தாரோ அதைவிடப் பன்மடங்காக இஸ்லாமிய மார்க்கத்திற்காக களமாடினார். இவர்களோடு இவர்களது இரு மகன்கள் அபூஜன்தல் (ரலி) அப்துல்லாஹ் (ரலி) ஆகியோரும் இணைந்து யுத்த களங்களில் பங்கேற்றனர்.

وعندما حدثت فتنة الردة بعد وفاة الرسول ﷺ وقف سهيل عليهم خطيبا فقال:- يا أهل مكة ، لا تكونوا آخر من أسلم وأول من ارتد بعد موت النبي ﷺ، فثبت الله أهل مكة بكلامه.

பெருமானார் ﷺ அவர்கள் இந்த உலகை விட்டும் விடைபெற்றுச் சென்ற அந்த தருணம் மக்காவை உற்று நோக்கச் செய்தது.

அந்த நேரத்தில் ஸுஹைல் இப்னு அம்ர் ரலி அவர்கள் மக்களுக்கு மத்தியில் எழுந்து நின்று நிகழ்த்திய உரை பெருங்கொண்ட எண்ணிக்கையிலான மக்கள் மதம் மாறிப் போவதிலிருந்து, மீண்டும் நரகவாசலை சந்திப்பதில் இருந்து தடுத்து நிறுத்தியது.

ஆம்! ஸுஹைல் இப்னு அம்ர் ரலி அவர்கள் தம் முன்பாக திரண்டிருந்த மக்களை நோக்கி "மக்காவாசிகளே! இஸ்லாத்திற்குள் கடைசியாக நுழைந்து, நபி ﷺ அவர்களின் தூய மரணத்திற்குப் பின்னுல் மதம் மாறிப் போனவர்களில் முதலாவது நபர்களாக நீங்கள் ஆகிட வேண்டாம்!" என்று கூறினார்கள். அல்லாஹ் ரப்புல் ஆலமீன் அவர்களின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்த அந்த மக்களின் உள்ளத்தில் இஸ்லாத்தை நிலைபெறச் செய்தான்.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு நபி ﷺ அவர்கள் ஸுஹைல் இப்னு அம்ர் (ரலி) அவர்கள் விஷயத்தில் நன்மையின் திறவுகோலாய் திகழ்ந்தார்கள். இன்று, ஸுஹைல் இப்னு அம்ர் (ரலி) பெருங்கொண்ட எண்ணிக்கையிலான மக்களின் நல்வாழ்வுக்கு நன்மையின் திறவுகோலாய் விளங்கினுர்.

தமது ஆண்மக்கள் இருவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதை ஏற்க மறுத்த ஸுஹைல் இப்னு அம்ர் ரலி அவர்கள் பின்னால் தமது ஆண்மக்களின் தியாகம் கண்டு அகமகிழ்ந்தார்.

وذكر الواقدي قال : لما حج أبو بكر بالناس ، قبل حجة الوداع ، لقيه سهيل بن عمرو - رضـي الله عنه - فقال : بلغني يا أبا بكر أن رسـول الله - صلى الله عليه وسلم - قال : " يشفع الشهيد لسبعين من أهله " فأرجو أن يبدأ عبد الله بي .

அவர்களின் இளைய மகன் அப்துல்லாஹ் இப்னு ஸுஹைல் (ரலி) முஸைலமாவுக்கு எதிரான யமாமா யுத்தத்தில் உயிர்த்தியாகம் அடைந்தார்.

ஹஜ்ஜை நிறைவேற்றச் சென்ற கலீஃபா அபூபக்ரு, சுஹைல் (ரலி) அவர்களிடம் அவருடைய மகனாரின் இழப்பிற்கு ஆறுதல் கூறினார்.

அப்போது, ஸுஹைல் (ரலி) அவர்கள், அபூபக்ர் ரலி அவர்களிடம், “இஸ்லாத்திற்காக உயிர் நீக்கும் தியாகி, தம் குடும்பத்தினர் எழுபது பேருக்காக மறுமையில் சிபாரிசு அளிக்க முடியும் என்று அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் தெரிவித்ததாக எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. என் மகன் அப்துல்லாஹ் (ரலி) அந்த சிபாரிசை என்னிலிருந்து துவங்குவார் என நம்புகிறேன்” என்று சொன்னார். ( நூல்: ஸியரு அஃலாமின் நுபலா )

மிகவும் பிந்தி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதால் நன்மைகள் பலவற்றையும் இழந்து விட்டதாக கருதிய ஸுஹைல் இப்னு அம்ர் (ரலி) அவர்கள் பெருமளவு இறைவழிபாட்டிலும் நற்காரியங்களிலும் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள ஆரம்பித்தார்

மேலும், ஸுஹைல் இப்னு அம்ர் (ரலி) அவர்கள் முனைப்போடு போர்க்களங்களில் பங்கேற்று ஷஹீதாக விரும்பினார்கள்.

நன்மைகளை செய்ய முடியாது போனது குறித்து மிகவும் கவலை கொண்டார்கள். மற்றவர்களிடமும் அதை வெளிப்படுத்தினார்கள்.

استأذنا عمر للدخول فلم يأذن لهما، وبقيا مدة طويلة خارج الباب، فجاء بلال وصهيب بن سنان يستأذنا أمير المؤمنين في الدخول، وهو العبد الأسود الحبشي, فقام عمر بن الخطاب متهللاً، وأدخله قبل أبي سفيان بن حرب وسهيل بن عمرو , فغضب أبو سفيان وقال لـسهيل: العبد الحبشي يتقدم علينا! في الدخول.

فقال سهيل معلماً لـأبي سفيان بحكمة قائلاً: "يا أبا سفيان، إنما القوم قد سبقوا وتأخرنا، ودُعوا فأجابوا، وأخرنا، فإن كنت تريد هذا الأمر (إشارة إلى فوات الأوان على الأسبقية( "(المكانة العالية) فافعل (ادخل في الإسلام مبكراً) ولكن أين؟.

ஒருமுறை கலீஃபா உமரைச் சந்திக்கக் ஸுஹைல் இப்னு அம்ரு(ரலி) அவர்களும் அபூஸுஃப்யான் இப்னுல் ஹர்பு (ரலி) அவர்களும் வந்திருந்தனர். அது போன்று குரைஷிகளின் முன்னாள் அடிமைகளான சுஹைப், பிலால் போன்றவர்களும் காத்திருந்தனர்.

முன்னாள் அடிமைகளுக்குத்தான் கலீஃபாவைச் சந்திக்க முதலில் அனுமதி கிடைத்தது. இஸ்லாத்திற்குள் நுழைந்தபின் உயர்ந்தவர் – தாழ்ந்தவர் கிடையாதே!

அபூஸுஃப்யான் ஸுஹைல் இப்னு அம்ர் ரலி அவர்களிடம் “இதைப்போல் முன்னெப்போதும் நான் கண்டதில்லை. உமர் இவர்களை முதலில் அழைத்து, நம்மைக் காத்திருக்க வைக்கிறாரா?”

ஸுஹைல் பதில் அளித்தார். “மக்களே! உங்களது முகங்களுக்குப் பின்னால் உள்ளதை என்னால் புரிய முடிகிறது. உங்களுக்குக் கோபம் ஏற்பட்டால் அதை நீங்கள் உங்கள் மீதே கொள்ளுங்கள். அன்று இஸ்லாத்தை ஏற்க மக்களெல்லாம் அழைக்கப்பட்டனர்; நீங்களும் அழைக்கப்பட்டீர்கள். அவர்கள் முன்சென்று ஏற்றார்கள். நீங்கள் பின்தங்கி நின்றுவிட்டீர்கள்.

மறுமை நாளில் அவர்கள் முதலில் அழைக்கப்பட்டு நீங்கள் பின் தங்கி நிற்கும்போது உங்களுக்கு எப்படி இருக்கும் என நினைக்கின்றீர்கள்?” என்று கூறினார்கள். ( நூல்: ஸியரு அஃலாமின் நுபலா )

போர்க்களம் கண்டு ஷஹீதாக வேண்டும் என்று யுத்த களங்களில் பங்காற்றிக் கொண்டிருந்த ஸுஹைல் ரலி அவர்கள் இறுதியாக, ஹிஜ்ரீ 18 - ஆம் ஆண்டு உமர் (ரலி) அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட அமவாஸ் பேரிடரில் கொள்ளைநோயால் பாதிக்கப்பட்டு, நபி ﷺ அவர்கள் முன்னறிவிப்பு செய்த படி ஷஹீத் வீரமரணம் அடைந்தார்கள். ( நூல்: ஸியரு அஃலாமின் நுபலா ) அல்லாஹ் ரப்புல் ஆலமீன் ஸுஹைல் இப்னு அம்ர் ரலி அவர்களைப் பொருந்திக் கொண்டான்.

وَقَالَ ابْنُ عَدِيٍّ: تَابَ عَلَى يَدِ ابْنِ مَسْعُوْدٍ. وَعَنْ أَبِي هَاشِمٍ الرُّمَّانِيِّ. قَالَ: قَالَ زَاذَانُ: كُنْتُ غُلاَماً حَسَنَ الصَّوْتِ، جَيِّدَ الضَّرْبِ بِالطُّنْبُوْرِ، فَكُنْتُ مَعَ صَاحِبٍ لِـي، وَعِنْدَنَا نَبِيْذٌ وَأَنَا أُغَنِّيْهِمْ, فَمَرَّ ابْنُ مَسْعُوْدٍ, فَدَخَلَ, فَضَرَبَ البَاطِيَةَ, بَدَّدَهَا وَكَسَرَ الطُّنْبُوْرَ ثُمَّ قَالَ: لَوْ كَانَ مَا يُسْمَعُ مِنْ حُسْنِ صَوْتِكَ يَا غُلاَمُ بِالقُرْآنِ، كُنْتَ أَنْتَ أَنْتَ. ثُمَّ مَضَى، فَقُلْتُ لأَصْحَابِي: مَنْ هَذَا؟ قَالُوا: صاحب رسول الله ﷺ، وهَذَا ابْنُ مَسْعُوْدٍ. فَأَلْقَى فِي نَفْسِي التَّوْبَةَ، فَسَعَيْتُ أَبْكِي، وَأَخَذْتُ بِثَوْبِهِ، فَأَقْبَلَ عَلَيَّ، فَاعْتَنَقَنِي، وَبَكَى، وَقَالَ: مَرْحَباً بِمَنْ أَحَبَّهُ اللهُ، اجْلِسْ. ثُمَّ دَخَلَ وَأَخْرَجَ لِي تَمْراً. ثم لازم زاذان ابن مسعود حتى تعلم القرآن .. وصار إماماً في العلم.

ஜாதான் அழகிய குரலில் பாடும் இளைஞராக இருந்தார். ஒரு முறை நண்பர்களுடன் இசைக் கருவியை மீட்டி பாடல் பாடிக் கொண்டிருக்கும் போது அந்த வழியாக கடந்து சென்ற இப்னு மஸ்ஊத் ரலி அவர்கள் "இளைஞரே! எவ்வளவு அழகிய குரல் உமக்கு! இந்த குரலில் குர்ஆன் ஓதினால் எப்படி இருக்கும்?" என்று கூறி சென்று விட்டார்கள். அப்போது ஜாதான் அருகிலிருந்த தமது நண்பர்களிடம் யார் இவர்? என்று கேட்டார்.

இவர் யார் என்று தெரியாதா உனக்கு? இவர் நபி ﷺ அவர்களின் தோழர் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரலி அவர்கள் என்று பதிலளித்தார்கள்.

இதைக் கேட்ட மாத்திரத்திலேயே அவரது மனதிலே ஒரு மாற்றம். உடனடியாக தவ்பாச் செய்து தம் தவறுகளில் இருந்து மீண்டு, தன்னுடைய கடந்த கால செயல்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு நேரடியாக அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரலி அவர்களின் சபைக்கு வந்தார்.

ஜாதானைக் கண்டதும் இப்னு மஸ்ஊத் ரலி அவர்கள் "யாரை அல்லாஹ் நேசிக்கின்றானோ அத்தகைய இளைஞரே! வருக! உம் வருகை நல்வரவாகட்டும்!" என்று கூறி அமரச் செய்தார்கள். பின்னர் வீட்டின் உள்ளே சென்று பேரீச்சம்பழம் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

தொடர்ந்து இப்னு மஸ்ஊத் ரலி அவர்களிடம் பயின்ற ஜாதான் மிகப் பெரிய கல்விமான்களில் ஒருவராக, மிகப் பெரிய தாபிஈன்களில் ஒருவராக மாறினார்.

وَحَدَّثَ عَنْ: عَلِيٍّ، وَابْنِ مَسْعُودٍ، وَسَلْمَانَ، وَحُذَيْفَةَ، وَعَائِشَةَ، وَجَرِيرِ بْنِ عَبْدِ اللَّهِ، وَالْبَرَاءِ، وَابْنِ عُمَرَ.

رَوَى عَنْهُ: أَبُو صَالِحٍ السَّمَّانُ، وَعَمْرُو بْنُ مُرَّةَ، وَعَطَاءُ بْنُ السَّائِبِ، وَحَبِيبُ بْنُ أَبِي ثَابِتٍ، وَمُحَمَّدُ بْنُ سُوقَةَ، وَالْمِنْهَالُ بْنُ عَمْرٍو، وَمُحَمَّدُ بْنُ جُحَادَةَ.

ஹழ்ரத் உமர் ரலி அவர்கள் ஹழ்ரத் இப்னு மஸ்ஊத் ரலி அவர்கள் ஹழ்ரத் ஆயிஷா ரலி ஹழ்ரத் இப்னு உமர் ரலி உட்பட இன்னும் ஐந்து நபித்தோழர்களிடம் இருந்து நபி மொழிகளை அறிவிக்கக்கூடிய நம்பத்தகுந்த அறிவிப்பாளர்களில் ஒருவராக மிளிர்ந்தார்கள். இவர்களிடம் இருந்து அறிவிக்க கூடிய அறிவிப்பாளர்களும் நம்பத்தகுந்த அறிவிப்பாளர்களில் உள்ளவர்கள் ஆவார்கள். ( நூல்: ஸியரு அஃலாமின் நுபலா )

இப்போது நாம் அவர்களின் பெயரைச் சொல்லும் போது ரஹ்மத்துல்லாஹி அலைஹி என்றே இணைத்துச் சொல்ல வேண்டும் என்ற உயரிய நிலைக்கு உயர்ந்து விட்டார்கள்.

لو جمعتم كتابًا مختصرًا لصحيح سنة رسول الله صلى الله عليه وسلم" ألقاها إسحاق بن راهويه على طلابه، فوقعت في قلب تلميذه النجيب الإمام البخاريِّ، فألَّف أصح كتاب في الدنيا بعد كتاب الله "صحيح البخاري

ஒரு நாள் இஸ்ஹாக் இப்னு ராஹவைஹி (ரஹ்) அவர்கள் பாடம் நடத்தும் போது தங்களது மாணவர்களிடம் "நீங்கள் நமது நபி ﷺ அவர்களின் ஸஹீஹான ஹதீஸ்களை சுருக்கமாக ஒன்று திரட்டினால் இந்த உம்மத்திற்கு எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும்" என்று. இந்த வார்த்தை அன்றைய வகுப்பில் அமர்ந்திருந்த புகாரி (ரஹ்) அவர்களின் உள்ளத்தில் ஊடுருவிச் சென்று தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஆதலால், தனியொரு நபராக இருந்து இறைவேதத்திற்குப் பிறகு சிறந்த நூலான ஸஹீஹுல் புகாரியை இந்த உலகத்திற்கு அர்ப்பணிப்பு செய்தார்கள். ( நூல்: ஃபத்ஹுல் பாரி )

كان أبو حنيفة تاجر قماش يبيع في السوق ، فمر ذات يوم بالشعبي، وهو تابعي فقيه ومحدث؛ فقال له: إلى من تختلف؟ (يقصد من تذهب إليه؟) فقال: أختلف إلى فلان. قال: لم أعنِ إلى السوق، عنيت الاختلاف إلى العلماء.

فقال: أنا قليل الاختلاف إليهم. فقال له الشعبي: عليك بالنظر إلى العلم ومجالسة العلماء، فإني أرى فيك ذكاء وفطنة. قال أبو حنيفة: فوقع في قلبي من قوله، فأخذت في العلم، فنفعني الله بقوله.

இமாமுல் அஃளம் அபூ ஹனீஃபா (ரஹ்) அவர்கள் ஆரம்பத்தில் பெரும் வியாபாரியாக திகழ்ந்தார்கள். அவர்களின் கால நேரம் முழுவதும் வணிகவளாகத்திலும், சந்தையிலுமே கழிந்தது.

ஒருநாள் மிகப் பெரும் தாபிஈன்களில் ஒருவராக விளங்கிய இமாம் ஷுஅபீ (ரஹ்) அவர்கள் கடைத்தெரு வழியாக வந்து கொண்டு இருந்தார்கள்.

அப்போது, அபூ ஹனீஃபா ரஹ் அவர்கள் இடை மறித்து எங்கே சென்று வருகின்றீர்கள்? என்று கேட்டார்கள்.

அதற்கு நான் இன்ன மனிதரை சந்தித்து விட்டு வருகிறேன் என்று இமாம் ஷுஅபீ ரஹ் அவர்கள் பதில் கூற,

அப்போது, அபூ ஹனீஃபா ரஹ் அவர்கள் "நான் அதைக் கேட்கவில்லை. கருத்து முரண்கள் நிறைந்த உலமாக்கள் யாரையும் சந்தித்து வருகின்றீர்களா? என்று கேட்டேன். ஏனெனில், உலமாக்களிடம் எனக்கு சில கருத்து முரண்கள் உண்டு" என்றார்கள்.

அதற்கு, இமாம் ஷுஅபீ ரஹ் அவர்கள் "அபூ ஹனீஃபா அவர்களே! மார்க்க கல்வியோடு ஒரு தொடர்பையும், மார்க்க அறிஞர்களோடு ஒரு நெருக்கத்தையும் ஏற்படுத்திக் கொள்வீராக! ஏனெனில், உம்மிடம் நான் சிறந்த அறிவுத் திறனையும், ஆழ்ந்த நுண்ணறிவையும் காண்கிறேன்" என்று கூறினார்கள்.

இதன் பின்னர் இமாம் அபூ ஹனீஃபா ரஹ் அவர்கள் கூறினார்கள் "இமாம் ஷுஅபீ ரஹ் அவர்கள் சொன்ன இந்த வார்த்தை என் உள்ளத்தில் ஏதோ உண்டு பண்ணியது. பின்னர் நான் மார்க்கக் கல்வித்துறையை நோக்கி நகர்ந்தேன். அல்லாஹ் ரப்புல் ஆலமீன் இமாம் ஷுஅபீ ரஹ் அவர்களின் வார்த்தையின் மூலம் எனக்கு பயனைத் தந்தான்" என்றார்கள். ( நூல்: மனாகிபு அபூ ஹனீஃபா ரஹ் லிஇமாமி மக்கீ ரஹ்... )

அல்லாஹ் ரப்புல் ஆலமீன் நம் அனைவரின் ரமழானையும் கபூல் செய்தருள்வானாக! நாம் வாழும் எல்லா காலத்திலும் ரமழானில் நம்மை அவனுடைய பயத்தோடும், நல்ல அமல்களின் தொடர்போடும் வாழச் செய்தது போல் வாழச் செய்வானாக! ஆமீன்! ஆமீன்! ஆமீன்! யாரப்பல் ஆலமீன்!! வஸ்ஸலாம்!!!

### அபூதர் (ரலி) அவர்கள் கூறியதாவது

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், “எனது இரட்சகனிடமிருந்து ஒரு (வான)வர் என்னிடம் வந்து ‘ஒரு செய்தியை’ அல்லது ‘ஒரு நற்செய்தியை’ எனக்கு அறிவித்தார். அதாவது ‘என் சமுதாயத்தாரில் யார் அல்லாஹ்வுக்கு எதையும் இணையாக்காமல் இறக்கின் றாரோ அவர் சொர்க்கத்தில் நுழைவார் என்று கூறினார் என்றார்கள்.

உடனே நான், “அவர் விபசாரத்திலோ திருட்டிலோ ஈடுபட்டிருந்தாலுமா?” எனக் கேட்டேன். “அவர் விபசாரத்திலோ திருட்டிலோ ஈடுபட்டிருந்தாலும்தான்” என்று நபியவர்கள் பதிலளித்தார்கள்.



# "துஆ" என்பது வெறும் சம்பிரதாயமல்ல, வணக்கமாகும்!

கீழை ஜஹாங்கீர் அரூஸி

அண்ணல் நபி( ஸல்) அவர்கள் கூறியதாக ஹழ்ரத் நுஃமான் பின் பஷீர்( ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: " துஆ" அதுவே இபாதத் (இறைவணக்கம்) ஆகும்.(நூல்: அபூதாவூது, திர்மிதி)

இன்றைய மனிதர்களில் சிலர் சிலரை சந்திக்கும் போது பரஸ்பரம் நலம் விசாரிப்புகள் முடிந்து விடை பெறும் முன்னர் ஏதாவதொரு விடயத்தை முன்னிறுத்தி துஆ செய்யுங்க பாய் என்று சொல்வதை காண முடிகிறது.

எதிர் முனையில் இருப்பவரும் அல்லாஹ் போதுமானவன் கண்டிப்பாக துஆ செய்கிறேன் என்று சொல்லி விடைபெற்று கொள்கின்றனர்.

ஆனால் துஆ செய்ய சொன்ன நபருக்கு அடுத்த மனிதர் துஆ செய்கிறாரா? செய்தாரா? என்றால் கேள்விக்குறியே விடையாக உள்ளது.

துஆ செய்யுங்கள் என்று சொல்வது பரஸ்பரம் ஒரு சம்பிரதாயமாகவே பார்க்கப்படுகிறதோ? என்று எண்ண தோன்றுகிறது?

துஆ என்பது இபாதத்துகளில் ஒன்று என நபி(ஸல்)அவர்கள் அழகான முறையில் சொல்லி இருக்கும் போது நாம் ஏன் தயங்க வேண்டும்?

ஒரு மனிதனின் பரிந்துரையின் மூலம் இன்னொரு மனிதனின் தேவைகளை நாடினால்... இறைவன் நிறைவேற்றி வைக்கிறான். அந்த பரிந்துரைக்கு பெயர் தான் துஆ.

ஒரு மனிதனின் சிபாரிசின் மூலம் இன்னொரு மனிதனின் நோயை நாடினால்...இறைவன் குணமாக்கி விடுகிறான்.அந்த சிபாரிசுக்கு பெயர் தான் துஆ.

ஒரு மனிதனின் கஷ்டங்களை இன்னொரு மனிதனின் ரெகமெண்ட் மூலம் நாடினால்...இறைவன் இலகுவாக்கி விடுகிறான்.அந்த ரெகமெண்டுக்கு பெயர் தான் துஆ.

நபி( ஸல்) அவர்கள் கூறியதாக ஹழ்ரத் அபு தர்தா( ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:ஒரு முஸ்லிமான மனிதர் தம் சகோதரருக்காக மறைவில் செய்யும் துஆ ஒப்புக் கொள்ளப்பட்டதாகும்.

துஆ செய்யும் அம்மனிதரின் சிரசின் அருகில் ஒரு மலக்கு நியமனம் செய்யப்பட்டிருப்பார். அவர் தம் சகோதரருக்கு நலவானதை கேட்டு துஆ செய்யும் போதெல்லாம் அம்மலக்கு "ஆமீன்"உமக்கும் அதுபோன்ற நலவானது உண்டு என்று கூறுவார்.(நூல்:முஸ்லிம்)

நம்மை போன்ற சராசரி மனிதர்களின் நிலைபாட்டினை தான் மேற்கண்ட ஹதீதுகளின் மூலம் நான் குறிப்பிட்டுள்ளேன்.

ஒரு அடியானின் கோரிக்கையை ஏற்று கொண்டு இன்னொரு அடியானின் தேவைகளை நிறைவேற்றி கொடுக்கும் இறைவன், நமது உயிரினும் மேலான அண்ணல் எங்கள் கோமான் நபிகள் நாயகம்( ஸல்) அவர்களின் பரிந்துரையை ஏற்று சராசரி முஸ்லிமான அடியானுக்கு சுவனத்தையே கொடுக்க காத்திருக்கிறான்.

நாளை மறுமையில் நபி( ஸல்) அவர்களின் ஷஃபாஅத் என்னும் பரிந்துரையின் மூலம் சுவனம் செல்லும் வாய்ப்புக்குரியோராய் நாமும் இருக்க வேண்டாமா?

அதற்கான ஒவ்வொரு நல்அமல்கள் என்னும் கட்டுச்சாதத்தையும் நாம் தயார்படுத்த வேண்டாமா? துஆ என்னும் நல்அமல்களை விரைவுபடுத்துவோம்.

நமக்காகவும் நமது குடும்பத்தாருக்காகவும், சமுதாயத்துக்காகவும், உலக முஸ்லிம்களுக்காகவும் எல்லாவிதத்திலும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் மனமுருகி வல்லோனிடம் துஆ கேட்போம்.

"துஆ"அதுவும் ஒரு நல் வணக்கமே.

**அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிக்குச் செய்ய வேண்டிய கடமைகள் ஐந்து. அவை: சலாமுக்குப் பதிலுரைப்பது, நோயாளியை நலம் விசாரிப்பது, ஜனாஸாவைப் பின்தொடர்வது, விருந்தழைப்பை ஏற்றுக்கொள்வது, தும்முபவருக்கு மறுமொழி கூறுவது ஆகியவையாகும்.

இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

இந்த ஹதீஸ் மூன்று அறிவிப்பாளர் தொடர்களில் வந்துள்ளது.

بسم الله الرحمن الرحيم

# ஸகாதுல் பித்ரின் சட்டங்கள்



## சட்டம்

கடமையான ஒரு வணக்கம் ஆகும் (புஹாரி : 1503)

## அளவு

ஒரு ஸாஉ அளவு கொடுக்கப்பட வேண்டும். சுமார் 2k 500g ஆகும். (புஹாரி : 1510)

## நோக்கம்

ஏழைகளுக்கு உணவாக அமைதல், நோன்பாளிகளை தவறுகளிலிருந்து பரிசுத்தப்படுத்தல் (அபூதாவூத் : 1609)

## நேரம்

பெருநாள் தின இரவு சூரியன் மறைவதுடன் கடமையாகின்றது. பெருநாள் தொழுகைக்கு முன்பு நிறைவேற்றப்பட வேண்டும். (அபூதாவூத் : 1609)

## யாருக்கு கடமை?

சிறுவர்கள், பெரியவர்கள், ஆண்கள், பெண்கள் உட்பட அனைத்து முஸ்லிம்களின் மீதும் கடமையாகும். (புஹாரி : 1503)

## தொழுகைக்குப் பின் கொடுத்தல்

பெருநாள் தொழுகைக்குப் பிறகு வழங்குவது சாதாரண தர்மமாக கருதப்படும். (அபூதாவூத் : 1609)

## உணவு

ஒரு பிரதேசத்தில் பெரும்பாலாக உட்கொள்ளப்படுகின்ற உணவு. (புஹாரி : 1510)

## பணமாகக் கொடுத்தல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உணவாகவே கடமையாக்கினார்கள். எனவே, அதனை பணமாக வழங்க முடியாது. (புஹாரி : 1504)

ASKY ALQAMY



# ஆஸ்திரேலியாவில் அழகிய குரலில் கிராஅத் ஓதி

## (தராவீஹ் தொழுகை நடத்தி வரும் தமிழக மாணவர்)



**சிட்னி:**

ஆஸ்திரேலியாவில் அழகிய குரலில் கிராஅத் ஓதி தராவீஹ் தொழுகையை தமிழகத்தின் கீழக்கரையைச் சேர்ந்த மாணவர் முஹம்மது உவைஸ் அஹமது (வயது 15 ) நடத்தி வருகிறார்.

கீழக்கரையைச் சேர்ந்த தம்பதி அஹமது அப்துல் காதர் மற்றும் சுமையா அஹமது. இவர்கள் தற்போது ஆஸ்திரேலியாவின் சிட்னியின் ஆர்பன் பகுதியில் வசித்து வருகின்றனர்.

இவர்களது மகன் அங்குள்ள பள்ளிக்கூடத்தில் படித்து வருகிறார். அவரது தந்தையின் விருப்பப்படி பார்க் ரோடு முசல்லாவில் உள்ள மதரஸாவில் திருக்குர்ஆன் முழுவதையும் தஜ்வீத் முறைப்படி மனப்பாடம் செய்துள்ளார்.

தற்போது அங்குள்ள பள்ளிவாசல் தலைமை இமாம் கீழக்கரை மாணவரின் சிறப்பான குரல் வளத்தையடுத்து அவருக்கு தராவீஹ் தொழுகை செய்ய வாய்ப்பு வழங்கியுள்ளார்.

அந்த மாணவரும் மிகவும் அழகிய குரலில் தொழுகை நடத்தி வருகிறார். அவரை பின் தொடர்ந்து ஆண்களும், பெண்களும் தனித்தனியே தொழுது வருகின்றனர். இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களும் பங்கேற்றுள்ளனர்.

அந்த மாணவரின் குரல் இதயங்களை ஈர்க்கும் வகையில் அமைந்திருப்பதாக பெருமிதம் தெரிவித்து வருகின்றனர்.

கீழக்கரை மாணவருக்கு ஆஸ்திரேலியாவில் இத்தகைய கௌரவம் கிடைத்திருப்பது தமிழகத்துக்கு கிடைத்துள்ள பெருமையாகும்.

இது குறித்து துபாயில் வசித்து வரும் அவரது தாத்தா முஹம்மது இஸ்மாயில் கூறியதாவது : தனது பேரன் ஆஸ்திரேலியாவில் திருக்குர்ஆனை முழுமையாக மனப்பாடம் செய்து தராவீத் தொழுகை நடத்தி வருவது மிகவும் பெருமையளிக்கிறது என தெரிவித்தார்.




**அஜ்மானில் ஐக்கிய முதுகுளத்தூர் முஸ்லிம் ஜமாஅத் சார்பில்
2008 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த தியாகத் திருநாள் சந்திப்பின் போது.......**



**துபாய் நகருக்கு கடந்த 2008 ஆம் ஆண்டு முதுகுளத்தூர் பெரிய பள்ளிவாசல்
தலைமை இமாம் வந்த போது இந்திய துணைத் தூதரக அதிகாரி
திரு பி.எஸ்.முபாரக் ஐ.எஃப்.எஸ். அவர்களை சந்தித்த போது.............**




**அஜ்மானில் 2008 ஆம் ஆண்டு ஐக்கிய முதுகுளத்தூர்
முஸ்லிம் ஜமாஅத் சார்பில் நடந்த நிகழ்ச்சியில்
மௌலவி கீழை ஜஹாங்கீர் அரூஸி, சம்சுதீன் சேட், மௌலவி பஷீர் சேட்**




**துபாயில் 2008 ஆம் ஆண்டு சென்னை ஏ.ஜே. கல்வி ஆலோசனை
நிறுவனம் பங்கேற்ற கல்விக் கண்காட்சியின் போது...........**




**முதுகுளத்தூர் இஸ்லாமிய பயிற்சி மையத்தில்
கடந்த 2009 ஆம் ஆண்டு ஐக்கிய முதுகுளத்தூர்
முஸ்லிம் ஜமாஅத் சார்பாக நடந்த நிகழ்ச்சியின் போது........**



**துபாய் நகருக்கு கடந்த 2013 ஆம் ஆண்டு வருகை புரிந்த
மண்ணின் மைந்தர் டாக்டர் ஏ. அமீர் ஜஹான் ஐக்கிய
முதுகுளத்தூர் முஸ்லிம் ஜமாஅத்தால் கௌரவிக்கப்பட்ட போது.......**



**துபாய் நகருக்கு கடந்த 2014 ஆம் ஆண்டு வருகை புரிந்த
மௌலவி அஹமது பஷீர் சேட் ஆலிமுக்கு
விமான நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்பட்ட போது........**



**துபாயில் கடந்த 2014 ஆம் ஆண்டு நடந்த
ஐக்கிய முதுகுளத்தூர் முஸ்லிம் ஜமாஅத் நிகழ்வில் மதுரை மாவட்ட
இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நிர்வாகி பி.கே.என். அப்துல் காதிர் ஆலிம்.........**



துபாய் முஸ்ரிப் பூங்காவில் டிசம்பர் 2022 ஆம் ஆண்டு நடந்த
ஐக்கிய முதுகுளத்தூர் முஸ்லிம் ஜமாஅத் வருடாந்திர நிகழ்வில்
திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் ஓய்வு பெற்ற
துணை முதல்வர் பேராசிரியர் பி.என்.பி. சஹாபுதீன் கௌரவிக்கப்பட்ட போது.....



துபாய் முஸ்ரிப் பூங்கவில் 17 டிசம்பர் 2023 அன்று நடந்த ஐக்கிய முதுகுளத்தூர்
முஸ்லிம் ஜமாஅத் வருடாந்திர நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற
உடன்குடி கவின்முகில் முஹம்மது யூசுப், பரமக்குடி ஏ.எஸ். இப்ராஹிம் உள்ளிட்டோருடன்....



துபாயில் ஐக்கிய முதுகுளத்தூர் முஸ்லிம் ஜமாஅத் சார்பில்
மார்ச் 2024 ஆம் ஆண்டு நடந்த இஃப்தார் நிகழ்ச்சியில் சிறப்பு
விருந்தினராக பங்கேற்ற சாகுல் ஹமீது உள்ளிட்டோருடன்..........



கத்தார் நாட்டின் தோஹா நகரில் கடந்த 2023 ஆம் ஆண்டு
ஐக்கிய முதுகுளத்தூர் முஸ்லிம் ஜமாஅத் சார்பில் நடந்த
இஃப்தார் நிகழ்ச்சியில் இலங்கை காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
சிறப்பு விருந்தினராக பங்கேற்ற போது........

# ரமலானில் உறுதிமொழி எடுப்போம்



A.S.Ibrahim M.B.A, M.A (Islamic)

நாம் இந்த ரமலான் மாதம் முழுவதும் நேன்பு வைத்ததினால் மனதுக்கும் நமது ஈமானுக்கும் பலன் கிடைக்கும். நமக்கு இந்த ரமலான் மாதம் மிக விரைவாக கடந்துவிட்டது இலகுவாக வணக்க வழிபாடுகளை செய்ய உணர்வைக் கொடுத்து சிரமத்தை இறைவன் இலேசாக்கியுள்ளான். தற்போது ரமலான் மாதத்தை நிறைவு செய்துவிட்டு இருக்கும் நாம் நம்முடைய வாழ்க்கையில் என்ன மாற்றத்தை கண்டிருக்கிறோம்?

ரமலானுக்கு பிந்தைய வாழ்க்கையை எப்படி கழிக்க போகிறோம்? என்ற கேள்விகள் நம்முடைய அனைவரின் முன்னாலும் நிற்கிறது.

**ரமலான் மாதம் எதற்காக?**

இறைநம்பிக்கையாளர்கள் யாவரும் பசி, தாகத்தை உணர்ந்து நடக்க வேண்டும் என்பதற்காகவோ, அல்லது வருடத்தில் பதினொரு மாதங்கள் உண்டு கழித்து, நல்ல பானங்களை பருகியவர்கள் ஒரு மாத காலம் பசித்திருக்கும் போதுதான் உணவின் அருமையும், தண்ணீரின் அருமையும் தெரியும் என்பதற்காகவோ ரமலான் மாதத்தின் நோன்பை இறைவன் நமக்கு கடமையாக்கவில்லை. மாறாக, படைத்த இறைவனைப் பயந்து நடக்கின்ற இறையச்சம் தக்வா எனும் பயிற்சிக்காகத்தான் கடமையாக்கியிருக்கின்றான்.

இறை நம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன்னிருந்தோர் மீது கடமையாக்கப்பட்டது போன்று உங்கள் மீதும் குறிப்பிட்ட நாட்கள் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. (இதனால்) நீங்கள் இறையச்சமுடையோர் ஆவீர்கள். (அல்குர்ஆன் 2:183)

இந்த ரமலான் மாதம் மூலமாக நம்மை நாம் பக்குவப்படுத்தி இறையச்சத்தை உள்ளத்தில் வார்த்தெடுத்துக் கொண்டு தீமைகளிலிருந்து விலகி நிற்கும் நன்மனிதர்களாக ஆவதற்காகவே இறைவன் நோன்பைக் கடமையாக்கியுள்ளான். அதனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நோன்பிற்கான முக்கிய விதிமுறையை நமக்குக் கற்றுத் தந்துள்ளார்கள்.

யார் பொய்யான பேச்சையும் பொய்யான நடவடிக்கைகளையும் விட்டு விடவில்லையோ அவர் தமது உணவையும் பானத்தையும் விட்டு விடுவதில் அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையுமில்லை!'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்: புகாரி 1903

ரமலானில் நல்ல உணவையும் , நல்ல பானத்தைத் தவிர்த்துவிட்டு இருப்பது நமக்கு இறைவனிடத்தில் பயனளிக்க வேண்டுமெனில் அத்துடன் சேர்த்து தீய காரியங்களையும் துறக்க வேண்டும்.

அப்போதுதான் இறைவனிடத்தில் நமக்கான கூலியைப் பெற்றுக் கொள்ள முடியும். இல்லையேல் நாம் பசித்து, தாகித்திருப்பதில் எந்தப் பலனும் இல்லை என நாம் அறிந்து கொண்டோம் .

ரமலானுக்கு முன்னால் நாம் பொய், புறம், கோள் மற்றும் கெட்ட வார்த்தைகள் பேசுபவர்களாகத் தன் வாழ்க்கையைக் கழித்திருப்போம் .

சிலர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் சினிமா படங்களிலும் சீரியல்களிலும், மால்களை சுத்தி பார்ப்பதிலும் தான் மூழ்கியிருந்திருப்பார்கள்.

சிலர் புகை பிடிப்பது, இன்னபிற போதைப் பொருட்கள் என்று தன் வாழ்க்கையை போதையுடன் கழித்திருப்பார்கள். இதுபோன்ற இன்னும் ஏராளமான தீமைகள் ஒவ்வொரு மனிதரிடமும் குடி கொண்டிருந்திருக்கும். இன்னும் பலர் பள்ளிவாசலுக்கு வழி தெரியாதோர் போல் இருந்திருப்பார்கள்.

ஒரு நாளைக்கு ஐவேளைத் தொழுகையை நிறைவேற்றாதோராக இருந்திருப்பர். பயான் சொற்பொழிவுகளில் பங்கெடுக்காதோராக இருந்திருப்பர்.

சட்டைப் பையிலிருந்து காசுகளை எடுத்து தர்மம் செய்ய மனமில்லாதோராக இருந்திருப்பர். இன்னும் இதுபோல் மார்க்கத்தோடு எவ்விதத் தொடர்புமில்லாமல் வாழ்க்கையைக் கழித்திருப்பார்கள்.

ரமலானில் இவ்வாறு குடி கொண்டிருந்த எல்லாத் தீமைகளையும் ரமலான் வந்துவிட்டது என்ற ஒற்றைக் காரணத்திற்காக நீங்கள் துறந்து இருப்பிர்கள். பள்ளிவாசல்கள் ஒவ்வொன்றும் நிரம்பி இடப்பற்றாக்குறைக்கு உள்ளாகும். ஒவ்வொரு வீட்டிலும் குர்ஆன் தூசு துடைக்கப்பட்டு தினமும் ஓதப்படும்.

மிஸ்கீன்களுக்கு உதவ சில்லறைகள் மாற்றி வைக்கப்படும்.

கடமையான தொழுகையை எண்ணியும் பார்த்திடாதவர்கள் கூட சுன்னத்தான இரவுத் தொழுகையில் பங்கெடுப்பார்கள். சொற்பொழிகளையும் கேட்பார்கள்.

இப்படி ஓராண்டு செய்த பாவத்திற்கு ஒரு மாதத்தில் பரிகாரம் செய்துவிடலாம் என்று முனைப்புக் காட்டுவார்கள். சிலர் ஸஹர் சாப்பிட்டு உறங்கியவர்கள் இஃப்தாருக்கு எழுவார்கள். இடையில் தொழுகைகளெல்லாம் கனவில் நிகழ்ந்திருக்கும். சிலர் இஃப்தார் முடிந்ததும் புகைபிடித்தல் எனும் காரமான ஒரு வேலையைத் தவறாமல் செய்துவிடுவார்கள்.

சிலர் பசித்திருப்பார்கள், தாகித்திருப்பார்கள். மற்ற நாட்களுக்கும் ரமலானுக்கும் அவர்களிடமுள்ள வித்தியாசம் அதுவொன்றுதான். அல்லாஹ் தனது மன்னிப்பை அள்ளித் தரும் இம்மாதத்திலும் பசித்திருப்பதைத் தவிர வேறொன்றையும் அதிகப்படுத்தாமலிருந்தால் அது நமக்கு மன்னிப்பைப் பெற்றுத் தருமா? இஃப்தார் முடிந்ததும் தீமைகளைச் செய்வதன் மூலம்,

பசித்திருந்தால் தான் அல்லாஹ் பார்க்கிறான் என்று எண்ணுகிறோமா? இது இறையச்சமா? இவ்வாறு இறைவனது மன்னிப்பை பெற்றுக் கொள்ளாமல் யார் தனது ரமலானைக் கடக்கிறாரோ அவருக்கு ரமலான் தரும் பரிசு இதோ! ''ஒருவன் ரமலான் மாதத்தை அடைந்து, அவனது பாவங்கள் மன்னிக்கப்படாமல் அம்மாதம் கழிந்தால் அவனது மூக்கு மண்ணை கவ்வட்டும்'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல்: திர்மிதி 3468 (ஹதீஸின் சுருக்கம்) இறைவனது மன்னிப்பு, அருள் மற்றும் ஒரு நன்மைக்கு எழுநூறு மடங்கிற்கும் மேல் எண்ணிலடங்கா நன்மைகளைப் பெற்றுத்தரும் நன்மைக் களஞ்சியமான ரமலான், நாம் தீமைகளை விட்டு விலகவில்லையென்றால் சாபத்தைப் பெற்றுத் தந்துவிடும் என்பதை நபிகளார் நமக்கு எச்சரிக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இப்படி ரமலானில் பலதரப்பட்ட நோன்பாளிகளை நாம் கண்டோம்.

ரமலானுக்குப் பின்... நோன்புக் காலம் என்பது நமக்கான ஒரு இறையச்சப் பயிற்சி என்பதையும் தீமைகளை விட்டு விலகுவதே அதன் வெளிப்பாடு என்பதையும் அவ்வாறின்றி தீமைகளுடன் வாழ்பவர் பசித்திருப்பதில் பலன் ஏதும் இல்லை என்பதையும் மேலே பார்த்தோம். ரமலானில் அமல்களில் மூழ்கி, தீமைகளிலிருந்து விலகிய மக்கள் ரமலான் முடிந்த மறுநாள் பெருநாள் அன்றே தங்களின் பழைய வாழ்க்கைக்குத் திரும்பி விடுகின்றனர். பெருநாள் அன்று ஏதோ மற்ற மதத்தவர்களது பண்டிகையைப் போல சினிமா தியேட்டருக்குச் சென்று வருகிறார்கள். மக்கள் அப்படியே மீண்டும் பழைய வாழ்க்கைக்குத் திரும்பிவிடுகின்றார்கள்.

நோன்புக் காலங்களில் மட்டும் அமல்கள் செய்கிறோம், தீமைகளிலிருந்து விலகுகிறோம் என்றால் சரி செய்ய வேண்டியது நம் செயல்பாடுகளை மட்டும் அல்ல! ஈமானையும் தான். ஏனெனில் ஏதோ நோன்புக் காலத்தில் மட்டும்தான் இறைவன் கண்காணிக்கிறான் என்பதைப் போன்ற ஒரு அலட்சியம் நம்மைத் தொற்றிக் கொண்டுள்ளது. ரமலானில் சொற்பொழிவுகளில் நபித்தோழர்கள் நன்மையில் விரைந்தது பற்றியும் தீமைகளைக் கண்டால் வெகுதூரம் விலகியது பற்றியும் செய்திகளைக் கேள்விப்படுகிறோமே! அதுவெல்லாம் ரமலானில் மாத்திரம் அவர்கள் அவ்வாறு இருந்தார்கள் என்றா நமக்கு சொல்லித் தருகிறது? எல்லா நேரங்களிலும் தான் அமல்களில் விரைந்தார்கள், தீமைகளிலிருந்து விலகினார்கள். அதனால் தான் அவர்களுக்கு மிகப்பெரிய அந்தஸ்தை சமுதாயத்தில் இறைவன் வழங்கினான். தொழுகை அறிவிப்பாளர் (முஅத்தின்) பாங்கு சொல்லத் தொடங்கி, நபி (ஸல்) அவர்கள் (தொழுகை நடத்த) வருவதற்கு முன்னர் நபித் தோழர்களில் சிலர் பள்ளிவாசலின் தூண்களை நோக்கி (அதை தடுப்பாக ஆக்கி சுன்னத் தொழ) போட்டியிட்டுக் கொண்டு செல்வார்கள். அவர்கள் இவ்வாறே மஃக்ரிப் தொழுகைக்கு முன் இரண்டு ரக்அத்கள் (சுன்னத்) தொழுவார்கள். பாங்குக்கும் இகாமத்துக்கும் இடையில் ஏதும் இல்லாத நிலையில் (இவ்வாறு தொழுதனர்) என்று அனஸ் (ரலி) அறிவிக்கிறார்கள். (நூல்: புகாரி 625)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:யார் ஒவ்வொரு நாளும் பன்னிரண்டு ரக்அத்கள் (சுன்னத்) தொழுகின்றாரோ அதற்காக அவருக்குச் சொர்க்கத்தில் ஒரு மாளிகை எழுப்பப்படுகிறது. இதை உம்மு ஹபீபா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். உம்மு ஹபீபா (ரலி) அவர்கள் கூறினார்கள்: இதை நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்டதிலிருந்து அந்தப் பன்னிரண்டு ரக்அத்களை நான் கைவிட்டதேயில்லை. அறிவிப்பாளர் அம்பசா பின் அபீசுஃப்யான் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: இதை நான் உம்மு ஹபீபா (ரலி) அவர்களிடம் கேட்டதிலிருந்து அந்தப் பன்னிரண்டு ரக்அத்களை நான் கைவிட்டதேயில்லை. அறிவிப்பாளர் அம்ர் பின் அவ்ஸ் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: இதை நான் அம்பசா (ரஹ்) அவர்களிடமிருந்து கேட்டதிலிருந்து அந்தப் பன்னிரண்டு ரக்அத்களை நான் விட்டதேயில்லை. அறிவிப்பாளர் நுஅமான் பின் சாலிம் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: இதை நான் அம்ர் பின் அவ்ஸ் (ரஹ்) அவர்களிடம் கேட்டதிலிருந்து அந்தப் பன்னிரண்டு ரக்அத்களை நான் கைவிட்டதேயில்லை. (நூல்: முஸ்லிம் 1319)

இந்த நன்மைகளெல்லாம் நபித்தோழர்கள் தங்கள் வாழ்வில் செய்து நோன்புக் காலங்களில் மட்டும்தானா? சுன்னத்தான வழிபாடாக இருந்தாலும் போட்டி போட்டுக் கொண்டு செய்திருக்கிறார்கள். இறைவனிடம் சுவன மாளிகையைப் பெறுவதற்கு அச்செய்தியைக் கேட்டதிலிருந்து அமலை விடாமல் கடைப்பிடித்திருக்கிறார்கள்.

ரமலானோடு கடமையையும் சேர்த்து மறக்கின்ற நாம் எங்கே? ரமலான் அல்லாத நாட்களிலும் சுன்னத்தைக் கூட விடாமல் செய்த இவர்கள் எங்கே? இவர்கள் ஒரு புறம் என்றால் இவர்களுக்கு இப்படிப் பயிற்சி கொடுத்த, பக்குவப்படுத்திய நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையை எடுத்துப் பாருங்கள். இரவு கண் விழித்துத் தொழுவார்கள். நின்று வணங்கியதன் விளைவு அவர்களின் பாதங்கள் வீக்கம் பெறும் என்றால் எவ்வளவு தொழுதிருப்பார்கள்? நபி (ஸல்) அவர்கள் தம் பாதங்கள் வீங்கும் அளவிற்கு நின்று (அல்லாஹ்வைத்) தொழுதார்கள். அப்போது அவர்களிடம் "தங்களின் முந்தைய பிந்தைய தவறுகளை அல்லாஹ் மன்னித்து விட்டானே! (பிறகு ஏன் நீங்கள் இந்த அளவு சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டும்?)'' என்று கேட்கப்பட்டது. (அதற்கு அவர்கள்,) "நான் நன்றியுள்ள அடியானாக இருக்க வேண்டாமா?'' என்று கேட்டார்கள். (நூல்: புகாரி 4836)

முன்பின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, சுவனம் உறுதி என்று நன்மாராயம் சொல்லப்பட்ட தலைவர் இவ்வாறு அமல்செய்கிறார்கள் என்றால் நாம் எப்படியிருக்க வேண்டும். நபித்தோழர்களை அல்லாஹ்வுடைய தூதர் பக்குவப்படுத்துவதற்காகப் பயன்படுத்திய அதே உபதேசங்கள் தானே நமக்கும் தரப்பட்டுள்ளன.

ஆனால் அதை ஏற்றுள்ள நாம் ஒவ்வொரு நாளும் மார்க்க வழியில் பயணித்து தீமைகளிலிருந்து விலகி நிற்காமல் ரமலானில் மட்டும் விலகி நிற்பது

எவ்விதத்தில் நியாயம்? இறைவனும் மார்க்கமும் ரமலானிற்கு மட்டுமல்ல! ஒவ்வொரு நாளும் தான். ஒரு மாத காலம் இறைவன் கொடுக்கும் இறையச்சப் பயிற்சி, அம்மாதத்தாடு முடித்துக் கொள்வதற்கு அல்ல! காலம் முழுவதும் தொடர்வதற்கு!

நபி தோழர்களின் அரும் பெரும் தியாகங்களில் தான் இஸ்லாம் வளர்ந்து நிற்கிறது . அவர்களை மாதிரி தியாகங்களை செய்யா விட்டாலும் குறைந்தது குர்ஆன் மற்றும் ஹதீஸ் அடிப்படையில் நமது வாழ்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த ஈத் பித்ர் திருநாளில் நாம் உறுதி மொழி எடுப்போம்.

**நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

ஒரு முஸ்லிமின் அடிமைக்காகவோ குதிரைக்காகவோ அவர்மீது (ஸகாத் கடமை) இல்லை. இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.
இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது.
- மேற்கண்ட ஹதீஸ் அபூஹுரைரா (ரலி) அவர்களிடமிருந்தே மேலும் மூன்று அறிவிப்பாளர் தொடர்கள் வழியாகவும் வந்துள்ளது.

**அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது:**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஸகாத் வசூலிப்பதற்காக உமர் (ரலி) அவர்களை அனுப்பினார்கள். அப்போது "இப்னு ஜமீல்,காலித் பின் அல்வலீத் மற்றும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடைய பெரிய தந்தை அப்பாஸ் (ரலி) ஆகியோர் (ஸகாத் வழங்க) மறுத்துவிட்டனர்" என்று கூறப்பட்டது. அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இப்னு ஜமீல் ஏழையாக இருந்து, அல்லாஹ் அவரைச் செல்வ(ந்த)ராக ஆக்கிய பிறகே அவர் (ஸகாத் வழங்க) மறுத்துள்ளார். காலிதைப் பொறுத்தவரை, நீங்கள் காலிதுக்கு அநீதி இழைக்கின்றீர்கள். அவரோ தம் கவசஉடைகளையும் போர்த்தளவாடங்களையும் அல்லாஹ்வின் பாதையில் (அறக்கொடையாக) வழங்க முடிவு செய்திருந்தார். அப்பாஸ் அவர்களைப் பொறுத்தவரையில் அவரது ஸகாத்தையும் அதைப்போன்ற இன்னொரு மடங்கையும் வழங்குவது என்மீது பொறுப்பாகும். உமரே! ஒருவருடைய தந்தையின் சகோதரர் அவருடைய தந்தையைப் போன்றவர் ஆவார் என்பது உமக்குத் தெரியாதா?" என்று கூறினார்கள்.

# ரமலானில் கற்றதும் பெற்றதும்

**அ. முஹம்மது இஸ்மாயில் ஹஸனி**
பேராசிரியர் , முதுகலை மற்றும் அரபுமொழி ஆய்வுத்துறை ,
ஜமால் முகமது கல்லூரி ,திருச்சி.



இஸ்லாமிய மார்க்கத்தில் மிகுந்த மகத்துவம் பெற்ற மாதமாக ரமலான் மாதம் கருதப்படுகிறது.

அல்லாஹ் அருளிய குர்ஆன் இந்த மாதத்தில்தான் மனிதகுலத்திற்கு வழிகாட்டியாக அருளப்பட்டது.

இந்த மாதத்தில் முஸ்லிம்கள் விடியற்காலை முதல் சூரிய அஸ்தமனம் வரை நோன்பு நோற்கின்றனர்.

ஆனால் ரமலான் என்பது வெறும் பசி மற்றும் தாகத்தை தாங்கும் காலம் மட்டுமல்ல; அது மனிதனின் உள்ளத்தையும் வாழ்க்கையையும் மாற்றும் ஒரு ஆன்மீகப் பயிற்சி காலமாகும்.

இந்த மாதம் மனிதனுக்கு பல உயர்ந்த நெறிமுறைகளையும் வாழ்க்கைப் பாடங்களையும் கற்றுத்தருகிறது. அவற்றை புரிந்து கொண்டு வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவது ஒவ்வொரு முஸ்லிமின் கடமையாகும்.

ரமலான் மாதம் ஆரம்பிப்பதற்கு சில தினங்களுக்கு முன் தன் தோழர்களுக்கு நபிகள் நாயகம் ஆற்றிய உரை " மக்களே! ஒரு மகத்தான, பாக்கியம் நிறைந்த மாதம் உங்களை நிழலிடப் போகிறது.

அந்த மாதத்தில் ஒரு இரவு இருக்கிறது, அது ஆயிரம் மாதங்களை விடச் சிறந்ததாகும். அந்த மாதத்தின் நோன்பை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான், அதன் இரவுகளில் நின்று வணங்குவதை உபரியான (சுன்னத்) வணக்கமாக்கியுள்ளான்.

யார் இந்த மாதத்தில் ஒரு நற்செயலைச் செய்து (அல்லாஹ்வை) நெருங்குகிறாரோ, அவர் மற்ற மாதங்களில் ஒரு கடமையை (ஃபர்ளு) நிறைவேற்றியவரைப் போன்றவர்.

யார் இந்த மாதத்தில் ஒரு கடமையை நிறைவேற்றுகிறாரோ, அவர் மற்ற மாதங்களில் எழுபது கடமைகளை நிறைவேற்றியவரைப் போன்றவர்.

இது பொறுமையின் மாதம்; பொறுமையின் கூலி சொர்க்கமாகும். இது பிறருக்கு உதவும் (சமூக நல்லிணக்க) மாதம்.

இம்மாதத்தில் மூஃமின்களின் (இறைநம்பிக்கையாளர்களின்) வாழ்வாதாரம் (ரிஸ்க்) அதிகரிக்கப்படுகிறது.

யார் இம்மாதத்தில் ஒரு நோன்பாளிக்கு நோன்பு திறக்க உணவு அளிக்கிறாரோ, அது அவருடைய பாவங்களுக்கு மன்னிப்பாகவும், நரக நெருப்பிலிருந்து அவருடைய கழுத்தை விடுவிப்பதாகவும் அமையும்.

மேலும், அந்த நோன்பாளியின் கூலியில் ஏதும் குறைக்கப்படாமல், அவருக்கும் அதே போன்ற கூலி வழங்கப்படும்."

ரமலான் மனிதனுக்கு சுய கட்டுப்பாடு மற்றும் ஒழுக்கம் என்பவற்றை கற்றுத்தருகிறது. மனிதன் இயல்பாகவே பல ஆசைகளுக்கும் விருப்பங்களுக்கும் அடிமையாக இருக்கக்கூடும். ஆனால் நோன்பு அவற்றை கட்டுப்படுத்த கற்றுத்தருகிறது.

உணவு, தண்ணீர் போன்ற அடிப்படை தேவைகளை கூட ஒரு குறிப்பிட்ட நேரம் வரை தவிர்ப்பது மனிதனின் மன உறுதியை வளர்க்கிறது.

அதேபோல் பொய் பேசுதல், சண்டை, கோபம், பழிசொல்லுதல் போன்ற தீய செயல்களையும் தவிர்க்க வேண்டியதைக் கற்பிக்கிறது.

ஹதீஸில் வருகிறது நபிகள் நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்: "யார் பொய் பேசுவதையும், அதன்படி நடப்பதையும் விட்டுவிடவில்லையோ, அவர் தனது உணவையும் பானத்தையும் கைவிடுவதில் (பசியோடு இருப்பதில்) அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையுமில்லை." (ஆதாரம்: ஸஹீஹ் புகாரி)

மற்றொரு ஹதீஸில் "உங்களில் எவரேனும் நோன்பு நோற்றிருந்தால், அவர் கெட்ட வார்த்தைகளைப் பேச வேண்டாம்; சச்சரவு செய்ய வேண்டாம். எவரேனும் அவரைத் திட்டினால் அல்லது சண்டையிட வந்தால், 'நான் நோன்பாளி, நான் நோன்பாளி' என்று அவர் கூறிவிடட்டும்." (ஆதாரம்: ஸஹீஹ் புகாரி & முஸ்லிம்)

இதனால் மனிதன் தனது வாழ்க்கையை ஒழுங்காகவும் கட்டுப்பாடுடனும் நடத்த கற்றுக்கொள்கிறான். ரமலான் மனிதனுக்கு கருணை மற்றும் பரிவு என்ற உயர்ந்த மனிதநேயப் பண்புகளை வளர்க்கிறது.

நோன்பு நோற்கும்போது பசி மற்றும் தாகத்தின் கஷ்டத்தை மனிதன் உணர்கிறான். இதன் மூலம் தினமும் பசியால் வாடும் ஏழை மக்களின் நிலையை உணர முடிகிறது.

**நபிகள் நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்:**

"யார் ஒரு நோன்பாளிக்கு நோன்பு திறக்க (உணவு) அளிக்கிறாரோ, அவருக்கு அந்த நோன்பாளிக்குக் கிடைக்கும் அதே போன்ற நன்மை கிடைக்கும்; இதனால் அந்த நோன்பாளியின் நன்மையில் எதுவும் குறைந்துவிடாது." (ஆதாரம்: திர்மிதி)

இந்த உணர்வு மனிதனின் உள்ளத்தில் கருணையையும் பரிவையும் உருவாக்குகிறது. அதனால் தான் ரமலான் மாதத்தில் முஸ்லிம்கள் ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்ய முயற்சி செய்கின்றனர்.

அவர்களுக்கு உணவு வழங்குவது, தேவைகளை பூர்த்தி செய்வது போன்ற நல்ல செயல்களில் ஈடுபடுகின்றனர். ரமலான் மாதம் தானம் செய்தல் மற்றும் தன்னிடம் உள்ள பொருட்களை மற்றவர்களோடு கொடுத்து உதவுதல் என்ற பண்பை வளர்க்கிறது. இஸ்லாம் சமயத்தில் ஜகாத் மற்றும் ஸதகா போன்ற தானங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. குறிப்பாக ரமலான் மாதத்தில் இந்த தானங்களை வழங்குவதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மனிதன் தனது செல்வத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் மனப்பான்மையை இந்த மாதம் உருவாக்குகிறது.

**அல் குரானில் அல்லாஹ் குறிப்பிடுகின்றான் :**

"...(செல்வம்) உங்களிலுள்ள செல்வந்தர்களுக்குள்ளேயே சுற்றிக் கொண்டிருக்காமல் இருப்பதற்காக (இவ்வாறு பங்கிட்டுக் கொடுக்கக் கட்டளையிடப்பட்டுள்ளது).

மேலும், இத்தூதர் (முஹம்மது நபி) உங்களுக்கு எதைக் கொடுக்கின்றாரோ அதை எடுத்துக் கொள்ளுங்கள்; எதை விட்டும் உங்களைத் தடுக்கின்றாரோ அதை விட்டும் விலகிக் கொள்ளுங்கள். அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் தண்டிப்பதில் மிகக் கடுமையானவன்." ஸூரத்துல் ஹஷ்ரு (59:7) இதனால் சமூகத்தில் உள்ள பொருளாதார வேறுபாடுகள் குறையும்.

ஏழைகளுக்கும் வளமானவர்களுக்கும் இடையே சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் நிலைநாட்டப்படுகிறது. ரமலான் மாதம் மனிதனை குர்ஆனுடன் நெருக்கமாக இணைக்கிறது.

இந்த மாதத்தில்தான் குர்ஆன் அருளப்பட்டது என்பதால் முஸ்லிம்கள் ரமலான் மாதத்தில் குர்ஆனை அதிகமாக ஓதுகின்றனர். பள்ளிவாசல்களில் தராவீஹ் தொழுகைகளில் குர்ஆன் முழுமையாக ஓதப்படுகிறது. இதன் மூலம் குர்ஆனின் அர்த்தங்களையும் போதனைகளையும் புரிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கிறது. வல்ல அல்லாஹ் அதன் சிறப்பை குறித்து இப்படி குறிப்படுகிறான் "(அது) ரமலான் மாதமாகும்; அதில்தான் மனிதர்களுக்கு நேர்வழிகாட்டியாகவும், நேர்வழியைத் தெளிவுபடுத்தக்கூடியதாகவும், (நன்மை தீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான குர்ஆன் அருளப்பட்டது." ஸூரத்துல் பகரா (2:185)

குர்ஆன் மனித வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருப்பதால் அதன் போதனைகளை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும் உணர்வு இந்த மாதத்தில் அதிகரிக்கிறது. ரமலான் மாதம் ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தை வலுப்படுத்துகிறது. இப்தார் நேரங்களில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக கூடி நோன்பு திறப்பது குடும்ப உறவுகளை வலுப்படுத்துகிறது.

அதேபோல் நண்பர்கள், உறவினர்கள் மற்றும் அயலவர்கள் ஒன்றாக சேர்ந்து இப்தார் உணவை பகிர்ந்து கொள்வதும் சமூக ஒற்றுமையை வளர்க்கிறது.

பள்ளிவாசல்களில் கூட்டாக தொழுகை செய்வது முஸ்லிம்களுக்கிடையே சகோதரத்துவ உணர்வை அதிகரிக்கிறது. இதனால் சமூகத்தில் அமைதியும் ஒற்றுமையும் நிலைநாட்டப்படுகிறது.

ரமலான் மாதம் மனிதனுக்கு நேரத்தின் மதிப்பை உணர்த்துகிறது. இந்த மாதத்தில் முஸ்லிம்கள் அதிக நேரத்தை தொழுகை, குர்ஆன் ஓதல், துஆ, திக்ர் போன்ற நற்செயல்களில் செலவிட முயற்சி செய்கின்றனர்.

**அல் குரானில் அல்லாஹ் குறிப்பிடுகின்றான் :**

“நிச்சயமாக முஃமின்கள் வெற்றி பெற்றுவிட்டனர். அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் தொழுகையில் அவர்கள் உள்ளச்சத்தோடு (நிதானமாக) இருப்பார்கள். இன்னும் அவர்கள், வீணான **(**பேச்சு**,** செயல்களை**)** விட்டும் விலகி இருப்பார்கள்.

இன்னும் அவர்கள், ஜகாத்தையும் முறையாக நிறைவேற்றுவார்கள். மேலும் அவர்கள், தங்கள் மறைவிடங்களை (கற்பை) பாதுகாத்துக் கொள்வார்கள்”. (ஸூரத்துல் முஃமினூன் (க-ரு))

இதன் மூலம் நேரத்தை வீணாக்காமல் பயனுள்ள செயல்களில் பயன்படுத்த வேண்டும் என்ற உணர்வு உருவாகிறது. வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடமும் மதிப்புமிக்கது என்பதை ரமலான் நமக்கு உணர்த்துகிறது.

மேலும், ரமலான் மனிதனை ஆன்மீக சுத்திகரிப்பிற்கும் மன அமைதிக்கும் வழிநடத்துகிறது. இந்த மாதத்தில் அதிகமான தொழுகை, துஆ, திக்ர் போன்ற செயல்கள் மனிதனின் உள்ளத்தை சுத்தமாக்குகின்றன.

அவன் தனது தவறுகளை உணர்ந்து அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்கும் பழக்கம் பெறுகிறான். இது குறித்து பல இடங்களில் குரானில் இறைவன் குறிப்படுகிறான்

" என் மக்களே! நீங்கள் உங்கள் இறைவனிடம் பாவமன்னிப்புத் தேடுங்கள்; இன்னும் (தவ்பா செய்து) அவன் பக்கமே திரும்புங்கள்; அவன் உங்கள் மீது வானத்திலிருந்து மழையைத் தொடராகப் பொழியச் செய்வான்; மேலும் உங்கள் வலிமையுடன் மேலும் வலிமையை உங்களுக்கு அதிகப்படுத்துவான்; இன்னும் நீங்கள் குற்றவாளிகளாக (அவனைப் புறக்கணித்து) விலகிச் செல்லாதீர்கள்." ஸூரத்து ஹூத் (11:52)

"நீங்கள் உங்கள் இறைவனிடம் பாவமன்னிப்புத் தேடுங்கள்; இன்னும் (தவ்பா செய்து) அவன் பக்கமே திரும்புங்கள். (அவ்வாறு செய்தால்) ஒரு குறிப்பிட்ட காலம் வரை அவன் உங்களுக்குச் சுகமான வாழ்வை அளிப்பான். மேலும், தகுதியுடைய ஒவ்வொருவருக்கும் அவர்களின் தகுதிக்கு ஏற்ப (நன்மைகளை) வழங்குவான்..." (ஸூரத்து ஹூத்:3)

"நீங்கள் உங்கள் இறைவனிடம் பாவமன்னிப்புத் தேடுங்கள்; பிறகு அவன் பக்கமே மீளுங்கள். நிச்சயமாக என் இறைவன் மிக்க கிருபையுடையவன்; (தன் அடியார்களை) நேசிப்பவன்." (ஸூரத்து ஹூத்:90)

ஆகையால், இப்புனித மாதம் மனிதனை நல்ல வாழ்க்கை நோக்கி வழிநடத்துகிறது. மன அமைதி மற்றும் ஆன்மீக திருப்தி இந்த மாதத்தில் அதிகமாக அனுபவிக்கப்படுகிறது.

முற்றும் முடிவாக இம்மாத செயல்பாடுகள் வழியாக மனிதன் பெறுவது தக்வா என்ற உயர்ந்த பண்பை ஆகும். தக்வா என்பது அல்லாஹ்வின் பயம் மற்றும் அவனது கட்டளைகளை மதித்து வாழும் மனப்பாங்காகும்.

ஒருவர் தனியாக இருந்தாலும் கூட நோன்பை முறிக்கும் காரியங்கள் செய்யாமல் இருப்பது, அல்லாஹ் எப்போதும் நம்மை கவனித்து கொண்டிருக்கிறான் என்ற உணர்வை மனதில் உறுதியாக ஏற்படுத்துகிறது.

இந்த உணர்வு மனிதனை தவறான செயல்களில் இருந்து விலகச் செய்து நல்ல வழியில் நடத்துகிறது. எனவே ரமலானின் மிகப்பெரிய நோக்கம் மனிதர்களின் உள்ளங்களில் தக்வாவை வளர்ப்பதாகும்.

இவ்வாறு ரமலான் மாதம் மனிதனின் வாழ்க்கையின் பல பரிமாணங்களில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அது மனிதனை நல்ல மனிதனாக உருவாக்கும் ஒரு பயிற்சி காலமாக செயல்படுகிறது.

சுய கட்டுப்பாடு, கருணை, தானம், ஒற்றுமை, நேரத்தின் மதிப்பு போன்ற பல உயர்ந்த பண்புகளை இந்த மாதம் நமக்கு கற்றுத்தருவதோடு, தக்வா என்ற உயர் நிலையை மனிதனுக்கு பெற்றுத் தருகிறது. நிறைவாக, ரமலான் மாதம் ஒரு ஆன்மீகப் பள்ளியாகக் கூறலாம். இந்த மாதத்தில் நாம் கற்றுக்கொள்ளும் நல்ல பண்புகள் ரமலான் முடிந்த பிறகும் நமது வாழ்க்கையில் தொடர வேண்டும்.

நோன்பு மாதம் முடிந்தவுடன் பழைய தீய பழக்கங்களுக்கு திரும்பாமல், ரமலான் கற்றுத்தந்த நல்ல வழிகளை ஆண்டு முழுவதும் கடைப்பிடித்தால் தான் ரமலானின் உண்மையான பயன் கிடைக்கும்.

எனவே, ஒவ்வொரு முஸ்லிமும் ரமலான் மாதத்தை ஒரு ஆன்மீக மாற்றத்திற்கான வாய்ப்பாக பயன்படுத்தி தனது வாழ்க்கையை உயர்ந்த நெறியில் நடத்த முயற்சி செய்ய வேண்டும் இறைவன் உதவி புரிவானக! ஆமீன்.

**ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ரமளானின் இறுதிப் பத்து நாட்களில் இஃதிகாஃப் இருப்பார்கள்: ''ரமளானின் இறுதிப் பத்து நாட்களில் லைலத்துல் கத்ரை தேடிக்கொள்ளுங்கள்!" என்று கூறுவார்கள்.



# உழைப்பாளி

கீழை முஸம்மில்,
ஷார்ஜா



இரவுகளின் இருளினிலே
நிலவொளியில் தனிமையிலே
மனதுக்குள் எழுதி வைத்த
மௌன மொழிகள் இசைக்கும்
ஊமையின் ராகமிது.

உழைத்திட்ட வர்க்கமது
வளைந்திட்ட கூன் கொண்டு
தொலைத்திட்ட வாழ்வை எண்ணி
களைத்திட்ட போதெல்லாம் - கண்ணீர்
கடல்தனிலே கரை தேடும் ஓடமிது.

வினாக்குறி வடிவம் கொண்டு
விடியலின் விலாசம் தேடி
வியர்வை துளிகள் வழிந்தோடி
கனவுகளின் விழிகளோடு
கானம் தேடும் வானம்பாடி.

நடையறியா பாதங்களாய்
விடை தெரியா கேள்விகளாய்
பயணமில்லா பாதைகளாய்
பறக்க மறந்த பட்டாம்பூச்சிகளாய்
பரிதவிக்கும் பரிணாமமிது.

படர்கின்ற கொடிகளென
தொடர்கின்ற அவர் துன்ப
இடர்தன்னை போக்கி வைத்து நல்
சுடர்தன்னை ஏற்றிடுவோம்
நலிந்தோர்தம் வாழ்வொளிர.

# JAMAL MOHAMED COLLEGE (AUTONOMOUS)

Since 1951

Accredited with A++ Grade by NAAC (4th Cycle) with CGPA 3.69 out of 4.0

(Affiliated to Bharathidasan University)

TIRUCHIRAPPALLI - 620 020



JANAB N.M. KHAJAMIAN ROWTHER
FOUNDER

HAJEE M. JAMAL MOHAMED SAHIB
FOUNDER

## ADMISSION 2025 - 2026
## PROGRAMMES OFFERED

## UNDER GRADUATE

### Govt. Aided Programmes (MEN)

**B.A.** - Arabic, Economics, English, History
**B.Com.**
**B.Sc.** - Botany, Chemistry, Computer Science Mathematics, Physics, Zoology

### Self Finance Programmes (MEN)

**B.A.** - English, Tamil
**B.B.A** (Approved by AICTE)
**B.C.A** (Approved by AICTE)
**B.Com.**
**B.Com.** - (International Finance)
**B.B.A.** - Aviation Management (Approved by AICTE)
**B.Sc.** - Computer Science, Hotel Management & Catering Science, I.T. With Cyber Security and Visual Communication
**B.Sc.** - Artificial Intelligence & Machine Learning

### Self Finance Programmes (WOMEN)

**B.A.** - Arabic, English, Tamil
**B.B.A** (Approved by AICTE)
**B.C.A** (Approved by AICTE)
**B.Com.**
**B.Com.** - (International Finance)
**B.Com.** -(Computer Applications)
**B.Sc.** - Biotechnology, Chemistry, Computer Science, Fashion Technology & Costume Designing, Mathematics, Microbiology, Data Science*, Nutrition & Dietetics, Physics, Zoology

*Subject to Affiliation

## POST GRADUATE

### Govt. Aided Programmes (MEN)

**M.A.** - Arabic, Economics, English, Tamil
**M.Com.**
**M.Sc.** - Botany, Chemistry, Mathematics, Physics, Zoology

### Self Finance Programmes (MEN)

**M.A.** - History
**M.Com. / M.S.W**
**M.Sc.** - Chemistry, Computer Science

### Self Finance Programmes (WOMEN)

**M.A.** - Arabic, English
**M.Com. / M.S.W**
**M.Sc.** - Biotechnology, Chemistry, Microbiology, Fashion Technology & Costume Designing, Mathematics, Computer Science, Nutrition & Dietetics, Physics

**MBA** (Approved by AICTE)
Councelling Code: 344

**MCA** (Approved by AICTE)
Councelling Code (Aided): 344 A
Councelling Code (Self finance): 344 S

Part - 1 Language for Aided-Men : Arabic, French, Hindi, Tamil & Urdu  Part - 1 Language for SF-Men : Arabic & Tamil  Part - 1 Language for SF-Women : Arabic, Hindi, Tamil & Urdu

### HIGHLIGHTS



Dr.D.I.George Amalarethinam
PRINCIPAL

- Wi-Fi Enabled Campus
- DST-FIST Funded Departments (Mathematics, Physics, Chemistry, Botany, Zoology & Computer Science).
- Continuously securing University Ranks in all major disciplines every year.
- Qualified, experienced and well-trained teaching faculty.
- Deeniyath and Value based Moral Education.
- 17 Research Programmes leading to Ph.D.
- For the past Seven years, continuously placed in top 100 Colleges in India by NIRF.
- Accredited with highest grade by NAAC continuously for the last four cycles.



Dr. A. K. Khaja Nazeemudeen
SECRETARY & CORRESPONDENT

**FOR ADMISSION RELATED QUERY** (Time : 10.00 a.m to 5.30 p.m)
0431-2331135, 9360963011, 9894731035

**FOR REGISTRATION RELATED QUERY**
9360963012

For further Details visit our Website : www.jmc.edu  Email : principaljmc@ymail.com  princi@jmc.edu

# மீண்டும் மீண்டும் உனை நான் அடைய .........




முஹிப்புல் உலமா
ஏ. முஹம்மது மஃரூப், துபாய்


யா ரமளானே !
விடை கொண்டு செல்வாய்
விரைவினில் மீண்டிடுவாய்
பதினோரே மாதம்
பறந்திடும் காலம்
புதிதாய் பிறந்திடுவாய் !

அருள்மறை குர்ஆன் இறங்கியதே - அது
உன் பெயர் உரைக்கிறதே
அதனால் உனக்கென்று தனித்துவம் ஒன்று
என்றென்றும் இருக்கிறதே
( யா ரமளானே)

வேதங்கள் நான்கும் நின் மடி விழுந்து
உலகெங்கும் படர்ந்ததுவே
எங்கள் வேந்தர் நபி - உனை
அடையவே விளித்து(உ)ன்
கண்ணியம் உயர்ந்ததுவே!
(யா ரமளானே)

ரஜபினில் விதைத்தோம்
ஷஃபானில் இரைத்துனில்
அறுவடை செய்திருந்தோம்
இதன் பலன்களை யெல்லாம்
இறைவனும் தரவே
இறைஞ்சிடு ரமளானே!
( யா ரமளானே )

ஆயிரம் மாத இரவினைச் சூடிய
அழகிய லைலாவே
பெரும் ஆரா துயரில் மஜ்னூன் ஆனேன்
எனை நீ பிரிந்திடவே
( யா ரமளானே)

மீண்டும் மீண்டும் உனை நான்
அடைய
இறைவனை வேண்டுகிறேன் -
அன்று
மீஸான் எடையும் நோன்பின்
வலுவால்
உயர்ந்திட நாடுகிறேன்
(யா ரமளானே )





# அமீரகத்தில் ரமலான்

முனைவர். ஆ. முகமது முகைதீன்,
துபாய், UAE

அருளொளி வீசும் ரமலான் நாளில்,
அகிலம் தழைக்கும் அமைதி தானே;
இறைவன் நினைவு இதயத் தளத்தில்,
இயற்கை நெறியும் இன்பம் தருமே.

உலகுயிர் யாவும் ஒருவன் பிள்ளை,
உணர்வின் வழியில் இணைந்தோர் நாம்;
அண்ணன் தம்பி அக்காள் தங்கை,
அனைவரும் ஒன்றே மனிதக் குலம்.

விடியற்காலத்து உணவு அருந்தி,
விரதம் தாங்கும் மன உறுதி;
மாலை நேரத்து இஃப்தார் பொழுதில்,
மகிழ்ச்சி பொங்கும் இல்லம் தோறும்.

“தக்வா வளர்த்திட நோன்பு விதித்தோம்”
என்ற இறை வசனம் நெஞ்சில் ஒலிக்கும்;
அடக்கம் பயிலும் ஆன்ம பாதை,
அறிவு செழிக்கும் உயர்ந்த வழி.

குர்ஆன் ஒளியின் குரல் எழுந்து,
குலம் மதம் தாண்டி வழிகாட்டும்;
உண்மை பொய்யை உணர்த்தும் தீபம்,
உயிர்க்கு அருளும் நித்திய நெறி.

நபி மொழிந்தார் – “நோன்பு கவசம்”,
நன்மை காக்கும் அரண் அது தான்;
“சொர்க்க வாசல் திறக்கும் காலம்”,
சொன்ன வாக்கு சத்தியமாம்.

அமீரக நிலம் அருள் தாங்கி,
அமைதி மலரும் ஆனந்த பூமி;
துபாய் வீதிகள் தீபம் பூண்டு,
இறையருள் தரும் இரவில்.

பள்ளி தோறும் தொழுகை முழங்க,
அன்பு நிறைந்தோர் கூடும் இடம்;
மனித நேயம் மலரும் தாயகம்,
மக்கள் வாழ்வில் மகிழ்ச்சி பெருகும்

இஃப்தார் தருணம் இனிய விழா,
இணையும் உள்ளம் எல்லை கடந்த;
பசி அறுக்கும் கருணை கைகள்,
பரந்த உலகில் நன்மை விதைக்கும்.

அரசு அருளும் அன்ன தானம்,
அயர்ந்தோர் வாழ்வில் நம்பிக்கை தீபம்;
உணவு பகிர்ந்திடும் உயர்ந்த செயல்,
உலக மனிதம் பேசும் மொழி.

தொழிலாளர் தங்கும் தளங்களில் கூட,
தோள்கொடுத்து நிற்கும் கருணை கைகள்;
உழைப்போர் வாழ்வு உயர்த்திடுவோர்,
உலக நன்மை விதைக்கும் மக்கள்.

தமிழர் உள்ளம் தாராளம் கொண்டு,
தாழ்ந்தோர்க்கு அன்னம் தந்து நிற்கும்;
தூரம் இருந்தும் இணையும் அன்பு,
இறைஅச்சத்தின் சாட்சி அது.

ஜகாத் வழங்கும் செல்வ நெறியில்,
சுத்தம் பெறும் உயிரின் வழி;
ஃபித்ரா கொடுத்து ஏழை மக்களும்,
ஈதின் மகிழ்ச்சி சேர்ந்து காணும்.

தானம் தழைக்கும் இந்நாள் எல்லாம்,
தாழ்ந்தோர் உயர்ந்திட வழி படைக்கும்;
மனித நேயம் மலர்ந்திடுமேல்,
மக்கள் வாழ்வு மகிமை பெறும்.

லைலத்துல் கத்ர் இரவு தன்னில்,
லட்சம் மாதம் மேலான அருள்;
துஆவில் நனைந்து மன்னிப்பு தேடி,
இறையருள் சேரும் நேரம்.

உலகம் எங்கும் பதற்றம் தோன்றிலும்,
ஒற்றுமை வாழ்க என வேண்டுவோம்;
அண்ணன் தம்பி போலே நாமும்,
அன்பில் இணைந்து வாழ்க உலகம்.

சமாதானம் நிலைத்திட வேண்டி,

சகல மனிதரும் கைகள் கூப்பி;
இறைவன் முன் தொழுது நிற்க,
இனிதாய் மலரும் உலக ஒற்றுமை.

அமீரக ஆட்சி அருள் பெருக,
அமைதி காக்கும் தலைவர்கள் தாம்;
பாதுகாப்பு தந்து மக்கள் காக்கும்,
பெருமை பெற்றோர் வாழ்க என்றும்.

நெஞ்சார்ந்த நன்றி செலுத்துகின்றோம்,
நிலைத்த பாதுகாப்பு வழங்கியோர்க்கு;
இனிய வாழ்வு நலமுடன் தந்து,
இரக்கம் காட்டும் உயர்ந்த நாடு.

ஈதின் நாளில் இன்பம் பொங்கி,
இணையும் இதயம் எல்லை கடந்த;
உலகம் ஒன்றாய் வாழ்த்திடுவோம்,
உயர்ந்த மனிதம் நிலைத்திடவே.

**நபி (ஸல்) அவர்கள்கூறினார்கள்:**

ரமளானின் இறுதிப் பத்து நாட்களில் லைலத்துல் கத்ரை தேடிக் கொள்ளுங்கள்! (அதாவது) ''லைலத்துல் கத்ரை இருபத் தொன்றாவது இரவில், இருபத்து மூன்றாவது இரவில், இருபத்து ஐந்தாவது இரவில் தேடிக்கொள்ளுங்கள்!''

**இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:**

(என் தந்தை) உமர் (ரலி) அவர்கள் (நபி (ஸல்) அவர்களிடம்) ''அல்லாஹ்வின் தூதரே! மஸ்ஜிதுல் ஹராம் புனிதப் பள்ளிவாசலில் ஓர் இரவு இஃதிகாஃப் இருப்பதாக அறியாமைக் காலத்தில் நான் நேர்ச்சை செய்திருந்தேன்'' என்று கூறினார்கள். அவர்களிடம் நபி (ஸல்) அவர்கள், ''உமது நேர்ச்சையை நிறை வேற்றுவீராக!'' என்றார்கள். உமர் (ரலி) அவர்கள் ஓர் இரவு இஃதிகாஃப் இருந்தார்கள்.

# கடவுள் மதங்களில் இல்லை அன்பான மனங்களில் இருக்கிறான்



நீதிபதி **அ. முகமது ஜியாவுதீன்**
(மேனாள் மாவட்ட அமர்வு நீதிபதி)
முழுநேர உறுப்பினர் மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையம்,
தமிழ்நாடு அரசு.

"கவலைகள் நிரம்பாமல் காலியாக இருங்கள்,
சிந்தனையை உருவாக்கியவர் யார் என்று சிந்தியுங்கள்!
கதவு இவ்வளவு அகலமாக திறந்திருக்கும் போது
ஏன் சிறையில் இருக்கிறீர்கள்."
என்கிறார் சூஃபி ஞானி ஜலாலுதீன் ரூமி.

எவ்வளவு பெரிய இன்னல்களையும் கடந்து போகின்ற வாழ்வில்
கவலைகள் இதயத்தை அடைக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆன்மீகச் சிந்தனைகள் என்பது பேதமில்லாமல் மனிதர்களை நேசிக்கும்
பக்குவத்தில் இருக்கிறது.

இறைவன் படைப்பில்
எல்லாம் சமம் என்று மட்டுமல்ல,
எல்லோரும் சகோதரர்கள் என்றும் உணர வேண்டும்.

தன் மதம்
தன் சாதி
தன் இனம்
என்று ஒடுங்கிக் கொள்பவர்
உண்மையான ஆன்மீகத்தை அடைய முடியாது.

சிறைக்குள் தன்னை அடைத்துக் கொண்டவனுக்கு
சிறகுகள் இருந்து என்ன பயன்.

விரிந்த வானம்
பரந்த பூமி போல்
மனது விரிவதே
மறைகளின் தத்துவம்.



காற்றும் மழையும்
கடலும் வானும்
சூரிய ஒளியும்
சுடர் விடும் நிலவும்
அனைவருக்கும் பொதுவாக ஆண்டவன் கொடுத்தான்.

எல்லோரையும் நேசிப்பதே இறை நேசம்.

பாசம் நிறைந்த
இதயத்திற்குள் மட்டுமே
இறைவன் வாசம் கொள்வான்.

பங்கிட்டுக்கொள்ள இறைவன் பொருளல்ல.
இணைந்து வாழ்வோம்
உயர்ந்து வாழ்வோம்.
மதங்களைக்களைக் கடந்து
மானுடம் காப்போம்.

அன்பு கொண்ட இதயங்களைத் தான் ஆண்டவன் தேடுவான்.

பிரிவினைகளும்
பிணக்குகளும்
இறைவன் நம் அருகில் வருவதைத் தடுக்கும் சுவர்களாகும்.

அன்பைப் பற்றி மௌலானா ரூமியின் வார்த்தைகளை வாசிப்போம்.

அன்பினால்
இருள்
வெளிச்சம் ஆகும்.

அன்பினால்
கசப்பு
இனிமை ஆகும்.

அன்பினால்
வேதனை
சுகமாகும்.



அன்பினால்
மரித்தது
உயிர் பெரும்.

அன்பு பெருங்கடலையும் குவளைக்குள் அடக்கும்.

அன்பு
பெரும் மலையையும் மணல் ஆக்கும்.

அன்பு
ஆகாயத்திலும் நூறு துளைகளை இடும்.

அன்பு
நிலத்தையும் ஆட்டி படைக்கும்.

ஆம்,
சக மனிதர்களின் மீது அன்பு செலுத்துவது மட்டும் தான் இறைவன் மீது காட்டும் உண்மையான அன்பாக இருக்கும் என்றுதான் வாழ்நாள் முழுவதும் நபிகள் நடந்து காட்டினார்.

கடவுள் மதங்களைப் பார்ப்பதில்லை.
அன்பான மனங்களைப் பார்க்கிறான்.

**நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

அனுமதிக்கப்பட்டதும் (ஹலால்) தெளிவானது; தடை செய்யப்பட்டதும் (ஹராம்) தெளிவானது. இவை இரண்டுக்கு மிடையே சந்தேகத்திற்கிடமான சில செயல்களும் உள்ளன. யார் பாவம் எனச் சந்தேகப்படுபவற்றை கைவிடுகிறாரோ அவர் பாவம் என்று தெளிவாகத் தெரிவதை நிச்சயம் கைவிடுவார்; யார் பாவம் எனச் சந்தேகிக்கப்படுபவற்றைச் செய்யத் துணிகிறாரோ அவர் (பாவம் என்று) தெளிவாகத் தெரிகின்றவற்றிலும் சிக்கிக்கொள்ளக்கூடும். பாவங்கள் அல்லாஹ்வின் வேலிகளாகும். யார் வேலியைச் சுற்றி மேய்கிறாரோ அவர் அதற்குள்ளேயே சென்றுவிடக்கூடும்.




# MOHAMED SATHAK COLLEGE OF ARTS AND SCIENCE

(A Muslim Minority Institution) An ISO 9001:2015 Certified Institution
Affiliated to University of Madras, Recognised by UGC & AICTE
Sholinganallur, Chennai-600119
Sponsored by Mohamed Sathak Trust

**ADMISSIONS OPEN 2026-2027**











## PROGRAMMES OFFERED

### UG PROGRAMMES

| | |
|---|---|
| B.A. | English |
| B.B.A. | (Shift 1 & Shift II) Approved by AICTE |
| B.C.A. | (Shift I & Shift II) Approved by AICTE |
| B.Com. | Accounting & Finance |
| B.Com. | Bank Management |
| B.Com. | Computer Applications |
| B.Com. | Corporate Secretaryship |
| B.Com. | Information System Management |
| B.Com. | General (Shift I & Shift II) |
| B.Sc. | Biochemistry |
| B.Sc. | Biotechnology |
| B.Sc. | Chemistry |
| B.Sc. | Computer Science (Shift 1 & Shift II) |
| B.Sc. | Computer Science with Al |
| B.Sc. | Electronics with AI |
| B.Sc. | Microbiology |
| B.Sc. | Hotel & Catering Management |
| B.Sc. | Home Selence - Clinical Nutrition & Dieteties |
| B.Sc. | Psychology |
| B.Sc. | Visual Communication |

### PG PROGRAMMES

| | |
|---|---|
| M.B.A. | Approved by AICTE |
| M.C.A. | Approved by AICTE |
| M.Com. | |
| M.Sc. | Biochemistry |
| M.Sc. | Biotechnology |
| Msc. | Computer Science |
| M.Sc. | Electronics |
| M.Sc. | Mathematics |
| M.Sc. | Microbiology |

### RESEARCH PROGRAMMES

| | |
|---|---|
| Ph.D. | Biochemistry |
| Ph.D. | Biotechnology |
| Ph.D. | Microbiology |

### PG DIPLOMA PROGRAMMES

| | |
|---|---|
| P.G. | Diploma in E-Business Management |
| P.G. | Diploma in Gene Manipulation |

**ADMISSION CONTACT**

**044-24501115, +91-9940004503, 9445113148, 9445113147**

Website : www.mscartsandscience-edu.in.  Email : admission @mscartsandscience-edu.in

# போய் வா ரமலானே! போய் வா!!

கவின்முகில் முஹம்மது யூசுப்
உடன்குடி



போய் வா! ரமலானே! போய் வா!
ரஹ்மத்தை அள்ளி சொரிந்து
ராஹத்தை மனதில் விளைத்த
ரமலானே போய் வா!

பாவங்களை எரித்து
பாவிகளை புடம் போட்டு
பாவ மன்னிப்பு வழங்கிய
ரமலானே போய் வா!

நரக நெருப்பை விட்டும்
நாங்கள் பாதுகாப்பு பெற
நல்லறங்கள் செய்ய செய்த
ரமலானே போய் வா!

தாகித்திருந்தும் பசித்திருந்தும்
தான் என்ற ஆணவம் அடக்கி
தக்வாவை பலப்படுத்தி தந்த
ரமலானே போய் வா!

இரவில் நின்று வணங்கி
இறைவனோடு ஒன்றிணைந்து
இதயங்களை இளகச் செய்த
ரமலானே போய் வா!

தோழமையை உணர்த்திட
தோளோடு தோள் சேர்த்து
தொழுகையில் சமத்துவம் பேணிய
ரமலானே போய் வா!

முகம் திருப்பி போனவர்களை
முஸாபா செய்ய வைத்து
முன் பகை தீர வழி அமைத்த
ரமலானே போய் வா!

உயர்ந்த கொள்கை பிடிப்பால்
உள்ளங்களை உணரச் செய்து
உறவுகளை ஒருங்கிணைத்த
ரமலானே போய் வா!

இவ்வுலக தொடர்பைத் துறந்து
இறையில்லம் வந்து தனித்து
இக்திகாப் இருக்க செய்த
ரமலானே போய் வா!

சிறிதோ பெரிதோ அனைத்து
சிறந்த அமல்களையும் பொருந்தி
சிறப்பாய் அங்கீகரித்து ஆதரித்த
ரமலானே போய் வா!

வாடியோர்க் கெல்லாம்
வளமும் வசந்தமும் தந்து
வாழ்வியல் சிறக்கச் செய்த
ரமலானே போய் வா!

ஓதுக! என்று உம்மி நபியிடம்
ஓங்கு புகழ் குர்ஆனைத் தந்து
வல்லோனை வணங்க சொன்ன
ரமலானே போய் வா!

ஏழை வரியை பிரித்தெடுத்து
எளியோர் வறியோருக்கு வழங்கி
எங்கும் சமநிலை நிறுவிய
ரமலானே போய் வா!

மறுமையில் ரய்யான் வாசலில்
மனமுவந்து வரவேற்று உள்ளே
மகிழ்வுடன் செல்க என்ற
ரமலானே போய் வா!

கலங்கிய கண்களால் விடை தருகிறேன்
காத்திருப்பேன் கண்கள் பூத்திருப்பேன்
காணும் நாள் என்றோ ஏக்கத்துடன்
வருவாய் மீண்டும் அருள் தருவாய் என்றும்

# மறையில் சொன்னபடி வாழ்வோம்

( நோன்பு பெருநாள் கவிதை )
பாவினம் : அறுசீர் விருத்தம்



பாவலர் கோவதன்

மனித ரெல்லாம் தெய்வத்தை
மனத்தால் எண்ணி நோன்பிருந்து
புனித மென்னும் பூத்தூவப்
பொங்கி வழியும் நன்னாளாம் !
கனிவில் தெய்வத் திற்கீடாய்க்
காணும் முசுலீம் நண்பரெல்லாம்
இனிமை பொங்க மகிழ்ந்தேத்தும்
இகத்தோர் போற்றும் பெருநாளாம் !

மாதம் ஒன்றில் நோன்பிருந்து
மாசை எல்லாம் நீக்கிமனப்
பேதம் அதனை போக்கிவிடப்
பிறந்த தினமாம் இப்பெருநாள்
ஓதும் பாங்கின் ஒலிநெஞ்சில்
உணர்த்தும் இறையின் அருட்கொடையைக்
கோதும் அன்பில் குடியிருக்கும்
கொற்ற வன்தாள் வணங்குவமே !

குறையை நிறைவாய் ஆக்கிநெறிக்
கோட்டை யதனை ஆண்டிடுவோம்
இறையை எண்ணித் தொழுதபடி
இன்ப மழையில் நனைந்திடுவோம்
பிறையின் ஒளியைக் கண்டுவந்து
பெருநாள் வரவைக் குறித்திடுவோம்
மறையில் சொன்ன வாக்குணர்ந்து
மண்ணில் இனிதே வாழ்ந்திடுவோம் !

( அன்பின் உறவுகள் அனைவருக்கும்
நோன்பு பெருநாள் நல்வாழ்த்துகள்)



## வளைகுடாவின் அறிவுக் கருவூலம்...

# துபை முஹம்மத் பின் ராஷித் நூலகம்



முதுவை ஹிதாயத்,
துபை.

துபை நகரில் அல் ஜடாஃப் பகுதியில் வளைகுடாவின் அறிவுக் கருவூலமாக முஹம்மத் பின் ராஷித் நூலகம் செயல்பட்டு வருகிறது.

அமீரக துணை அதிபரும் பிரதமருமான துபை ஆட்சியாளர் ஷேக் முஹம்மத் பின் ராஷித் அல் மக்தூம் 2022–ஆம் ஆண்டு ஜூன், 16–ஆம் தேதி முஹம்மத் பின் ராஷித் நூலகத்தை பொது மக்களின் பயன்பாட்டுக்காக திறந்து வைத்தார்.

இந்த நூலகமானது சுமார் 2,300 கோடி ரூபாய் செலவில் புத்தக வடிவில் ஏழு மாடிகளைக் கொண்டதாக மொத்தம் 58 லட்சம் சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ளது.

**9 சிறப்பு நூலகங்கள்...:** இங்கு உள்ள தளங்களில் புத்தகங்கங்களைப் பாதுகாக்க ஆய்வு கூடங்கள், தகவல் மையம், வாசிக்கும் அறைகள், ஆட்சியாளரின் அரிய வகை புத்தகங்களின் சேகரிப்பு, நிரந்தர கண்காட்சி அரங்கம், தற்காலிக கண்காட்சி அரங்கம், மேடை அரங்கம், சினிமா அரங்கு ஆகிய வசதிகள் உள்ளன.



அரபி மொழி நூலகம், குழந்தைகள் நூலகம், குடும்ப நூலகம், சர்வதேச நூலகம், ஊடக நூலகம், பதிப்பகங்கள் நூலகம், இளைஞர், முதியவர்களுக்கான பிரத்தியேக நூலகம், வர்த்தக நூலகம், வீடியோ காட்சி மற்றும் ஒலி வடிவ புத்தகங்களின் நூலகம் ஆகிய 9 சிறப்பு நூலகங்கள் உள்ளன.

**பிரெய்லி:** பிரெய்லி வடிவ நூல்களும் இங்கு இடம் பெற்றுள்ளன. நூலகத்தில் சுமார் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட அச்சிடப்பட்ட மற்றும் டிஜிட்டல் தலைப்புகளில் புத்தகங்கள் உள்ளன. மொத்தம் 30 மொழிகளில் அச்சிடப்பட்ட புத்தகங்கள் உள்ளன.

21– வது நூற்றாண்டின் அனைத்து நூல்களும் இந்த பின்மமாண்ட நூலகத்தில் இடம்பெற்று வருகிறது. இதில் புத்தகங்களைச் சேமிக்கும் கிடங்கு ஒன்றும் அமைந்துள்ளது. உலகில் மிகப்பெரிய மின்னணு தகவல் சேமிப்பு மையம் இங்கு நிறுவப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

நூலகத்தில் புத்தகங்கள் அகர வரிசை மற்றும் எண் வரிசையில் அடுக்கப்பட்டுள்ளன. நூலகத்தின் உள்ளே பல்வேறு பகுதிகளில் மோனோ ரெயில் அமைப்பு மூலம் புத்தகங்கள் கொண்டு செல்லப்பட்டு வழங்கப்படுகிறது. உள்ளே பணியாற்றும் நூலகர்களுக்கு ரோபோ தொழில்நுட்பத்தில் புத்தகங்களை சேமிப்பு அறையில் இருந்து எடுத்து வர வசதி செய்து தரப்பட்டுள்ளது. இதன் மூலம் வாசகர்கள் கேட்கும் எந்த நூலும் விரைவாக அவர்களுக்கு கிடைக்க உதவியாக இருக்கிறது.

**தமிழ் நூல்களுக்கென பிரத்யேக பகுதி:** பெரியார் ஈ.வெ.ரா., அண்ணா, கருணாநிதி, எம்.ஆர்.எம். அப்துற்றஹீம், கவிஞர் வைரமுத்து, இறையன்பு ஐ.ஏ.எஸ்., முனைவர் சேமுமு முகமதலி, சேயன் இப்ராஹிம், ஈரோடு எம்.கே. ஜமால் முஹம்மது உள்ளிட்ட பிரபல எழுத்தாளர்களின் நூல்களின் நூல்களும், திருக்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்பு, மஸ்னவி ஷரீஃப்பின் தமிழ் மொழி பெயர்ப்பு உள்ளிட்ட பல்வேறு வகையான தமிழ் நூல்கள் இடம் பெற்றுள்ளன.

குறிப்பாக, இலங்கை காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் எழுதிய அன்னை கதீஜாவும், அண்ணலா குடும்பமும், அறிவியல் அறிஞர் எம்.ஜே. முஹம்மது இக்பால் எழுதிய அறிவியல் அதிசயம் உள்ளிட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் இந்த நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

மேலும் பேராசிரியர் முனைவர் பஷீர் அஹமது அவர்களின் திருக்குறளின் அரபி மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்களும் நூலகத்தை அலங்கரிக்கின்றன.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின் பேரில் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேரடியாக இந்த நூலகத்துக்கு வந்து தமிழ் நூல்களை அன்பளிப்பாக வழங்கினார்.

**காட்சியகம்:** நூலகத்தின் ஏழாவது மாடியில் சிறப்பு தகவல் கொண்ட காட்சியகம் ஒன்றும் இடம் பெற்றுள்ளது. இதில் இந்தியாவின் மொகலாயர் காலத்தில் கையால் எழுதப்பட்ட திருக்குர்ஆன் பிரதிகள், வால்மீகியின் ராமாயணம் உள்ளிட்ட பழைமையான ஆவணங்கள் இடம் பெற்றுள்ளன.

துபை நகருக்கு செல்பவர்கள் மட்டுமல்லாது அமீரகத்தில் வசிக்கும் தமிழகத்தை சேர்ந்தவர்கள் இந்த நூலகத்தை ஒரு முறையாவது பார்த்து பயன் பெற வேண்டியது அவசியம். ■

## Crescent Innovation & Incubation Council (CIIC)

**414Cr** in Private Investments | **33Cr** in Government Funding | **628+** in Startup Turnover FY 2023 - 2024

**2394Cr** in Cumulative Startup Valuation | **2100+** Jobs Created | **1 Lakh Sq. ft** of Incubation Space

## Career Development Centre & Industry Relations (CDC & IR)

**19.75 LPA** Highest Package | **4.61 LPA** Average Package | **312+** Tie-ups with Multinational Companies

**426+** MNC'S engaged in Campus Recruitment | **12** International Alumni Chapters — Singapore, Oman, UAE, Australia, UK, USA, Qatar, Hong Kong, Bahrain, Malaysia, Kuwait, Saudi Arabia | **40,000+** Alumni Network Worldwide

## Our Prime Recruiters

and more...

## Admission Help-desk

**Chennai :**
Seethakathi Estate, GST Road, Vandalur,
(Adjacent to Kilambakkam Bus Terminus)
Chennai-600 048. Tamilnadu. India

+91 - 95432 77888 (UG)
+91 - 99530 77999 (PG)
+91 - 94990 01725
admissions@crescent.education

**Madurai :**
(Exclusively for Women)
Seethakathi Nagar, Kallampatti,
Chatrapatti Post, Madurai 625014.
Tamilnadu. India

+91 86681 24486 | +91 93420 66477

**www.crescent.education**

B.S. Abdur Rahman® **Crescent** Institute of Science & Technology
Deemed to be University u/s 3 of the UGC Act, 1956






## UG Programmes

### B.Tech.
- Artificial Intelligence and Data Science
- Computer Science and Engineering
- Computer Science and Engineering (AI & ML)
- Computer Science and Engineering (Cyber Security)
- Computer Science and Engineering (Internet of Things)
- Information Technology
- Biotechnology
- Civil Engineering
- Mechanical Engineering
- Automobile Engineering
- Aeronautical Engineering
- Polymer Engineering
- Electrical and Electronics Engineering
- Electronics and Communication Engineering (VLSI Design & Technology) *
- Electronics and Communication Engineering
- Electronics and Computer Engineering
- Electronics and Instrumentation Engineering

### Architecture & Design
- B.Arch.
- B.Des. Interior Design

### Pharmacy
- B.Pharm.

### Law
- B.B.A. LL. B (Hons.)
- B.A. LL. B (Hons.)

### Arts & Science
- B.Sc. Aviation
- B.Sc. Psychology
- B.Sc. Biotechnology
- B.Sc. Computer Science
- BCA (Cloud Technology & Information Security | Data Science | Artificial Intelligence | Cyber Security)
- BBA General
- B.Com. International Accounting and Finance
- B.Com. Accounts & Finance
- B.Com. Professional Accounting
- B.Com. General
- B.A. Public Policy
- B.A. English
- B.A. Islamic Studies

## PG Programmes

### M.Tech.
- Artificial Intelligence and Data Science
- Avionics
- CAD-CAM
- Structural Engineering
- Construction Engineering & Project Management
- Computer Science and Engineering
- Information Technology
- VLSI and Embedded Systems
- Power Systems Engineering
- Biotechnology
- Food Biotechnology

### Architecture
- M.Arch.

### Pharmacy
- M.Pharm. (Pharmaceutics | Pharmaceutical Analysis)

### Law
- LLM (Criminal Law | Intellectual Property Law | Taxation Law)

### Business Administration
- MBA
- MBA Real Estate Management *
- MBA Innovation Entrepreneurship and Venture Development

### Computer Applications
- MCA

### Arts & Science
- M.Sc. Actuarial Science
- M.Sc. Chemistry
- M.Sc. Physics
- M.Sc. Biotechnology
- M.Sc. Microbiology
- M.Sc. Clinical Embryology
- M.Sc. Stem Cell Technology and Regenerative Medicine
- M.Com.
- M.A. Islamic Studies

### Ph.D in all Disciplines

* Awaiting Approval

## Madurai Campus (Exclusively for Women)

### UG Programmes
- B.A. LL. B (Hons.)
- B.B.A. LL. B (Hons.)
- B.Sc. Computer Science
- B.Sc. Artificial Intelligence
- B.Com. Accounts and Finance
- B.Com. General

### PG Programmes
- M.Sc. Data Science
- M.Sc. Counselling Psychology
- M.Com.

## Get One More Degree

Minor Degree Programmes for B.Tech. Students (Optional)

- Artificial Intelligence & Machine Learning
- Blockchain
- Cyber Security
- Data Science
- Internet of Things (IoT)
- Virtual and Augmented Reality
- Sensor Technology
- Robotics
- 3D Printing
- Electric Vehicles
- Industrial Automation
- GIS and Remote Sensing
- Computational Biology

## Associates

LTM, NXT WAVE, RICS, MH Cockpit, ACCA, NSE Knowledge Hub Academy

and more...


Eid Mubarak
TRICHY GOLD
WE DELIVER RICHNESS
May you receive all the joys of life on the occasion of Eid.
LOWEST
Making Charges
on 22K & 18K Gold Jewellery
G 39 & 40, Gold Land Building, Deira Gold Souq, Dubai.
www.trichygold.com
+971 50 900 1575
04591 11 11